இஸ்லாம் கிறிஸ்தவம்
1000 சின்னஞ்சிறு கேள்வி பதில்கள்

(பாகம் 1 - 300 கேள்விகள்/பதில்கள்)



ஆன்சரிங் இஸ்லாம் தமிழ் – May 2020

(https://www.answering-islam.org/tamil & http://isakoran.blogspot.com/)

பொருளடக்கம்

இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவத்தை அறிய உதவும் சின்னஞ்சிறு கேள்வி பதில்கள் 1000

முன்னுரை:

இஸ்லாமை கற்றுக்கொள்ள பல ஆய்வுக் கட்டுரைகள் தமிழில் பதித்துக்கொண்டு வருகிறேன். பல ஆண்டுகளுக்கு முன்பு தொடர்ந்த இந்த பயணத்தில் இன்றுவரை 700க்கும் அதிகமான கட்டுரைகள் நம் தளங்களில் (ஈஸா குர்ஆன் & ஆன்சரிங் இஸ்லாம்) பதிக்கப்பட்டுள்ளது.

இன்று மக்கள் சின்னத்திரையில் அதாவது மொபைள் போனில் அதிகமாக நேரத்தை செலவிடுகிறார்கள். மேலும், வாட்ஸப் மூலமாக அனேக விவரங்களை பகிர்ந்துக்கொண்டும், கற்றுக்கொண்டும் வருகிறார்கள். மக்கள் சுலபமாக இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம் பற்றி அறிந்துக்கொள்ள வசதியாக இருக்கும் என்பதால், சின்னஞ்சிறு கேள்விகள் 1000+ என்ற தலைப்பில் கேள்வி பதில்களை எழுதலாம் என்று விரும்பினேன். இவைகளை சுலபமாக வாட்ஸப்பில் படிக்கமுடியும் மற்றும் மற்றவர்களுக்கும் அனுப்பமுடியும்.

இந்த தொடரின் பெரும்பான்மையான பதில்கள், ஒரு வார்த்தை அல்லது ஒரு வாக்கியமாகவே இருக்கும். சில கேள்விகள் மட்டும் அதிகபட்சமாக நான்கு பத்திகள் அதாவது ஒரு பக்கம் மட்டுமே இருக்கும். ஒருவர் இந்த 1000 கேள்விகளை படித்தால், இஸ்லாமையும், கிறிஸ்தவத்தையும் சுலபமாக அறிந்துக்கொள்ள முடியும். மேலும் இஸ்லாமையும் கிறிஸ்தவத்தையும் இன்னும் ஆழமாக கற்றுக்கொள்ள ஆர்வம் உண்டாகும்.

இப்போதைக்கு 1000 கேள்விகளை கீழ்கண்ட தலைப்புக்களில் தயார் செய்துள்ளேன்.

தலைப்புக்கள்:

1. குர்ஆன்
2. அல்லாஹ் - யெகோவா
3. முஹம்மது
4. ஹதீஸ்கள் - சீரா(முஹம்மதுவின் வரலாறு)
5. இஸ்லாம்
6. பெண்கள்
7. பைபிள்
8. கிறிஸ்தவம்
9. கலைச்சொற்கள்
10. இஸ்லாமிய அறிஞர்கள்
11. இஸ்லாமிய புத்தகங்கள்/தளங்கள்

வாசகர்களுக்கு ஏதாவது கேள்விகள் தோன்றினால், **எனக்கு எழுதவும்** அவைகளுக்கும் பதில்கள் கொடுக்க முயலுவேன்.

தலைப்பு: குர்ஆன் (1- 60)

கேள்வி 1: குர்ஆனின் மூல மொழி என்ன?

பதில் 1: அரபி மொழி

கேள்வி 2: குர்ஆனில் எத்தனை அத்தியாயங்கள் மற்றும் வசனங்கள் உள்ளன?

பதில் 2: குர்ஆனில் 114 அத்தியாயங்கள் மற்றும் 6236 வசனங்கள் உள்ளன.

கேள்வி 3: ஸூரா மற்றும் ஆயத் என்றால் என்ன?

பதில் 3: அத்தியாயத்தை அரபியில் ஸூரா (சூரா) என்றும், வசனங்களை ஆயத் என்றும் அழைப்பார்கள். "ஆயா" என்றால் வசனம், "ஆயத்" என்றால் வசனங்கள் (பன்மை) ஆகும்.

கேள்வி 4: குர்ஆனில் 6666 வசனங்கள் உள்ளதாகச் சொல்கிறார்களே!

பதில் 4: இது தவறு, இன்றைய குர்ஆனில் 6236 வசனங்கள் மட்டுமே உள்ளன.

கேள்வி 5: அது என்ன இன்றைய குர்ஆனில் 6236 என்றுச் சொல்கிறீர்கள், அப்படியானால், ஆரம்பகால குர்ஆனில் 6236 வசனங்கள் இல்லையா?

பதில் 5: இல்லை, ஆரம்ப கால குர்ஆனில் இருந்த சில வசனங்கள் இன்றைய குர்ஆனில் இல்லை என்று ஹதீஸ்கள் சொல்கின்றன. இவைகள் பற்றி அடுத்தடுத்த கேள்விகளில் காண்போம்.

கேள்வி 6: குர்ஆனின் முதல் அத்தியாயத்தின் பெயர் என்ன?

பதில் 6: அல் ஃபாத்திஹா (தமிழில் இதன் பொருள்: தோற்றுவாய்)

கேள்வி 7: குர்ஆனின் கடைசி அத்தியாயத்தின் பெயர் என்ன?

பதில் 7: அந் நாஸ் (தமிழில் இதன் பொருள்: மனிதர்கள்). சிலர் ஸூரா (அத்தியாயம்) என்ற வார்த்தையோடு சேர்த்து "ஸூரத்துந் நாஸ்" என்று எழுதுகிறார்கள்.

கேள்வி 8: குர்ஆனின் மக்கீ, மதனீ வசனங்கள் என்றுச் சொல்கிறார்களே, அவைகளின் அர்த்தமென்ன?

பதில் 8: முஹம்மது முதலில் சில ஆண்டுகள் மக்கா நகரிலும், பிறகு மதினா நகரிலும் வாழ்ந்தார். அவர் மக்காவில் வாழ்ந்த காலத்தில் இறக்கப்பட்ட குர்ஆன் வசனங்களை மக்கீ என்றும், மதினா நகரில் வாழ்ந்த போது இறக்கப்பட்ட வசனங்களை மதனீ என்றும் அழைக்கிறார்கள்.

கேள்வி 9: குர்ஆனில் குறிப்பிடப்படும் “ஜபூர், தோறா மற்றும் இன்ஜில்” என்ற பெயர்கள் எவைகளை குறிக்கின்றன?

பதில் 9: இவைகள் பைபிளின் புத்தகங்கள் ஆகும்.

- **தோறா** - இது பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து நூல்களை (ஐந்தாகமங்களை) குறிக்கிறது.
- **ஜபூர்** - இது சங்கீத நூலை குறிக்கிறது.
- **இன்ஜில்** - இது பைபிளின் நற்செய்தி (சுவிசேஷங்கள்) நூல்களை குறிக்கின்றது.

இன்ஜில் என்றால் வெறும் நற்செய்திகளை மட்டுமே குறிக்குமா? அல்லது புதிய ஏற்பாடு முழுவதையும் குறிக்குமா? என்று சில முஸ்லிம்களுக்கு சந்தேகம் உண்டு.

கேள்வி 10: குர்ஆன் மட்டும் போதாதா? ஹதீஸ்களும் தேவையா?

பதில் 10: முஸ்லிம்களுக்கு குர்ஆனும் ஹதீஸ்களும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். ஒரே ஒரு பக்கத்தை வைத்திருந்தால் அந்த நாணயத்திற்கு மதிப்பில்லை. எப்படி ஒரு மனிதனுக்கு உயிரும் உடலும் முக்கியமோ, அது

போன்றது தான் குர்ஆனும், ஹதீஸ்களும். ஒன்றை வைத்துக்கொண்டு மற்றதை புறக்கணிக்கமுடியாது. இதில் ஏதாவது ஒன்றை புறக்கணித்தால், இஸ்லாம் அர்த்தமற்றதாகிவிடும்.

கேள்வி 11: அரபிமொழி தெய்வ மொழியா?

பதில் 11: அரபி தெய்வ மொழி இல்லை. உலகில் எந்த மொழியும் தெய்வ மொழி ஆகமுடியாது.

கேள்வி 12: குர்ஆன் என்ற வார்த்தையின் அர்த்தமென்ன?

பதில் 12: குர்ஆன் என்றால், ஓதுதல் (recitation) என்று பொருள்.

கேள்வி 13: முதன் முதலாக எந்த இரவில் குர்ஆன் இறக்கப்பட்டதாக குர்ஆன் சொல்கிறது?

பதில் 13: லைலத்துல் கத்ர் என்ற இரவில் குர்ஆன் இறங்கியதாக குர்ஆன் சொல்கிறது.

"நிச்சயமாக நாம் அதை (குர்ஆனை) கண்ணியமிக்க (லைலத்துல் கத்ர்) என்ற இரவில் இறக்கினோம்" (குர்ஆன் 97:1) என்று அல்லாஹ் கூறுகின்றான்.

[இந்த தொடர்களில் முஹம்மது ஜான் தமிழாக்கமே பிரதானமாக மேற்கோள் காட்டப்படுகின்றது.]

கேள்வி 14: குர்ஆனின் மிகவும் நீண்ட மற்றும் சிறிய அத்தியாயங்கள் எவை?

பதில் 14: இரண்டாவது அத்தியாயம் அல்-பகரா 286 வசனங்களை கொண்டது, மற்றும் 103, 108 மற்றும் 110 அத்தியாயங்கள் மூன்று வசனங்களைக் கொண்ட சிறிய அத்தியாயங்களாகும்.

கேள்வி 15: மக்காவில் மற்றும் மதினாவில் இறக்கப்பட்ட அத்தியாயங்களின் (ஸூராக்களின்) எண்ணிக்கை எத்தனை?

பதில் 15: மக்கீ அத்தியாயங்கள் 86, மதினா அத்தியாயங்கள் 28 என்று இஸ்லாமிய அறிஞர்கள் வகைப்படுத்தியுள்ளார்கள் (பார்க்க: **http://www.tamililquran.com/suraindex.asp**).

சில அறிஞர்களுக்கு இதில் முரண்பட்ட கருத்து உண்டு.

கேள்வி 16: குர்ஆனில் எந்த நபியின்(தீர்க்கதரிசியின்) பெயர் அதிகமாக வருகிறது?

பதில் 16: மூஸா என்கின்ற மோசே தீர்க்கதரிசியின் பெயர் அதிகமாக (115 முறை) வருகிறது என்று கூறப்படுகின்றது. சிலர் 136 முறை வருகிறது என்கிறார்கள்.

கேள்வி 17: குர்ஆனில் எத்தனை தீர்க்கதரிசிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன?

பதில் 17: குர்ஆனில் 25 நபிமார்கள் பற்றி வருகின்றது என்று முஸ்லிம்கள் கூறுகிறார்கள் (பார்க்க: **http://www.tamililquran.com/nabinames.asp**). பைபிளின் படி இவர்கள் அனைவரும் தீர்க்கதரிசிகள் அல்ல, உதாரணம்: ஆதாமை பைபிள் தீர்க்கதரிசி (நபி) என்று அழைப்பதில்லை மற்றும் முஹம்மதுவை பைபிள் படி தீர்க்கதரிசி என்று அழைக்கமுடியாது.

கேள்வி 18: குர்ஆன் வசனங்கள் அத்தியாயங்கள், முஹம்மதுவிற்கு இறக்கப்பட்ட வரிசையில் குர்ஆனில் அமைக்கப்பட்டுள்ளதா?

பதில் 18: இல்லை. முஹம்மது உயிரோடு இருக்கும் போது, அவர் குர்ஆனை ஒரு புத்தக வடிவில் தொகுக்கவில்லை. புத்தகமே இல்லாத போது, வரிசைப்படி முழு புத்தகத்தை அமைப்பது எப்படி?

முஹம்மதுவின் மரணத்திற்கு பிறகு, பல ஆண்டுகள் கழித்து, குர்ஆனை தொகுத்தபோது, பெரிய அத்தியாயங்கள் தொடங்கி சிறிய அத்தியாயங்கள் வரை வரிசைப்படுத்தி தொகுத்தார்கள். அதன் பிறகு வந்தவர்கள், வசனங்களாக பிரித்த போது, அத்தியாயங்களில் வசன எண்களின் எண்ணிக்கை மாறுபட்டது.

கேள்வி 19: முஹம்மதுவின் காலத்தில் அனேகர் குர்ஆனை 100% முழுவதுமாக மனனம் செய்திருந்ததாகச் சொல்கிறார்களே இது சரியா?

பதில் 19: பலர் குர்ஆனை 100% மனப்பாடம் செய்திருந்தார்கள் என்று முஸ்லிம்கள் நம்புகிறார்கள், ஆனால் இது உண்மையல்ல.

முஹம்மதுவின் தோழர்கள் குர்ஆனை தொகுத்த போது, இவர்கள் பட்ட பாடு இருக்கின்றதே! அது யாரால் சொல்லிமுடியும்.

உண்மையாகவே, குர்ஆனை இவர்கள் 100% மனப்பாடம் செய்திருந்தால், ஒரே வாரத்தில் குர்ஆனை தொகுத்து இருந்திருக்கலாம். ஆனால், இந்த காரியத்தைச் செய்ய, ஒரு குழுவை அமைத்து, பல மாதங்கள் கழித்து தொகுப்பை முடித்தார்கள். இதன் மூலம் அறிவது என்னவென்றால், ஒருவரும் 100% குர்ஆனை மனப்பாடம் செய்யவில்லை, செய்யமுடியவில்லை என்பதாகும்.

கேள்வி 20: முஹம்மதுவிற்கு இறக்கப்பட்ட குர்ஆன் வசனங்கள் எழுதப்பட்ட எலும்புகள், இலைகள், தோல்கள் இன்று நம்மிடம் உள்ளனவா?

பதில் 20: இல்லை அவைகள் நம்மிடம் இப்போது இல்லை. அவைகள் எரிக்கப்பட்டுவிட்டன, தொலைந்துபோய் விட்டன. குர்ஆனின் ஆதி மூலம் நம்மிடம் இல்லை.

கேள்வி 21: குர்ஆன் தமிழாக்கங்கள் சிலவற்றை இணையத்தில் படிக்கமுடியுமா?

பதில் 21: குறைந்தபட்சம், ஐந்து தமிழாக்கங்களை நீங்கள் இணையத்தில் படிக்கலாம்.

தமிழில் குர்ஆன் (http://www.tamililquran.com/) என்ற தளத்தில் நான்கு தமிழாக்கங்களை படிக்கமுடியும். அவைகள்:

- டாக்டர். முஹம்மது ஜான் தமிழாக்கம்,
- அப்துல் ஹமீது பாகவி தமிழாக்கம்,
- இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட் (IFT) தமிழாக்கம் மற்றும்
- மன்னர் ஃபஹத் வளாகம் (சவூதி) தமிழாக்கம்.

பீஜே அவர்களின் குர்ஆன் தமிழாக்கத்தை அவரது தளத்தில் (https://www.onlinepj.in/) படிக்கமுடியும்.

கேள்வி 22: குர்ஆனை அரபியில் படித்தால் தான் நன்மை என்றுச் சொல்வது சரியா?

பதில் 22: முஸ்லிம்கள் இப்படி நம்புகிறார்கள். ஆனல், உண்மையான இறைவன் என்றைக்கும் ஒரு குறிப்பிட்ட மொழியில் என்னை தொழுதால் தான், பூஜை செய்தால் தான் நான் அவைகளை ஏற்றுக்கொள்வோன் என்று சொல்லமாட்டான்.

கேள்வி 23: முஹம்மது உயிரோடு இருந்த போது, அவரிடம் ஒரு புத்தக வடிவில் குர்ஆன் ஒரு தொகுப்பாக இருந்ததா?

பதில் 23: இல்லை, முஹம்மது அப்படிப்பட்ட ஒரு புத்தகத்தை வைத்திருக்கவில்லை. குர்ஆனை ஒரு புத்தகமாக தொகுக்கவேண்டும் என்று அவர் விரும்பியதும் இல்லை. முஹம்மதுவின் மரணத்திற்கு பல ஆண்டுகள் கழித்து, குர்ஆனை ஒரு புத்தகமாக தொகுக்கவேண்டும் என்று முஹம்மதுவின் தோழர் ஒருவர் சொன்னபோது, முஹம்மது செய்யாத ஒரு காரியத்தை எப்படி செய்வதென்று மற்றொரு சஹாபா கேள்வி கெட்டார். இது மிகவும் கடினமான காரியம் என்றார். எனவே, முஹம்மதுவிடம் மரணம்வரை ஒரு முழு குர்ஆன் ஒரு புத்தகமாக இருந்ததில்லை.

இதற்கு இன்னொரு சான்றையும் கொடுக்கலாம். முஸ்லிம்களின் நம்பிக்கையின் படி, ஒவ்வொரு ஆண்டும், அந்த ஆண்டில் முஹம்மதுவிற்கு கொடுக்கப்பட்ட குர்ஆன் வசனங்களை சரி பார்க்க ஜிப்ரீல் தூதன் வந்து, சரி பார்த்துச் செல்வாராம். கடைசி ஆண்டு, இரண்டு முறை ஜிப்ரீல் தூதன் சரி பார்த்தாராம். ஒரு புத்தகமாக இருந்தால், இப்படி இரண்டு முறை சரி பார்க்கவேண்டிய அவசியம் இருந்திருக்காது. முஹம்மது ஞாபகத்திலிருந்து சொல்லச் சொல்ல, ஜிப்ரீல் சரி பார்த்து இருந்திருக்கவேண்டும். இது இன்னொரு உண்மையையும் எடுத்துக்காட்டுகின்றது, அது என்னவென்றால், முஹம்மது நம்மைப்போன்று மறதியுள்ளவர், அவர் குர்ஆனையும் மறப்பார் என்பதாகும்.

கேள்வி 24: குர்ஆனை முஹம்மது 100% முழுவதுமாக மனப்பாடம் செய்திருந்தாரா? அவர் ஒரு வசனத்தையும் மறக்கவில்லையா?

பதில் 24: முஹம்மது முழு குர்ஆனை மனப்பாடம் செய்திருந்தார் என்று முஸ்லிம்கள் நம்புகிறார்கள். ஆனால், இது உண்மையில்லை. இதற்கும் எந்த ஒரு சான்றுமில்லை. சில வேளைகளில் முஹம்மது குர்ஆனின் சில வசனங்களை மறந்துள்ளார் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு.

முஹம்மதுவும் நம்மைப்போன்று மறதியுள்ளவர் தான் என்பதை **புகாரி ஹதீஸ் 401** கூறுகிறது.

முஹம்மது குர்ஆனின் சில வசனங்களை மறந்துவிட்டார், அதனை மற்றொருவர் ஞாபகப்படுத்தினார், **புகாரி நூல் எண் 5042:**

5042. ஆயிஷா(ரலி) கூறினார்: இரவு நேரம் பள்ளிவாசலில் ஒருவர் குர்ஆன் ஓதிக்கொண்டிருப்பதை நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அப்போது நபியவர்கள், 'அல்லாஹ் அவருக்குக் கருணை புரியட்டும்! **இன்ன அத்தியாயங்களிலிருந்து நான் மறந்துவிட்டிருந்த இன்ன இன்ன வசனங்களை அவர் எனக்கு நினைவூட்டிவிட்டார்**' என்று கூறினார்கள்.

குர்ஆனை யாராவது மறந்துவிட்டால், ' நான் மறந்துவிட்டேன் என்று சொல்லாமல்,அது மறக்கவைக்கப்பட்டுவிட்டது என்று சொல்லவேண்டும் என முஹம்மது கூறியுள்ளார். ஏனென்றால், "ஒட்டகங்களை விடவும் வேகமாக மனிதர்களின் நெஞ்சங்களிலிருந்து குர்ஆன் தப்பக்கூடியதாகும்" என்றும் அவர் கூறியுள்ளார்: **புகாரி நூல் எண்கள்: 5032, 5039**

கேள்வி 25: இஸ்லாமின் தூண்களில் ஒன்றான ஐந்து வேளை தொழுவது பற்றி குர்ஆனில் எந்த இடத்தில் சொல்லப்பட்டுள்ளது?

பதில் 25: முஸ்லிம்கள் இன்று தொழும் “ஐந்து வேளை தொழுகையை நிலைநிறுத்துங்கள்” என்று குர்ஆனில் எந்த ஒரு வசனத்திலும் சொல்லப்படவில்லை. குர்ஆனில் மூன்று வேளை தொழுகை பற்றித் தான் சொல்லப்பட்டுள்ளது .

ஹதீஸ்களிலிருந்து முஸ்லிம்கள் ஐந்து வேளை தொழுகையை கற்றுக்கொண்டு அதை பின்பற்றிக்கொண்டு இருக்கிறார்கள்.

கேள்வி 26: புனித ஹஜ் பயணத்தில் செய்யவேண்டிய கடமைகள் சட்டங்கள் பற்றி குர்ஆனில் எங்கு சொல்லப்பட்டுள்ளது?

பதில் 26: இஸ்லாமிய புனித யாத்திரையைப் பற்றிய அனைத்துச் சட்டங்களையும் குர்ஆன் சொல்லவில்லை. அவைகளை ஹதீஸ்களிலிருந்து கற்றுக்கொண்டு முஸ்லிம்கள் செய்கிறார்கள்.

கேள்வி 27: குர்ஆனை புரிந்துக்கொள்வதற்கு தேவையான பின்னணியை எங்கு காணலாம்?

பதில் 27: முஹம்மதுவின் சொல்லும் செயலும் அடங்கிய நூல்கள் என்றுச் சொல்லப்படும் ஹதீஸ்களிலிருந்தும், அவரது வாழ்க்கை சரித்திர நூல்களிலிருந்தும் அறியமுடியும், அதிலும் 100% அறியமுடியும் என்றுச் சொல்லமுடியாது.

கேள்வி 28: தௌஹீத் என்ற வார்த்தை குர்ஆனில் உள்ளதா?

பதில் 28: தௌஹித் அதாவது ஏகத்துவம் (ஒரே இறைவன்) என்ற பொருள் வரும் இந்த வார்த்தை குர்ஆனில் ஒரு முறையும் வருவதில்லை. ஆனால், ஆங்காங்கே இந்த கோட்பாடு சொல்லப்பட்டிருக்கும். உதாரணத்திற்கு, அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்ற வாக்கியத்தை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

கேள்வி 29: குர்ஆன் மட்டும் (Quran Only Muslims) முஸ்லிம்கள் என்கிறார்களே! இவர்கள் யார்?

பதில் 29: இவர்கள் குர்ஆன் மட்டும் தான் இறைவேதம் என்று நம்புகிறவர்கள். முஹம்மதுவின் சொல்லும் செயலும் அடங்கிய ஹதீஸ்களையும், இதர இஸ்லாமிய சரித்திர நூல்களையும் இவர்கள் இறைவேதம் என்று நம்புவதில்லை.

கேள்வி 30: குர்ஆனில் வரும் ஒரே பெண்ணின் பெயர் என்ன?

பதில் 30: குர்ஆனில் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கின்ற ஒரே ஒரு பெண் 'மர்யம்' ஆவார், அதாவது இயேசுவின் தாயின் பெயர் குர்ஆன் வருகிறது வேறு எந்த ஒரு பெண்ணின் பெயர் வருவதில்லை.

இன்னாருடைய மனைவி, இன்னாருடைய மகள், சகோதரி என்று சொல்லப்பட்டிருக்குமே தவிர, அந்த பெண்ணின் பெயர் குறிப்பிடப்படுவதில்லை, இதற்கு ஒரே ஒரு விதி விளக்கு மர்யம் என்ற பெயர் மட்டும் தான்.

கேள்வி 31: புதிய ஏற்பாட்டிற்கும் குர்ஆனுக்கும் இடையே எத்தனை ஆண்டுகள் இடைவெளி உள்ளது?

பதில் 31: பைபிளின் புதிய ஏற்பாடு, கி.பி. 100க்குள் முடிவடைந்துவிட்டது, மற்றும் குர்ஆனின் முதல் வெளிப்பாடு முஹம்மது அவர்களுக்கு கி.பி. 610ம் ஆண்டு வந்தது. இதன் படி கணக்கிட்டால், புதிய ஏற்பாட்டின் கடைசி வசனத்திற்கும், குர்ஆனின் முதல் வசனத்திற்கும் இடையே 510 ஆண்டுகள் இடைவெளி உள்ளது என்று கூறலாம்.

இன்னொரு கோணத்தில் கணக்கிடவேண்டுமென்றால், முஹம்மதுவிற்கு கடைசி குர்ஆன் வசனம் கி.பி 632ம் ஆண்டு வெளிப்பட்டது(இந்த ஆண்டு அவர் மரித்தார்). ஆக, புதிய ஏற்பாட்டிற்கும் குர்ஆனின் அனைத்து வசனங்களும் முடிவடைவதற்கும் இடையே 532 ஆண்டுகள் இடைவெளி உள்ளது எனலாம்.

சுருக்கமாக, ஒருவரில் கூறுவதென்றால் பைபிளுக்கும் குர்ஆனுக்கும் 500 ஆண்டுகள் இடைவெளி என்றுச் சொல்லலாம்.

கேள்வி 32: பைபிளில் வரும் நபர்களின் பெயர்கள் குர்ஆனில் வேறு வகையாக உச்சரிக்கப்படுகிறது என்கிறார்களே, ஒரு பட்டியலைத் தரமுடியுமா?

பதில் 32: ஒரு மொழியில் உள்ள பெயர்களை வேறு மொழியில் மொழியாக்கம் செய்யும் போது, பெரும்பான்மையாக உச்சரிப்பு மாறுபடும். பைபிளின் நிகழ்ச்சிகளை குர்ஆன் மறுபதிவு செய்யும் போது, பெயர்களின் உச்சரிப்பு மாறியுள்ளது, இந்த பட்டியலைப் பாருங்கள்.

நாம் தமிழ் பைபிளை கணக்கில் கொண்டுள்ளோம். சில பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பைபிளில் உச்சரிப்பு - குர்ஆனில் உச்சரிப்பு

1. ஆதாம் - ஆதம்
2. நோவா - நூஹ்
3. ஏனோக்கு - இத்ரீஸ்
4. ஆபிரகாம் - இப்ராஹீம்
5. இஸ்மவேல் - இஸ்மாயீல்
6. ஈசாக்கு - இஸ்ஹாக்
7. யாக்கோபு - யஃகூப்
8. யோசேப்பு - யூஸுஃப்
9. லோத்து - லூத்
10. எத்திரோ - ஷுஐப் (மோசேயின் மாமனார் என்று அறியப்படுகின்றது)
11. மோசே - மூஸா
12. ஆரோன் - ஹாரூன்
13. தாவீது - தாவூத்
14. சாலொமோன் - ஸுலைமான்
15. யோபு - அய்யூப்
16. யோனா - யூனுஸ்
17. எலியா - இல்யாஸ்
18. எலிசா - அல்யஸவு
19. சகரியா - ஜகரிய்யா
20. யோவான் - யஹ்யா

கேள்வி 33: முஹம்மதுவிற்கு விருத்தசேதனம் (சுன்னத்து) செய்ததாக ஏதாவது குறிப்பு குர்ஆனிலோ அல்லது ஹதீஸ்களிலோ உள்ளதா?

பதில் 33: இல்லை, இவ்விரண்டிலும் முஹம்மதுவிற்கு விருத்தசேதனம் செய்ததாக குறிப்பு இல்லை.

கேள்வி 34: நான் ஒரு தமிழ் குர்ஆனை வாக்கியுள்ளேன். அதனை படித்து இஸ்லாமை புரிந்துக்கொள்ள எத்தனை நாட்கள் தேவைப்படும்?

பதில் 34: குர்ஆனில் 6236 வசனங்கள் உள்ளன, தினம் ஒரு மணிநேரம் ஓதுக்கினாலும், ஒரு மாதத்திற்குள் படித்துவிடலாம். ஆனால், புரிந்துக்கொள்வதற்கு வெறும் குர்ஆனை மட்டுமே படித்தால் போதாது, அதற்கு நீங்கள் ஹதீஸ்களையும், குர்ஆன் தஃப்ஸீர்களையும் (விளக்கவுரைகளையும்) படிக்கவேண்டும். இதற்கு சில மாதங்கள் அல்லது ஆண்டுகள் ஆகலாம், அதுவும் உங்களின் விருப்பத்தையும், நேரத்தையும் பொறுத்தது.

கேள்வி 35: அல்லாஹ் முஹம்மதுவிற்கு முதன் முதலாக இறக்கியதாகச் சொல்லப்படும் குர்ஆன் வசனங்கள் எவை?

பதில் 35: கி.பி. 610ம் ஆண்டு முஹம்மதுவிற்கு ஹிரா குகையில், இன்று குர்ஆன் 96ம் அத்தியாயத்தில் உள்ள ஐந்து வசனங்கள் இறக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

அவை:

- 96:1. (யாவற்றையும்) படைத்த உம்முடைய இறைவனின் திரு நாமத்தைக் கொண்டு ஓதுவீராக.
- 96:2. “அலக்” என்ற நிலையிலிருந்து மனிதனை படைத்தான்.
- 96:3. ஓதுவீராக: உம் இறைவன் மாபெரும் கொடையாளி.
- 96:4. அவனே எழுது கோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான்
- 96:5. மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான்.

கேள்வி 36: குர்ஆனில் சில அத்தியாயங்களின் முதல் வசனத்தில் வார்த்தைகள் இல்லாமல், வெறும் சம்மந்தமில்லா எழுத்துக்கள் மட்டுமே உள்ளனவே, அவைகளுக்கு பொருள் உள்ளதா?

பதில் 36: குர்ஆனில் 29 அத்தியாயங்களில் பொருள் கொள்ளமுடியாத எழுத்துக்கள் முதல் வசனமாகவோ அல்லது வசனத்தின் ஒரு பகுதியாகவோ வரும். அவைகளின் பொருளை யாரும் அறியார்கள். சில முஸ்லிம் அறிஞர்கள் சில அர்த்தங்களை கொடுப்பார்கள், ஆனால் அவைகளெல்லாம் வெறும் யூகங்கள் தான் உண்மையில்லை.

இந்த 29 அத்தியாயங்கள் இவைகள்: 2–3, 7, 10–15, 19–20, 26–32, 36, 38, 40–46, 50 and 68

உதாரணம்:

- குர்ஆன் 2:1. அலிஃப், லாம், மீம்.
- குர்ஆன் 3:1. அலிஃப், லாம், மீம்.
- குர்ஆன் 7:1. அலிஃப், லாம், மீம், ஸாத்.

கேள்வி 37: மஸீஹ் என்ற வார்த்தையின் பொருளை குர்ஆன் விளக்குகின்றதா?

பதில் 37: இல்லை, குர்ஆன் மஸீஹ் என்ற வார்த்தையின் பொருளை விளக்குவதில்லை. இந்த வார்த்தை மேசியா(மஷியக்) என்ற எபிரேய வார்த்தையாகும். கிரேக்க மொழியில் இவ்வார்த்தை 'கிறிஸ்தோஸ்' என்று மொழியாக்கம் செய்துள்ளார்கள். இதற்கு தமிழில் "அபிஷேகம் செய்யப்பட்டவர்" என்று பொருள். குர்ஆன் இதனை பல முறை இயேசுவிற்கு பயன்படுத்தியுள்ளதே தவிர, இதன் பொருளை அது விளக்கவில்லை.

கேள்வி 38: குர்ஆனில் ஒருவரின் பெயர் அவரது தாயின் பெயரோடு பயன்படுத்தப்பட்டுள்ளது? அவர் யார்?

பதில் 38: இயேசுக் கிறிஸ்துவை குறிப்பிடும் போது "மரியமின் மகன் இயேசுக் கிறிஸ்து" என்று குர்ஆன் குறிப்பிடுகின்றது.

பார்க்க: குர்ஆன் 3:45

3:45. மலக்குகள் கூறினார்கள்; “மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் தன்னிடமிருந்து வரும் ஒரு சொல்லைக் கொண்டு உமக்கு (ஒரு மகவு வரவிருப்பது பற்றி) நன்மாராயங் கூறுகிறான். அதன் பெயர் **மஸீஹ்; மர்யமின் மகன் ஈஸா** என்பதாகும். அவர் இவ்வுலகத்திலும், மறு உலகத்திலும் கண்ணியமிக்கோராகவும் (இறைவனுக்கு) நெருங்கி இருப்பவர்களில் ஒருவராகவும் இருப்பார்;

கேள்வி 39: மகா அலேக்சாண்டர் (Alexander the Great) பற்றி குர்ஆனில் வசனங்கள் உண்டு என்றுச் சொல்கிறார்கள்! இது உண்மையா?

பதில் 39: குர்ஆனில் **துல்கர்னைன்** என்ற பெயரில் ஒரு அரசன் பற்றி அல்லாஹ் சொல்கின்றான். அவனைப் பற்றிய சரித்திர விவரங்களை ஆய்வு செய்யும் போது, மகா அலேக்சாண்டருக்கு அருகாமையில் வருவதாக சில அறிஞர்கள் காண்கிறார்கள். ஆரம்பத்தில் முஸ்லிம் அறிஞர்கள், துல்கர்னைன் என்று குர்ஆன் சொல்வது அலேக்சாண்டரைத் தான் என்றுச் சொன்னார்கள். ஆனால், உண்மையில் அவர் ஒரு பல தெய்வ பழிப்பாட்டு நபராக இருந்தார் என்பதைக் கண்டு, துல்கர்னைன் அலேக்சாண்டர் அல்ல என்று சொல்கிறார்கள். குர்ஆனில் வரும் துல்கர்னைன் அல்லாஹ்வை தொழும் நபராக காட்டப்படுவதால், இந்த நிலைப்பாட்டிற்கு முஸ்லிம் அறிஞர்கள் தள்ளப்படுகிறார்கள்.

உண்மையில் இவர் மகா அலேக்சாண்டர் இல்லையென்றால், உலக சரித்திரத்தில் இந்த துல்கர்னைன் யார்? குர்ஆன் சொல்லும் துல்கர்னைன் ஒரு கற்பனைக் கதா பாத்திரமா? என்ற கேள்விகளுக்கு முஸ்லிம்களிடம் சரியான பதில் இல்லை.

பார்க்க: குர்ஆன் 18:83-98

குர்ஆன் 18:83 (நபியே!) அவர்கள் **துல்கர்னைனை** பற்றி உங்களிடம் வினவுகின்றனர்; “அவருடைய வரலாற்றில் சிறிது உங்களுக்கு நான் ஓதிக் காண்பிக்கிறேன்” என்று நீர் கூறுவீராக

கேள்வி 40: இரத்து (Arabic: Naskh, English: Abrogation) செய்வது என்றால் என்ன?

பதில் 40: இஸ்லாமில் இரத்து செய்வது என்றால், "குர்ஆனின் ஒரு வசனத்தை அல்லது வசனங்களை, வேறு வசனங்களைக் கொண்டு இரத்து செய்துவிடுவதாகும்". அல்லாஹ் குர்ஆனில் ஒரு சட்டத்தைப்போடுவான், சில நாட்கள் கழித்து முந்தைய சட்டத்தை நீக்கி, வேறு வசனங்களைக் கொண்டு வேறு சட்டத்தைக் கொடுப்பான்.

பார்க்க: குர்ஆன் 2:106 மற்றும் 16.101

2:106. ஏதேனும் **ஒரு வசனத்தை நாம் மாற்றினால்** அல்லது அதனை மறக்கச் செய்தால் அதைவிட சிறந்ததையோ அல்லது அது போன்றதையோ நாம் கொண்டுவருவோம். நிச்சயமாக அல்லாஹ் அனைத்துப்பொருட்களின் மீதும் சக்தியுள்ளவன் என்பதை நீர் அறியவில்லையா?

16:101. (நபியே!) நாம் **ஒரு வசனத்தை மற்றொரு வசனத்தின் இடத்தில் மாற்றினால்**, (உம்மிடம்) “நிச்சயமாக நீர் இட்டுக்கட்டுபவராக இருக்கின்றீர்” என்று அவர்கள் கூறுகிறார்கள்: எ(ந்த நேரத்தில், எ)தை இறக்க

வேண்டுமென்பதை அல்லாஹ்வே நன்கறிந்தவன், எனினும் அவர்களில் பெரும்பாலோர் (இவ்வுண்மையை) அறிய மாட்டார்கள்.

இது அல்லாஹ்விற்கும், முஹம்மதுவிற்கும் ஒரு சங்கடத்தை கொடுத்துள்ளது. இதனை 16:101ல் காணலாம். மனிதன் போடும் சட்டம் மாறலாம், ஆனால் இறைவன் போடும் சட்டம் அடிக்கடி மாற்றமடைந்தால் அவனின் ஞானம் மீது மக்களுக்கு சந்தேகம் வருகிறது.

கேள்வி 41: குர்ஆனின் வசனங்களை குர்ஆனே இரத்து செய்யுமா?

பதில் 41: ஆமாம், குர்ஆனின் வசனங்களை அல்லாஹ்வே இரத்து செய்கின்றான். உதாரணத்திற்கு, ஸுயுதி என்ற இஸ்லாமிய அறிஞரின் இரத்து செய்யப்பட்ட வசனங்களின் (21) பட்டியலை பார்க்கவும்.

குர்ஆனில் எத்தனை வசனங்களை அல்லாஹ் இரத்துசெய்துள்ளான்? இஸ்லாமிய அறிஞர் ஸுயுதியின் பட்டியல்

கேள்வி 42: ஒரே ஒரு மணி நேரத்தில் ஒரு குர்ஆன் வசனம் இரத்து செய்யப்பட்டது என்பது உண்மையா?

பதில் 42: ஆமாம், குர்ஆன் 58:12ம் வசனத்தை அல்லாஹ் இறக்கி, ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே அதனை 58:13ம் வசனத்தைக் கொண்டு அல்லாஹ் இரத்து செய்துள்ளான்.

இதன் பின்னணியை அறிய படிக்கவும்:

பிறந்த ஒரு மணி நேரத்திற்குள் மரித்த (ரத்து செய்யப்பட்ட) குர்ஆன் வசனம் 58:12 (முஹம்மதுவிடம் தனிமையில் பேச பணம் தர வேண்டுமா?)

கேள்வி 43: குர்ஆனை பைபிளோடு ஒப்பிடும் போது, வசனங்களின் எண்ணிக்கையில் குர்ஆன் பெரியதா? சிறியதா?

பதில் 43: ஆமாம், வசனங்களின் எண்ணிக்கையில் பைபிளோடு ஒப்பிடும் போது குர்ஆன் 20% அளவுடையது.

குர்ஆன் வசனங்களின் எண்ணிக்கை = 6236

பைபிள் வசனங்களின் எண்ணிக்கை = 31102

இதைப் பற்றி மேலும் அறிய கீழ்கண்ட கட்டுரையை படிக்கவும்:

குர்-ஆன் பைபிளைவிட அளவில் சிறியதா? (அ) பெரியதா?

கேள்வி 44: அரபி மொழி செமிட்டிக் மொழியா?

பதில் 44: ஆமாம், அரபி ஒரு செமிட்டிக் மொழி குடும்பத்தைச் சார்ந்ததாகும். இதே போல எபிரேயம் மற்றும் அராமிக் மொழிகளும் செமிட்டிக் மொழிகளாகும்(Semitic languages).

கேள்வி 45: இஸ்லாமிய ஆட்சியாளராகிய மூன்றாவது கலீஃபா உஸ்மான் ஏன் குர்ஆனை எரித்தார்?

பதில் 45: முஹம்மதுவின் மரணத்திற்கு 14 ஆண்டுகளுக்கு பிறகு உஸ்மான் அவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். அப்போது குர்ஆனை மக்கள் வித்தியாசமாக ஓதிக்கொண்டு இருந்தார்கள். எனவே, இவர் ஒரு புத்தகமாக குர்ஆனை தொகுத்தார், புழக்கத்தில் இருந்த மற்ற குர்ஆன்களை (கையெழுத்துப் பிரதிகளை) இவர் எரித்துவிட்டார். ஆகையால், குர்ஆன்களை முதன் முதலில் எரித்த நிகழ்ச்சி, முஹம்மதுவின் சஹாபாக்களால் நடந்தேறியது.

கேள்வி 46: குர்ஆனை ஒரு புத்தகமாக தொகுக்கும் போது, அல்லாஹ் கொடுத்த பல வசனங்கள் கைவிடப்பட்டது என்ற கூற்று சரியா?

பதில் 46: ஆம், உஸ்மான் குர்ஆனை தொகுக்கும் போது பல வசனங்கள் குர்ஆனில் சேர்க்கப்படவில்லை, இதற்கு ஹதீஸ்களும், ஸுயூதி போன்ற இஸ்லாமிய அறிஞர்களின் நூல்களும் சான்றுகளாக உள்ளன, அடுத்த கேள்வியை படிக்கவும்.

கேள்வி 47: இப்னு மஸூத் என்ற முஹம்மதுவின் தோழர் தன் குர்ஆன் பிரதியை எரிக்க ஏன் அனுமதிக்க மறுத்தார்?

பதில் 47: முஹம்மதுவினால் குர்ஆனை கற்றுக்கொடுக்க நியமிக்கப்பட்டவர்களில் மஸூத் முக்கியமானவராக இருந்தார். தம்மிடம் உள்ள குர்ஆன் பிரதி தான் உண்மையான குர்ஆன் என்று இவர் நம்பினார், மேலும், குர்ஆனை தொகுத்தவர்களின் பிரதிகளில் தவறுகள் இருப்பதாக இவர் நம்பியபடியினால் தன் பிரதியை எரிக்க இவர் ஒப்புக்கொள்ளவில்லை.

குர்ஆன் பற்றி தனக்கு இருக்கும் ஞானம் பற்றி அவர் கூறியது, சஹீஹ் முஸ்லீம் நூல், எண் 4860ல் பதிவு செய்யப்பட்டுள்ளது:

சஹீஹ் முஸ்லீம் எண் 4860. ஷகீக் பின் சலமா (ரஹ்) அவர்கள் கூறியதாவது: (ஒரு முறை) **அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி)** அவர்கள், "யார் மோசடி செய்கிறாரோ அவர், தாம் மோசடி செய்தவற்றுடன் மறுமை நாளில் வருவார்" (3:161) எனும் இறைவசனத்தை ஓதிக்காட்டி விட்டு, "யாருடைய ஓதல் முறைப்படி நான் ஓத வேண்டுமெனக் கூறுகிறீர்கள்? நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் எழுபதுக்கும் மேற்பட்ட அத்தியாயங்களை ஓதிக்காட்டியுள்ளேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் தோழர்கள், **அவர்களிலேயே நான்தான் இறைவேதத்தை நன்கு கற்றவன் என்பதை அறிந்துள்ளார்கள்**. என்னைவிட (இறைவேதத்தை) நன்கு அறிந்த ஒருவர் இருக்கிறார் என நான் அறிந்தால், (அவர் எங்கு இருந்தாலும் சரி) அவரை நோக்கி நான் பயணம் மேற்கொள்வேன்" என்று கூறினார்கள்.

நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் தோழர்கள் கூடியிருந்த (அந்த) அவையில் வீற்றிருந்தேன். அவர்களில் எவரும் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறியதற்கு மறுப்பும் தெரிவிக்கவில்லை; அதற்காக அவரைக் குறை கூறவுமில்லை.

இதைப்பற்றிய ஆய்வுகளை அறிய கீழ்கண்ட கட்டுரைகளை படிக்கவும்:

- **குர்ஆன் ஏன் மற்றும் எப்படி தரப்படுத்தப்பட்டது?**
- **குர்ஆன் எழுத்துக்கு எழுத்து பாதுகாக்கப்பட்டுள்ளதா? ஸுயூதியும் தொலைந்த குர்ஆன் வசனங்களும் பாகம் 3 (தொலைந்த 157 குர்ஆன் வசனங்கள்)**

கேள்வி 48: குர்ஆன் எழுதப்பட்ட காலத்தில் இருந்த அரபி எழுத்துக்களில் உயிரெழுத்து இல்லையென்பது சரியான கூற்றா?

பதில் 48: ஆம், அக்கால அரபி எழுத்துக்களில் உயிர் எழுத்துக்கள் இல்லை. கி.பி. 786 காலக்கட்டத்தில், உயிரெழுத்துக்கள் சேர்க்கப்பட்டன.

கேள்வி 49: இஸ்லாமிய விசுவாச அறிக்கையாகிய 'அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை, முஹம்மது அல்லாஹ்வின் இறைத்தூதர்' இந்த வாக்கியம் எந்த குர்ஆன் வசனத்தில் உள்ளது?

பதில் 49: இந்த வாக்கியம் எந்த ஒரு குர்ஆன் வசனத்திலும் இல்லை.

கேள்வி 50: இஸ்லாமிய விசுவாச அறிக்கையை (ஷஹாதா) குர்ஆனில் இல்லையென்றால், அதை ஏன் முஸ்லிம்கள் பயன்படுத்துகிறார்கள்?

பதில் 50: இஸ்லாமிய ஷஹாதா எந்த ஒரு குர்ஆன் வசனத்திலும் முழுவதுமாக இல்லை. அது கீழ்கண்ட மூன்று வசனங்களில் வரும், சில வார்த்தைகளின் கூட்டுச் சொற்றொடர் தான் "ஷஹாதா".

குர்ஆன் 63:1; 10:90; 5:73; 3:62

கேள்வி 51: குர்ஆன் தமிழாக்கங்களில் (இதர மொழியாக்கங்களிலும்) ஏன் பல வார்த்தைகளை அடைப்பிற்குள் எழுதுகிறார்கள்?

பதில் 51: அரபி மொழியிலிருந்து குர்ஆனை மொழியாக்கம் செய்யும் போது, வார்த்தைக்கு வார்த்தை தமிழாக்கம் செய்தால், சில இடங்களில் பொருள் வராது, எனவே அடைப்பிற்குள் சில வார்த்தைகளை தமிழாக்கம் செய்பவர்கள் சொந்தமாக எழுதி, வசனத்திற்கு பொருள் வரும்படி செய்கிறார்கள்.

சிலவேளைகளில் தங்கள் சொந்த கருத்தையும் அடைப்பிற்குள் போட்டு தமிழாக்கம் செய்துவிடுகிறார்கள்.

கேள்வி 52: அல்லாவிற்கு 99 பெயர்கள் உள்ளன என்று குர்ஆன் சொல்கிறதா?

பதில் 52: இல்லை. ஹதீஸ்கள் தான் சொல்கின்றன. அல்லாஹ்விற்கு அனேக அழகிய பெயர்கள் உள்ளன என்று மட்டும் தான் குர்ஆன் சொல்கின்றது. ஆனால், அவைகள் 99 என்று ஹதீஸ்களில் வருகிறது, மேலும் ஒவ்வொரு அறிஞரும் வெவ்வேறு பட்டியலைத் தருகிறார்கள்.

பார்க்க குர்ஆன் 17:110:

17:110. "நீங்கள் (அவனை) அல்லாஹ் என்று அழையுங்கள்; அல்லது அர்ரஹ்மான் என்றழையுங்கள்; எப்பெயரைக் கொண்டு அவனை நீங்கள் அழைத்தாலும், **அவனுக்கு(ப் பல) அழகிய திருநாமங்கள் இருக்கின்றன**" என்று (நபியே!) கூறுவீராக; . . .

கேள்வி 53: குர்ஆனில் அல்லாஹ்வின் 99 பெயர்களில் வெறும் 81 பெயர்கள் மட்டுமே உள்ளன என்றுச் சொல்கிறார்களே, இது உண்மையா?

பதில் 53: அல்லாஹ்விற்கு 99 பெயர்கள் உள்ளன என்று ஹதீஸ்கள் சொன்னாலும், அவைகள் அனைத்தும் குர்ஆனில் காணப்படாது. அல்லாஹ்வின் ஒவ்வொரு குணத்தையும் ஒரு பெயராக அறிஞர்கள் கூறுகிறார்கள். ஒரு இஸ்லாமிய தளத்தில், அல்லாஹ்வின் 81 பெயர்கள் மட்டும் தான் குர்ஆனில் வருகிறது என்று குறிப்பிட்டுள்ளார்கள். பார்க்க:[Names of Allah mentioned in the Quran]

கேள்வி 54: ஹூருல் ஈன் என்பவர்கள் யார்?

பதில் 54: கீழ்கண்ட நான்கு குர்ஆன் வசனங்களையும், அவைகளைச் சுற்றியுள்ள வசனங்களையும் படித்தால், ஹூருல் ஈன்கள் என்பர்கள், முஸ்லிம் ஆண்களுக்கு அல்லாஹ் சொர்க்கத்தில் கொடுக்கும் பெண்களாகும்/மனைவிகளாகும். இவர்கள் பற்றி முஹம்மது கூறியவற்றை புகாரி ஹதீஸ்களிலும் காணுங்கள். கவனிக்கவும், இவர்கள் உலகத்தில் திருமணமாகியிருந்த மனைவிகள் அல்ல, அவர்கள் வெறு இவர்கள் வேறு.

குர்ஆன் 44:54. இவ்வாறே (அங்கு நடைபெறும்); மேலும் அவர்களுக்கு **ஹூருல் ஈன்களை** நாம் மண முடித்து வைப்போம்.

குர்ஆன் 52:20. அணி அணியாகப் போடப்பட்ட மஞ்சங்களின் மீது சாய்ந்தவர்களாக அவர்கள் இருப்பார்கள்; மேலும், நாம் அவர்களுக்கு, நீண்ட கண்களையுடைய (ஹூருல் ஈன்களை) மணம் முடித்து வைப்போம்.

குர்ஆன் 56:22. (அங்கு இவர்களுக்கு) **ஹூருல் ஈன்** (என்னும் நெடிய கண்களுடைய) கன்னியர் இருப்பர்.

குர்ஆன் 56:35. நிச்சயமாக (ஹூருல் ஈன் என்னும் பெண்களைப்) புதிய படைப்பாக, நாம் உண்டாக்கி;

ஸஹீஹ் புகாரி எண் 2799

2796. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இறைவழியில் காலையில் சிறிது நேரம் அல்லது, மாலையில் சிறிது நேரம் (போர் புரியச்) செல்வது உலகத்தையும் அதிலுள்ள பொருட்களையும் விடச் சிறந்தது. உங்களில் ஒருவரின் வில்லின் அளவுக்குச் சமமான, அல்லது ஒரு சாட்டையளவுக்குச் சமமான (ஒரு முழம்) இடம் கிடைப்பது உலகத்தையும் அதிலுள்ளவற்றையும் விடச் சிறந்தது. சொர்க்கவாசிகளில் **(ஹூருல் ஈன்களில்)** ஒரு பெண், உலகத்தாரை எட்டிப் பார்த்தால் வானத்திற்கும் பூமிக்குமிடையே உள்ள அனைத்தையும் பிரகாசமாக்கி விடுவாள்; பூமியை நறுமணத்தால் நிரப்பி விடுவாள். அவளுடைய தலையிலுள்ள முக்காடோ உலகத்தையும் அதிலுள்ளவற்றையும் விடச் சிறந்ததாகும். என அனஸ்(ரலி) அறிவித்தார்.

ஸஹீஹ் புகாரி எண் 3254.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

சொர்க்கத்தில் முதலாவதாக நுழையும் அணியினர் பௌர்ணமி இரவின் சந்திரனைப் போன்று தோற்றமளிப்பார்கள். (அடுத்து) அவர்களின் சுவடுகளைப் பின்தொடர்ந்து சொர்க்கத்தினுள் நுழைபவர்கள், வானத்தில் நன்கு ஒளி வீசிப் பிரகாசிக்கும் நட்சத்திரத்தைப் போன்று (பிரகாசமாகவும் அழகாகவும்) இருப்பார்கள். அவர்களின் உள்ளங்கள் ஒரே மனிதரின் உள்ளத்தைப் போன்றிருக்கும். அவர்களுக்கிடையே பரஸ்பர வெறுப்போ, பொறாமையோ இருக்காது. ஒவ்வொரு மனிதருக்கும் **'ஹூருல் ஈன்'** எனப்படும் அகன்ற (மான் போன்ற) விழிகளையுடைய மங்கையரிலிருந்து இரண்டு மனைவிமார்கள் இருப்பார்கள். அவர்களின் கால்களின் எலும்பு மஜ்ஜைகள் (காலின்) எலும்புக்கும் சதைக்கும் அப்பாலிருந்து வெளியே தெரியும்.

கேள்வி 55: குர்ஆன் 47:19ஐ விளக்கமுடியுமா? இதில் அல்லாஹ் என்ன சொல்லவருகின்றான்?

பதில் 55: குர்ஆன் 47:19ம் வசனத்தின் முக்கியமான பகுதியை நான்கு தமிழாக்கங்களில் தருகிறேன். இந்த வசனத்தின் மூலம் அறிவது என்னவென்றால், உலக மக்களைப்போன்று, முஹம்மதுவும் பாவங்கள்/தவறுகள்/பிழைகள் செய்கின்ற ஒரு மனிதரே என்பதாகும். இது குர்ஆனின் சாட்சியாகும்.

47:19. . . .; இன்னும் உம்முடைய பாவத்திற்காகவும், முஃமின்களான ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும் (பாவ) மன்னிப்புத் தேடுவீராக - . . .

47:19. . . . நீங்கள் உங்களுடைய தவறுகளை மன்னிக்கக் கோருவதுடன், நம்பிக்கை கொண்ட ஆண்களுக்கும், பெண்களுக்கும் மன்னிப்பு கோருங்கள்! (நம்பிக்கையாளர்களே!) . . .

47:19. . . . மேலும், உம் பிழைகளுக்காகவும் இறைநம்பிக்கைகொண்ட ஆண்கள், பெண்களுக்காகவும் மன்னிப்புக் கேளும்!. . .

47:19. . . . உம்முடைய பாவத்திற்காகவும், விசுவாசங்கொண்ட ஆண்களுக்காகவும், விசுவாசங்கொண்ட பெண்களுக்காகவும் பாவ மன்னிப்புக் கோருவீராக! . . .

மூலம்: **http://www.tamililquran.com/**

கேள்வி 56: முஹம்மது பாவமே செய்யாதவர் என்று சொல்கிறார்களே, இது உண்மையா?

பதில் 56: முந்தைய கேள்வியின் பதிலைப் பார்க்கவும். குர்ஆன் 47:19ன் படி முஹம்மது நம்மைப்போன்று பாவங்கள் செய்கின்றவரே ஆவார். அவருக்கும் அல்லாஹ்விடமிருந்து மன்னிப்பு தேவையாக இருக்கிறது. இதனை மறுப்பவர் குர்ஆனையும், அல்லாஹ்வையும் மறுப்பவராவார். யாராவது முஹம்மதுவிற்கு அல்லாஹ்விடமிருந்து மன்னிப்பு தேவைப்படாது என்று சொல்வாரானால், அவர் அல்லாஹ்விற்கு சமமாக முஹம்மதுவை வைக்கின்றார் என்று பொருள்.

குர்ஆன் 40:55ஐயும் பார்க்கவும்:

குர்ஆன் 40:55. ஆகவே, நீர் பொறுமையுடன் இருப்பீராக. நிச்சயமாக அல்லாஹ்வின் வாக்குறுதி உறுதியுடையதாகும். உம் பாவத்திற்காக மன்னிப்புக் கோருவீராக; மாலையிலும் காலையிலும் உம் இறைவனைப் புகழ்ந்து, தஸ்பீஹு (துதி) செய்து கொண்டு இருப்பீராக!

இதைப் பற்றி மேலும் அறிய கீழ்கண்ட ஆய்வுக் கட்டுரைகளை படிக்கவும்:

- **பாகம் 1: முஹம்மது ஒரு பாவியா? - குர்ஆனின் சாட்சி**
- **பாகம் 2: முஹம்மது ஒரு பாவியா? - ஹதீஸ்களின் சாட்சி**
- **பாகம் 3: முஹம்மது ஒரு பாவி, இயேசு பரிசுத்தர்**

கேள்வி 57: எல்லா நபிமார்களும் பாவம் செய்யாதவர்கள் என்று தான் குர்ஆன் சொல்கிறதே!

பதில் 57: குர்ஆனில் எந்த வசனத்தில் 'நபிமார்கள் அனைவரும் பாவமில்லாதவர்கள்' என்று சொல்லியுள்ளது? ஒரே ஒரு வசனத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்!? நேரடியாக வேண்டாம் மறைமுகமாகவாவது குர்ஆன் சொல்வதில்லை.

உங்கள் இமாம் அல்லது அறிஞர்கள் உங்களிடம் பொய் சொல்கிறார்கள். குர்ஆன் இப்படி சொல்வதில்லை, ஆனால், இதற்கு பதிலாக, முஹம்மதுவின் பாவங்கள்(47:19, 40:55) பற்றி குர்ஆன் பேசுவது போன்று, நபிகளின் பாவங்களை குர்ஆன் சிட்டிக்காட்டுகின்றது.

கேள்வி 58: மற்ற நபிமார்கள் பாவம் செய்தார்கள் என்று குர்ஆன் எங்கே சொல்கிறது?

பதில் 58: முஹம்மதுவே பாவம் செய்தவர் என்று குர்ஆன் 47:19, 40:55 கூறும் போது, மற்ற நபிமார்கள் பாவம் செய்திருக்கமாட்டார்கள் என்று குர்ஆன் சொல்லும் என்று நீங்கள் எதிர்ப்பார்க்கிறீர்களா? சரி, உங்கள் திருப்திக்காக 2 உதாரணங்களைத் தருகிறேன்.

யூஸுஃப் பாவம் செய்பவர் தான், என்னால் தப்பித்தார் என்று அல்லாஹ் கூறுகின்றான்:

குர்ஆன் 12:24. ஆனால் அவளோ அவரைத் திடமாக விரும்பினாள்; **அவரும் தம் இறைவனின் ஆதாரத்தைக் கண்டிராவிட்டால் அவள் மீது விருப்பம் கொண்டே இருப்பார்;** இவ்வாறு நாம் அவரைவிட்டுத் தீமையையும் மானக்கேடான செயல்களையும் திருப்பிவிட்டோம் - ஏனெனில் நிச்சயமாக அவர் நம் தூய்மையான அடியார்களில் ஒருவராக இருந்தார்.

தாவூத் அல்லாஹ்விடம் மன்னிப்பு கோரினார்:

குர்ஆன் 38:24. (அதற்கு தாவூது:) "உம்முடைய ஆட்டை அவர் தம்முடைய ஆடுகளுடன் சேர்த்து விடும்படிக் கேட்டது கொண்டு நிச்சயமாக அவர் உம்மீது அநியாயம் செய்து விட்டார்; நிச்சயமாகக் கூட்டாளிகளில் பெரும்பாலோர் - அவர்களில் சிலர் சிலரை மோசம் செய்து விடுகின்றனர்; ஈமான் கொண்டு (ஸாலிஹான) நல்லமல்கள் செய்பவர்களைத் தவிர; இத்தகையவர் சிலரே" என்று கூறினார்; இதற்குள்: "நிச்சயமாக நாமே அவரைச் சோதித்து விட்டோம்" என்று **தாவூது எண்ணித் தம்முடைய இறைவனிடம் மன்னிப்பு கோரிக் குனிந்து விழுந்தவராக இறைவனை நோக்கினார்**.

கேள்வி 59: குர்ஆனில் வசனங்கள் எழுத்துக்கு எழுத்து மாறாமல் உள்ளது என்பது உண்மையா?

பதில் 59: அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. குர்ஆனில் அனேக வசனங்களே தொலைந்துவுள்ளது. அனேக வசனங்களில் எழுத்துப் பிழைகளும் உள்ளது. இஸ்லாமிய அறிஞர் ஸுயூதி தம்முடைய இத்கான் புத்தகத்தில் இதைப் பற்றி என்ன எழுதியுள்ளார் என்பதை கீழ்கண்ட கட்டுரையில் படிக்கவும். குர்ஆன் பற்றி பொய்களைச் சொல்லும் இன்றைய முஸ்லிம் அறிஞர்களிடமிருந்து உங்களை காத்துக்கொள்ளுங்கள்.

- **குர்ஆன் எழுத்துக்கு எழுத்து பாதுகாக்கப்பட்டுள்ளதா? ஸுயூதியும் தொலைந்த குர்ஆன் வசனங்களும் பாகம் 3 (தொலைந்த 157 குர்ஆன் வசனங்கள்)**

கேள்வி 60: குர்ஆனில் ஏதாவது ஒரு இடத்தில் இயேசு (ஈஸா) பாவம் செய்தார் என்று நேரடியாகவோ மறைமுகமாவோ சொல்லப்பட்டுள்ளதா?

பதில் 60: முஹம்மதுவைப் பார்த்து அல்லாஹ் 'உம் பாவங்களுக்காக மன்னிப்பு கோரும்' என்று சொன்னான். மேலும் 'மற்ற நபிமார்கள் பாவமன்னிப்பு கோரினார்கள்' என்றும் சொன்னான், ஆனால் ஒரு இடத்திலும் இயேசு பற்றி குர்ஆன் இப்படி சொல்வதில்லை.

குர்ஆனோ ஹதீஸ்களோ இயேசு பாவமற்றவர் என்று தான் சொல்கின்றது.

குர்ஆன் 19:19. "நிச்சயமாக நான் உம்முடைய இறைவனின் தூதன்; **பரிசுத்தமான புதல்வரை** உமக்கு நன்கொடை அளிக்க (வந்துள்ளேன்") என்று கூறினார்.

புகாரி ஹதீஸிலும், ஆதாம் தொடங்கி அனைவரும் தம் பாவங்களை அறிக்கையிட்டார்களாம், ஆனால் இயேசு ஒரு பாவத்தையும் அறிக்கையிடவில்லையாம். இது எதைக் காட்டுகின்றது? இயேசு பாவமற்றவர் என்பதைக் காட்டுகின்றது:

4712. அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.

. . . அதற்கு ஈசா(அலை) அவர்கள், 'என் இறைவன் இன்று (என் மீது கடும்) கோபம்கொண்டுள்ளான். இதற்கு முன் அவன் இதைப்போல் கோபம் கொண்டதில்லை. இதற்குப் பிறகும் இதைப் போல் அவன் ஒருபோதும் கோபம் கொள்ளப்போவதுமில்லை - **(தாம் புரிந்துவிட்டதாக) எந்தப் பாவத்தையும் அவர்கள் குறிப்பிடாமல்** - . . .

தலைப்பு: பைபிள் (61 – 90)

கேள்வி 61: பைபிளுக்கு முன்பிலிருந்து குர்ஆன் இருக்கிறது என்று என் நண்பன் சொல்கிறான், இது உண்மையா?

பதில் 61: உங்கள் நண்பருக்கு இவ்விரு புத்தகங்களின் காலக்கட்டம் தெரியவில்லை, அதனால் தான் அவர் அப்படிச் சொல்கிறார்.

கீழ்கண்ட விவரங்களை அவருக்கு விளக்குங்கள்.

1. பைபிளில் உள்ள பழைய ஏற்பாட்டை மோசே (மூஸா) எழுதினார். மூஸாவின் காலக்கட்டம் கி.மு. 1500 (தோராயமாக) ஆகும்.
2. புதிய ஏற்பாடு கி.பி. 100 க்குள் எழுதப்பட்டுவிட்டது.
3. முஹம்மது கி.பி. 570ல் பிறக்கிறார்.

4. முஹம்மது கி.பி. 610ல் (தம்முடைய 40வது வயதில்) தம்மை நபி என்று பிரகடனப்படுத்தினார்.
5. கி.பி. 610 முதல், 632 வரை, முஹம்மதுவிற்கு குர்ஆன் வசனங்கள் இறங்குகின்றன.
6. கி.பி. 632 முஹம்மது மரிக்கிறார்.
7. முஹம்மது மரித்து 14 ஆண்டுகளுக்கு பிறகு, உஸ்மான் மூன்றாம் கலிஃபாவாகிறார். இவரது காலகட்டத்தில் குர்ஆன் ஒரு புத்தகமாக முழுவடிவம் பெறுகிறது.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால், பைபிள் முடிவடைந்த காலக்கட்டத்தையும், குர்ஆன் முதலாவது எழுதப்பட்ட காலக்கட்டத்தையும் கணக்கிட்டால் 500 ஆண்டுகள் வித்தியாசம் உள்ளது.

கேள்வி 62: பைபிளின் நபர்களின் பெயர்கள் குர்ஆனில் அத்தியாயங்களாக உள்ளனவா? அவை யாவை?

பதில் 62: கீழ்கண்ட ஆறு குர்ஆன் அத்தியாயங்களுக்கு பைபிளில் வரும் நபர்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

- ஸூரா 10 - யூனுஸ் (யோனா)
- ஸூரா 12 - யூஸுஃப் (யோசேப்பு)
- ஸூரா 14 - இப்ராஹீம் (ஆபிரகாம்)
- ஸூரா 17 - பனீ இஸ்ராயீல் (இஸ்ராயீலின் சந்ததிகள்)
- ஸூரா 19 - மர்யம் (இயேசுவின் தாய் மரியாள்)
- ஸூரா 71 - நூஹ் (நோவா)

கேள்வி 63: முஹம்மதுவின் காலத்தில் பைபிள் அரபி மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டு இருந்ததா?

பதில் 63: இல்லை, முஹம்மது வாழ்ந்த காலத்தில் பைபிள் அரபியில் மொழியாக்கம் செய்யப்படவில்லை. மேலும், நமக்கு கிடைத்துள்ள பழைய அரபி பைபிள் கையெழுத்துப் பிரதிகள் 9/10வது நூற்றாண்டுக்கு சம்மந்தப்பட்டது என்று அறியப்பட்டுள்ளது.

கேள்வி 64: பைபிள் என்ற வார்த்தை பைபிளில் இல்லை என்று முஸ்லிம்கள் குற்றம் சாட்டுவது சரியா?

பதில் 64: பைபிள் என்ற வார்த்தை பைபிளில் உள்ளது. பைபிள் என்ற வார்த்தை “பிப்லோஸ்(βίβλος)” என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்ததாகும். பிப்லோஸ் என்ற கிரேக்க வார்த்தையின் பொருள் "புத்தகம்/சுருள்" என்பதாகும்.

புதிய ஏற்பாட்டின் முதல் புத்தகம், முதல் வசனம், முதல் வார்த்தை கீழ்கண்டவாறு ஆரம்பிக்கிறது. மூல கிரேக்க மொழியில் மத்தேயு 1:1

- **கிரேக்க மொழி**: Βίβλος Γενέσεως Ἰησοῦ Χριστοῦ υἱοῦ Δαυὶδ υἱοῦ Ἀβραάμ
- **ஆங்கிலம்**: [The] book of [the] genealogy of Jesus Christ son of David, son of Abraham:
- **தமிழ்**: ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்துவினுடைய வம்சவரலாறு

Source: **biblehub.com/text/matthew/1-1.htm**

இன்னும் கீழ்கண்ட வசனங்களிலும், பிப்லோஸ் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது (Source: **biblehub.com/greek/976.htm)**:

மாற்கு 12:26, லூக்கா 3:4;20:42, அப்போஸ்தலர் 1:20;7:42;19:19;பிலிப்பியர் 4:3, வெளி 3:5;20:15

கேள்வி 65: குர்ஆனில் பைபிளில் காணப்படும் அனேக நிகழ்ச்சிகள் காணப்படுவது ஏன்?

பதில் 65: பைபிளின் பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டு நிகழ்ச்சிகளை குர்ஆன் மறுபதிவு செய்திருக்கிறது. குர்ஆன் கி.பி. 610 லிருந்து 632வரை எழுதப்பட்டது. பைபிள் கி.மு. 1500 லிருந்து கி.பி 100 வரைக்குள் எழுதப்பட்டது. பிந்தையது (குர்ஆன்) முந்தையதிலிருந்து (பைபிளிலிருந்து) நிகழ்ச்சிகளை எடுத்து தன்னிடம் மறுபதிவு செய்திருப்பதினால் தான், பைபிளின் நிகழ்ச்சிகள், நபர்களின் பெயர்கள் குர்ஆனில் வருகின்றது.

குர்ஆன் இப்படி பைபிளின் நிகழ்ச்சிகளை மறுபதிவு செய்யும் போது, சில நிகழ்ச்சிகளை அப்படியே மாற்றாமல் பதிவு செய்துள்ளது, சில விவரங்களை குர்ஆன் மாற்றி எழுதியிருக்கிறது.

கேள்வி 66: முஹம்மதுவிடம் அரபி பைபிள் அல்லது பைபிளின் ஒரு புத்தகம் இருந்ததா?

பதில் 66: முஹம்மது வாழ்ந்த காலக்கட்டத்தில் (கிபி 570 - 632) அரபி மொழியில் பைபிள் மொழியாக்கம் செய்யப்படாமல் இருந்தது, மேலும், முஹம்மது வாழ்ந்த சமுதாயம் ஒரு படித்த சமுதாயமல்ல. முஹம்மதுவிற்கு எபிரெயம் மற்றும் கிரேக்க மொழி தெரியும் என்றும் சொல்லமுடியாது.

கேள்வி 67: இயேசுவைப் பற்றி பைபிள் சொல்வதை நம்பவேண்டுமா? குர்ஆன் சொல்வதை நம்பவேண்டுமா?

பதில் 67: முஹம்மதுவைப் பற்றி, இஸ்லாமைப் பற்றி குர்ஆனில் உண்மை விவரம் கிடைக்குமா? அல்லது அதன் பிறகு எழுதப்பட்ட புத்தகத்தில் கிடைக்குமா? புதிய ஏற்பாடு எழுதப்பட்டு 500 ஆண்டுகளுக்கு பிறகு வந்த குர்ஆனில் எப்படி இயேசுவின் உண்மை விவரங்கள் காணப்படும்?

இதுமட்டுமல்ல, இயேசுவைப் பற்றி எதிராக கருத்துக்கள் சொல்லவேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்ட புத்தகத்தில் எப்படி இயேசுவைப் பற்றிய உண்மைகளை பார்க்கமுடியும்? உண்மையான இயேசு பற்றிய விவரங்கள் புதிய ஏற்பாட்டில் மட்டுமே கிடைக்கும், குர்ஆனில் கிடைக்காது.

கேள்வி 68: குர்ஆனில் வரும் "இயேசு செய்த பறவைக்கு உயிர் கொடுக்கும் அற்புதம்" பைபிளில் இல்லையே! ஏன்?

பதில் 68: இயேசு குழந்தையாக இருந்த போது, கலிமண்ணினால் ஒரு பறவை செய்து, அதற்கு உயிர்கொடுத்தார் என்று ஒரு அற்புதத்தை குர்ஆன் பதிவு செய்துள்ளது. இது பைபிளில் இல்லை, காரணம் என்னவென்றால், கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் பல தள்ளுபடி ஆகமங்கள் பலரால் எழுதப்பட்டன.

அப்படி எழுதப்பட்ட ஒரு புத்தகம் தான் ' "Infancy Gospel of Thomas(இன்பான்சி காஸ்பல் ஆஃப் தாமஸ்)', இதில் தான் அந்த அற்புதம் உள்ளது. இது ஒரு பொய்யான புத்தகம், இயேசுவின் சீடர்களால், எழுதப்பட்டதல்ல. புதிய ஏற்பாடு முழுவதும், கடைசி அப்போஸ்தலர் உயிரோடு இருக்கும்போதே எழுதப்பட்டாகிவிட்டது. இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளில் பல கட்டுக்கதைகள் புனைந்து பல புத்தங்கள் எழுதப்பட்டன. அப்படிப்பட்ட புத்தகத்தில் எழுதப்பட்ட கற்பனைக் கதையையும் குர்ஆன் உண்மை என்று எண்ணி பதிவு செய்துவிட்டது.

குர்ஆனில் பல கட்டுக்கதைகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதால் தான் கிறிஸ்தவ அறிஞர்கள் குர்ஆனை புறக்கணிக்கிறார்கள்.

அந்த தள்ளுபடி புத்தகத்தை கீழ்கண்ட தொடுப்பில் படிக்கலாம்:

Infancy Gospel of Thomas

இந்த புத்தகத்திலிருந்து சில மேற்கோள்கள்:

2. This child Jesus, when five years old, was playing in the ford of a mountain stream; and He collected the flowing waters into pools, and made them clear immediately, and by a word alone He made them obey Him. And having made some soft clay, **He fashioned out of it twelve sparrows**. And it was the Sabbath when He did these things. And there were also many other children playing with Him. And a certain Jew, seeing what Jesus was doing, playing on the Sabbath, went off immediately, and said to his father Joseph: Behold, thy son is at the stream, and has taken clay, and made of it twelve birds, and has profaned the Sabbath. And Joseph, coming to the place and seeing, cried out to Him, saying: Wherefore doest thou on the Sabbath what it is not lawful to do? **And Jesus clapped His hands, and cried out to the sparrows, and said to them: Off you go! And the sparrows flew, and went off crying.** And the Jews seeing this were amazed, and went away and reported to their chief men what they had seen Jesus doing.

குர்ஆன் 3:49: குர்ஆன் சொல்வதை படியுங்கள்:

3:49. இஸ்ராயீலின் சந்ததியினருக்குத் தூதராகவும் (அவரை ஆக்குவான்; இவ்வாறு அவர் ஆகியதும் இஸ்ரவேலர்களிடம் அவர்:) "நான் உங்கள் இறைவனிடமிருந்து ஓர் அத்தாட்சியுடன் நிச்சயமாக வந்துள்ளேன்; **நான் உங்களுக்காக களிமண்ணால் ஒரு பறவையின் உருவத்தை உண்டாக்கி நான் அதில்**

ஊதுவேன்; அது அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு (உயிருடைய) பறவையாகிவிடும். . . .” (என்று கூறினார்).

பைபிளின் படி இயேசு செய்த முதல் அற்புதம் கானா ஊர் திருமணத்தில் அவர் செய்த அற்புதம் தான் (யோவான் 2:1-11). குர்ஆன் கட்டுக்கதைகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

கேள்வி 69: பைபிளின் அரபி மொழியாக்கங்களில் யெகோவா தேவனுக்கு ஏன் அல்லாஹ் என்று மொழியாக்கம் செய்துள்ளார்கள்?

பதில் 69: அரபி மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட பைபிளில், யெகோவா என்ற பெயர் வரும் இடங்களில் 'ரப்' என்றும், 'அல்லாஹ்' என்றும் இரண்டு வகைகளில் 9ம் நூற்றாண்டிலிருந்து மொழியாக்கம் செய்துள்ளார்கள். அல்லாஹ் என்பது குர்ஆனை கொடுத்தவனின் தனிப்பெயர் என்று முஸ்லிம்கள் சொல்வதால், 'ரப்' என்றோ, 'யெகோவா'என்றொ மொழியாக்கம் செய்வது தான் சரியானது.

பைபிளின் யெகோவா தேவன், குர்ஆனின் அல்லாஹ் அல்ல. இவ்விருவரும் நேர் எதிர் துருவங்கள். இவ்விருவரும் ஒருவர் என்று முஸ்லிம்கள் சொல்லிக்கொள்ளலாம், ஆனால் அது தவறு. இந்த குழப்பம் தீர, அரபி பைபிள்களில் அல்லாஹ் என்ற பெயருக்கு பதில் 'ரப்' என்றோ, 'யெகோவா' என்றோ மொழியாக்கம் செய்வதே சரியானது.

கேள்வி 70: முஸ்லிம்கள் குர்ஆனை அதன் மூல மொழியில் படிப்பது போன்று, ஏன் கிறிஸ்தவர்கள் பைபிளை அதன் மூல மொழிகளாகிய எபிரேய மற்றும் கிரேக்க மொழிகளில் படிப்பதில்லை?

பதில் 70: தெரியாத மொழியில் புரியாமல் படிப்பதினால் என்ன நன்மை சொல்லுங்கள்?

சில நேரங்களில் நாம் பேருந்து அல்லது இரயிலில் பயணம் செய்யும் போது, நம் பக்கத்தில் உட்கார்ந்துக் கொண்டு, நமக்கு தெரியாத மொழியில் சிலர் பேசிக்கொண்டே இருப்பார்கள். நமக்கு ஒன்றுமே புரியாது, தலைவலியாக இருக்கும். ஏன் தெரியுமா? நமக்கு புரியவில்லை என்பதும் ஒரு காரணம் தான். அதுவே, நமக்கு புரியும் தமிழில் யாராவது தொன தொனவென்று பேசினால், தலைவலியாக இருந்தாலும், கொஞ்சமாவது தாக்குபிடிக்கலாம், புரியும் என்பதால்.

மேலும், குர்ஆனை அரபி மொழியில் படிப்பது படிப்பவரை முட்டாள்களாகவே வைத்திருக்கும் யுக்தி தான் அது. இமாம்கள், மார்க்க தலைவர்கள் மக்களை அறியாமையில் வைத்திருக்கவேண்டுமென்றால், புரியாத மொழியில் வேதங்களை படிக்க வைக்கவேண்டும், அப்போது தான் 'இந்த அரபியில் ஏதோ சக்தி இருக்கிறது, இதை நாம் கேள்வி கேட்கக்கூடாது, புரியும் மொழியில் படித்தால் நன்மை கிடைக்காது' என்று மக்கள் எண்ணி அறியாமையில் இருப்பார்கள்.

கிறிஸ்தவர்களோ, போதகர்களோ இப்படியெல்லாம் மக்களை அறியாமையில் வைத்திருக்க விரும்புவதில்லை, எனவே, நாங்கள் எபிரேய மற்றும் கிரேக்க மொழியில் பைபிளை படிக்காமல், எங்களுக்கு தெரிந்த மொழியில் அல்லது தாய் மொழியில் படிக்கிறோம். பைபிள் கல்லூரிகளில் பட்டப்படிப்பு படிப்பவர்கள், ஆய்வு செய்ய விரும்புகிறவர்கள், இம்மொழிகளை

படித்து ஆய்வு செய்கிறார்கள், ஆனால் தங்கள் அனுதின ஆன்மீக வளர்ச்சிக்கு புரியும் மொழியிலேயே படிக்கிறார்கள்.

கேள்வி 71: குர்ஆனை அரபியில் படித்தால் அதிக நன்மையை அல்லாஹ் தருவதாக முஸ்லிம்கள் நம்புகிறார்கள். இதுபோலவே பைபிளை எபிரேய கிரேக்க மொழிகளில் படித்தால், தேவன் நமக்கு அதிக நன்மைகளைத் தருவாரா?

பதில் 71: அல்லாஹ் ஒரு பொய்யான இறைவன் எனவே மக்கள் அறியாமையிலேயே இருக்கவேண்டுமென்று விரும்பி, புரியவில்லையென்றாலும் நீங்கள் குர்ஆனை அரபியில் படியுங்கள் என்று முஸ்லிம்களுக்கு கட்டளையிட்டான்.

பைபிளின் தேவன் மக்களை ஞானத்திற்கு நேராக அழைத்துச் செல்கிறார். நீதிமொழிகள் புத்தகத்தை படித்தால், ஞானத்திற்கு (உலக ஞானம், ஆன்மீக ஞானம்) எவ்வளவு முக்கியத்தும் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியலாம்.

இறைவனுடைய வேதத்தை வாசிக்கவேண்டும், கேட்கவேண்டும் மற்றும் கீழ்படியவேண்டும், அரபியிலோ, எபிரேயம் மற்றும் கிரேக்க மொழியிலோ படித்தால் எப்படி புரியும்? புரியவில்லையென்றால் எப்படி கீழ்படியமுடியும்?

இதனை பைபிள் எப்படி அழகாகச் சொல்கிறது என்பதை கவனிக்கவும்:

வெளி 1:3 இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது.

மக்களுக்கு புரியவேண்டும் என்பதற்காகத் தான் இயேசுவும் "காது உள்ளவன் கேட்கக்கடவன்" என்றார். நமக்கு புரியும் மொழியில் கேட்கும் போது தான் அதனை நாம் உணர்ந்துக்கொள்ளமுடியும், அதன் பிறகு அக்கட்டளைகளை பின்பற்றுவதா அல்லது புறக்கணிப்பதா என்ற முடிவு எடுக்கலாம்.

ஞானம் மற்றும் அறிவு பற்றி இரண்டு வசனங்களை பாருங்கள். நமக்குள் இருக்கும் ஆவியானவர் ஞானத்தின் ஆவியானவர், நமக்கு புரியவைத்து, நாம் அதற்கு மனப்பூர்வமாக கீழ்படிய உதவி செய்கிறார்.

நீதிமொழிகள் 15:14

புத்திமானுடைய மனம் **அறிவைத்** தேடும்; மூடரின் வாயோ மதியீனத்தை மேயும்

ஏசாயா 11:2

ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், **அறிவையும்** கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்.

எனவே, நமக்கு புரியாத மொழியில் அதாவது அரபி, எபிரேயம், மற்றும் கிரேக்க மொழியில் படித்தால் நான் நன்மை செய்வேன் என்று பைபிளின் தேவன் சொல்லவில்லை, அவர் சொல்லவும் மாட்டார். **முஸ்லிம்களே! குர்ஆனை அரபியில் படித்து வஞ்சிக்கப்படாதிருங்கள்.**

கேள்வி 72: பழைய ஏற்பாட்டை புதிய ஏற்பாடு இரத்துசெய்கிறது, அதுபோல புதிய ஏற்பாட்டை குர்ஆன் இரத்து செய்கிறது. எனவே, குர்ஆனைத் தான் கிறிஸ்தவர்கள் படிக்கவேண்டும் என்று என் நண்பர் சொல்கிறார். இதற்கு பதில் என்ன?

பதில் 72: உங்கள் நண்பருக்கு வேதங்கள் பற்றிய ஞானமில்லை அல்லது அவர் பொய் சொல்கிறார்.

பழைய ஏற்பாட்டை புதிய ஏற்பாடு இரத்து செய்தது என்று யார் சொன்னார்கள்? புதிய ஏற்பாட்டில் அப்படி ஒன்றும் சொல்லப்படவில்லையே!

இயேசு நியாயப்பிரமாணங்களை, தீர்க்கதரிசனங்களை நிறைவேற்ற வந்தார் என்று கூறியுள்ளார், பார்க்க மத்தேயு 5:17:

5:17. நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, **நிறைவேற்றுகிறதற்கே** வந்தேன்.

புதிய ஏற்பாடு, பழைய ஏற்பாட்டின் நிறைவேறுதல் ஆகும். புதிய ஏற்பாட்டில் அனேக இடங்களில் பழைய ஏற்பாட்டின் "தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும் படி இப்படி நடந்தது" என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் நண்பர் சொல்வது தவறு. மேலும், குர்ஆன் ஒரு இறைவேதமில்லை என்று இருக்கும் போது, அது எப்படி புதிய ஏற்பாட்டை இரத்து செய்யும். பைபிளின் படி, அல்லாஹ் ஒரு பொய் இறைவன், முஹம்மது ஒரு கள்ளத்தீர்க்கதரிசி ஆவார், இப்படி இருக்கும் போது, குர்ஆன் எப்படி இறைவேதமாகும்.

கேள்வி 73: இயேசுவிற்கும் தனக்கும் (முஹம்மதுவிற்கும்) இடையே எந்த ஒரு தீர்க்கதரிசியும் எழும்பவில்லை என்று முஹம்மது கூறியுள்ளாரே! இது உண்மையா?

பதில் 73: பைபிளின் படி, முஹம்மது ஒரு தீர்க்கதரிசி அல்ல. இப்படி இருக்கும் போது முஹம்மது எதை வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளலாம்.

இதுமட்டுமல்ல, இயேசுவிற்கும் முஹம்மதுவிற்கும் இடையே (600 ஆண்டுகள்) ஒரு தீர்க்கதரிசியும் எழும்பவில்லை என்று முஹம்மது கூறுவது, இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு எதிரான கூற்றாகும். அதாவது இஸ்லாமின் படி, ஒவ்வொரு காலத்திலும், ஒவ்வொரு இனத்திற்கும் அல்லாஹ் நபிகளை அனுப்பி வழிநடத்துகின்றான். ஆனால், 600 ஆண்டுகள் ஒரு நபியும் எழும்பவில்லை என்று முஹம்மது கூறும் போது, இஸ்லாமுக்கு எதிரான கூற்றாக உள்ளது. எனவே முஹம்மதுவின் கூற்று அல்லாஹ்விற்கும் இஸ்லாமுக்கும் எதிரான கூற்றாகும்.

இன்னொரு வேடிக்கையைப் பாருங்கள், இயேசுவிற்கும் முஹம்மதுவிற்கும் 600 ஆண்டுகள் இடைவெளி உள்ளது, ஆனால், முஹம்மதுவிற்கும் இஸ்மாயீலுக்கும் (இப்றாஹீமின் மகன்) இடையே கிட்டத்தட்ட 2500 ஆண்டுகள் உள்ளது.

ஆக, அல்லாஹ் தன் மக்கா மக்களை வழி நடத்த 2500 ஆண்டுகளாக ஒரு நபியையும் அங்கு அனுப்பவில்லை என்று அறியும் போது, அல்லாஹ் மீது சிறிது சந்தேகம் வரத்தான் செய்கிறது.

கேள்வி 74: முஸ்லிம்கள் பைபிளை படித்தால் அல்லாஹ் கோபம் கொள்வானா?

பதில் 74: பைபிளில் நேர் வழி உள்ளது என்று குர்ஆன் சொல்கிறது, பைபிளின் நபிமார்கள் பற்றி பல நிகழ்ச்சிகளை குர்ஆன் மறுபதிவு செய்கிறது. இப்படி இருக்கும் போது, முஸ்லிம்கள் பைபிளை படிப்பதுதானே நியாயமான செயலாக இருக்கும்!

முந்தைய வேதங்களை கொடுத்தவனும் தானே என்று அல்லாஹ் சொல்கின்றான், தன் வேதங்களை யாராளும் மாற்றமுடியாது என்றும் அல்லாஹ் சொல்கின்றான். விஷயம் இப்படி இருக்கும் போது, ஏன் அல்லாஹ் கோபம் கொள்வான், சொல்லுங்கள்?

தவ்ராத், ஜபூர் மற்றும் இன்ஜில் பற்றி குர்ஆன் சொல்பவற்றை படியுங்கள், இதன் பிறகுமா நீங்கள் இவைகளை படிக்க தயங்குவீர்கள்?

குர்ஆன் 2:53. இன்னும், நீங்கள் நேர்வழி பெறும்பொருட்டு நாம் மூஸாவுக்கு வேதத்தையும் (நன்மை தீமைகளைப் பிரித்து அறிவிக்கக்கூடிய) ஃபுர்க்கானையும் அளித்தோம் (என்பதையும் நினைவு கூறுங்கள்).

குர்ஆன் 3:3. (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இந்த வேதத்தைப் (படிப்படியாக) அவன் தான் உம் மீது இறக்கி வைத்தான்; இது-இதற்கு முன்னாலுள்ள (வேதங்களை) உறுதிப்படுத்தும் தவ்ராத்தையும் இன்ஜீலையும் அவனே இறக்கி வைத்தான்.

குர்ஆன் 5:44. நிச்சயமாக நாம் தாம் “தவ்ராத்”தை யும் இறக்கி வைத்தோம்; அதில் நேர்வழியும் பேரொளியும் இருந்தன. (அல்லாஹ்வுக்கு) முற்றிலும் வழிப்பட்ட நபிமார்கள், யூதர்களுக்கு அதனைக் கொண்டே (மார்க்கக்) கட்டளையிட்டு வந்தார்கள்; . . .

குர்ஆன் 5:46. இன்னும் (முன்னிருந்த) நபிமார்களுடைய அடிச்சுவடுகளிலேயே மர்யமின் குமாரராகிய ஈஸாவை, அவருக்கு முன் இருந்த தவ்ராத்தை உண்மைப்படுத்துபவராக நாம் தொடரச் செய்தோம்; அவருக்கு நாம் இன்ஜீலையும் கொடுத்தோம்; **அதில் நேர்வழியும் ஒளியும் இருந்தன;** அது தனக்கு முன்னிருக்கும் தவ்ராத்தை உண்மைப்படுத்துவதாக இருந்தது; அது **பயபக்தியுடையவர்களுக்கு நேர் வழிகாட்டியாகவும்** நல்லுபதேசமாகவும் உள்ளது.

குர்ஆன் 17:55. உம்முடைய இறைவன் வானங்களிலும் பூமியிலும் உள்ளவர்களைப் பற்றி நன்கு அறிவான்; நபிமார்களில் சிலரை வேறு

சிலரைவிடத் திட்டமாக நாம் மேன்மையாக்கியிருக்கிறோம்; இன்னும் **தாவூதுக்கு ஜபூர் (வேதத்தையும்) கொடுத்தோம்**.

கேள்வி 75: முஸ்லிம்கள் குர்ஆனின் வசனங்களில் அடிக்கோடு இடுவது, பக்கங்களில் குறிப்பு எழுதுவது போன்று எதையும் செய்வதில்லை. ஆனால், கிறிஸ்தவர்கள் இதனைச் செய்கிறார்கள். இது தவறு தானே!

பதில் 75: இது தவறு இல்லை, இதனால் அனேக நன்மைகள் உள்ளன. முஸ்லிம்கள் அரபியில் குர்ஆனை படிக்கிறார்கள், அவர்கள் படிப்பது என்னவென்றே அவர்களுக்கு தெரிவதில்லை, எனவே எந்த வசனத்தை அவர்கள் அடிக்கோடு இடுவார்கள்?

ஆனால், கிறிஸ்தவர்கள் பைபிளை தாய் மொழியில் படிக்கிறார்கள். மேலும் பைபிளின் வசனங்களுக்கு உயிர் இருக்கிறது, அவைகளை படிக்கும்போது, நம்மோடு அவைகள் பேசும், அப்போது நாங்கள் உடனே அவ்வசனங்களை அடிக்கோடு இடுவோம். சில மாதங்கள் கழித்து மறுபடியும் அதே வசனங்களை படிக்கும்போது, அடிக்கோடுகளை கண்டு கர்த்தருக்கு நாங்கள் நன்றிகளைச் சொல்லுவோம்.

பைபிளில் எச்சரிக்கைத் தரும் கட்டளைகள் இருக்கும், ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்கள் இருக்கும், அடிக்கோடு இட்ட இந்த வசனங்கள் பார்க்கும் போது, சில எச்சரிக்கைகள் ஞாபகத்திற்கு வந்து, நாங்கள் தொடர்ந்து மனந்திரும்பவோ, மற்றவர்களுடன் ஒற்றுமையடையவோ அவைகள் பயனுள்ளதாக இருக்கிறது. எனவே, அடிக்கோடு இடுவது, பைபிளின் பக்கங்களில் குறிப்புகளை எழுதுவது கிறிஸ்தவர்களுக்கு ஒரு ஆசீர்வாதமான செயலாகும்.

கேள்வி 76: முஸ்லிம்கள் குர்ஆனை குளித்துவிட்டு, உளு செய்துவிட்டு தொடுகிறார்கள், படிக்கிறார்கள். இதே போல கிறிஸ்தவர்கள் குளித்துவிட்டு பைபிளை படிப்பதில்லை ஏன்? சுத்தமாக இருப்பதில் தவறேதுமில்லையே!

பதில் 76: உடல் சுத்தமாக வைத்துக்கொண்டு வேதத்தை படிப்பது தவறில்லை, ஆனால், உடல் சுத்தம் தான் முக்கியம் என்று எண்ணுவது தான் தவறு. இயேசு போதிக்கும் போது, உடல் சுத்தத்தைவிட உள்ளம் சுத்தம் முக்கியம் என்று கூறினார்.

உடலை மட்டும் சுத்தம் செய்துக்கொண்டு, புரியாமல் குர்ஆனை படிப்பதினால் என்ன பயன்? உடலை சுத்தம் செய்துக்கொண்டு, இறை கட்டளைகளுக்கு கீழ்படிய விருப்பமில்லாமல் குர்ஆனை படிப்பதினால் என்ன பயன்?

கிறிஸ்தவம் மிகவும் தெளிவாக உள்ளது, கிறிஸ்தவர்களும் மிகவும் தெளிவாக இருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் பைபிளை எப்போது வேண்டுமானாலும் படிப்பார்கள், மாலைவரை வியர்வை சிந்தி வேலை செய்துவிட்டு, வீடு திரும்பும் போது வியர்வை நாற்றம் உடலுக்குள் அடித்தாலும், பஸ்ஸில் அல்லது ரயிலில் உட்கார்ந்துக்கொண்டு, பைபிளை நாங்கள் படிப்போம். இயேசு அந்த நேரத்தில் எங்கள் வியர்வை நாற்றத்தை பார்ப்பதில்லை, மனதின் நற்கந்தத்தை பார்க்கிறார்.

இப்படி நான் எழுதுகின்றேன் என்பதற்காக, கிறிஸ்தவர்கள் குளிக்கவே மாட்டார்கள் என்று நான் சொல்லவரவில்லை. எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ள எங்களுக்குத் தெரியும் என்று சொல்லவருகிறேன்.

முஸ்லிம்களில் அனேகர் ஏன் குர்ஆன் பக்கமே தலைவைத்து படுப்பதில்லை தெரியுமா? இதற்கு முதல் காரணம், குர்ஆனை அரபியில் படிக்கச் சொல்வதினால், இரண்டாவது காரணம், குளித்துவிட்டு, உளு செய்துவிட்டு, ஒரு குறிப்பிட்ட இடத்தில் உட்கார்ந்துக்கொண்டு, பயபக்தியால் நிரம்பி, குர்ஆனை படிக்கச்சொல்வதினால் தான்.

கேள்வி 77: குர்ஆனை மூல மொழியாகிய அரபி மொழியில் மனப்பாடம் செய்வதை இஸ்லாம் ஊக்குவிக்கிறது, இது போல ஏன் கிறிஸ்தவம் ஊக்குவிப்பதில்லை?

பதில் 77: கிறிஸ்தவம் பொருள் புரியாமல் எதையும் செய்ய ஊக்குவிப்பதில்லை. உண்மையில் இதனால் நன்மை ஒன்றுமில்லை. கிறிஸ்தவர்கள் படித்தவர்கள் அவர்கள் எபிரேய மற்றும் கிரேக்க மொழியில் பைபிள் வசனங்களை மனப்பாடம் செய்வதினால் என்ன நன்மையென்று கேட்கத்தெரிந்தவர்கள்.

அர்த்தம் தெரியாமல் குர்ஆனை மனப்பாடம் செய்வது என்பது ஒரு அறியாமையாகும். முஸ்லிம்களுக்கு இதனால் ஒரு பொய்யான திருப்தி உண்டாகுமே தவிர, வேறு ஒரு நன்மையும் இல்லை.

மெய்யான ஜீவனுள்ள பைபிள் வசனங்களை எங்களுக்கு புரியும் மொழியில் மனப்பாடம் செய்வதில் தான் உண்மையான ஆன்மீகம் என்று நாங்கள் அறிவோம்.

கேள்வி 78: இயேசு சிலுவையில் மரிப்பதற்கு முன்பு என்ன செய்தார்?

பதில் 78: இயேசு சிலுவையில் அறையப்பட்ட பிறகு, முக்கியமான ஒன்றைச் சொல்லவேண்டுமென்றால், "தன்னை சிலுவையில் அறைந்தவர்களை மன்னித்தார்". இயேசு இப்படி மன்னித்ததினால் தான், எந்நிலையிலும் எதிரிகளை மன்னிக்கவேண்டும் என்று கிறிஸ்தவர்கள் கற்றுக்கொண்டார்கள்.

இதே போல மரண படுக்கையில் முஹம்மது யூதர்களையும், கிறிஸ்தவர்களையும் சபித்தார், அதனால் தான் அவரை பின்பற்றுகின்ற முஸ்லிம்கள் மிகவும் கோபத்தோடும், எரிச்சலோடும் யூதர்களையும்,கிறிஸ்தவர்களையும் இன்று வெறுத்துக்கொண்டு இருக்கிறார்கள். மரம் எப்படியோ கனிகள் அப்படி.

கேள்வி 79: இயேசு அடிமைகளை வைத்திருந்தாரா?

பதில் 79: இல்லை, இயேசு அடிமைகளை வைத்திருந்ததில்லை.

கேள்வி 80: ஆபிரகாம் மக்காவிற்குச் சென்று அங்கு காபாவை கட்டியதாக ஏதாவது குறிப்பு பைபிளில் உள்ளதா?

பதில் 80: கி.மு. 2000/1900 காலக்கட்டத்தில் ஆபிரகாம் மக்காவிற்குச் சென்று அங்கு காபாவை கட்டியதாக இஸ்லாம் சொல்லும் விவரம் சரித்திர சான்று அற்றது. இப்படிப்பட்ட விஷயத்தை பைபிளில் காணமுடியாது. ஆபிரகாம் தனக்கு தேவன் சொன்ன பகுதியிலே கடைசி வரை வாழ்ந்து மரித்ததாக பைபிள் சொல்கிறது. அப்பொழுது ஈசாக்கும், இஸ்மவேலும் அவரை அடக்கம் செய்த விவரத்தை பைபிளில் காணலாம்:

ஆதியாகமம் 25:7-9

7. ஆபிரகாம் உயிரோடிருந்த ஆயுசுநாட்கள் நூற்று எழுபத்தைந்து வருஷம்.

8. பிற்பாடு ஆபிரகாம் நல்ல நரைவயதிலும், முதிர்ந்த பூரண ஆயுசிலும் பிராணன் போய் மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான்.

9. அவன் குமாரராகிய **ஈசாக்கும் இஸ்மவேலும்** மம்ரேக்கு எதிரே ஏத்தியனான சோகாரின் குமாரனாகிய எப்பெரோனின் நிலத்திலுள்ள மக்பேலா என்னப்பட்ட குகையிலே அவனை அடக்கம்பண்ணினார்கள்.

இஸ்லாமில் அனேக சரித்திர பிழைகள் உள்ளது, அவைகளில் இதுவும் ஒன்று.

கேள்வி 81: இஸ்மவேல் மக்காவில் சென்று வாழ்ந்தார் என்று இஸ்லாம் சொல்கிறது, பைபிள் இதைப் பற்றி என்ன சொல்கிறது?

பதில் 81: இஸ்மவேலும் ஈசாக்கும் அடுத்தடுத்த பகுதிகளில் வாழ்ந்ததாக பைபிள் கூறுகிறது. இஸ்மவேலுக்கு 12 பிள்ளைகள் பிறந்து அவர்களும், குழுத்தலைவர்களாக (பிரபுக்கள்) இருந்தார்கள். இஸ்மவேல் மக்காவிற்குச் செல்லவில்லை, காபாவை கட்டவில்லை என்பது தான் உண்மை.

ஆதியாகமம் 25:12-17

12. சாராளுடைய அடிமைப்பெண்ணாகிய எகிப்து தேசத்தாளான ஆகார் ஆபிரகாமுக்குப் பெற்ற குமாரனாகிய **இஸ்மவேலின் வம்சவரலாறு:** 13. பற்பல சந்ததிகளாய்ப் பிரிந்த இஸ்மவேலின் புத்திரருடைய நாமங்களாவன; இஸ்மவேலுடைய மூத்த மகன் நெபாயோத்; பின்பு கேதார், அத்பியேல், மிப்சாம்,14. மிஷ்மா, தூமா, மாசா, 15. ஆதார், தேமா, யெத்தூர், நாபீஸ், கேத்மா என்பவைகளே. 16. தங்கள் கிராமங்களிலும் அரண்களிலும் குடியிருந்த தங்கள் ஜனத்தாருக்குப் பன்னிரண்டு பிரபுக்களாகிய இஸ்மவேலின் குமாரர்கள் இவர்களே, இவர்களுடைய நாமங்களும் இவைகளே. 17. இஸ்மவேலின் வயது நூற்று முப்பத்தேழு. பின்பு அவன் பிராணன் போய் மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான்.

கேள்வி 82: பைபிளின் அனேக நிகழ்ச்சிகள் குர்ஆனில் வருவதினால், ஏன் நீங்கள் குர்ஆனை ஏற்பதில்லை?

பதில் 82: இது அருமையான கேள்வி தான். இன்று ஒரு நபர் ஒரு புத்தகத்தை எழுதி, அதில் குர்ஆனில் உள்ள 90% சதவிகித விவரங்களை சேர்த்துவிட்டு, ஒரே ஒரு விவரத்தை மட்டும் மாற்றிச் சொல்வாரானால், அதனை முஸ்லிம்கள் ஏற்பார்களா? அதுவும், அந்த புத்தகத்தில் "முஹம்மது ஒரு நபி இல்லை" என்று எழுதியுள்ளார் என்று வைத்துக்கொள்வோம்.

குர்ஆனில் உள்ள 90% விவரங்கள் இந்த புதிய புத்தகத்தில் இருந்தாலும், இஸ்லாமின் அடிப்படை கோட்பாடு, முஹம்மது அல்லாஹ்வின் நபி என்பதாகும். இதனை இந்த புதிய புத்தகம் மறுத்தால் இது ஏற்றுக்கொள்ளப்படுமா?

இதே போன்று தான் பைபிளில் உள்ள எல்லா நிகழ்ச்சிகளையும், நபிமார்கள் பற்றியும் குர்ஆனில் சேர்த்தாலும், அதனை "மாற்றாமல் சேர்த்து இருந்தால்" அதனை ஏற்கமுடியும், ஆனால் குர்ஆன் பைபிளின் பல அடிப்படை கோட்பாடுகளை புறக்கணிப்பதால், அதனை ஏற்கமுடியாது.

கள்ள ரூபாய் நோட்டுக்கும், நல்ல நோட்டுக்கும் 9 ஒற்றுமைகள் இருந்தாலும், பார்ப்பதற்கு ஒரே மாதிரியாக இருந்தாலும், ஒரே ஒரு வித்தியாசம் இருந்தால் அது கள்ள நோட்டு என்று கருதப்படுமே ஒழிய நல்ல ரூபாய் நோட்டு என்று கருதப்படாது.

கேள்வி 83: பைபிள் மூல மொழிகளிலிருந்து வேறு மொழிகளுக்கு மொழியாக்கம் செய்தால், அது தன் தெய்வத்தன்மையை இழந்துவிடுகின்றதல்லவா?

பதில் 83: இல்லை, மொழியாக்கம் செய்யும் போது, பைபிள் தன் தெய்வத்தன்மையை ஒரு போதும் இழந்துவிடாது. ஆனால், முஸ்லிம்கள் இப்படி நம்புகிறார்கள் அதாவது, குர்ஆனை மொழியாக்கம் செய்தால், அது தான் தெய்வத்தன்மையை இழந்துவிடுகிறது, அதனால் தான் அரபியிலேயே குர்ஆனை படிக்க முஸ்லிம்கள் உற்சாகப்படுத்தப்படுகிறார்கள்.

பைபிளின் படி, பைபிளில் சொல்லப்பட்ட செய்தியை மூல மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மாற்றும் போது, அந்த செய்தியை சொன்னால் போதும், இந்த புதிய மொழியிலும் அதே மூல வார்த்தைகளைக் கொண்டுச் சொல்லவேண்டும் என்பதல்ல.

உதாரணத்திற்கு, கீழ்கண்ட வசனத்தின்(**மத்தேயு 11:28**) 'முதல் வார்த்தையை கவனிக்கவும்'. தமிழ் மொழி தான் மூல மொழி என்று வைத்துக்கொள்ளுங்கள். இந்த வசனத்தை தமிழிலிருந்து, வேறு ஒரு மொழிக்கு மொழியாக்கம் செய்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த புதிய மொழியில் 'வருத்தப்பட்டு' என்ற வார்த்தைக்கு 100% இணையான வார்த்தை இல்லை என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த புதிய மொழியில் 'துக்கப்பட்டு' என்ற வார்த்தை தான் உள்ளது, இது தமிழின் மூல வார்த்தைக்கு 90% மட்டுமே பொருந்துகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்.

வேறு வார்த்தை இல்லை என்பதால், "துக்கப்பட்டு..." என்று அந்த புதிய மொழியில் மொழியாக்கம் செய்தாலும், அந்த புதிய மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட பைபிள் தன் தெய்வத்தன்மையை இழக்காது. ஏனென்றால், அந்த வசனத்தின் சுருக்கம் என்ன? வருத்தப்பட்டோ, துக்கப்பட்டோ, இயேசுவிடம் வந்தால், அவர் அவர்களுக்கு இளைப்பாறுதலைத் தருவார் என்பதாகும்.

மத்தேயு 11:28

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

எனவே, மொழியாக்கம் செய்யும் போது சில வார்த்தைகள் மூல மொழிக்கு சமமாக கிடைப்பதில்லை, இருந்த போதிலும் செய்தி சரியாகச் சொன்னால் போதும். வார்த்தைக்கு வார்த்தை 100% சமமான வார்த்தைகளையே பயன்படுத்தவேண்டும் என்ற கோட்பாட்டை பைபிள் நிர்ணயிக்கவில்லை. வானத்திலிருந்து குதித்த எழுத்துக்களையே இயந்திரங்களைப் போன்று மக்கள் பொருள் தெரியாமல் படிக்கவேண்டும் என்று பைபிளின் தேவன் எதிர்ப்பார்க்கவில்லை, அர்த்தம் தெரிந்து செய்தியை புரிந்து படித்து அதற்கு கீழ்படிந்தால் போதும்.

ஒரு மனிதனுக்கு எதை கீழ்படியவேண்டும், எப்படி கீழ்படியவேண்டும் என்ற செய்தி தெளிவாக தெரிந்தால் போதும், அவன் இறைவனுக்கு அருகில் வந்துவிடுவான், இது இல்லாத பட்சத்தில் பல இடைத்தரகர்கள் மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையில் வந்து உட்கார்ந்துக்கொள்வார்கள்.

கேள்வி 84: "பைபிளிலிருந்து முஹம்மதுவின் பெயர் நீக்கப்பட்டுவிட்டது" என்ற இஸ்லாமியர்கள் கூறுகிறார்களே! இது உண்மையா?

பதில் 84: பைபிளில் முஹம்மதுவின் பெயர் வரவேண்டிய அவசியம் என்ன? அவர் யார்? நம்மிடம் இப்போது முஹம்மதுவின் காலத்துக்கு முன்பு இருந்த பைபிளின் கையெழுத்துப் பிரதிகள் உள்ளன, அதே போன்று அவரது காலத்துக்கு பின்பு எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன.

இந்த குற்றச்சாட்டை வைக்கும் முஸ்லிம்கள் இவ்விரு கையெழுத்துப் பிரதிகளை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளட்டும். உலகில் எந்த ஒரு முஸ்லிமாலும் இந்த காரியத்தைச் செய்யமுடியாது.

கேள்வி 85: இஸ்லாம் சொல்வது போன்று ஏன் கிறிஸ்தவர்கள் இயேசுவை ஒரு 'தீர்க்கதரிசி' என்று மட்டுமே பார்க்கக்கூடாது.

பதில் 85: உலகத்தில் குர்ஆன் மட்டுமே இருந்திருந்தால், கிறிஸ்தவர்கள் இயேசுவை வெறும் தீர்க்கதரிசி என்று மட்டும் நம்பலாம். ஆனால், குர்ஆனுக்கு முன்பாகவே பைபிள் வந்துவிட்டதே, அதுவும் குர்ஆனுக்கு 500 ஆண்டுகளுக்கு முன்பே புதிய ஏற்பாடு வந்துவிட்டதால், இயேசுவை வெறும் நபி என்று கருதமுடியவில்லை.

முஸ்லிம்களுக்கு ஒரு சவால் விடுகிறேன், யாராவது புதிய ஏற்பாட்டை படியுங்கள், அதுவும் நற்செய்தி நூல்களை மட்டுமே படித்து, 'அதில் இயேசு தன்னை நபி என்று மட்டும் சொல்கிறார்' என்று நிருபியுங்கள், அப்போது நான் 'இயேசு ஒரு நபி' என்று ஏற்றுக்கொள்ளுவேன்.

இயேசு பேசிய வார்த்தைகளை படிக்கும்போது, அவர் தன்னை இறைவனுக்கு சமமாக கருதுவதாக தெரிகிறது. இதில் எந்த ஒரு சிறிய சந்தேகத்திற்கும் இடமளிக்கவில்லை.

கேள்வி 86: நான் ஒரு முஸ்லீம், பைபிளை படிக்கவேண்டும் என்று விரும்புகிறேன். எங்கேயிருந்து ஆரம்பிக்கட்டும், பழைய ஏற்பாடா அல்லது புதிய ஏற்பாடா?

பதில் 86: நீங்கள் புதிய ஏற்பாட்டிலிருந்து ஆரம்பியுங்கள். புதிய ஏற்பாட்டின் முதல் புத்தகத்திலிருந்து படிக்க ஆரம்பியுங்கள். புதிய ஏற்பாட்டை முடித்த பிறகு நீங்கள் பழைய ஏற்பாட்டை தொடங்கலாம்.

கேள்வி 87: இயேசுவிற்கு இன்ஜில் கொடுக்கப்பட்டதென்று குர்ஆன் சொல்கிறது? அது ஒரு புத்தகம் தான், ஆனால் நீங்கள் ஏன் நான்கு நற்செய்திகளை வைத்திருக்கிறீர்கள்?

பதில் 87: முஹம்மது கி.பி. 610ல் நபியாகிறார். புதிய ஏற்பாட்டின் நான்கு நற்செய்தி நூல்கள் (மத்தேயு, மாற்கு, லூக்கா & யோவான்) கி.பி. 100க்குள் முடிவடைந்துவிட்டது. 500 ஆண்டுகளுக்கு பிறகு வந்த குர்ஆன் இயேசுவிற்கு இன்ஜில் கொடுக்கப்பட்டது என்றுச் சொல்லும் போது, அது அனைத்து நற்செய்தி நூல்களை குறிப்பதாகத் தானே அர்த்தம்?

கிறிஸ்தவர்களைப் பார்த்து குர்ஆன் நீங்கள் இன்ஜிலை பின்பற்றுங்கள் என்று கி.பி. 610க்கு பிறகு கட்டளையிடும் போது, அவர்களிடம் உள்ள நான்கு நற்செய்தி நூல்களைத் தானே அது குறிப்பதாக அமையும்?

ஒருவேளை குர்ஆனில் எங்கேயாவது, கிறிஸ்தவர்களிடம் உள்ள நான்கு நற்செய்தி நூல்களை நான் அனுப்பவில்லை, நான் ஒன்றைத் தான் அனுப்பினேன் என்று அல்லாஹ் சொல்லியுள்ளானா? இல்லையே!

5:47. (ஆதலால்) **இன்ஜீலையுடையவர்கள்**, அதில் அல்லாஹ் இறக்கி வைத்ததைக் கொண்டு தீர்ப்பு வழங்கட்டும்; அல்லாஹ் இறக்கி வைத்ததைக் கொண்டு யார் தீர்ப்பளிக்கவில்லையோ அவர்கள் தான் பாவிகளாவார்கள்.

இந்த வசனத்தை அல்லாஹ் இறக்கும் போது கிறிஸ்தவர்களிடம் நான்கு நற்செய்தி நூல்கள் உள்ளன என்று அவனுக்குத் தெரியவில்லையா? நிச்சயம் தெரியும், ஆனால் முஸ்லிம்கள் தான் இதனை ஏற்கமனதில்லாமல் இருக்கிறார்கள்.

கேள்வி 88: பைபிளில் இயேசு எங்கேயாவது தன்னை இறைவன் என்று சொன்னதுண்டா?

பதில் 88: அனேக இடங்களில் அவர் தன்னை இறைவன் என்று கூறியுள்ளார். இயேசுவின் கீழ்கண்ட சில வார்த்தைகளை கவனியுங்கள், இதனை ஒரு மனிதன் சொல்லமுடியுமா? என்பதை ஆய்வு செய்யுங்கள்:

- இப்றாஹீமுக்கு முன்பே தாம் இருப்பதாகச் சொன்னார். (இயேசுவிற்கும் இப்றாஹீமுக்கு இடையே 2000 ஆண்டுகள் இடைவெளி உள்ளது)
- மக்களின் பாவங்களை மன்னிக்க தமக்கு அதிகாரம் உண்டென்றுச் சொன்னார்.

- கியாம் நாளன்று உலக மக்களை நியாயம் தீர்ப்பார் என்றார்.
- மக்களுக்கு நித்திய ஜீவனைத் தருவேன் என்றார்.
- ஓய்வு நாளுக்கு தாமே ஆண்டவர் என்றார்.
- தேவாலயத்தைவிட பெரியவர் என்றார்.
- சாலொமோன் அரசரை விட பெரியவர் என்றார்.

இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். மேற்கண்டவைகளை ஒரு நபி சொல்லமுடியுமா? என்றுசிந்தித்துப் பாருங்கள்.

கேள்வி 89: பைபிளில் ஏன் இயேசு பற்றிய அங்க அடையாளங்கள் சொல்லப்படவில்லை?

பதில் 89: ஒரு மனிதன் இரட்சிக்கப்படுவதற்கு என்ன தேவை? இறைவன் மனிதனாக வந்தால், அவர் என்ன சொல்கிறார்? அவர் என்ன செய்கிறார்? இவை இரண்டு தான் முக்கியமே தவிர, அவரது வெளிப்புற அடையாளங்கள் அல்ல.

இயேசுவின் வெளித்தோற்றமும் கிறிஸ்தவர்களும்:

ஒரு கிறிஸ்தவனிடம் 'உங்கள் இயேசு என்ன உயரம்?' என்று கேட்டுப்பாருங்கள், "எனக்கு தெரியாது" என்று பதில் வரும்.

- இயேசு என்ன கலர்? என்று கேட்டால், "எனக்கு தெரியாது" என்று பதில் வரும்.
- இயேசுவின் கண்கள் எப்படி இருக்கும்? எனக்குத் தெரியாது.
- இயேசுவின் முகம் எப்படி இருக்கும்? எனக்குத் தெரியாது.
- இயேசு மீசை வைத்திருந்தாரா? எனக்குத் தெரியாது.
- இயேசு தாடி வைத்திருந்தாரா? எனக்குத் தெரியாது.
- இயேசுவின் பேச்சு எப்படி இருக்கும்? எனக்குத் தெரியாது.
- இயேசு பொதுவாக எப்படி பேசுவார், சத்தம் உயர்த்தி பேசுவாரா? தாழ்த்திப் பேசுவாரா? எனக்குத் தெரியாது.
- இயேசு எப்படி சாப்பிடுவார்? எனக்குத் தெரியாது.
- இயேசு எப்படி தண்ணீர் குடிப்பார்? எனக்குத் தெரியாது

இயேசுவின் வெளித்தோற்றம் பற்றி எந்த கேள்வியைக் கேட்டாலும் எனக்குத் தெரியாது என்றுச் சொல்கிறீர்களே! கிறிஸ்தவர்களே! இயேசுவைப் பற்றி என்னத்தான் தெரியும் உங்களுக்கு!?

இயேசுவே வழியும், சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறார் என்றுத் தெரியும் என்று கிறிஸ்தவர்கள் பதில் சொல்வார்கள். மனிதன் இரட்சிக்கப்பட எவைகளை பதிவு செய்யவேண்டுமோ, அதை மட்டுமே பைபிள் பதிவு செய்துள்ளது, மற்றவைகள் தேவையில்லை.

இதைப் பற்றிய ஒரு கட்டுரையை இங்கு படியுங்கள்: **இயேசுவின் ஹலால், முஹம்மதுவின் ஹராம் 6: முஹம்மது என்னும் முஸ்லிம்களின் விக்கிரகம்**

கேள்வி 90: மத நல்லிணக்கத்திற்காக, குர்ஆனை உங்கள் ஞாயிறு ஆராதனையில் வாசிக்க அனுமதி கொடுப்பீர்களா?

பதில் 90: நீங்கள் மத நல் இலக்கணத்திற்காக உங்கள் வெள்ளிக்கிழமை தொழுகையில் மசூதிகளில், பைபிளிலிருந்து முக்கியமாக புதிய ஏற்பாட்டிலிருந்து சில வசனங்களை படிப்பீர்களா?

தலைப்பு: முஹம்மது (91 – 120)

கேள்வி 91: முஸ்லிம்கள் முஹம்மதுவை வணங்குகிறார்களா?

பதில் 91: இதற்கு இரண்டு பதில்கள் உண்டு.

முதலாவது பதில்: முஸ்லிம்களின் கூற்றின்படி, அவர்கள் அல்லாஹ்வைத் தான் தொழுதுக்கொள்கிறார்கள் முஹம்மதுவை அல்ல.

இரண்டாவது பதில்: ஆனால் முஸ்லிம்களை வெளியிலிருந்து காண்கின்றவர்களுக்கு, "முஸ்லிம்கள் முஹம்மதுவை வணங்குகிறார்களோ" என்ற எண்ணம் வருகிறது.

ஏன் முஸ்லிம்களைக் கண்டால் மற்றவர்கள் இப்படி கருதுகிறார்கள் என்று சிறிது யோசிக்கும் போது, "முஸ்லிம்கள் முஹம்மதுவிற்கு கொடுக்கின்ற அளவுக்கு அதிகமான முக்கியத்தும் தான், மற்றவர்களை இப்படி சிந்திக்க வைக்கிறதற்கு" காரணமாக இருக்கிறது. முஸ்லிம்கள் முஹம்மதுவை அணுவணுவாக பின்பற்றுவது, அவரை யாராவது அவமானப்படுத்தும் படி பேசினால், பேசுபவரை கொலை செய்வது அல்லது மிரட்டுவது போன்றவைகளை பார்ப்பவர்கள் இப்படி எண்ணுகிறார்கள்.

மூன்றாவது பதிலும் ஒன்று உள்ளது, இது சாதாரண மக்களுக்கு புலப்படாது. அது என்னவென்றால், குர்ஆனையும், ஹதீஸ்களையும் ஆய்வு செய்பவர்கள் "அல்லாஹ்விற்கு சமமாக முஹம்மது கருதப்பட்டு இருக்கிறார்" என்று அவர்கள் கண்டுபிடித்து இருப்பது தான் அது. இதைப் பற்றி ஒரு சில வரிகளில் எழுதமுடியாது, ஆய்வு கட்டுரைகளைத் தான் எழுதமுடியும், அதை எழுதும் போது, உங்களுக்கு அறிமுகம் செய்வேன். அதற்கு முன்பாக, இந்த சிறிய கட்டுரையை ஒரு முறை படித்துப்பாருங்கள்.

இயேசுவின் ஹலால், முஹம்மதுவின் ஹராம் 6: முஹம்மது என்னும் முஸ்லிம்களின் விக்கிரகம்

கேள்வி 92: முதல் 12 ஆண்டுகள் முஹம்மதுவும் முஸ்லிம்களும் எருசலேமை நோக்கியே தொழுதார்களா?

பதில் 92: ஆம், முஹம்மதுவிற்கு கிபி 610ல் முதல் குர்ஆன் வசனம் இறங்கிய காலம் தொடங்கி, அவர் மதினாவிற்கு ஹிஜ்ரி செய்த பிறகு கூட, 1.5 ஆண்டுகள் மதினாவில், அவரும் மற்றும் அனைத்து முஸ்லிம்களும் எருசலேமையே தங்கள் கிப்லா (வணக்க திசையாக) வைத்து தொழுகை புரிந்தார்கள்.

கீழ்கண்ட வசனத்தின் மூலமாக கிப்லா மாற்றப்பட்டது:

ஸூரா 2:144. (நபியே!) நாம் உம் முகம் அடிக்கடி வானத்தை நோக்கக் காண்கிறோம்; எனவே நீர் **விரும்பும் கிப்லாவின் பக்கம்** உம்மைத் திடமாக திருப்பி விடுகிறோம்; ஆகவே நீர் இப்பொழுது **(மக்காவின்) மஸ்ஜிதுல் ஹராம் பக்கம் உம் முகத்தைத் திருப்பிக் கொள்ளும்.** (முஸ்லிம்களே!) இன்னும் நீங்கள் எங்கிருந்தாலும் (தொழுகையின் போது) உங்கள் முகங்களை அந்த (கிப்லாவின்)

பக்கமே திருப்பிக் கொள்ளுங்கள்; நிச்சயமாக எவர்கள் வேதம் கொடுக்கப்பட்டிருக்கின்றார்களோ அவர்கள், இது அவர்களுடைய இறைவனிடமிருந்து வந்த உண்மை என்பதை நிச்சயமாக அறிவார்கள்; அல்லாஹ் அவர்கள் செய்வது பற்றிப் பராமுகமாக இல்லை.

ஏன் கிப்லா மாற்றப்பட்டது?

ஆரம்பத்தில் "யூதர்களும் கிறிஸ்தவர்களும்" தன்னை நபியாக ஏற்பார்கள் என்று முஹம்மது எதிர்ப்பார்த்தார். மக்காவில் இறங்கிய குர்ஆன் வசனங்கள் யூத கிறிஸ்தவர்களுக்கு சாதகமான வசனங்களாகவே பெரும்பான்மையாக இருந்தன.

நீங்கள் என்னதான் செய்தாலும் அற்புதம் செய்துக் காட்டவில்லையென்றால் நாங்கள் உம்மை நம்புவதாக இல்லை என்று ஒரே போடு போட்டார்கள் யூதர்கள். முஹம்மதுவிற்கும், அற்புதங்களுக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. கிறிஸ்தவர்களோ, இயேசுவின் சிலுவை மரணம், மற்றும் உயிர்த்தெழுதலோடு ஃபெவிகால் இணைப்பு போன்று ஒட்டிக்கொண்டு இருந்தார்கள், முஹம்மது என்ன செய்தாலும், யூதர்களையும், கிறிஸ்தவர்களையும் இவரை நபியாக ஏற்பதாகத் தெரியவில்லை.

சரி, இனி இவர்களுடைய எருசலேமை நோக்கி ஏன் தொழவேண்டும்? "நாட்டமை தீர்ப்பை மாற்றிச்சொல்லுங்க" என்று அல்லாஹ்வை அடிக்கடி வேண்டிக்கொள்ள, இறங்கியது குர்ஆன் 2:144, மாறியது கிப்லா.

கேள்வி 93: முஹம்மது ஆபிரகாமின் மகனாகிய இஸ்மாவேலின் சந்ததியா?

பதில் 93: முஹம்மது இஸ்மாயீலின் (இஸ்மவேலின்) சந்ததியில் வந்தவர் அல்ல, இதற்கு சரித்திர ஆதாரங்கள் ஒன்றுமில்லை. இதுவரை கிடைத்துள்ள சான்றுகளின் படி, முஹம்மதுவிற்கும் இஸ்மவேலுக்கும் சம்மந்தமில்லை.

பல கிறிஸ்தவ தலைவர்கள், ஊழியர்கள் கூட இதனை அறியாமல், ஆபிரகாமின்/ஆகாரின் சந்ததி தான் முஹம்மது என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் மீது கோபம் கொள்ளமுடியாது, ஏனென்றால், பெரும்பான்மையானவர்கள் சொல்வதைத் தான் அனேகர் நம்புகிறார்கள், ஆனால் ஆய்வுகள் வேறுவகையில் நம்மை கொண்டுச் செல்கிறது.

இந்த தலைப்பு பற்றிய யூடியூப் வீடியோக்கள்(தமிழ்) மற்றும் கட்டுரைகளை கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடுப்புக்களில் பார்க்கலாம்:

- **முஹம்மது நபி இஸ்மாயில் சமுதாயத்தில் வரவில்லை- குர்ஆன் சொல்லுகிறது:** (Youtube - Tamil)
- **முஸ்லீம்கள் இஸ்மவேல் சந்ததி அல்ல !!!! ஏன்????** (Youtube - Tamil)
- **பைபிள் புகழும் இஸ்மவேல் (இது தான் இஸ்லாம் தள கட்டுரைக்கு): மறுப்புக் கட்டுரை**
- **பைபிள் புகழும் இஸ்மவேல் (இது தான் இஸ்லாம் தள கட்டுரைக்கு): மறுப்புக் கட்டுரை - பாகம் 2**

கேள்வி 94: முஹம்மது அவர்கள் உயிரோடு இருக்கும் போது, ஹதீஸ்கள் எழுத்துவடிவில் கொண்டு வரப்பட்டதா?

பதில் 94: இல்லை, முஹம்மது அவர்கள் இன்று நாம் பயன்படுத்தும் எந்த ஒரு ஹதீஸ் தொகுப்பையும் அவர் பார்க்கவில்லை. அவரது மரணத்திற்கு 200 ஆண்டுகளுக்கு பிறகு தான் ஹதீஸ்கள் எழுத்து வடிவில் கொண்டுவரப்பட்டது. அதற்கு இடைப்பட்ட காலத்தில் சிலர் சில ஹதீஸ்களை எழுதிவைத்திருக்கலாம், ஆனால், அவைகளை முழுவதுமாக தொகுத்து வைத்தவர்கள் புகாரி போன்றவர்கள் தான்.

ஹதீஸ்கள் பற்றிய காலக்கட்ட விவரங்களை கீழ்கண்ட கட்டுரையில் படங்களின் மூலமாக சுலபமாக அறிந்துக்கொள்ளலாம்.

200+ ஆண்டுகள் மனிதர்கள் தன் வஹியை கறைப்படுத்த அல்லாஹ் ஏன் அனுமதித்தான் (ஹதீஸ்களின் நிலை)?

கேள்வி 95: முஹம்மதுவிற்கு எழுத படிக்க தெரியுமா?

பதில் 95: முஸ்லிம்களின் நம்பிக்கையின் படி முஹம்மதுவிற்கு எழுதப்படிக்கத்தெரியாது. ஆனால், ஹதிஸ்களை ஆய்வு செய்யும் போது, முஹம்மதுவிற்கு குறைந்த பட்சம் எழுதவும், படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும் என்று அறியமுடிகின்றது.

ஸஹீஹ் புகாரி நூலில், எண் 7366ல் பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சியை கவனித்தால், முஹம்மதுவிற்கு எழுதப்படிக்க தெரியும் என்று புரியும்.

7366. இப்னு அப்பாஸ்(ரலி) அறிவித்தார்.

நபி(ஸல்) அவர்களுக்கு இறப்பு நெருங்கிவிட்டபோது, அவர்களின் இல்லத்தில் உமர் இப்னு அல்கத்தாப்(ரலி) அவர்கள் உள்பட பலர் இருந்தனர். **அப்போது நபி(ஸல்) அவர்கள் 'வாருங்கள்; உங்களுக்கு நான் ஒரு மடலை எழுதித் தருகிறேன். அதன் பிறகு நீங்கள் ஒருபோதும் வழிதவறமாட்டீர்கள்' என்றார்கள்.** உமர்(ரலி) அவர்களை (நோயின்) வேதனை மிகைத்துவிட்டது. (எழுதித் தருமாறு அவர்களை தொந்தரவு செய்யாதீர்கள்.) எங்களிடம் தான் குர்ஆன் இருக்கிறதே! நமக்கு (அந்த) இறைவேதமே போதும்' என்றார்கள். வீட்டிலிருந்தவர்கள் கருத்து வேறுபட்டு சச்சரவிட்டுக் கொண்டார்கள். அவர்களில் சிலர், **'(நபியவர்கள் கேட்ட எழுது பொருளை அவர்களிடம்) கொடுங்கள். இறைத்தூதர்(ஸல்) அவர்கள் உங்களுக்கு ஒரு மடலை எழுதித் தருவார்கள்**. அதன் பிறகு நீங்கள் ஒருபோதும் வழிதவறமாட்டீர்கள்' என்றார்கள். வேறு சிலர் உமர்(ரலி) அவர்கள் சொன்னதையே சொன்னார்கள். நபி(ஸல்) அவர்களுக்கு அருகே மக்களின் கூச்சலும் குழப்பமும் சச்சரவும் மிகுந்தபோது நபி(ஸல்) அவர்கள், 'என்னைவிட்டு எழுந்து செல்லுங்கள்' என்றார்கள்.

அறிவிப்பாளர்களில் ஒருவரான உபைதுல்லாஹ் இப்னு அப்தில்லாஹ்(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் (இந்த ஹதீஸை அறிவித்துவிட்டு), 'மக்கள் கருத்து வேறுபட்டு கூச்சலிட்டுக் கொண்டதால் இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்கும் **அவர்கள் எழுதித்தர நினைத்த மடலுக்கும் இடையே குறுக்கீடு ஏற்பட்டதுதான்** சோதனையிலும் பெரும் சோதனையாகும்' என்று கூறுவார்கள்.

உண்மையாகவே, முஹம்மதுவிற்கு எழுதவும், படிக்கவும் தெரியாமல் இருந்தால், 'நான் சொல்வதை கேளுங்கள்' என்று சொல்லி இருப்பார், எழுதித்தருகிறேன் என்றுச் சொல்லமாட்டார்.

இன்னும் சில சான்றுகள் உள்ளன, அவைகளை தேவையான கேள்விக்கு பதிலாக காண்போம்.

கேள்வி 96: முஹம்மதுவிற்கு ஒரு யூதப்பெண் விஷம் வைத்தை மாமிசத்தை கொடுத்தாளாமே! இது உண்மையா?

பதில் 96: ஆம், ஒரு யூதப்பெண் விஷயம் தோய்த்த உணவை முஹம்மதுவிற்கு கொடுத்தாள்.

இதனை ஸஹீஹ் புகாரி நூலில் காணலாம்: எண்: 4428, 4249 & 3169

4428. ஆயிஷா(ரலி) அறிவித்தார்: நபி(ஸல்) அவர்கள் எந்த நோயில் இறந்தார்களோ அந்த நோயின்போது, 'ஆயிஷாவே! **கைபரில் (யூதப் பெண்ணொருத்தியால் விஷம் கலந்து தரப்பட்ட) அந்த உணவை நான் உண்டதால் ஏற்பட்ட வேதனையை நான் தொடர்ந்து அனுபவித்து வருகிறேன்**. அந்த **விஷத்தின் காரணத்தால்** என் இருதய இரத்தக்குழய் அறுந்து போவதை நான் உணரும் நேரமாகும் இது' என்று கூறினார்கள்.

4249. அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்: கைபர் வெற்றி கொள்ளப்பட்டபோது இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்கு **விஷம் கலந்த ஆடு ஒன்று அன்பளிப்பாக தரப்பட்டது**.

மேலும் பார்க்க எண்: 3169.

கேள்வி 97: முஹம்மதுவின் மரணம் எதனால் உண்டானது? இயற்கையா? விஷமா? வியாதியா?

பதில் 97: ஒரு யூதப்பெண் கொடுத்த உணவை முஹம்மது உண்டதால், அது அவரை சிறிது சிறிதாக வேதனையை உண்டாக்கி கொன்றது. இதனை புகாரி ஹதீஸில் காணலாம். மேற்கண்ட கேள்விக்கான பதிலையும் படிக்கவும்.

இந்த ஹதீஸை முஹம்மதுவின் பிரியமான மனைவியாகிய ஆயிஷா அவர்கள் அறிவித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

4428. ஆயிஷா(ரலி) அறிவித்தார்: நபி(ஸல்) அவர்கள் எந்த நோயில் இறந்தார்களோ அந்த நோயின்போது, 'ஆயிஷாவே! கைபரில் (யூதப் பெண்ணொருத்தியால் விஷம் கலந்து தரப்பட்ட) அந்த உணவை நான் உண்டதால் ஏற்பட்ட வேதனையை நான் தொடர்ந்து அனுபவித்து வருகிறேன். அந்த விஷத்தின் காரணத்தால் என் இருதய இரத்தக்குழய் அறுந்து போவதை நான் உணரும் நேரமாகும் இது' என்று கூறினார்கள்.

கேள்வி 98: எத்தனையாவது வயதில் முஹம்மது தன்னை நபி என்று பிரகடணப்படுத்தினார்?

பதில் 98: முஹம்மது தம்முடைய 40வது வயதில் தம்மை நபியாக பிரகடணப்படுத்தினார்.

கேள்வி 99: முஹம்மது எப்போது மரித்தார்?

பதில் 99: முஹம்மது தம்முடைய 63வது வயதில் மரித்தார். அவர் மரித்த சமயத்தில், பெரும்பான்மையான அரேபிய தீபகர்ப்பத்தை தம்முடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து இருந்தார்.

கேள்வி 100: முஹம்மது எத்தனை யுத்தங்களில் பங்கு பெற்றார்?

பதில் 100: இந்த கேள்விக்கு அனேக பதில்கள் உள்ளன. யாரிடம் இந்த கேள்வியை கேட்போமோ, அவரைப் பொருத்து எண்ணிக்கை அமையும்.

சராசரி முஸ்லிமின் பதில்:

ஒரு சராசரி முஸ்லிமிடம் இந்த கேள்வியை கெட்டால், அவர் முழிப்பார். மனதுக்குள் "இது என்ன கேள்வி?", நம் நபி ஒரு யுத்தமும் செய்யவில்லையே என்று எண்ணுவார். இன்னும் சிலர், "ஒன்று அல்லது இரண்டு" என்றுச் சொல்லுவார்கள்.

புகாரி ஹதீஸின்படி 19 போர்களில் முஹம்மது பங்கு பெற்றார்:

புகாரி ஹதீஸ்: 3949. அபூ இஸ்ஹாக்(ரஹ்) அறிவித்தார்

நான் ஸைத் இப்னு அர்கம்(ரலி) அவர்களுக்கும் அருகிலிருந்தபோது, 'நபி(ஸல்) அவர்கள் புரிந்த போர்கள் எத்தனை?' என்று அவர்களிடம் வினவப்பட்டது. '**பத்தொன்பது**' என்று அவர்கள் பதிலளித்தார்கள். 'நபி(ஸல்) அவர்களுடன் நீங்களும் பங்கெடுத்த போர்கள் எத்தனை?' என்று வினவப்பட்டபோது, 'பதினேழு' என்றார்கள். 'இவற்றில் முதல் போர் எது?' என்று நான் அவர்களிடம் கேட்டேன். அவர்கள், 'உஸைரா' அல்லது 'உஷைர்' என்று பதிலளித்தார்கள்.

சரித்திர புள்ளி விவரங்கள் (மொத்தம் 95 வன்முறைகள்):

கீழ்கண்ட அட்டவணையைப் பார்க்கவும். முஹம்மது மதினாவில் வாழ்ந்த 10 ஆண்டுகளில் அவர் கட்டளையிட்ட வன்முறைகள் பட்டியலிடப்பட்டுள்ளன. மொத்தம் 95 வன்முறைகள் என்று புள்ளிவிவரங்கள் சொல்கின்றன.

10 ஆண்டுகளில், 95 வன்முறைகள் என்றால், ஒரு ஆண்டுக்கு 9.5 வன்முறைகள் என்று கணக்கு வருகின்றது. புரியும் படி சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால், முஹம்மது மதினாவிற்கு வந்த பிறகு ஒவ்வொரு ஆறு வாரங்களுக்கு (ஒன்றரை மாதத்தில்) ஒரு வன்முறையில் ஈடுபட்டுள்ளார்.

கீழ்கண்ட விக்கிபீடியா தொடுப்பில் முஹம்மதுவின் வன்முறைச் செயல்கள் 95ஐ வரிசைப் படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது. அதனை நான் ஹிஜ்ரி ஆண்டு வரிசையில் தயாரித்துள்ளேன். கிழேயுள்ள அட்டவணையை காணவும்.

ஹிஜ்ரி ஆண்டு	மொத்தம்	முஹம்மது பங்கு பெற்றவைகள்	முஹம்மது பங்கு பெறாதவைகள்
1	4	1	3
2	9	6	3
3	7	5	2
4	6	2	4
5	5	4	1
6	17	2	15
7	10	3	7
8	20	4	16
9	12	1	11
10	5	0	5
மொத்தம்	95	28	67

https://en.wikipedia.org/wiki/List_of_expeditions_of_Muhammad

Source: **List of expeditions of Muhammad – Wikipedia**

முஹம்மது மட்டும் பங்கு பெற்ற வன்முறைகளை கூட்டினால், அது 28 வருகின்றது. அதாவது மதினாவில் வாழ்ந்த 10 ஆண்டுகளில், முஹம்மது பங்கு பெற்ற வன்முறைகள் 28 ஆகும். மீதமுள்ள 67 வன்முறைகளில் முஹம்மது பங்கு பெறவில்லை, தம்முடைய சஹாபாக்களின் தலைமையில் சண்டையிடும் படி கட்டளையிட்டார்.

மூலம்: **முஹம்மது முதல் சிலுவைப்போர் வரை - வரைபடங்கள் மற்றும் விளக்கங்கள்: பாகம் 3**

கேள்வி 101: முஹம்மதுவின் தாய் தந்தை பெயர்கள் என்ன?

பதில் 101: முஹம்மதுவின் தாயின் பெயர் அமீனா மற்றும் தந்தையின் பெயர் அப்துல்லாஹ் ஆகும்.

கேள்வி 102: முஹம்மது பழைய ஏற்பாட்டையோ, புதிய ஏற்பாட்டையோ பார்த்திருக்கின்றாரா?

பதில் 102: முஹம்மது பழைய ஏற்பாட்டின் ஐந்தாகமங்களை(தோராவை) பார்த்ததாக ஹதீஸ்கள் சொல்கின்றன. முஹம்மது நபியாக மாறுவதற்கு முன்பு, மக்காவிலிருந்து சிரியாவிற்கு வியாபார பயணம் செய்யும் போது, அவர் அனேக கிறிஸ்தவர்களை, யூதர்களைக் கண்டு பேசியுள்ளார். அந்த நேரங்களில் அவர் புதிய ஏற்பாட்டையோ, அல்லது அதன் ஒரு பகுதியையோ பார்த்து இருந்திருக்கலாம். அந்த நேரத்தில் அவர் பைபிளை அரபியில் கண்டு இருந்திருந்தால், ஒரு பிரதியை வாங்கிக்கொண்டு மக்காவிற்கு வந்திருப்பார், இப்படி நடந்திருந்தால், உலகம் இன்று காண்பது போன்று இல்லாமல், வேறு மாதிரியாக இருந்திருக்கும்.

சரியான நேரத்தில் சரியான மொழியாக்கங்கள் இல்லாமல்போனால், விளைவுகள் படுமோசமாக இருக்கும் என்பதை உணர்ந்ததால் தான், நான் தமிழ் மொழியில் கட்டுரைகளை மொழியாக்கம் செய்து பதிக்க ஆரம்பித்தேன். தமிழ் மொழியில் இஸ்லாம் கிறிஸ்தவம் பற்றிய விழிப்புணர்வு உண்டாக்கப்படவேண்டும்.

கேள்வி 103: கிறிஸ்தவர்கள் முஹம்மதுவை நபி (தீர்க்கதரிசி) என்று நம்புகிறார்களா?

பதில் 103: இஸ்லாம் பற்றி அடிப்படை அறிவு கிடைக்காதவர்கள், முஹம்மதுவை ஒரு நபி / தீர்க்கதரிசி என்று நம்புவார்கள். இஸ்லாம் பற்றி அறிந்தவர்கள் 'முஹம்மது ஒரு கள்ள நபி என்று' நம்புவார்கள். முஹம்மதுவை பைபிளின் நபிமார்களின் வரிசையில் வைத்து பார்க்க பைபிள் அனுமதிப்பதில்லை.

"முஹம்மது ஏன் ஒரு தீர்க்கதரிசி ஆகமுடியாது" என்று கிறிஸ்தவர்கள் கருதுகிறார்கள் என்ற கட்டுரையை கீழே கொடுத்துள்ளேன். இந்த கட்டுரையில் ஒவ்வொரு காரணத்திற்கும் குர்ஆன், ஹதீஸ்கள் மற்றும் பைபிளிலிருந்து சான்றுகள் முன்வைக்கப்பட்டுள்ளது. குர்ஆன் மற்றும் ஹதீஸ்களில் இதுவரை படிக்காத விவரங்கள் இந்த கட்டுரையில் உள்ளது.

101 காரணங்கள்: முஹம்மது ஒரு கள்ளத்தீர்க்கதரிசி என்று கிறிஸ்தவர்கள் கருதுவது ஏன்?

கேள்வி 104: எழுத படிக்க தெரியாத ஒருவர் சிறப்பாக வியாபாரம் செய்யமுடியுமா? அப்படியானால், முஹம்மது எப்படி வியாபாரத்தை சிறப்பாகச் செய்தார்?

பதில் 104: எழுதுக்களை பேப்பரில் எழுதமுடியவில்லையென்றாலும், எழுதியதை கூட்டிகூட்டி படிக்கமுடிந்தவரால் தான் சிறப்பாக வியாபாரம் செய்யமுடியும்.

வியாபாரம் என்று வந்தால், கூட்டல் கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்ற குறைந்தபட்ச கணக்கு போடத்தெரியவேண்டும். வியாபார ஒப்பந்தங்கள் எழுதப்படும் போது, சரியாகத் தான் எழுதுகின்றார்களா? அல்லது ஏமாற்றுகின்றாரா என்பதை எப்படி அறியமுடியும்? எந்நேரமும் ஒரு படித்தவரை கூட வைத்துக்கொள்ளலாம், ஆனால் அந்த நபரே இவரை ஏமாற்றமாட்டார் என்று நம்புவது எப்படி?

குறைந்தபட்சம் முஹம்மதுவிற்கு கூட்டிக்கூட்டி படிக்கவோ, எழுதவோ தெரிந்திருக்கவேண்டும், மேலும் கணக்கு விஷயத்தில் அவருக்கு கூட்டல் கழித்தல் பெருக்கல், வகுத்தல் தெரிந்திருக்கவேண்டும்.

கேள்வி 105: முஹம்மதுவின் பெயர் குர்ஆனில் எத்தனை முறை வருகிறது?

பதில் 105: முஹம்மது என்ற பெயர் குர்ஆனில் 4 முறை வருகிறது, அஹமது என்ற பெயர் ஒரு முறை வருகிறது.

கீழ்கண்ட வசனங்களை பார்க்கவும்:

1. ஸூரா 3:144 - முஹம்மது
2. ஸூரா 33:40 - முஹம்மது
3. ஸூரா 47:2 - முஹம்மது
4. ஸூரா 48:29 - முஹம்மது
5. ஸூரா 61:6 - அஹமது

கேள்வி 106: முஹம்மதுவை 100% முஸ்லிம்கள் பின்பற்ற முடியுமா?

பதில் 106: முஹம்மதுவை முஸ்லிம்கள் 100% பின்பற்ற முடியாது.

கேள்வி 107: முஹம்மதுவை 100% முஸ்லிம்கள் பின்பற்றும்படி குர்ஆன் முஸ்லிம்களுக்கு கட்டளையிடுகின்றதா?

பதில் 107: இல்லை, முஸ்லிம்கள் முஹம்மதுவை 100% பின்பற்றக்கூடாது என்பதில் குர்ஆன் மிகவும் எச்சரிக்கையாக உள்ளது.

முஸ்லிம்களுக்கு ஒரு வகையான கட்டளைகள், முஹம்மதுவிற்கு வேறு வகையான கட்டளைகள் குர்ஆனில் அல்லாஹ் கொடுத்துள்ளான். எப்போதெல்லாம் முஹம்மதுவிற்கு மட்டும் தனிப்பட்ட சலுகைளை கொடுக்கும்போது, இக்கட்டளைகள் முஹம்மதுவிற்கு பிரத்யோகமாக கொடுக்கப்பட்டவை, முஸ்லிம்களுக்கு இல்லை என்று அல்லாஹ் கூறிவிடுகின்றான். அப்படியானால், அந்த கட்டளைகளை முஸ்லிம்கள் பின்பற்றக்கூடாது என்று தானே பொருள், அதன்படி முஹம்மதுவை முஸ்லிம்கள் 100% பின்பற்றமுடியாதே!

இது முஸ்லிம்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்ட கட்டளை (முஹம்மது இக்கட்டளையை பின்பற்றமுடியாது):

4:3. அநாதை(ப் பெண்களைத் திருமணம் செய்து அவர்)களிடம் நீங்கள் நியாயமாக நடக்க முடியாது என்று பயந்தீர்களானால், உங்களுக்குப் பிடித்தமான பெண்களை மணந்து கொள்ளுங்கள் - **இரண்டிரண்டாகவோ,**

மும்மூன்றாகவோ, நன்னான்காகவோ; ஆனால், நீங்கள் (இவர்களிடையே) நியாயமாக நடக்க முடியாது என்று பயந்தால் ஒரு பெண்ணையே (மணந்து கொள்ளுங்கள்), அல்லது உங்கள் வலக்கரங்களுக்குச் சொந்தமான (ஓர் அடிமைப் பெண்ணைக் கொண்டு) போதுமாக்கிக் கொள்ளுங்கள் - இதுவே நீங்கள் அநியாயம் செய்யாமலிருப்பதற்குச் சுலபமான முறையாகும்.

முஹம்மதுவிற்கு மட்டும் கொடுக்கப்பட்ட விதி விலக்கு (முஸ்லிம்கள் இக்கட்டளையை பின்பற்றமுடியாது):

33:50. நபியே! எவர்களுக்கு நீர் அவர்களுடைய மஹரை கொடுத்து விட்டீரோ அந்த உம்முடைய மனைவியரையும், உமக்கு(ப் போரில் எளிதாக) அல்லாஹ் அளித்துள்ளவர்களில் உம் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்களையும், நாம் உமக்கு ஹலாலாக்கி இருக்கின்றோம்; அன்றியும் உம் தந்தையரின் சகோதரர்களின் மகள்களையும், உம் தந்தையரின் சகோதரிகள் மகள்களையும், உம் மாமன் மார்களின் மகள்களையும், உம் தாயின் சகோதரிமாரின் மகள்களையும் - இவர்களில் யார் உம்முடன் ஹிஜ்ரத் செய்து வந்தார்களோ அவர்களை (நாம் உமக்கு விவாகத்திற்கு ஹலாலாக்கினோம்); அன்றியும் முஃமினான ஒரு பெண் நபிக்குத் தன்னை அர்ப்பணித்து, நபியும் அவளை மணந்து கொள்ள விரும்பினால் அவளையும் (மணக்க நாம் உம்மை அனுமதிக்கின்றோம்); **இது மற்ற முஃமின்களுக்கன்றி உமக்கே (நாம் இத்தகு உரிமையளித்தோம்; மற்ற முஃமின்களைப் பொறுத்தவரை) அவர்களுக்கு அவர்களுடைய மனைவிமார்களையும், அவர்களுடைய வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்களையும் பற்றி நாம் கடமையாக்கியுள்ளதை நன்கறிவோம்;** உமக்கு ஏதும் நிர்ப்பந்தங்கள் ஏற்படாதிருக்கும் பொருட்டே (விதி விலக்களித்தோம்); மேலும் அல்லாஹ் மிக மன்னிப்பவன்; மிக்க அன்புடையவன்.

கேள்வி 108: முஹம்மது மக்காவில் மதினாவில் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்?

பதில் 108: முஹம்மது மக்காவில் 12-13 ஆண்டுகள், மதினாவில் 10 ஆண்டுகள் வாழ்ந்தார்.

கேள்வி 109: முஹம்மது மது அருந்தினாரா?

பதில் 109: மது தடை சட்டம் வரும் வரை முஹம்மதுவும், முஸ்லிம்களும் நன்றாக மது அருந்தினார்கள்.

எந்த அளவிற்கு மது அருந்தினார்கள் என்றால், அவர்கள் தொழுகையில் போதை தலைக்கு ஏறி, உளர ஆரம்பித்துவிட்டார்கள், அந்த அளவிற்கு '**குடி'மக்களாக** முஸ்லிம்கள் இருந்தார்கள்.

கீழ்கண்ட ஸூராவை கவனிக்கவும், நான் நான்கு தமிழாக்கங்களில் கொடுத்துள்ளேன், படியுங்கள், தெளிவு உண்டாகும்:

டாக்டர். முஹம்மது ஜான் தமிழாக்கம்:

4:43. நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் ஓதுவது இன்னது என்று நீங்கள் அறிந்து கொள்ள முடியாதவாறு நீங்கள் போதையில் இருக்கும்போது தொழுகைக்கு நெருங்காதீர்கள்; . . ..

அப்துல் ஹமீது பாகவி தமிழாக்கம்:

4:43. நம்பிக்கையாளர்களே! நீங்கள் கூறுவது இன்னதென்று நீங்கள் அறிந்துகொள்ள முடியாதவாறு நீங்கள் போதையாயிருக்கும் சமயத்தில் தொழுகைக்குச் செல்லாதீர்கள். அன்றி, நீங்கள் முழுக்காயிருந்தால் குளிக்கும் வரையிலும் (தொழுகைக்குச் செல்லாதீர்கள்.). . .

இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட் (IFT) தமிழாக்கம்:

4:43. இறைநம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் போதையோடிருக்கும் நிலையில் தொழுகையை நெருங்காதீர்கள்; நீங்கள் என்ன கூறுகின்றீர்கள் என்பதை அறிகின்ற போதுதான் தொழ வேண்டும்.. .

மன்னர் ஃபஹத் வளாகம் (சவூதி) தமிழாக்கம்:

4:43. விசுவாசங்கொண்டோரே! நீங்கள் போதையுடையோராகயிருக்கும் நிலையில், நீங்கள் கூறுவது இன்னதென்று நீங்கள் அறிந்து கொள்ளும் வரை, தொழுகைக்கு நெருங்காதீர்கள், . . .

கேள்வி 110: முஹம்மதுவிற்கு மிகவும் பிரியமான மனைவி யார்?

பதில் 110: முஹம்மதுவிற்கு அவரது மூன்றாவது மனைவியாகிய ஆயிஷா என்றால் மிகவும் பிரியம்.

ஏன் இந்த மனைவியென்றால் அவருக்கு பிரியம்? யாருக்குத் தெரியும், அவரை தான் கேட்கவேண்டும்.

ஒரு வேளை, இவருக்கு 53 வயது இருக்கும் போது, ஆயிஷா அவர்களுக்கு 9 வயது இருக்கும் போது திருமணமானதால், இவர் அவருக்கு பிரியமானவராக இருக்கலாம்.

இரண்டாவதாக, இவர் திருமணம் செய்த மற்ற மனைவிகள் அனைவரும், ஏற்கனவே திருமணமாகி கணவரோடு வாழ்ந்தவர்கள், ஆயிஷா அவர்கள் மட்டும் தான் திருமணம் செய்யும் போது கன்னியாக (உண்மையைச் சொன்னால், சிறுமியாக) இருந்தார்கள். இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். அல்லாஹ் நோஸ் த பெஸ்ட்.

கேள்வி 111: முஹம்மதுவை கிறிஸ்தவர்கள் நபி என்று அடைமொழியோடு அழைக்கலாமா?

பதில் 111: முஹம்மதுவை கள்ளத்தீர்க்கதரிசி என்று பைபிள் அடையாளப்படுத்தும் போது, முஹம்மதுவின் பெயரை குறிப்பிடும் போது, 'நபி முஹம்மது அல்லது தீர்க்கதரிசி முஹம்மது' என்று கிறிஸ்தவர்கள் சொல்லக்கூடாது.

யாராவது அப்படி அழைத்தால், அதற்கு காரணம் பழக்கதோஷத்தால் 'முஹம்மது நபி' என்று அழைத்துவிடுவதுண்டு, அல்லது தங்கள் முஸ்லிம் நண்பர்களின் மனதை ஏன் புண்படுத்தவேண்டும் என்று நினைத்து 'முஹம்மது நபி' என்று அழைப்பதுண்டு.

இந்த இரண்டும் இல்லாமல் சிலர், அறியாமையினால் 'முஹம்மது நபி' என்றுச் சொன்னால் தப்பில்லை என்று நினைப்பவர்கள் இருந்தால், அவர்களுக்காகத் தான் இந்த தொடர் கேள்வி பதில்கள் 1000.

கேள்வி 112: முஹம்மதுவின் பெயரை உச்சரிக்கும் போது ஏன் முஸ்லிம்கள் (ஸல்) அல்லது அவர் மீது சாந்தி உண்டாகட்டும் என்றுச் சொல்கிறார்கள்?

பதில் 112: அல்லாஹ் முஸ்லிம்களுக்கு இப்படி அவர் மீது கூறுங்கள் என்றுச் சொன்னதால், முஸ்லிம்கள் 'அவர் மீது சாந்தி உண்டாகட்டும்' என்றுச் சொல்கிறார்கள்.

ஸூரா 33:56. இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.

கேள்வி 113: முஹம்மது ஒரு ஆன்மீகத்தலைவரா? அல்லது ஆட்சித்தலைவரா?

பதில் 113: அவர் இரண்டு பதவிகளையும் வகிக்கிறார்.

இஸ்லாமிய நாடுகளில், மார்க்க தலைவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதற்கும் இதுவும் ஒரு காரணமாகும். பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் இல்லாத அதிகாரம் ஆன்மீக தலைவருக்கு முஸ்லிம் நாடுகளில் இருப்பதும் இதனால் தான்.

கேள்வி 114: முஹம்மது மதினாவிற்கு உயிர் தப்பிச் சென்ற போது (ஹிஜ்ரத்), அவரோடு கூடச் சென்ற அவரது தோழர் யார்?

பதில் 114: முஹம்மதுவோடு உயிர் தப்பி மதினாவிற்கு (ஹிஜ்ரத்) செய்தது அவரது தோழர், அபூ பக்கர் ஆவார். இவர் தான் முஹம்மதுவிற்கு பிறகு முதல் கலிஃபாவாக பதவி ஏற்றார்.

கேள்வி 115: எந்த குகையில் முஹம்மதுவிற்கு முதலாவது குர்ஆன் வசனம் இறங்கியதாக நம்பப்படுகின்றது?

பதில் 115: ஹிரா என்ற குகையில் அவருக்கு முதலாவது குர்ஆன் வசனம் இறங்கப்பட்டதாக நம்பப்படுகின்றது.

கேள்வி 116: மக்காவில் இருந்த போது முஹம்மது எத்தனை போர்களை புரிந்தார்?

பதில் 116: இல்லை, மக்காவில் இருந்த போது முஹம்மது ஒரு போரிலும் ஈடுபடவில்லை, பல தொல்லைகளை அவர் மக்கா மக்களிடம் அனுபவித்தார்.

கேள்வி 117: ஏன் அவர் மக்காவில் இருந்த போது எதிர்த்து சண்டையிடவில்லை? போரிடவில்லை?

பதில் 117: ஒரு தனி மனிதன் எப்படி சண்டையிடமுடியும்? எதிரி பலமுள்ளவனாக இருக்கும் போது, எப்படி அவர் எதிர்த்து போராடமுடியும்?

முஹம்மது கிட்டத்தட்ட 12-13 ஆண்டுகள் இஸ்லாமிய தாவா பணி செய்து, சில நூறு மக்களை மட்டுமே முஸ்லிம்களாக சம்பாதிக்கமுடிந்தது. ஆனால், அவரது எதிரிகள் அனேகராக இருந்தார்களே! எனவே, மக்காவில் முஹம்மது அமைதிப் புறாவாக வலம் வந்தார். அடிப்பவனை திருப்பி அடிக்கவில்லை, அடிக்கவில்லை என்றுச் சொல்வதைவிட, திருப்பி அடிக்கமுடியவில்லை என்றுச் சொல்வது தான் சரியானதாக இருக்கும். யானைக்கு ஒரு காலம் வந்தால், பூனைக்கும் காலம் வரும் என்பதை அவர் அறிந்திருந்தாரோ என்னவோ. அவரது உயிரை எடுக்க முடிவு செய்தபோது, பயந்து ஹிஜ்ரத் செய்தார்.

அதிகார பலமும், ஆள் பலமும் மதினாவில் சேர்ந்தவுடன், அனைவரை விளாசினார், தலைகள் உருண்டன, வியாபாரக்கூட்டங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. பழிக்கு பழி கூட்டுவட்டியோடு வசூல் செய்தார், போதாகுறைக்கு மற்ற நாடுகளும் டிவிடெண்ட் கொடுக்கவேண்டியதாக ஆகிவிட்டது.

மக்காவில் முஹம்மது ஒரு சமாதானவாதி, மதினாவில் முஹம்மது ஒரு சர்வாதிகாரி.

கேள்வி 118: முஹம்மது தன் வளர்ப்பு மகனின் மனைவியை திருமணம் செய்துக்கொண்டார் என்கிறார்களே, இது உண்மையா?

பதில் 118: இருநூறு சதவிகிதம் உண்மை.

பார்க்க ஸூரா 33:37:

33:37. (நபியே!) எவருக்கு அல்லாஹ்வும் அருள் புரிந்து, நீரும் அவர் மீது அருள் புரிந்தீரோ, அவரிடத்தில் நீர்: "அல்லாஹ்வுக்குப் பயந்து நீர் உம் மனைவியை (விவாக விலக்குச் செய்து விடாமல்) உம்மிடமே நிறுத்தி வைத்துக் கொள்ளும்"

என்று சொன்ன போது அல்லாஹ் வெளியாக்க இருந்ததை, மனிதர்களுக்குப் பயந்து நீர் உம்முடைய மனத்தில் மறைத்து வைத்திருந்தீர்; ஆனால் அல்லாஹ் அவன் தான், நீர் பயப்படுவதற்குத் தகுதியுடையவன்; ஆகவே ஜைது அவளை விவாக விலக்கு செய்துவிட்ட பின்னர் நாம் அவளை உமக்கு மணம் செய்வித்தோம்; ஏனென்றால் முஃமின்களால் (சுவீகரித்து) வளர்க்கப்பட்டவர்கள், தம் மனைவிமார்களை விவாகரத்துச் செய்து விட்டால், அ(வர்களை வளர்த்த)வர்கள் அப்பெண்களை மணந்து கொள்வதில் யாதொரு தடையுமிருக்கக் கூடாது என்பதற்காக (இது) நடைபெற்றே தீர வேண்டிய அல்லாஹ்வின் கட்டளையாகும்.

கேள்வி 119: வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன், என்று பைபிள் சொல்வது முஹம்மதுவிற்கு பொருந்துமா?

பதில் 119: நிச்சயமாக பொருந்தும் ஏனென்றால், முஹம்மது இயேசுவைப் பற்றி வேறு ஒரு சுவிசேஷம் சொன்னார், அதனால், முஹம்மதுவிற்கு 500 ஆண்டுகளுக்கு முன்பு பரிசுத்த ஆவியானவர் எழுதிவைத்த வசனங்கள் முஹம்மது மீது நிறைவெறியது:

பொது மொழிப்பெயர்ப்பில் முதலாவது படியுங்கள்: எவ்வளவு அழகாக முஹம்மதுவிற்கு பொருந்துகிறது என்பதை கவனியுங்கள்.

கலாத்தியர் 1:7-9:

7 உண்மையில் வேறு ஒரு நற்செய்தி என்பது இல்லை. ஆனால் சிலர் உங்களைக் குழப்பிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் நற்செய்தியை மாற்றிவிட விரும்புகிறார்கள். 8 நாங்கள் உங்களுக்கு உண்மையான நற்செய்தியைக் கூறினோம். எனவே நாங்களோ அல்லது வானத்திலிருந்து வந்த ஒரு தேவதூதனோ வேறொரு நற்செய்தியை உங்களுக்குக் கூறினால் அவன் கடிந்துகொள்ளப்பட வேண்டும். 9 நான் ஏற்கெனவே இதனைச் சொன்னேன். அதனை இப்போது மறுபடியும் கூறுகின்றேன். நீங்கள் ஏற்கெனவே உண்மையான நற்செய்தியை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு வேறு வழியை எவரேனும் உங்களுக்குக் கூறினால் அவன் கடிந்துகொள்ளப்பட வேண்டும்.

பைபிள் சொசைடி மொழியாக்கம்:

7. வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. 8. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். 9. முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு

சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.

கேள்வி 120: பைபிளின் படி முஹம்மது யார்?

பதில் 120: பைபிளின் அடிப்படையில் ஆய்வு செய்தால், முஹம்மது ஒரு கள்ளத்தீர்க்கதரிசி ஆவார். பழைய ஏற்பாட்டின் படியும், புதிய ஏற்பாட்டின் படியும் முஹம்மது யெகோவா தேவனால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசி அல்ல.

தலைப்பு: அல்லாஹ் – யெகோவா (121 – 150)

கேள்வி 121: அல்லாஹ் தான் யெகோவா என்றால், யெகோவா என்ற வார்த்தை ஏன் ஒருமுறை கூட குர்ஆனில் வருவதில்லை?

பதில் 121: அல்லாஹ் வேறு, யெகோவா வேறு, முஸ்லிம்கள் இவ்விருவர் ஒருவர் என்று நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். உண்மையில் பைபிளை அருளிய யெகோவா குர்ஆனை அருளவில்லை. இதனால் தான் இவ்விரு வேதங்களும் வெவ்வேறு மூலங்களைக் கொண்டுள்ளது. இவைகளின் செய்திகளில் வித்தியாசம், இவ்விருவரின் குணங்களில் வித்தியாசங்களை காணமுடியும்.

கேள்வி 122: அல்லாஹ்வும் யெகோவாவும் ஒருவரே என்றுச் சொன்னால், ஏன் அல்லாஹ் என்ற பெயரை அவன் ஒரு முறையும் பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தவில்லை?

பதில் 122: அல்லாஹ் என்பவர், காபாவில் தொழுதுக்கொண்டு இருந்த 360 தெய்வங்களில் ஒருவர் ஆவார். முஹம்மதுவின் காலத்திற்கு முன்பிலிருந்தே மக்கா மக்கள் அல்லாஹ்வையும், இதர விக்கிரகங்களையும் வணங்கிக்கொண்டு இருந்தார்கள். அல்லாஹ்விற்கும், பைபிளுக்கும் எந்த ஒரு சம்மந்தமும் இல்லை. அல்லாஹ் என்ற பெயரை ஒரு முறை கூட பைபிளின் தேவன் தனக்கு பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதில் எந்த ஒரு ஆச்சரியமும் இல்லை.

கேள்வி 123: ஒரு முஸ்லிம் அல்லாஹ்வை பிதா/தகப்பன் என்று அழைத்து வேண்டுதல் செய்யமுடியுமா?

பதில் 123: முடியாது, ஒரு முஸ்லிம் தன்னை படைத்ததாகச் சொல்கின்ற அல்லாஹ்வை 'அப்பா' என்று அழைத்து தொழுதுக்கொள்ளவோ, வேண்டுதல் செய்யவோ முடியாது. ஏனென்றால், உலக மக்கள் அனைவரும் அல்லாஹ்வின் அடிமைகள் தான், அவருடைய பிள்ளைகள் அல்ல. அல்லாஹ்வை அப்பா என்று மனதார அழைத்து ஒரு முஸ்லிம் வேண்டுதல்(துவா) செய்தால், அல்லது தொழுதுக்கொண்டால், இஸ்லாமின் படி அவர் ஒரு காஃபிர் ஆகிவிடுவார். தன்னை படைத்தவரை அப்பா என்று அழைத்த பாவத்திற்காக தன் நித்தியத்தை நரகத்தில் கழிக்கவேண்டி வரும் இந்த முஸ்லிம்.

அடேங்கப்பா! அப்பா என்று அழைப்பது எவ்வளவு பெரிய பாவமப்பா!

கேள்வி 124: அல்லாஹ் ஜிப்ரீல் தூதன் மூலமாக மட்டுமே முஹம்மதுவிடம் பேசினான். பல தீர்க்கதரிசிகளோடு நேரடியாக பேசிய அல்லாஹ், ஏன் முஹம்மதுவிடம் ஒரே ஒரு முறை கூட நேரடியாக பேசவில்லை?

பதில் 124: ஆதாமை படைந்த அந்த நாளிலிருந்து முஹம்மதுவிற்கு முன்பு வரை, பல நூற்றாண்டுகள் நபிகளிடமும், மற்ற மக்களிடமும் நேரடியாக பேசிய அல்லாஹ், தன்னுடைய கடைசி நபியாகிய முஹம்மதுவிடம் மட்டும், ஜிப்ரீல் தூதன் மூலமாகவே பேசினான், நேரடியாக பேசவில்லை. அல்லாஹ் "தவ்ராத், ஜபூர் மற்றும் இன்ஜீலை" கொடுத்தான் என்று குர்ஆன் சொல்கிறது. பழைய ஏற்பாட்டு நபிகள் அனேகரிடம் நேரடியாக பேசினான். ஆனால், குர்ஆனை யாருக்கு கொடுத்தானோ அவரோடு அவர் நேரடியாக பேசவில்லை. ஒரு வேளை, அல்லாஹ் நேரடியாக பேசுவதற்கு முஹம்மதுவிற்கு தகுதியில்லை என்று அல்லாஹ் நினைத்தானா?

அல்லாஹ்விற்கும் யெகோவா தேவனுக்கும் இடையே இருக்கும் வித்தியாசங்களில் இதுவும் ஒரு முக்கியமான் வித்தியாசமாகும்.

கேள்வி 125: அல்லாஹ்விற்கு எத்தனை பெயர்களை குர்ஆன் வழிமொழிகின்றது?

பதில் 125: அல்லாஹ்விற்கு பல அழகான பெயர்கள் உள்ளன என்று குர்ஆன் சொல்கிறது. ஆனால், ஹதீஸ்களில் தான் அல்லாஹ்விற்கு 99 பெயர்கள் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது.

பார்க்க குர்ஆன் 17:110:

17:110. “நீங்கள் (அவனை) அல்லாஹ் என்று அழையுங்கள்; அல்லது அர்ரஹ்மான் என்றழையுங்கள்; எப்பெயரைக் கொண்டு அவனை நீங்கள் அழைத்தாலும், **அவனுக்கு(ப் பல) அழகிய திருநாமங்கள் இருக்கின்றன**” என்று (நபியே!) கூறுவீராக; . . .

அந்த 99 பெயர்கள் என்னவென்று முஸ்லில்கள் அறிஞர்கள் தொகுத்து இருக்கிறார்கள். இவைகளில் 81 பெயர்கள் தான் அவர்கள் குர்ஆனிலிருந்து எடுத்திருக்கிறார்கள்.

கேள்வி 126: முஸ்லிம்கள் அல்லாஹ்வை ஏன் 'அவன் இவன்' என்று மரியாதை குறைவாக குறிப்பிடுகிறார்கள்?

பதில் 126: அல்லாஹ்வை குறிப்பிடும் போது "அவர் இவர்" என்று குறிப்பிட்டால், அது பன்மையை குறிப்பது போன்று ஆகிவிட வாய்ப்பு உள்ளதால், "அவன் இவன்" என்று அல்லாஹ்வை ஒருமையில் முஸ்லிம்கள் குறிப்பிடுகிறார்கள். இப்படி அல்லாஹ்வை அழைப்பதினால் முஸ்லிம்கள் அல்லாஹ்வை அவமதிக்கிறார்கள் என்று அர்த்தமல்ல.

கேள்வி 127: அல்லாஹ்விற்கு உருவம் உண்டா? குர்ஆன் என்ன சொல்கிறது?

பதில் 127: குர்ஆன் வசனங்களை கவனித்தால், அல்லாஹ்விற்கு உருவம் உண்டு என்று தான் நாம் கருதவேண்டியுள்ளது.

அல்லாஹ் அமருகிறான்:

ஸூரா 20:5. அர்ரஹ்மான் **அர்ஷின் மீது அமைந்தான்**.

அல்லாஹ்விற்கு முகம் உண்டு:

ஸூரா 55:27. மிக்க வல்லமையும், கண்ணியமும் உடைய உம் **இறைவனின் முகமே** நிலைத்திருக்கும்.

அல்லாஹ்விற்கு கைகள் உள்ளன:

ஸூரா 5:64. “அல்லாஹ்வின் கை கட்டப்பட்டிருக்கிறது” என்று யூதர்கள் கூறுகிறார்கள்; அவர்களுடைய கைகள்தாம் கட்டப்பட்டுள்ளன. இவ்வாறு கூறியதின் காரணமாக அவர்கள் சபிக்கப்பட்டார்கள்; **அல்லாஹ்வின் இரு கைகளோ விரிக்கப்பட்டே இருக்கின்றன**; . . .

ஸூரா 48:10. நிச்சயமாக எவர்கள் உம்மிடம் பைஅத்து(வாக்குறுதி) செய்தார்களோ, அவர்கள் அல்லாஹ்விடமே பைஅத்(வாக்குறுதி) செய்கின்றனர் - **அல்லாஹ்வின் கை** அவர்களுடைய கைகளின் மேல் இருக்கிறது; . .

அல்லாஹ்விற்கு கண்கள் உண்டு:

ஸூரா 20:39. . . . மேலும், ”(மூஸாவே!) நீர் **என் கண்** முன்னே வளர்க்கப்படுவதற்காக உம் மீது அன்பைப் பொழிந்தேன்.

அல்லாஹ்விற்கு காதுகள் உண்டு:

20:46. (அதற்கு அல்லாஹ்) “நீங்களிருவரும் அஞ்ச வேண்டாம்; நிச்சயமாக நான் (யாவற்றையும்) செவியேற்பவனாகவும், பார்ப்பவனாகவும் உங்களிருவருடனும் இருக்கிறேன்” என்று கூறினான்.

ஒருவருக்கு கண்கள், காதுகள், கை கால்கள் உண்டு என்று சொன்னால், அவருக்கு உருவம் உண்டு என்று சொல்லலாம் அல்லவா?

இதுமட்டுமல்லாமல், கியாமத் நாளுக்கு பிறகு அல்லாஹ்வை முஸ்லிம்கள் பார்க்கமுடியும் என்றும் ஹதீஸ்கள் சொல்கின்றன.

கேள்வி 128: அல்லாஹ் என்ற தெய்வத்தை முஹம்மதுவிற்கு முன்பும் மக்கா மக்கள் வணங்கிக்கொண்டு இருந்தார்களா? அப்படியானால், எந்த வகையில் அவனை வணங்கினார்கள்?

பதில் 128: ஆம், மக்கா மக்களுக்கு அல்லாஹ்வை முதன் முதலாக முஹம்மது அறிமுகம் செய்யவில்லை, அவர்கள் அல்லாஹ்வை முஹம்மதுவிற்கு முன்பிலிருந்து வணங்கிக்கொண்டு இருந்தார்கள்.

காபா ஆலயத்தில் வைக்கப்பட்டு இருந்த 360 கற்சிலைகளில் அல்லாஹ்வும் ஒருவர், மேலும் அவர் கொஞ்சம் பெரிய சாமி.

கேள்வி 129: அல்லாஹ்விற்கு மூன்று பெண் பிள்ளைகள் இருந்ததாக, மக்கள் ஏன் கூறினார்கள்?

பதில் 129: முஹம்மது நபியாக மாறுவதற்கு முன்பு, அல்லாஹ்விற்கு மூன்று மகள்கள் இருந்தார்கள், அவர்களையும் சேர்த்து மக்கள் வணங்கிக்கொண்டு இருந்தார்கள்.

இதனை குர்ஆனில் அல்லாஹ் சொல்கின்றான். ஆனால், முஹம்மதுவை நபியாக மாற்றிவிட்ட பிறகு, மக்கா மக்களைப் பார்த்து, உங்களுக்கு மட்டும் ஆண் பிள்ளைகளை பெற்றுக்கொள்கிறீர்கள், எனக்கு மட்டும் பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றுச் சொல்கிறீர்களே, இது அநியாயமில்லையா? என்று அல்லாஹ் கோபித்துக்கொள்கிறான்.

ஸூரா 53:19-22

53:19. நீங்கள் (ஆராதிக்கும்) **லாத்தையும், உஸ்ஸாவையும்** கண்டீர்களா?

53:20. மற்றும் மூன்றாவதான **“மனாத்”தையும்** (கண்டீர்களா?)

53:21. உங்களுக்கு ஆண் சந்ததியும், **அவனுக்குப் பெண் சந்ததியுமா**?

53:22. அப்படியானால், அது மிக்க அநீதமான பங்கீடாகும்.

கேள்வி 130: அல்லாஹ் என்ற பெயர் பைபிளில் உள்ளது என்கிறார்களே, இது உண்மையா?

பதில் 130: பைபிளில் அல்லாஹ் என்ற பெயர் இல்லை. எபிரேய மொழியிலும், கிரேக்க மொழியிலும் தேடினாலும், தேவனின் பெயர் "அல்லாஹ்" என்று பைபிளில் வாசிக்கமுடியாது.

உண்மையில் அல்லாஹ் என்ற பெயர் பைபிளில் இருந்திருந்தால், அதனை முதலில் யூதர்கள் ஏற்றுக்கொண்டு இருந்திருப்பார்கள். இந்த பெயரை ஏன் அவர்கள் மறக்கவோ, மறுக்கவோ போகிறார்கள்? யூதர்கள் தங்கள் தேவனுக்காக எவ்வளவு பக்தி வைராக்கியம் உள்ளவர்கள் என்பதை புதிய ஏற்பாட்டில் காணலாம், மேலும் சரித்திரமும் இதற்கு சாட்சி சொல்கிறது.

கேள்வி 131: அல்லாஹ் என்ற பெயர் யெகோவாவிற்கு சூட்டப்படாமல் இருந்திருந்தாலும், குறைந்த பட்சம் "அல்லாஹ்" என்ற வார்த்தை பைபிளில் இருந்திருக்குமே?

பதில் 131: இது சரியான கேள்வி, "அல்லாஹ்" என்ற வார்த்தை பைபிளில் உள்ளது, ஆனால் அதன் பொருள் "கர்வாலி மரம்" என்பதாகும்.

'allah (H427)- "கர்வாலி மரம்" - oak tree

இந்த வார்த்தை முழுக்க முழுக்க இஸ்லாமியர்களின் இறைவனுக்கு இருக்கும் "அல்லாஹ்" என்றே உச்சரிக்கப்படுகிறது மற்றும் ஆங்கிலத்தில் நாம் கவனித்தால், இஸ்லாமியர்கள் பயன்படுத்தும் அதே எழுத்துக்களை கொண்டுள்ளது. இதன் எண் H427.

- அல்லாஹ் = 'allah

இவ்வார்த்தையின் பொருள் "**கர்வாலி மரம்**" என்பதாகும். அல்லாஹ் என்ற எபிரேய வார்த்தையின் பொருள், "கர்வாலி மரம்" என்று உள்ளதால், இனி இஸ்லாமியர்களின் இறைவனுக்கு "கர்வாலி மரம்" என்று பொருள் என்று நாம் கூறலாமா? இஸ்லாமியர்கள் இதற்கு அனுமதி அளிப்பார்களா?

இஸ்லாமியர்கள் மற்றவர்களின் வேதங்களிலிருந்து வார்த்தைகளை எடுத்து அதை திருத்தி, மாற்றி பொருள் கூறுவது போல அல்லாமல், இந்த வார்த்தை எழுத்துக்கு எழுத்து அப்படியே "அல்லாஹ்" என்று வருகிறது, எனவே, அல்லாஹ் என்றால் கர்வாலி மரம் என்று அர்த்தம்.

இதைக் குறித்து மேலும் அறிய இந்த கட்டுரையை படிக்கவும்: **"ஜியாவிற்கு பதில் - "அல்லாஹ்" என்றால் "கர்வாலி மரம்" என்று பொருள்"**

கேள்வி 132: அல்லாஹ் என்ற பெயர் அல் + இலா என்ற இரு சொற்களின் கூட்டா? அல்லது அது ஒரு தனிப்பெயரா?

பதில் 132: அல்லாஹ் என்ற பெயர் ஒரு தனிப்பெயர் என்று முஸ்லிம்கள் சொல்கிறார்கள். ஆனால், அல் + இலாஹ் என்பது தான் பிற்காலத்தில் அல்லாஹ் என்று மாறியதாக ஆய்வுகள் சொல்கின்றன.

- அல் (AL) என்றால் "The" ஆகும்,
- இலாஹ் (Ilah) என்றால் "இறைவன் - God" என்பதாகும்.

ஆக, அல்லாஹ் என்றால் "The God" என்று பொருள்.

கேள்வி 133: குர்ஆனை படிப்பவர்களுக்கு ஏற்கனவே "அல்லாஹ்" என்றால் யார் என்று தெரிந்திருந்ததா?

பதில் 133: முஹம்மதுவிற்கு குர்ஆன் வசனங்களை அல்லாஹ் இறக்கும் போது, தன்னைப் பற்றி ஒரு அறிமுகத்தை மக்கா மக்களுக்கு கொடுக்கவில்லை, ஏனென்றால், அல்லாஹ் என்ற விக்கிரகத்தை அம்மக்கள் அனைவரும் வணங்கிக்கொண்டு இருந்தார்கள்.

மக்கா மக்களுக்கு அல்லாஹ்வைப் பற்றி நன்கு தெரியும், அவனைப் பற்றி கேள்வி கேட்டால், உடனே அவர்கள் "அல்லாஹ்" என்று பதில் சொல்வார்கலாம். பார்க்க ஸூரா: 29:61, 63, 65:

29:61. மேலும், (நபியே!) "நீர் இவர்களிடத்தில் வானங்களையும், பூமியையும் படைத்துச் சூரியனையும் சந்திரனையும் (தன் அதிகாரத்தில்) வசப்படுத்திருப்பவன் யார்?" என்று கேட்டால், **"அல்லாஹ்" என்றே இவர்கள் திட்டமாக கூறுவார்கள்**; அவ்வாறாயின் அவர்கள் (உண்மையை விட்டு) எங்கே திருப்பப்படுகிறார்கள்?

29:63. இன்னும், அவர்களிடம்: "வானத்திலிருந்து நீரை இறக்கி, பிறகு அதனைக் கொண்டு இப்பூமியை - அது (காய்ந்து) மரித்தபின் உயிர்ப்பிப்பவன் யார்?" என்று நீர் கேட்பீராகில்: **"அல்லாஹ்" என்றே இவர்கள் திட்டமாகக் கூறுவார்கள்**; (அதற்கு நீர்) "அல்ஹம்து லில்லாஹ் - புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது" என்று கூறுவீராக; எனினும் இவர்களில் பெரும்பாலோர் அறிந்துணர மாட்டார்கள்.

29:65. மேலும் அவர்கள் மரக்கலங்களில் ஏறிக்கொண்டால், அந்தரங்க சுத்தியுடன் சன்மார்க்கத்தில் வழிப்பட்டவர்களாக **அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றனர்;** ஆனால், அவன் அவர்களை (பத்திரமாகக்) கரைக்கு கொண்டு வந்து விடுங்கால், அவர்கள் (அவனுக்கே) இணைவைக்கின்றனர்.

கேள்வி 134: யெகோவா தேவனை பிதா என்று அழைப்பது போன்று, அவரை தாய் (அம்மா) என்று அழைக்கலாமா?

பதில் 134: இந்த பதிலை படிப்பதற்கு முன்பாக, ஒரு முக்கியமான விவரத்தை நாம் மனதில் வைக்கவேண்டும், அது என்னவென்றால், "தேவன் ஆவியாக இருக்கிறார், அதனால் அவருக்கு ஆண்பால், பெண்பால் என்ற பாகுபாடு இல்லை".

"**பிதாவாகிய தேவன் (Father, The God)**" என்று பைபிள் சொல்கிறது, ஆனால் "**தாயாகிய தேவன் (Mother, The God)**" என்று பைபிள் சொல்வதில்லை. இது பைபிளின் இறையியலும் அல்ல.

பைபிளின் தேவன் தம்மை தந்தையாக, தாயாக, மேய்ப்பனாக, எஜமானனாக, குயவனாக இன்னும் பல உறவுகளில் தம்மை வெளிக்காட்டி மனிதனோடு உறவாடியுள்ளார், அன்பு செலுத்தியுள்ளார், எச்சரித்துள்ளார். உலக மக்களுக்கு அவர்கள் உலகத்தில் காண்கின்ற உறவுமுறைகளோடு (தந்தையாக, தாயாக...) சம்மந்தப்படுத்தி பேசினால் தான் சத்தியம் புரியும், தேவன் சொல்லவரும் கட்டளைகளின் ஆழம் புரியும்.

இதனை அவர் பல வசனங்களில் வெளிப்படுத்தியுள்ளார். இந்த கேள்வி "தாய்" என்ற ஒரு குறிப்பிட்ட உறவு முறைப்பற்றி கேட்டதால், பைபிளின் தேவன் தன்னை "தாய்" போல வெளிக்காட்டி பேசிய வேத வசனங்களை இங்கு தருகிறேன். அதன் பிறகு "அவரை தாயாகிய தேவன்" என்று அழைக்கலாமா, அழைக்கக்கூடாதா? என்பதை விளக்குவேன்.

a) நான் உன்னை பெற்றேன்:

உபாகமம் 32:18

18. உன்னை **ஜெநிப்பித்த** கன்மலையை நீ நினையாமற்போனாய்; **உன்னைப் பெற்ற** தேவனை மறந்தாய்.

b) தாய் தன் பிள்ளையை மறப்பாளா? மறக்கமாட்டாள். அப்படி அவள் மறந்தாலும் நான் உன்னை மறக்கமாட்டேன்:

ஏசாயா 49:14-16

14. சீயோனோ: கர்த்தர் என்னைக் கைவிட்டார், ஆண்டவர் என்னை மறந்தார் என்று சொல்லுகிறாள். 15. **ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல்**, தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. 16. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது.

c) ஒரு தாய் தன் பிள்ளையை தேற்றுவது போல தேற்றுவேன்:

ஏசாயா 66:13

13. ஒருவனை அவன் **தாய் தேற்றுவதுபோல்** நான் உங்களைத் தேற்றுவேன்; நீங்கள் எருசலேமிலே தேற்றப்படுவீர்கள்.

d) தாய் போல நடக்க பழக்குவேன்:

ஓசியா 11:3-4

3. நான் எப்பிராயீமைக் **கைபிடித்து நடக்கப் பழக்கினேன்**; ஆனாலும் நான் தங்களைக் குணமாக்குகிறவரென்று அறியாமற்போனார்கள். 4. மனுஷரைக் கட்டி இழுக்கிற அன்பின் கயிறுகளால் நான் அவர்களை இழுத்தேன், அவர்கள் கழுத்துகளின்மேல் இருந்த நுகத்தடியை எடுத்துப் போடுகிறவரைப்போல இருந்து, அவர்கள் பட்சம் சாய்ந்து, அவர்களுக்கு ஆகாரங்கொடுத்தேன்.

e) தாய் போல சிறகுகளுக்குள் மூடுவார்

இவ்வசனங்களில் ஒரு தாய்ப் பறவை தன் சிறகுகளுக்குள் தன் குஞ்சுகளை மூடி அடைக்காப்பதுச் போல சொல்லப்பட்டுள்ளது, ஆனால், ஆண்பால் வார்த்தைகளை பயன்படுத்தியுள்ளது (அவர் தமது சிறகுகளாலே). ஒரு கோழி தன் குஞ்சுகளை தன் சிறகுகளுக்குள் மறைத்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன், ஆனால் சேவல் இப்படி செய்வதை கண்டதில்லை.

"கழுகு தன் கூட்டைக் கலைத்து" என்ற வசனத்திலும், இது ஆண் கழுகா, பெண் கழுகா என்று நமக்குத் தெரியவில்லை. தாய்க்கழுகும், தந்தை கழுகும் இதைச் செய்யலாம் என்று கருதப்படுகின்றது.

சங்கீதம் 91:4

4. **அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்**; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும்.

உபாகமம் 32:11-12

11. **கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி**, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்துகொண்டுபோகிறதுபோல, 12. கர்த்தர் ஒருவரே அவனை வழி நடத்தினார்; அந்நிய தேவன் அவரோடே இருந்ததில்லை.

இது போன்று இன்னும் அனேக வசனங்களில் தேவன் தம்மை ஒரு தாய் போல பாவித்து தம் மக்களோடு பேசியுள்ளார். எனவே, நாம் ஜெபிக்கும் போது "என் தாயும் நீரே, என் தந்தையும் நீரே" என்று சொல்லி ஜெபிப்பதில் தவறில்லை. மற்றவர்களுக்காக ஜெபிக்கும் போதும், "ஒரு தாய் போல அவர்களை தேற்றுங்கள், ஆறுதல் படுத்துங்கள்" என்றுச் சொல்லி ஜெபிக்கலாம், தவறு இல்லை. (உம்மைப் போல அப்பா இல்லே, உம்மைப் போல அம்மா இல்லே, உம்மைப்போல நண்பன் இல்லே, உம்மைப்போல யாரும் இல்லேப்பா என்று பாடலும் பாடலாம், தவறு இல்லை).

ஆனால், "பிதாவாகிய தேவன்(Father, The God)" என்றுச் சொல்வது போன்று "தாயாகிய தேவன் (Mother, The God)" என்ற ஒரு இறையியல் கோட்பாட்டை உருவாக்கக்கூடாது, இறையியல் வேறு, நம்மை அவர் தாய் போல தேற்றுவது என்பது வேறு, இதை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்.

பைபிளின் இறையியலைப் பற்றி சுருக்கமாகச் சொல்வதென்றால், நம் தேவன் ஒருவரே தேவன், அவர் பிதாவாக (Father, The God), குமாரனாக (Son, The God) மற்றும் பரிசுத்த ஆவியானவராக (Holy Spirit, The God) இருக்கிறார். ஆனால், அவர் "தாயாகிய தேவனாக (Mother, The God)" இல்லை. இதனை சரியாக புரிந்துக்கொள்ளவேண்டும்.

கேள்வி 135: ஒருவன் என் முகத்தை கண்டு உயிரோடு இருக்கக்கூடாது என்று தேவன் பைபிளில் ஒரு இடத்தில் சொல்லி, ஆனால், வேறு இடத்தில் மூஸாவோடு முகமுகமாய் பேசினார் என்று சொல்கிறாரே, இது முரண்பாடு அல்லவா?

பதில் 135: பைபிளின் வசனங்களை ஆங்காங்கே எடுத்து புரிந்துக் கொள்வதினால் உண்டானகுழப்பம் இது. சுருக்கமாக, இந்த குழப்பத்தை தீர்க்க முடியுமா என்பதை இப்போது பார்ப்போம்.

தேவன் ஆவியாக இருக்கிறார், அவருக்கு உருவம் இல்லை, அல்லது மனிதன் இதுவரை அவரை பார்த்ததில்லை. ஆனால், பழைய ஏற்பாட்டில் பிதாவாகிய தேவன் பல முறை வெளிப்பட்டு இருக்கிறாரே, அவரை ஆபிரகாம் போன்றவர்கள் பார்த்திருக்கிறார்களே, என்று நீங்கள் கேட்கலாம். ஆபிரகாம் போன்றவர்களுக்கு பிதா தம்மை வெளிக்காட்டும்போது, அவர் இருக்கின்ற வண்ணமாக சர்வ மகிமையோடும், பிரகாசத்தோடும் காட்டவில்லை. அவர் மனித உருவத்தில் வந்தார், அந்த நபரைத் தான் ஆபிரகாம் பார்த்தார். பிதாவாகிய தேவனை

அவர் இருக்கின்ற வண்ணமாக (சர்வ மகிமையோடு) பார்க்கின்ற மனிதன் உயிரோடு இருக்கமாட்டான் என்று பைபிள் சொல்கிறது. எனவே, ஆபிரகாம் முதற்கொண்டு யாரும் அவர் இருக்கின்ற வண்ணமாக பார்க்கவில்லை.

இந்த விவரத்தை மோசேயுடன் பேசும் பொது கர்த்தர் சொல்கிறார், தம் முகத்தைக் காட்டாமல், தம் மகிமை கடந்து போன பிறகு, பின்புறத்தை மட்டுமே மோசே பார்க்கும் படி செய்தார். மோசே தேவனின் முகத்தை காணவில்லை.

யாத்திராகமம் 33:20-23

20 **நீ என் முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக் கூடாது என்றார்**. 21. பின்னும் கர்த்தர்: இதோ, என்னண்டையில் ஒரு இடம் உண்டு; நீ அங்கே கன்மலையில் நில்லு. 22. என் மகிமை கடந்துபோகும்போது, நான் உன்னை அந்தக் கன்மலையின் வெடிப்பிலே வைத்து, நான் கடந்துபோகுமட்டும் **என் கரத்தினால் உன்னை மூடுவேன்**. 23. பின்பு, என் கரத்தை எடுப்பேன்; அப்பொழுது **என் பின்பக்கத்தைக் காண்பாய்; என் முகமோ காணப்படாது என்றார்**.

ஆனால், இதே அத்தியாயம் 9 லிருந்து 11 வசனங்கள் வரை பார்த்தால், மோசேயுடன் முகமுகமாய் தேவன் பேசினார் என்று சொல்லப்பட்டுள்ளதே என்று கேட்கிறீர்களா?

யாத்திராகமம் 33-9-11:

9 மோசே கூடாரத்துக்குள் பிரவேசிக்கையில், **மேகஸ்தம்பம் இறங்கி, கூடாரவாசலில் நின்றது**; **கர்த்தர் மோசேயோடே பேசினார்**. 10. ஜனங்கள் எல்லாரும் மேகஸ்தம்பம் கூடாரவாசலில் நிற்கக்கண்டார்கள்; ஜனங்கள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தங்கள் கூடாரவாசலில் பணிந்து கொண்டார்கள். 11. **ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவதுபோல, கர்த்தர் மோசேயோடே முகமுகமாய்ப் பேசினார்;** பின்பு, அவன் பாளயத்துக்குத் திரும்பினான்; நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் அவனுடைய பணிவிடைக்காரனாகிய வாலிபன் ஆசரிப்புக் கூடாரத்தை விட்டுப் பிரியாதிருந்தான்.

மேற்கண்ட வசனங்களை நன்றாக கவனியுங்கள், கூடார வாசலில் மேகஸ்தம்பம் (ஒரு மேகம் போன்ற ஒரு தூண்) நின்றது, கூடாரத்திற்குள் மோசே செல்கிறார். அந்த மேக ஸ்தம்பத்திலிருந்து தேவனுடைய சத்தம் மட்டுமே கேட்டது.

இந்த இடத்தில் முகமுகமாய் பேசுவது என்றால், நண்பர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து பேசுவது போன்று, இந்த இடத்தில் மோசேயும் அந்த மேகஸ்தம்பத்திலிருந்து தேவனும் நண்பர்களைப்போன்று பேசினார்கள், ஆனால் மோசே தேவனின் முகத்தை பார்க்கவில்லை. தேவனின் சத்தத்தை மட்டுமே மோசே கேட்டார். அதன் பிறகு மோசே தேவனுடைய முகத்தை பார்க்கவேண்டுமென்றுச் சொன்னபோது, நாம் மேலே கண்ட உரையாடல் (வசனங்கள் 20-23) நடக்கிறது.

ஆக, இது முரண்பாடு அல்ல, இது தான் சத்தியம். ஒரே அத்தியாயத்தில் தான் இரண்டு விவரங்களும் கொடுக்கட்டுள்ளது. இந்த யாத்திராகமம் 33வது அத்தியாயத்தை முழுவதுமாக

படித்து, அங்கு நடந்த நிகழ்ச்சியை கற்பனையில் கொண்டு வந்து பாருங்கள், உங்களுக்கு தெளிவு உண்டாகும்.

கேள்வி 136: குறுக்குவழி அல்லாஹ் - ரமளான் கடைசி 10 நாட்களில் அல்லாஹ் முஸ்லிம்களோடு ஆடும் சூதாட்டம் என்ன?

பதில் 136: ஆம், அல்லாஹ் அனேக நேரங்களில் முஸ்லிம்களுக்கு ஷாட்கட் குறுக்குவழி கற்றுக்கொடுக்கிறான். முக்கியமாக ரமலானின் கடைசி 10 நாட்களில் குறுக்குவழியாக ஒரு சூதாட்டத்தை அவன் முஸ்லிம்களோடு ஆடியிருக்கிறான்.

குறுக்குவழி என்னும் சூதாட்டம்:

ரமளானின் கடைசி 10 நாட்களில் "லைலதுல் கத்ர்" என்ற ஒரு நாள் வருகிறது. இந்த நாளில் தான் முதன் முதலாக குர்-ஆன் இறக்கப்பட்டது, அதனால் இந்த நாளுக்கு சிறப்புக்கள் அதிகம் என்று இஸ்லாம் சொல்கிறது. இந்த நாளில் ஒரு முஸ்லிம் எதைச் செய்தாலும், அதற்கு அதிக நன்மைகள் உள்ளது என்று முஸ்லிம்கள் நம்புகிறார்கள். ஆனால், அந்த நாள் எது? என்று முஹம்மது சரியாக சொல்லவில்லை, ரமளானின் கடைசி 10 நாட்களில், ஒற்றைப்படை நாளாக அது வருகிறது என்று முஹம்மது கூறியுள்ளார்.

அது என்ன சூதாட்டம் என்று அறிய விரும்புபவர்கள், இந்த கட்டுரையை படிக்கவும்: **குறுக்குவழி அல்லாஹ் - ரமளான் கடைசி 10 நாட்களில் அல்லாஹ் முஸ்லிம்களோடு ஆடும் சூதாட்டம்**

கேள்வி 137: குர்ஆனில் என்னை "அல்லாஹ்" என்று அழையுங்கள் என்று அதன் இறைவன் சொல்கிறான், பைபிளில் என்னை 'யெகோவா' என்று அழையுங்கள் என்று அதன் இறைவன் சொல்கிறான்? யார் கேம் விளையாடுவது இங்கே?

பதில் 137: அல்லாஹ் தான் கேம் ஆடுகின்றான்.

யெகோவா தேவனின் புத்தகத்திலிருந்து விவரங்களை எடுத்து தன் புத்தகத்தில் மறுபதிவு செய்யும் போது தன் பெயர் 'யெகோவா' என்று சொல்லியிருந்தால், வேறு வகையாக ஆய்வு செய்து அவனை ஏற்றுக்கொள்வதோ, புறக்கணிப்பதோ செய்யலாம். குறைந்த பட்சம் தனக்கு யெகோவா என்று பெயர் இருந்தது, அதனை 'அல்லாஹ்' என்று மாற்றிவிட்டேன் என்று குர்ஆனில் சொல்லியிருந்தாலாவது, கொஞ்சம் சமாளித்து இருக்கலாம். யெகோவா என்ற பெயர் பற்றி குர்ஆனில் அல்லாஹ் மூச்சுவிடாமல் இருந்ததால் தான், இப்போது மூச்சு விடாமல் கிறிஸ்தவர்கள் விமர்சித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

கேள்வி 138: தற்காலத்திலும் அல்லாஹ் அற்புதம் செய்கின்றானா? தக்காளியில், வானத்தில், மரங்களில் அற்புதம் செய்வது உண்மையா?

பதில் 138: தன்னுடைய கடைசி நபி முஹம்மது வாழ்ந்த போது வானத்திலும் பூமியிலும் அற்புதம் செய்யாத அல்லாஹ், இன்றைய காலத்தில் அனேக அற்புதங்கள் செய்கின்றான் என்று முஸ்லிம்கள் பரப்பிக்கொண்டு இருக்கிறார்கள்.

அழுகிக்போகும் தக்காளியில் அற்புதம், வானத்தின் மேகங்களில் அற்புதம், மரங்களில் அற்புதம் என்று பல பொய்யான அற்புதங்களை முஸ்லிம்கள் சொல்கிறார்கள், இவைகளைப் பற்றி கீழ்கண்ட கட்டுரையில் படிக்கவும்:

- **2014 ரமளான் பாகம் 1: அல்லாஹ்வின் தற்கால அற்புதங்களும், குர்-ஆனின் அறிவியலும் - அழுகிப்போன தக்காளியில் தத்தளிக்கும் அல்லாஹ்**
- **2014 ரமளான் பாகம் 2 - வானத்தில் வலம் வரும் அல்லாஹ்**

கேள்வி 139: அல்லாஹ் ஏன் இஸ்மாயீலையும் மக்காவையும் 2500 ஆண்டுகள் மறந்துவிட்டான்?

பதில் 139: யார் சொன்னது இப்படி? இல்லையே! அல்லாஹ் மக்காவை 2500 ஆண்டுகள் மறக்கவில்லையே என்றுச் சொல்லத்தோன்றுகிறதா?

இப்றாஹீமின் மகன் இஸ்மாயீல் ஒரு நபி (இஸ்லாமின் படி). அவரை மக்கா நகர மக்களுக்கு நபியாக அல்லாஹ் நியமித்தான் (இஸ்லாமின் படி).

அதே நேரத்தில் இஸ்ரெல் நாட்டில் ஈசாக்கை நபியாக்கினான். கி.மு. 1900/2000வது ஆண்டில் இஸ்மாயீலை நபியாக நியமித்த அல்லாஹ், அதன் பிறகு 2500 ஆண்டுகள் மக்காவை மறந்துவிட்டான், இஸ்மாயீல் ஊழியம் செய்த மக்களை மறந்துவிட்டான். காடைசியாக கி.பி. 610ல் முஹம்மதுவை நபியாக மக்கா மக்களுக்கு வழி நடத்த அனுப்பினான்.

ஆனால், இதே காலகட்டத்தில், ஈசாக்கு முதல் இயேசு வரை, பல நபிகளை இஸ்ரேலுக்கு அனுப்பிக்கொண்டே வந்தான். ஏன் இந்த ஓரவஞ்சனை அல்லாஹ்விற்கு? இஸ்ரேல் என்றால் ஒரு விதம், மக்கா என்றால் வேறு விதமா?

ஈசாக்கின் வம்சத்திற்கு, ஒருவருக்கு பின்னால் இன்னொருவர் என்று பல தீர்க்கதரிசிகளை அனுப்பினான் அல்லாஹ், இன்னும் சிலவேளைகளில் ஒரே சமுதாயத்திற்கு ஒரே நேரத்தில் இரண்டு நபிகள் (யஹ்யா மற்றும் ஈஸா). ஆனால் மக்காவிற்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பு, இஸ்மாயீல் என்ற ஒரே நபி, அதன் பிறகு கடைசி நபி முஹம்மது, இது அநியாயம் தானே!

இந்த விவரங்களை படங்களாக கீழ்கண்ட கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது பார்க்கவும்:

- **அல்லாஹ் ஏன் இஸ்மாயீலையும் மக்காவையும் 2500 ஆண்டுகள் மறந்துவிட்டான்?**

கேள்வி 140: பைபிளின் தேவன் பழைய ஏற்பாட்டை பாதுகாத்தார் என்று எப்படி நம்புவது?

பதில் 140: ஆம், பைபிளின் தேவன் பைபிளை பாதுகாத்தார் என்று நிச்சயமாகச் சொல்லமுடியும். இதற்கு கிழ்கண்ட சான்றுகளைச் சொல்லலாம்.

1) தேவன் தம் வார்த்தைகளை பாதுகாப்பதாக வாக்கு கொடுத்து இருக்கிறார், பார்க்க: ஏசாயா 55:10-11; 59:21; 1 பேதுரு 1:24-25, மத்தேயு 24:35.

2) இயேசுவும், புதிய ஏற்பாடும் பழைய ஏற்பாட்டை உறுதி செய்துள்ளார்கள், பார்க்க: மத்தேயு 19:4; 22:32,37; 39; 23:35; மாற்கு 10:3சு; லூக்கா 2:23-24; 4:4; 11:51; 20:37; 24:27,44

3) தொல்பொருள் ஆய்வு சான்றுகள்: செப்டாஜின்ட் கிரேக்க மொழியாக்கம் கி.மு. 250 நூற்றாண்டுகளில் நடந்தது. சவக்கடல் சுருள்களில் கி.மு. 100க்கு முற்பட்ட காலத்திற்கான பழைய ஏற்பாட்டு நூல்கள் ஆயிரக்கணக்கில் கிடைத்தன. இயேசுவின் காலத்தில் அராமிக் தர்கம் என்ற யூத விளக்கவுரைகள் பழைய ஏற்பாட்டிற்கு எழுதப்பட்டன. இன்னும் இப்படி சொல்லிக்கொண்டு போகலாம்.

4) இன்னும் முதல் நூற்றாண்டு யூத எழுத்தாளர்களும், இரண்டம் நூற்றாண்டின் கிறிஸ்தவ போதகர்களும், எழுத்தாளர்களும் எழுதிய நூல்களிலிருந்து பழைய ஏற்பாடு பாதுகாக்கப்பட்டு இருந்தது என்பதை அறியலாம். இவைகள் பற்றி பல ஆய்வு கட்டுரைகள் உள்ளன.

முஸ்லிம்கள் இந்த கேள்வியை கேட்டதால், அவர்கள் குர்ஆனே தவ்ராத், ஜபூர் பற்றி சாட்சி சொல்கிறது என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டியுள்ளது. தவ்ராத்திலும், ஜபூரிலும் நேர்வழியும், ஒளியும் இருக்கிறது என்று குர்ஆன் சொல்கிறது.

புதிய ஏற்பாட்டின் பாதுகாப்பு பற்றி தனியாக வேறு கேள்வியில் பார்ப்போம்.

கேள்வி 141: ஏன் பைபிளின் தேவன் 'லேவி' என்ற ஒரு வம்சத்தை தன் ஆலய பணிக்காக வைத்துக் கொண்டார்? அல்லாஹ் இது போல செய்யவில்லையே!

பதில் 141: "பைபிளின் தேவன் தான் எங்கள் அல்லாஹ் என்று" முஸ்லிம்களாகிய நீங்கள் தான் சொல்கிறீர்கள், அதே நேரத்தில் பைபிளின் தேவனை கேள்வி கேட்பதும் நீங்களே! உங்களின் கூற்றுப்படி, லேவி என்ற ஒரு வம்சத்தை தன் ஆலய ஊழியத்திற்காக அமைத்ததும் அல்லாஹ் என்று அர்த்தமாகின்றதல்லவா?

பழைய ஏற்பாட்டில் ஒரு குறிப்பிட்ட காலகட்டம்வரைக்கும், அதாவது மேசியா வரும்வரை யூதர்களை தம் கட்டுப்பாட்டிற்குள், பரிசுத்தமாக அவர்களை காத்துக்கொள்வதற்காக, சில மார்க்க சட்டங்களையும், ஆலய சட்டங்களையும் தேவன் கொடுத்தார்.

நாட்டை ஆள நியாயாதிபதிகள், அரசர்களை நியமித்தார், அதே போன்று தம் தேவாலயத்தின் சட்டங்களை காக்க, கீழ்படியவைக்க ஒரு குடும்பத்தை நியமித்தார். இயேசு வந்த பிறகு திருச்சபை தொடங்கிய பிறகு, லேவி என்ற ஒரு வம்சம் தான் ஊழியக்காரர்களாக வரவேண்டும் என்ற சட்டமில்லை. எனவே, லேவி என்ற ஒரு வம்சத்தை யூதர்களுக்காக மட்டுமே தேவன் நியமித்தார், அது உலகத்துக்கான பொதுவான சட்டமில்லை.

கேள்வி 142: பைபிளின் தேவன் ஏன் இஸ்ரவேலை மட்டுமே நேசிக்கிறார்?

பதில் 142: இது தவறான புரிதல் கொண்ட கேள்வியாகும்.

யெகோவா தேவன் இஸ்ரவேலை மட்டும் ஏன் நேசித்தார் என்றுச் சொல்வது சரியான கேள்வியல்ல, இதற்கு பதிலாக, ஏன் அவர் இஸ்ரவேலை தெரிந்துக்கொண்டார் என்று கேட்பது சரியானதாக இருக்கும். யெகோவா தேவன் உலக மக்களை அனைவரையும் நேசிக்கிறார், ஏனென்றால் அவர் தான் அவர்களை ஒரு மனிதனிலிருந்து படைத்தார்.

இஸ்ரவேலை மட்டும் ஏன் தெரிந்துக்கொண்டார்? ஏன் மற்றவர்களைக் காட்டிலும் மேன்மையாக்கி வைத்தார்? என்று கேட்டால் அதற்கு காரணம் உண்டு.

குர்ஆனில் இதைப் பற்றி சொல்லப்பட்டதைக் காணுங்கள்: ஸூரா 45:16, 6:86, 17:55

ஸூரா 45:16. நிச்சயமாக நாம், இஸ்ராயீலின் சந்ததியினருக்கு வேதத்தையும், அதிகாரத்தையும், நுபுவ்வத்தையும் கொடுத்தோம்; அவர்களுக்கு மணமான உணவு (வசதி)களையும் கொடுத்தோம் - அன்றியும் **அகிலத்தாரில் அவர்களை மேன்மையாக்கினோம்**.

ஸூரா 6:86. இன்னும் இஸ்மாயீல், அல்யஸவு, யூனுஸ், லூத் - இவர்கள் யாவரையும் உலகத்திலுள்ள **அனைவரிலும் மேன்மையாக்கினோம்**.

ஸூரா 17:55. உம்முடைய இறைவன் வானங்களிலும் பூமியிலும் உள்ளவர்களைப் பற்றி நன்கு அறிவான்; நபிமார்களில் சிலரை வேறு சிலரைவிடத் திட்டமாக நாம் **மேன்மையாக்கியிருக்கிறோம்**; இன்னும் தாவூதுக்கு ஜபூர் (வேதத்தையும்) கொடுத்தோம்.

யூதர்களுடைய மேன்மை என்ன? அவர்களிடம் வேதம் கொடுக்கப்பட்டது தான் என்று பைபிளும் சொல்கிறது:

ரோமர் 3:1-2

1. இப்படியானால், யூதனுடைய மேன்மை என்ன? விருத்தசேதனத்தினாலே பிரயோஜனம் என்ன?

2. அது எவ்விதத்திலும் மிகுதியாயிருக்கிறது; **தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது விசேஷித்த மேன்மையாமே**.

இன்னொரு மேன்மை என்னவென்றால், அவர்களிடமிருந்து மேசியாவை கொண்டுவர தேவன் திட்டம் போட்டது தான். இதனை இயேசுவே உறுதிப்படுத்தியுள்ளார்:

யோவான் 4:22. நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; **ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது**.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால், வேதம் அவர்களிடம் ஒப்புக்கொடுப்பதற்கும், மேசியாவை அவர்களிடமிருந்து பிறக்கவைப்பதற்கும் தான் தேவன் அவர்களை தெரிந்துக்கொண்டாரே தவிர, உலக மக்களை வெறுத்து இவர்களை மட்டுமே நேசிப்பதற்காக அல்ல.

இது மிகவும் ஆழமான ஆய்வு விவரங்கள், தேவைப்படும் போது சின்னஞ்சிறு கேள்விகளாக தகுந்த இடங்களில் பார்ப்போம்.

கேள்வி 143: நீங்கள் என்னதான் சொன்னாலும் சரி, யூதர்களை தேவன் அதிகமாக ஆசீர்வதித்திருக்கிறார்? பழைய ஏற்பாட்டில் இதனை காணலாம்.

பதில் 143: தேவன் இப்றாஹீமை தெரிவு செய்ததற்கு பதிலாக, இந்தியாவில் ஒரு நபரை தெரிவு செய்திருந்தால், அவருடைய சந்ததிக்கு வேதம் கொடுத்து இருந்திருப்பார், மேசியா அங்கிருந்து வந்திருப்பார். எனவே, யூதர்களை மட்டும் தேவன் நேசிக்கிறார், மற்றவர்களை அவர்கள் நேசிப்பதில்லை என்ற கூற்று தவறானது, இதற்கு பல சான்றுகளை பைபிளிலிருந்து காட்டமுடியும்.

தேவனின் கரங்களில் அதிக துன்பத்தை அனுபவித்தவர்கள் கூட யூதர்கள் தான்:

பழைய ஏற்பாட்டை கூர்ந்து படித்து ஆய்வு செய்தால், யூதர்கள் கர்த்தரின் கரங்களில் பட்ட பாடுகளை கவனிக்கமுடியும். யூதர்கள் தவறு செய்யும் போதெல்லாம், தம் கட்டளைகளை மீறும் போதெல்லாம், மற்ற நாட்டவர்கள் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்தார்.

யூதர்கள் மறுபடியும் மனந்திரும்பி கர்த்தரிடம் திரும்பினால், கர்த்தர் அவர்களை இரட்சித்து, எச்சரித்து விடுதலை கொடுத்தார். இது தொடர்ச்சியாக நடந்தது, மேசியாவாகிய இயேசு வந்த பிறகும் கூட, இவர்கள் மனந்திரும்பாத பட்சத்தில், இயேசு இவர்களின் அழிவை, எருசலேம் தேவாலயத்தின் அழிவை தீர்க்கதரிசனமாக கூறினார்.

மாற்கு 13:1-2

1. அவர் தேவாலயத்தை விட்டுப் புறப்படும்போது, அவருடைய சீஷர்களில் ஒருவன் அவரை நோக்கி: போதகரே, இதோ, இந்தக்கல்லுகள் எப்படிப்பட்டது! இந்தக் கட்டடங்கள் எப்படிப்பட்டது! பாரும் என்றான்.

2. இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: **இந்தப்பெரிய கட்டடங்களைக் காண்கிறாயே, ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும்** என்றார்.

கர்த்தரின் கரங்களிலிருந்து அதிகமான ஆசீர்வாதங்களை பெற்றவர்களும் யூதர்கள் தான், அவர் மூலமாக அதிகமான துன்பங்களை அனுபவித்தவர்களும் யூதர்கள் தான். துன்பங்களுக்கு காரணம் அவர்களின் கீழ்படியாமை தான்.

யூதர்களுக்கு கொடுத்த முக்கியத்துவத்திற்கு காரணம், "வேதமும், மேசியாவும்" அவர்களுக்கு கொடுத்ததாகும். இந்தியர்களுக்கு அவர் “வேதமும் மேசியாவும்” கொடுத்து இருந்திருந்தால், இதே நிலையில் நாமும் இருந்திருப்போம்.

சரி, ஒரு சிறிய குறிப்பு: இன்றைக்கு யூதர்கள் உலகத்துக்கு ஆசீர்வாதமாக இருக்கிறார்களா? மருத்துவ துறையில் மற்றும் இதர துறைகளில் யூதர்களின் பங்கு என்னவென்று சிறிது ஆய்வு செய்து பாருங்களேன், உண்மை என்னவென்று புரியும்.

கேள்வி 144: அல்லாஹ்விற்கு இருக்கும் 99 பெயர்களில் ஏன் "பிதா" என்ற பெயர் இல்லை?

பதில் 144: அல்லாஹ்விற்கு இருக்கும் 99 பெயர்களில் "பிதா, அப்பா" என்ற பெயர் மட்டும் அவருக்கு இல்லை.

இயேசு தேவனை அழைக்கும் போது, பிதாவே என்று அழைத்தார், சீடர்களுக்கு பிதாவே என்று அழைத்து ஜெபிக்கும் படி கற்றுக்கொடுத்தார் (மத்தேயு 6:9).

இன்று முஸ்லிம்கள் நாங்கள் இயேசுவை நேசிக்கிறோம், அவரை விசுவாசிக்கிறோம் என்றுச் சொல்கிறார்கள், ஆனால், அவரது போதனையின்படி முஸ்லிம்கள் செய்கிறார்களா? இயேசு சீடர்களுக்கு கற்றுக்கொடுத்தது போன்று, "பிதாவே என்று அழைத்து, இறைவனை தொழுதுக்கொள்ளமுடியுமா"?

இல்லை, இது எங்களால் முடியாது என்று நீங்கள் சொல்வதாக இருந்தால், நீங்கள் உண்மையான இயேசுவை விசுவாசிக்கவில்லை என்று பொருள்.

அல்லாஹ் பிதா ஆகமுடியாது, இதனால் அல்லாஹ் யெகோவா ஆக முடியாது.

கேள்வி 145: அல்லாஹ் யாருக்கும் தகப்பன் ஆகமுடியாது, சரி ஒப்புக்கொள்கிறோம், ஆனால், ஏன் முஹம்மது யாருக்கும் தகப்பன் ஆகமுடியாது?

பதில் 145: மேலே கண்ட பதில்களில் 'அல்லாஹ் யாருக்கும் பிதா ஆகமுடியாது' என்பதைக் கண்டோம். ஏனென்றால், அல்லாஹ் "நீங்கள் என் அடிமைகள், நான் எஜமான்" என்று சொல்லிவிட்டான் எனவே அதனை ஏற்றுக்கொள்கிறோம் என்று வைத்துக்கொள்வோம்.

ஆனால், முஹம்மது மக்களுக்கு குறைந்தபட்சம் முஸ்லிம்களுக்கு ஏன் பிதா ஆகமுடியாது? ஒரு ஆன்மீகத் தலைவர், எல்லோருக்கும் குருவாகவும், பிதாவாகவும், ஒரு குடும்ப தலைவராகவும் இருப்பார் அல்லவா?

ஸூரா 33:40. **முஹம்மது(ஸல்) உங்கள் ஆடவர்களில் எவர் ஒருவருக்கும் தந்தையாக இருக்கவில்லை;** ஆனால் அவரோ அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் இறுதி (முத்திரை)யாகவும் இருக்கின்றார்; மேலும் அல்லாஹ் எல்லாப் பொருள்கள் பற்றியும் நன்கறிந்தவன்.

முஹம்மது முஸ்லிம்களுக்கு தகப்பன் என்று சொல்வதில் என்ன அல்லாஹ்விற்கு சங்கடம்?

சஹாபாக்களுக்கு முஹம்மது பெரிய துணை அல்லவா? தலைவர் அல்லவா? அவர்கள் குடும்பங்களுக்கு மூத்த தலை அல்லவா? ஒரு வேளை சஹாபாக்கள் மரித்த பிறகு, அவர்களின் குடும்ப நபர்களுக்கு (மனைவிக்கு, பிள்ளைகளுக்கு) ஒரு சகோதரனாக, பெரியப்பாவாக,

சித்தப்பாவாக மாறி, அவர்களை இவர் தாங்கமாட்டாரா? தகப்பன் செய்கின்ற உதவிகளை அந்த குடும்பத்துக்குச் செய்யவேண்டாமா?

சஹாபாக்களுக்கு முஹம்மது தகப்பன் ஆகமுடியாது என்று குர்ஆன் சொல்வதில் ஏதோ ஒரு வெளியே சொல்லமுடியாத இரகசியம் அடங்கியிருக்கிறது.

ஒருவேளை, சஹாபாக்கள் மரணித்தால், அவர்களின் மனைவிகளை முஹம்மது திருமணம் செய்ய வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்று அல்லாஹ் பயந்து, இப்படிப்பட்ட குர்ஆன் சட்டத்தை இறக்கிவிட்டனா?

முஸ்லிம்களே, சிந்தியுங்கள் அடிமைத் தனத்திலிருந்து விடுதலை பெறுங்கள்.

கேள்வி 146: சொர்க்கம் போவதற்கு அல்லாஹ்வின் வழி என்ன? யெகோவாவின் வழி என்ன?

பதில் 146: உலகில் எந்த ஒரு மதத்தை எடுத்துக்கொண்டாலும், நித்தியஜீவன், நிர்வாணா, சொர்க்கம் என்று மரணத்திற்கு பிறகு நாம் எங்கே இருக்கப்போகிறோம் என்பதைப் பற்றி கூறுகின்றன.

சொர்க்கத்திற்கு போவதற்கு அல்லாஹ்வின் வழி:

எனக்கு கீழ்படி, நல்ல காரியங்களைச் செய், நீ சொர்க்கத்திற்கு போவதற்கான டிக்கெட்டை நீயே சம்பாதித்துக் கொள். நீ சரியாக செய்யவில்லையென்றால் உன் டிக்கெட்டு கிழிந்துவிடும், உனக்கு சொர்க்கம் செல்வதற்கான வாசல் திறக்கப்படாது.

சொர்க்கத்திற்கு போவதற்கு யெகோவா காட்டிய வழி:

சொர்க்கம் செல்வதற்கு உன் முயற்சி வீண். உன்னால் 100% பரிசுத்தமாக வாழ முடியாது. உனக்காக நான் வழியை உண்டாக்கி இருக்கிறேன். உன் இடத்தில் என் வார்த்தையை மேசியாவாக அனுப்பி, எல்லாவற்றையும் நிறைவேற்றியுள்ளேன். நீ செய்யவேண்டியதெல்லாம் ஒன்று தான். என் மேசியா மீது நீ நம்பிக்கை வைக்கவேண்டும். அதன் பிறகு என்னுடைய ஆவியை உனக்கு உதவி செய்ய அனுப்பியுள்ளேன், அவருடைய துணையுடன் உன்னால் முடிந்த அளவிற்கு நல்ல குடிமகனாக, பரிசுத்தமான வாழ்க்கை வாழு. கடைசிவரை என்னில் நிலைநின்று மரித்தால், நீ என்னோடு பரலோகில் நித்திய காலமாக இருப்பாய்.

இதில் எது கடினம்? எது நியாயம்? எது அறிவுடமை?

முஸ்லிம்களின் சிந்தனைக்கு: இந்த ஒரு கேள்விகளை நீங்கள் கேட்டுப்பார்த்து, அதற்கு பதிலை நீங்களே கொடுங்கள். நான் செய்யும் அனைத்து நல்ல காரியங்களும், என் வாழ்நாளின் அனைத்து தொழுகைகளும், நான் சொர்க்கம் செல்ல போதுமானதாக இருக்குமா? அல்லாஹ் தராசில் என் நன்மைகள் தீய காரியங்களை வைக்கும் போது, என் நன்மைகள் என் தீய காரியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமா? பூமியில் இருக்கும் போதே எனக்கு சொர்க்கத்திற்குச் செல்வேன் என்ற நம்பிக்கை உண்டா? அல்லது அந்த முடிவை என மரணத்திற்கு பிறகு தான் எடுக்கப்படும் என்று எண்ணுகின்றீர்களா?

கேள்வி 147: ஆதாமை வணங்கும்படி(ஸுஜூது) செய்யும் படி அல்லாஹ் இப்லீஷுக்கு கட்டளையிட்டானா?

பதில் 148: ஆம், ஸூரா18:50ல் அல்லாஹ் கூறியுள்ளான்.

18:50. அன்றியும், "**ஆதமுக்கு ஸுஜூது செய்யுங்கள்**" என்று நாம் மலக்குகளிடத்தில் கூறியதை (நபியே!) நினைவு கூர்வீராக; **அப்போது இப்லீஸைத்தவிர, அவர்கள் ஸுஜூது செய்தார்கள்**; அவன் (இப்லீஸ்) ஜின் இனத்தைச் சேர்ந்தவனாக இருந்தான்; அவன் தன் இறைவனுடைய கட்டளையை மீறி விட்டான்; ஆகவே நீங்கள் என்னையன்றி அவனையும் அவன் சந்ததியாரையும் (உங்களைப்) பாதுகாப்பவர்களாக எடுத்துக் கொள்வீர்களா? அவர்களோ உங்களுக்குப் பகைவர்களாக இருக்கிறர்கள்; அக்கிரமக்காரர்கள் (இவ்வாறு) மாற்றிக் கொண்டது மிகவும் கெட்டதாகும்.

மனிதனை வணங்குவதினால், அல்லாஹ்விற்கு என்ன நன்மை உண்டாகும்? மலக்குகளுக்கு ஜின்களுக்கு என்ன நன்மை? போகட்டும் ஆதாமுக்கு என்ன நன்மை உண்டானது?

மண்ணால் படைக்கப்பட்ட மனிதனை வணங்கும்படி மலக்குகளுக்கு ஏன் அல்லாஹ் கட்டளையிட்டான் என்ற காரணத்தை குர்ஆனில் காணமுடியாது. யாராவது இதற்கு பதில் சொல்லமுடியுமா?

கேள்வி 148: குர்ஆனில் எந்த வசனத்தில் அல்லாஹ் 'கத்னா, சுன்னத்து' செய்யவேண்டும் என்று கட்டளையிட்டுள்ளான்?

பதில் 148: குர்ஆனில் எந்த ஒரு வசனத்திலும் முஸ்லிம்கள் கத்னா என்கின்ற விருத்தசேதனம் செய்யவேண்டும் என்று கட்டளையிடப்படவில்லை.

கேள்வி 149: அல்லாஹ்விற்கு ஒற்றைப்படை எண்கள் என்றால் பிடிக்குமா?

பதில் 149: ஆமாம், அல்லாஹ்விற்கு ஒற்றைப்படை எண் என்றால் பிடிக்குமாம், அதற்காகத்தான் அனேக விஷயங்களை முஹம்மது ஒற்றைப்படையில் செய்யச் சொன்னாரோ!

ஸஹீஹ் புகாரி எண்: 6410. அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.

அல்லாஹ்விற்கு தொண்ணூற்று ஒன்பது நூற்றுக்கு ஒன்று குறைவான - பெயர்கள் உண்டு. அவற்றை (நம்பிக்கை கொண்டு) மனனமிட்டவர் யாரும் சொர்க்கம் நுழையாமல் இருப்பதில்லை. **அல்லாஹ் ஒற்றையானவன். ஒற்றைப்படையையே அவன் விரும்புகிறான்**' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

லைலத்துல் கத்ர் இரவை எங்கு தேடுவது:

ஸஹீஹ் புகாரி எண்: 2017. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'ரமளானின் கடைசிப் பத்து நாள்களில் உள்ள **ஒற்றைப்படை இரவுகளில் லைலத்துல் கத்ரைத் தேடுங்கள்**!' என ஆயிஷா(ரலி) அறிவித்தார்.

ஆனால், சத்தியம் செய்யும் போது அல்லாஹ் இரட்டை மற்றும் ஒற்றையின் மீது செய்வான்:

ஸூரா 89:3. **இரட்டையின்** மீதும், **ஒற்றையின்** மீதும் சத்தியமாக,

அப்படியானால், ஒற்றை (1,3,5,7,9) மற்றும் இரட்டை(2,4,6,8) இரண்டையும் சேர்த்தால், எல்லா எண்களும் வந்துமிடுமல்லவா? அப்படியானால், அல்லாஹ் 'எண்கள் மீது சத்தியமாக' என்று சொல்லியிருந்தாலே போதுமானதாக மாறியிருக்குமே! நல்ல கேள்வி தான், ஆனால் பதிலை முஸ்லிம்களிடமிருந்து தான் வரவேண்டும்.

கேள்வி 150: எல்லாவற்றிற்கும் முந்தியவனும், பிந்தியவனும் யார்? குர்ஆன் 57:3

பதில் 150: குர்ஆன் 57:3ல் 'எல்லாவற்றிற்கும் முந்தியவனும், பிந்தியவனும்' அல்லாஹ் என்று சொல்லப்பட்டுள்ளது.

ஸூரா 57:3. (யாவற்றுக்கும்) **முந்தியவனும்** அவனே; **பிந்தியவனும்** அவனே; பகிரங்கமானவனும் அவனே; அந்தரங்கமானவனும் அவனே; மேலும், அவன் அனைத்துப் பொருள்களையும் நன்கறிந்தவன்.

இதே வார்த்தைகள் யெகொவா தேவனுக்கும், பயன்படுத்தப்பட்டு இருப்பதில் ஆச்சரியமில்லை. ஏனென்றால் முதலாவது பைபிளின் தேவன் இது தம்முடைய தகுதி என்றார், அதன் பிறகு வந்த குர்ஆனில் இது அல்லாஹ்விற்கு போடப்பட்டுள்ளது.

வெளி 1:8

8. இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும், ஓமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார்.

ஆனால், இதே பெயர் இயேசு தமக்கும் சூட்டிக்கொண்டது தான் கவனிக்கப்படத்தக்கது:

கீழ்கண்ட வசனங்களைக் காண்க:

வெளி 1:17

17. நான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்; அப்பொழுது அவர் தம்முடைய வலதுகரத்தை என்மேல்வைத்து,

என்னை நோக்கி: பயப்படாதே, நான் **முந்தினவரும் பிந்தினவரும்**, உயிருள்ளவருமாயிருக்கிறேன்;

வெளி 21:6

6. அன்றியும், அவர் என்னை நோக்கி: ஆயிற்று, நான் அல்பாவும் ஓமெகாவும், **ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன்**. தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்.

வெளி 22:12-13

12. இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது. 13. நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமும், **முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்**.

யெகோவா தேவன் முந்தினவரும், பிந்தினவருமாக இருக்கிறார். இயேசு முந்தினவரும், பிந்தினவருமாக இருக்கிறார்.

தலைப்பு: கிறிஸ்தவம் (151 - 180)

கேள்வி 151: "கிறிஸ்தவம்" - ஒரு வரியில் விளக்கமுடியுமா?

பதில் 151: உலகில் உள்ள எந்த மதத்தையும் ஒருவரியில் விளக்கமுடியாது, அப்படி விளக்குபவர்கள் அதன் ஒரு பகுதியைத் தான் விளக்குகிறார்கள் என்று பொருள்.

கிறிஸ்தவம் என்றுச் சொன்னால், அது மூன்று வகையாக பார்க்கப்படுகின்றது என்று நான் நினைக்கிறேன்.

1. பைபிள் காட்டும் கிறிஸ்தவம்
2. கிறிஸ்தவர்கள் காட்டுகின்ற கிறிஸ்தவம்
3. ஊடகங்கள் காட்டும் கிறிஸ்தவம்

பைபிள் காட்டும் கிறிஸ்தவம்:

இயேசு தம்மை எப்படி பின்பற்றவேண்டுமென்றுச் சொன்னார்? தம்மை எப்படி தொழுதுக்கொள்ள வேண்டுமென்றுச் சொன்னார்? முக்கியமாக புதிய ஏற்பாடு என்ன சொல்கிறது? போன்ற கேள்விகளுக்கான பதில் தான் பைபிள் சொல்லும் கிறிஸ்தவம்.

கிறிஸ்தவர்கள் காட்டுகின்ற கிறிஸ்தவம்:

பைபிளில் சொல்லப்பட்ட கிறிஸ்தவமும், கிறிஸ்தவர்களை பார்க்கும் போது அவர்கள் மூலமாக வெளிப்படும் கிறிஸ்தவமும் ஒன்றில்லையா? என்று கேட்க வேண்டாம். ஏனென்றால், பைபிள் என்பது பல நூறு சட்டங்கள், மத சடங்குகள் அடங்கிய புத்தகமில்லை. இதோ, நீ கிறிஸ்தவனாக வாழவேண்டுமென்றால் "இந்த சட்டங்களுக்கு கீழ்படி அது போதும்" என்று பைபிள் சொல்வதில்லை. கிறிஸ்தவனாக வாழ்வது என்பது, கண்மூடிக்கொண்டு மந்திரங்களைச் சொல்லி, அனைத்து மத சடங்குகளை இயந்திரங்களைப் போல செய்யும் வாழ்க்கையுமல்ல. ஒரு உண்மையான கிறிஸ்தவனை அவனது உடை அளங்காரத்தை பார்த்து கண்டுபிடிக்கமுடியாது. பைபிள் நாகரீகமான உடையை அணியச்சொல்கிறது, வெளிப்புற மாற்றம் தேவையற்றது.

கிறிஸ்தவம் என்பது நாம் இயேசுவோடு கொண்ட உறவு முறைக்கும், அன்புக்கும் பெயர் தான் கிறிஸ்தவம். அவர் மீது கொண்டுள்ள அன்பை, மற்றவர்கள் மீது காட்டி மகிழ்ச்சி அடையும் ஒரு நிலை தான் கிறிஸ்தவம். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்பு செலுத்து, உன் சக மனிதனிடத்தில் அன்பு செலுத்து, கிறிஸ்தவம் பற்றி இது தான் இயேசுவின் இரத்தினச் சுருக்கம். அன்பு என்பது 24 மணி நேரமும் மற்றவர்கள் பார்க்கும்படி காட்டிக்கொண்டு இருக்கமுடியாது. சிக்கல் இங்கே தான் இருக்கிறது.

நாம் நம் தகப்பனோடு, தாயோடு கொண்டுள்ள அன்பு, மற்றும் உறவு முறையை மற்றவர்கள் முன்பு எந்நேரமும் காட்டிக்கொண்டு இருப்போமா என்ன? இல்லையல்லவா! ஆகையால், கிறிஸ்தவர்களின் வாழ்க்கை மூலமாக சில நேரங்கள் கிறிஸ்தவம் வெளிப்படும், சில நேரங்களில் வெளிப்படாது. கிறிஸ்தவரல்லாதவரால் இந்த நிலையை புரிந்துக் கொள்வது கடினமே!

ஊடகங்கள் காட்டும் கிறிஸ்தவம்:

ஊடகங்கள் பரப்பும் செய்திகளைப் பார்த்து மற்றும் ஹாலிவுட் படங்களைப் பார்த்து இது தான் கிறிஸ்தவம் என்று மக்கள் தவறாக எண்ணுவதும் உண்டு. சிலவேளைகளில் சில கிறிஸ்தவர்களின் செயல்கள் பைபிளுக்கு எதிராக இருந்தாலும், அதையும் கிறிஸ்தவம் தான் செய்தது என்று ஊடகங்கள் சொல்லிவிடும்.

சரி, இதுவரை சொன்ன விவரங்களிலிருந்து, கிறிஸ்தவம் பற்றி ஏதாவது புரிந்ததா? புரியவில்லையென்றால் புதிய ஏற்பாட்டிலுள்ள ஒரே ஒரு நற்செய்தி நூலை (**மத்தேயு**/**மாற்கு**/**லூக்கா**/**யோவான்**) படித்துப் பாருங்கள், கிறிஸ்தவத்தின் அஸ்திபாரம் தெளிவாக புரிந்துவிடும்.

புதிய ஏற்பாட்டை நாம் படிக்காமல், கிறிஸ்தவம் பற்றி மற்றவர்கள் சொல்லும் விவரங்களை எத்தனை நூறு பக்கங்கள் படித்தாலும், அது குறைவு தான்.

கேள்வி 152: கிறிஸ்தவம் மேற்கத்திய மார்க்கம் (வெள்ளைக்காரனின் மதம்) என்றுச் சொல்வது சரியா?

பதில் 152: மனிதன் தேவ சாயலில் படைக்கப்பட்டான் என்று பைபிள் சொல்கிறது (ஆதியாகமம் 1:27). ஆதாம் தான் முதல் மனிதன். இந்திய வேதங்கள் சொல்லும் மனித படைப்பு கோட்பாட்டை ஆணிவேரோடு தகர்த்தெறியும் சாட்டையடி இது.

ஆரம்ப கால கிறிஸ்தவர்கள் யூதர்களாகவும், ஆசியா கண்டத்தில் உள்ள மத்திய கிழக்கு பகுதியில் வாழ்ந்தவர்களாகவும் இருந்தார்கள். மத்திய கிழக்கு பகுதியில் வாழ்ந்தவர்கள் வெள்ளையர்கள் அல்ல. இயேசுவும் நம்மைப்போன்றவர் தான், இயேசு வெள்ளைத்துரையல்ல. ஐரோப்பாவும், அமெரிக்காவும் கிறிஸ்தவம் தொடங்கிய இடத்தில் இல்லவே இல்லை. இயேசு உலக மக்கள் அனைவருக்குமான இரட்சகராக இருக்கிறார் (1 யோவான் 2:2).

கிறிஸ்தவம் வெள்ளையர்களின் மார்க்கமல்ல என்பதை இயேசுவின் சீடர்கள் மூலமாகவே நிருபிக்கப்பட்டுவிட்டது. ஆஃப்ரிக்கா கண்டத்தில் உள்ள எத்தியோப்பியா நாட்டிலிருந்து வந்த ஒரு அரசு அதிகாரிக்கு நற்செய்தியை இயேசுவின் சீடர் பிலிப்பு அறிவித்தார். அவர் இயேசுவை ஏற்றுக்கொண்டு, ஆஃப்ரிக்காவிற்குச் சென்று, இயேசுவை ஆஃப்ரிக்காவில் அறிவித்தார். ஆசியாவிற்கு வெளியே ஆஃப்ரிக்காவிற்கு தான் சுவிசேஷம் இயேசுவின் சீடர்களால் முதலில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அப்போஸ்தலர் 8:27.

அந்தப்படி அவன் எழுந்து போனான். அப்பொழுது **எத்தியோப்பியருடைய** ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்துகொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து;

மத்திய கிழக்கு நாடுகளுக்கு அடுத்தபடியாக, இயேசுவின் நற்செய்தி ஆஃப்ரிக்காவிற்குச் சென்றது, ஐரோப்பாவிற்கோ, அமெரிக்காவிற்கோ அல்ல(அப்போது அமெரிக்காவே இல்லை). அதன் பிறகு இயேசுவின் நற்செய்தி ஆசியாவின் இதர நாடுகளுக்குச் சென்றது.

ஆரம்ப கால சபை தலைவர்களான அகஸ்டின்(Augustine), அதனசியஸ்(Athanasius), மற்றும் தெர்துல்லியன்(Tertullian) இவர்கள் அனைவரும் வட ஆப்ரிக்காவில் ஊழியம் செய்தவர்கள். மேலும் இரேனியஸ்(Irenaeus), இக்னாடியஸ்(Ignatius) போன்றவர்களோடு கூட முதல் மூன்று நூற்றாண்டுகளில் கிறிஸ்தவம் ஆசியாவில் வேரூண்றியது. முஸ்லிம்களின் படையெப்பு வரைக்கும

எத்தியோப்பியாவும், லிபியா, எகிப்து மற்றும் மேற்கு ஆசியா அனைத்தும் பலமான கிறிஸ்தவ நாடுகளாக இருந்தன.

இதிலிருந்து நாம் அறிவது என்னவென்றால், கிறிஸ்தவம் ஆசியா மற்றும் ஆஃப்ரிக்காவில் தான் ஆரம்பத்தில் பரவியது. கிறிஸ்தவம் வெள்ளையனின் மார்க்கமல்ல, இது உலகை ஒரு மனிதனிலிருந்த படைத்த தெய்வத்தின் வழிகாட்டுதல் ஆகும்.

இது தான் கிறிஸ்தவத்தின் சத்தியம்:

அப்போஸ்தலர் 10:34-5.

அப்பொழுது பேதுரு பேசத்தொடங்கி: தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், **எந்த ஜனத்திலாயினும்** அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்.

மேலும் அறிய இந்த ஆங்கில கட்டுரையை படிக்கவும்: **Is Christianity a white man's religion?**

கேள்வி 153: கிறிஸ்தவர்கள் பாவம் செய்து பாதிரியார்களிடம் மன்னிப்பு கேட்டு, மறுபடியும் பாவம் செய்கிறார்களே, இது சரியா?

பதில் 153: பைபிளில் எங்கும் இப்படி செய்யுங்கள் என்று சொல்லப்படவில்லை, இயேசுவும், அவரது சீடர்களும் இதனை போதிக்கவில்லை.

இது மனிதர்களின் பாரம்பரியங்கள். இதற்கும் பைபிளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. ரோமன் கத்தோலிக்க சபையில் இப்படி செய்யப்படுகின்றது, ஆனால் இது பைபிளின் போதனை அல்ல மாறாக பைபிளுக்கு எதிரான செயலாகும்.

பைபிளின் படி நம் பாவங்களை தேவனிடம் தான் அறிக்கையிடவேண்டும், மனிதர்களிடம் அல்ல.

1 யோவான் 1:9:

நம்முடைய பாவங்களை நாம் **அறிக்கையிட்டால்**, பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு **அவர்** உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

யாக்கோபு 5:16ன் பாடி, நாம் ஒருவருக்கு ஒருவர் நம் குற்றங்களை அறிக்கைவிடவேண்டும், அதாவது நான் என் சகோதரனுக்கு தீமை செய்தால் அவனிடம் சென்று மன்னிப்பு கேட்கவேண்டும். மேலும் இந்த வசனம் நாம் சுகமடைவதற்கு முன்பு, நாம் யாருக்காவது எதிராக நடந்திருந்தால், அவரிடம்

மன்னிப்பு கேட்டுவிட்டு, அதன் பிறகு கர்த்தரிடம் ஜெபிக்கவேண்டும் என்றுச் சொல்கிறது. இது பாதிரியார்களிடம் நம் பாவங்களை அறிக்கையிடச் சொல்லவில்லை? சகோதரனுக்கு தீமை செய்துவிட்டு, பாதிரியாரிடம் சென்று அறிக்கையிட்டால் என்ன பயன்?

யாக்கோபு 5:16

நீங்கள் **சொஸ்தமடையும்படிக்கு**, **உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு**, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் **ஊக்கமான வேண்டுதல்** மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.

உன் சகோதரனோடு உனக்கு குறை உண்டானால், அவனோடு முதலில் ஒப்புறவாகு, அதன் பிறகு உன் காணிக்கியை செய்லுத்து, இது இயேசு கற்றுக்கொடுத்தது. பாதிரியாரிடம் வந்து மன்னிப்பு கேள் என்று இயேசு சொல்லவில்லை.

மத்தேயு 5:23,24

23. ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன் பேரில் உன் **சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவு கூருவாயாகில்**, 24. அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், **முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி**, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து.

கேள்வி 154: ரோமன் கத்தோலிக்க பெண்கள் பொட்டு வைக்கிறார்கள், மற்றவர்கள் வைப்பதில்லை, இது எதனால்?

பதில் 154: கத்தோலிக்கர்கள் இந்திய கலாச்சாரத்தில் உள்ள சில பழக்கங்களை பின்பற்றுகிறார்களே தவிர, இது பைபிளின் போதனை அல்ல.

கேள்வி 155: கிறிஸ்தவர்கள் எத்தனை பண்டிகைகளை கொண்டாடும் படி பைபிள் சொல்கிறது?

பதில் 155: பூஜ்ஜியம் (இப்படியும் ஒரு மார்க்கம் இருக்குமா?)

பழைய ஏற்பாட்டில் தேவன் யூதர்களுக்கு சில பண்டிகைகளை கொண்டாடும் படி கட்டளையிட்டார். தேவன் தங்களை எப்படி இரட்சித்தார், எப்படியெல்லாம் எதிரிகளிடமிருந்து காத்தார் போன்றவற்றை மறக்கக்கூடாது என்பதற்காக பண்டிகைகளை நியமித்தார்.

புதிய ஏற்பாட்டில் இப்படியெல்லாம் பண்டிகையாக கொண்டாடும் ஒரு கட்டளையும் இல்லை.

இயேசு தம்முடைய சிலுவை மரணத்தை நினைவு கூறும்படி கூறினார்.

இது பண்டிகையல்ல, இது ஒரு நினைவு கூறுதல், அதாவது இயேசுவின் சரீரத்திற்கு அடையாளமாக ஒரு ரொட்டித்துண்டு, அவரது இரத்தம் சிந்துதலுக்கு அடையாளமாக, சிறிது திராட்சை ரசத்தை உண்டு அவரது மரணத்தை நினைவு கூறுங்கள் என்றார்.

கேள்வி 156: அப்படியானால், ஏன் கிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ்ஸையும், புனித வெள்ளி மற்றும் ஈஸ்டரை கொண்டாடுகிறார்கள்?

பதில் 156: கிறிஸ்தவத்தில் உள்ள ஒரு சிறப்பான கோட்பாடு என்ன தெரியுமா? இயேசு நம்மை "நாட்கள், கிழமைகள், மாதபிறப்புக்கள், வருட பிறப்புக்கள், பௌர்ணமி, அமாவாசை, ராகு காலம், எமகண்டம், நல்ல காலம், கெட்ட காலம்" போன்ற அனைத்து காரியங்களிலிருந்தும் விடுதலை செய்ததுதான்.

யோவான் 8:32. சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.

கிறிஸ்தவர்கள் விரும்பினால் எந்த ஒரு நாளையும் சிறப்பான நாளாக கருதி, அந்த நாளில் கொண்டாடலாம், குடும்ப நபர்களின் பிறந்தநாட்கள், திருமண நாட்கள் என்று எதை வேண்டுமானாலும் நாம் நம் குடும்பத்தின் மகிழ்ச்சிக்காக கொண்டாடலாம்.

ரோமர் 14:6 **நாட்களை விசேஷித்துக்கொள்ளுகிறவன்** கர்த்தருக்கென்று விசேஷித்துக்கொள்ளுகிறான்; **நாட்களை விசேஷித்துக் கொள்ளாதவனும்** கர்த்தருக்கென்று விசேஷித்துக்கொள்ளாதிருக்கிறான். புசிக்கிறவன் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறபடியால், கர்த்தருக்கென்று புசிக்கிறான்; புசியாதிருக்கிறவனும் கர்த்தருக்கென்று புசியாதிருந்து, தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறான்.

பைபிள் சொல்லவில்லையென்றாலும் இயேசுவின் பிறந்த நாளை கொண்டாடுகிறோம். இயேசுவின் சிலுவை மரணத்தை தியானிக்க சில நாட்களை ஒதுக்கி, புனித வெள்ளியை ஆசரிக்கிறோம். இயேசுவின் உயிர்த்தெழுதல் நாளை நினைவு கூர்ந்து குடும்பமாக, சபையாக சந்தோஷமாக கொண்டாடுகிறோம்.

கிறிஸ்தவர்கள் விடுதலையானவர்கள் எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைச் செய்ய அவர்களுக்கும் உரிமையும் அதிகாரமும் உண்டு. இந்த உரிமையையும் பைபிளே நமக்கு கொடுத்துள்ளது.

கேள்வி 157: முஸ்லிமாகிய நான், திடீரென்று ஒரு ஞாயிறு ஆராதனையில் பங்கு பெற வந்தால் அனுமதிப்பீர்களா?

பதில் 157: தாராளமாக நீங்கள் ஞாயிறு ஆராதனைகளில் பங்கு பெறலாம். நீங்கள் மசூதிகளில் செய்வது போன்று உளூ (கை கால்களை கழுவுதல்) போன்றவைகளைச் செய்யத் தேவையில்லை.

கிறிஸ்தவ திருச்சபையின் ஆராதனையில் பங்கு பெற விரும்புகிற முஸ்லிம்களுக்கு சில ஆலோசனைகள்:

ஆலோசனை 1:

சபையில் சில நேரங்களில் எழுந்து நின்று துதிப்பார்கள், ஜெபிப்பார்கள். அதனை நீங்கள் விரும்பவில்லையென்றால் நீங்கள் செய்யவேண்டியதில்லை, அதனால் கடைசியில் உட்கார்ந்துக்கொண்டால் இந்த சிறிய சங்கடமும் உங்களுக்கு இருக்காது.

ஆலோசனை 2:

இந்த ஆலோசனையை தவறாக நினைக்க வேண்டாம். இலங்கையில் 2019ம் ஆண்டு ஈஸ்டர் பண்டிகையின் போது, முஸ்லிம் தீவிரவாதிகள் திருச்சபைகளைத் தாக்கினார்கள், மேலும் இதர நாடுகளில் நடந்துமுடிந்த சில தீவிரவாதிகளின் செய்திகளை சபை மக்கள் கேள்விப்பட்டு இருப்பதினால். ஒரு சபையில் படித்தவர்கள் படிக்காதவர்கள் என்று அனைத்து நிலை மக்கள் இருப்பதினால், ஒரு முஸ்லிம் திடீரென்று சபைக்குள் நுழைந்தால், சில சபை விசுவாசிகள் பயந்துப்போய் வேறு வகையாக நடந்துக்கொள்ள வாய்ப்பு உள்ளது.

எனவே, ஒரு சபைக்குள் செல்வதற்கு முன்பு, அந்த சபையின் போதகரையோ, நிர்வாகிகளையோ அழைத்து சபை தொடங்குவதற்கு முன்பு பேசிவிட்டு, அதன் பிறகு அவர்களின் துணையோடு சென்றால் நன்றாக இருக்கும். இதை எழுதுவதற்கு எனக்கு வேதனையாகத் தான் உள்ளது, ஆனால் என்ன செய்வது, ஒரு சில முஸ்லிம் தீவிரவாதிகள் செய்யும் செயல்களினால் எல்லோருக்கும் கெட்டப்பெயர் வந்துவிட்டது. இதற்காக நாம் விசுவாசிகளை குற்றப்படுத்தமுடியாது என்பது தான் தாழ்வான வேண்டுகோள்.

நான் ஒரு முஸ்லிம் என்று சபைக்கு எப்படித்தெரியும்:

முஸ்லிம்களுக்கு என்று தனிப்பட்ட உடைகளுண்டு, முகத்தில் தாடி வைக்கும், மீசை எடுக்கும் முறை கூட நீங்கள் ஒரு முஸ்லிம் என்று மற்றவர்களுக்கு காட்டிவிடும். இதர மக்களைப்போன்று உடை அணிந்தால் யாருக்கும்

தெரியவராது. ஆனால், இஸ்லாமிய உடை அணிவதினால் இந்த பிரச்சனையை தவிர்க்க முடியாது.

மேலும் முஸ்லிம் பெண்கள் என்றால், ஒருவேளை அவர்கள் புர்கா அணிந்து இருந்தால், வருகிறவர் முஸ்லிம் பெண் என்று தெளிவாக எல்லோருக்கும் புரிந்துவிடும்.

ஆலோசனை 3:

சபை முடிந்த பிறகு ஆண்களும் பெண்களும், உங்களிடம் வந்து உங்களை விசாரிக்கலாம், கைகுளுக்கலாம். இதனை நீங்கள் தவறாக நினைக்கவேண்டாம். இது என்ன, ஒரு பெண் எப்படி ஒரு ஆணிடம் வந்து கைகுளுக்குகிறாள்? என்று எண்ணவேண்டாம், மனதில் கறையில்லையென்றால், கைகுளுக்குவதில் தவறில்லை. மனதில் கறையிருந்தால், பத்து அடிக்கு தூரமாக பெண் இருந்தாலும், பிரச்சனைத் தான்.

கேள்வி 158: முஸ்லிமாகிய எனக்கு, கர்த்தருடைய பந்தியில் (இரா போஜனம் ரொட்டி, திரட்சை ரசம்) பங்கு பெற அனுமதிப்பீர்களா?

பதில் 158: எல்லோரும் சபைக்கு வந்து அமரலாம், ஆராதனையில் பங்கு பெறலாம். ஆனால், ஞானஸ்நானம் எடுத்தவர்களுக்கு மட்டும் தான் 'ரொட்டியும், திராட்சை ரசமும்' கொடுக்கப்படும்.

'சரி, நான் ஞானஸ்நானம் எடுத்துக்கொள்கிறேன், எனக்கு ரொட்டித்துண்டும், திராட்சை ரசமும் கொடுப்பீர்களா'? என்று கேட்டீர்களானால், இதுவும் முடியாது ஏனென்றால், ஞானம்ஸ்நானம் எடுக்கும் போது, உங்களிடம் சில கேள்விகள் கேட்கப்படும், நீங்கள் அதற்கு உண்மையான பதில்களைக் கொடுக்கவேண்டும்.

கேள்விகள்:

- நீங்கள் இயேசுக் கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கிறீர்களா?
- இயேசுக் கிறிஸ்து உங்களுக்காக இரத்தம் சிந்தி, சிலுவையில் மரித்து மறுபடியும் உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசிக்கிறீர்களா?
- இயேசுக் கிறிஸ்து தேவனுடைய வார்த்தையாகவும், இறைவனாகவும் இருக்கிறார் என்று விசுவாசிக்கிறீர்களா?
- தொடர்ந்து பைபிள் படித்து, ஜெபம் செய்து, திருச்சபையின் அங்கத்தினராக மாறி, சபையின் ஐக்கியத்தில் நிலைத்திருப்பீர்களா?
- இயேசுவை தெய்வமாக ஏற்றுக்கொண்ட இந்த முடிவை மற்றவர்களின் கட்டாயத்தின் பெயரில் அல்லாமல், சுயமாக நீங்கள் எடுத்துள்ளீர்களா?

போன்ற சில கேள்விகளுக்கு பதில் கொடுத்து, இயேசுவை இறைவனென்று விசுவாசித்து, தேவாலயத்திற்கு தொடர்ந்து வருவேன் என்று வாக்கு கொடுக்கிறவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படும். இப்படிப்பட்டவர்களுக்கு மட்டும் தான் ரொட்டியும், திராட்சை ரசமும் கொடுக்கப்படும்.

முஸ்லிம் நண்பரே, மேற்கண்ட கேள்விகளுக்கு உங்கள் பதில் என்ன?

உங்களுடைய பதிலைப்பொருத்து தான் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படும், மேலும் ரொட்டியும் திராட்சை ரசமும் கொடுக்கப்படும்.

இது ஒரு சாதாரண விஷயமல்ல. ரொட்டித்துண்டு, இயேசுவின் சரீரத்துக்கு அடையாளமாக உள்ளது, திராட்சை ரசம் அவர் சிந்திய இரத்தத்திற்கு அடையாளமாக உள்ளது. இந்த இரண்டையும் நீங்கள் உண்டால், இயேசுவின் சரீரமும், இரத்தமும் உங்கள் சரீரத்திற்குள் செல்வதினால், நாமும் அவரைப்போலவே வாழ முயற்சி எடுக்கவேண்டும், இதற்கு பரிசுத்த ஆவியானவர் உதவி புரிவார். இது தான் கிறிஸ்தவர்கள் சபையில் மாதம் ஒருமுறை பின்பற்றுகின்ற "ரொட்டி, திராட்சை ரசம்" பற்றிய சத்தியமாகும்.

இதனை அலட்சியமாக செய்தால், தேவனின் கோபத்துக்கு ஆளாகி, பல துன்பங்களுக்கு ஆளாகவேண்டி வரும் என்றும் பைபிள் எச்சரிக்கிறது.

பார்க்க வசனங்கள்: 1 கொரிந்தியர் 11: 23-31

கேள்வி 159: திருச்சபையில் சிலுவையில் இயேசு தொங்குவது போன்று சிலை வைப்பது சரியா?

பதில் 159: விக்கிரகங்கள், சிலைகள் முக்கியமாக தெய்வ உருவ சிலைகள் பற்றியவைகள் திருச்சபையில் இருக்கக்கூடாது என்பது பைபிளின் கட்டளையாகும்.

தேவனின் 10 கட்டளைகள் மிகவும் தெளிவாக எச்சரித்துள்ளது.

யாத்திராகமம் 20:3-4

3. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.

4. மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான **ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும்** நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்;

ஆனால், கத்தோலிக்க திருச்சபை மக்களுக்கு தவறான போதனை செய்துள்ளது. திருச்சபையில் சிலைகள், உருவப்படங்கள் நம்முடைய ஆராதனைக்கு உதவும் என்று அவர்கள் எண்ணியிருக்கிறார்கள், ஆனால் அது பைபிளுக்கு எதிரான போதனையாகும்.

திருச்சபையில் சிலைவகள்/படங்கள் வைப்பது ஆராதனைக்கு உதவி செய்யாது அதற்கு பதிலாக அவைகள் இடறல்களாக இருக்கும்:

அ) தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிப்பதை அது தடுத்துவிடுகிறது. சிலைகளைப் பார்த்து, அல்லது படங்களைப் பார்த்து ஆராதிப்பது ஆவியோடும் உணமையோடும் ஆராதிப்பதாக அமையாது (பார்க்க: யோவான் 4:23,24).

ஆ) தேவன் எப்படி இருக்கிறார் என்று இதுவரை யாரும் கண்டதில்லை, அவருக்கு எப்படி நாம் உருவத்தை கொடுக்கமுடியும்? மேலும் இயேசுவிற்கும் எப்படி உருவம் கொடுக்கமுடியும்? (பார்க்க யோவான் 1:18). ஆவியாக இருக்கும் தேவனுக்கு உருவத்தை எப்படி கொடுக்கமுடியும்?

காலங்காலமாக, கத்தோலிக்க திருச்சபைகளில், தொண்டு நிறுவனங்களில், ஸ்தாபனங்களில் பிதா, குமாரன், பரித்த ஆவியானவர், மரியாள், யோசேப்பு, தேவதூதர்கள் என்று அவர்களுக்கு தெரிந்த எல்லோருக்கும் சிலைகளையும், ஓவியங்களை வைத்திருக்கிறார்கள். இது பைபிளுக்கு எதிரானது என்று தெரிந்தும் அவர்கள் செய்துக்கொண்டு இருக்கிறார்கள்.

கத்தோலிக்கர்களிடம் இதனை கேட்போமானால், "நாங்கள் சிலைகளை வணங்க வில்லை, ஒரு மரியாதையின் காரணமாக, அவைகளை கனப்படுத்துகிறோம்" என்றுச் சொல்லுவார்கள். சிலைகளுக்கு ஓவியங்களுக்கு மரியாதை செலுத்தி, கனப்படுத்தினாலும் அது தவறு தானே! அது விக்கிர ஆராதனையின் ஒரு பகுதி தானே!

முஸ்லிம்களுக்காக:

நீங்கள் கத்தோலிக்க சபையில் காணும் சிலைகளை கவனத்தில் வைத்துக்கொண்டு, கிறிஸ்தவத்தை எடை போடாதீர்கள். பைபிளில் சொல்லப்பட்டதற்கு எதிராக யாராவது நடந்துக்கொண்டால் அதற்கு கிறிஸ்தவத்தை குற்றப்படுத்தமுடியாது.

கேள்வி 160: ஒருவர் கிறிஸ்துவை பின்பற்ற விரும்பினால், ஏன் அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறீர்கள்?

பதில் 160: ஞானஸ்நானம் என்பது, இறைவன் பற்றிய “ஞானம்” வந்த பிறகு எடுக்கப்படும் “ஸ்நானம்” சத்தியத்தையும் அறிவீர்கள், அந்த சத்தியமே உங்களை விடுதலையாக்கும் என்பது தான் இயேசுவின் கூற்று..

நாம் பழைய வாழ்க்கையை விட்டு புதிய வாழ்க்கையை வாழ தெரிவு செய்தோம் என்று காட்டக்கூடிய ஒரு அடையாளம் ஆகும். நம்முடைய பழைய வாழ்க்கையை தண்ணீருக்குள் விட்டுவிட்டு, சரீர அழுக்குகளை கழுவுவது போன்று மன அழுக்குகளை கழுவிவிட்டு, ஒரு புதிய மனிதனாக மாறுவதைத் தான் இது காட்டுகின்றது.

ஞானஸ்நானம் ஒரு மத சடங்கு அல்ல, இது மனமாற்றத்தின் அடையாளம்.

II கொரிந்தியர் 5:17

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.

பொது மொழிப்பெயர்ப்பு

17 எவராவது கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவன் புதிதாகப் படைக்கப்பட்டவனாகிறான். பழையவை மறைந்தன. அனைத்தும் புதியவை ஆயின.

எடுத்துக்காட்டுகாகச் சொல்வதென்றால், திருமணத்தின் போது, சிலர் தாலி கட்டுகிறார்கள், சிலர் மோதிரம் மாற்றுகிறார்கள், உடன்படிக்கைச் செய்கிறார்கள், அதாவது திருமணம் புரிகின்ற தம்பதிகள் ஒரு புதிய உறவு முறைக்குள் நுழைவதினால், அடையாளமாக திருமண நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

இது போலவே, ஞானஸ்நானம் என்பது ஒரு மனிதன் ஒரு புதிய குடும்பத்துடன் இணைகிறான், தேவனுடைய பிள்ளையாக மாறுகின்றான், பழையவைகளை விட்டுவிட்டு (தண்ணீருக்குள்), புதியவைகளை தரித்துக்கொள்கின்றான். இதனை அடையாளப்படுத்துவதற்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படுகின்றது.

ஞானஸ்நானம் (திருமுழுக்கு) பற்றி இன்னும் அனேக சத்தியங்கள் பைபிளில் சொல்லப்பட்டுள்ளது, அவைகளை நீங்கள் தனியாக படித்துக்கொள்ளலாம் அல்லது ஒரு போதகரிடம் கேட்டு தெரிந்துக்கொள்ளுங்கள்.

அல்லாஹ் கொடுக்கும் ஞானஸ்நானம்:

குர்ஆனிலும் ஞானஸ்நானம் பற்றி ஒரு வசனம் உள்ளது என்பதை அறிவீர்களா?

ஸூரா 2:138

2:138. "(இதுவே) அல்லாஹ்வின் **வர்ணம்(ஞான ஸ்னானம்)** ஆகும்; வர்ணம் கொடுப்பதில் அல்லாஹ்வைவிட அழகானவன் யார்? அவனையே நாங்கள் வணங்குகிறோம்" (எனக் கூறுவீர்களாக).

சுருக்கமாக ஒருவரியில் சொல்வதென்றால், ஒருவர் ஒரு பெரிய முடிவு எடுக்கும் போது, அந்த முடிவின் அடையாளமாக ஞானஸ்நானம் கொடுக்கப்படுகின்றது.

கேள்வி 161: முஸ்லிம்கள் அல்லாஹ்வின் பெயரில் அறுத்த (ஹலால்) கறியை கிறிஸ்தவர்கள் உண்ணலாமா?

பதில் 161: இந்த கேள்வியை கேட்பவர் ஒரு கிறிஸ்தவர் என்று நினைக்கிறேன்! இந்த கேள்வியை கேட்பதற்கு முன்பு, உங்கள் மனதைத் தொட்டு உண்மையைச் சொல்லுங்கள், "இதுவரை நீங்கள் முஸ்லிம்களின் கசாப்பு கடையில் ஒருமுறையும் மாமிசம் வாங்கவில்லையா?".

இயேசுவின் கூற்றுப்படி, வாயிக்குள் போவது மனிதனை குற்றப்படுத்தாது, வாயிலிருந்து (மனதிலிருந்து) வெளியே வருவது தான் அவனை குற்றப்படுத்தும். எனவே உணவு பற்றி எந்த ஒரு குற்ற உணர்வும் இல்லாமல் நீங்கள் சாப்பிடலாம்.

இதைப் பற்றி மேலும் ஆழமாக அறிய கீழ்கண்ட மூன்று கட்டுரைகளை படிக்கவும்:

- **விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டது கிறிஸ்தவர்களுக்கு ஹலாலாகுமா? ஹராமாகுமா?**
- **கிறிஸ்தவத்தில் ஹலால், ஹராம் என்பவைகள் உண்டா?**
- **நான் கிறிஸ்தவத்தை தழுவியுள்ளேன் - உணவு விஷயத்தில் 'ஹலால் ஹராம்' பற்றி கிறிஸ்தவம் என்ன சொல்கிறது?**

கேள்வி 162: மற்ற மதங்கள் தங்கள் மதங்களை பரப்பாத போது ஏன் கிறிஸ்தவர்கள் மட்டும் அதிகமாக பரப்புகிறார்கள்?

பதில் 162: இந்த கேள்வியை ஒரு முஸ்லீம் கேட்கக்கூடாது. ஏனென்றால் முஸ்லிம்களும் மார்க்கத்தை பரப்ப வேண்டும் என்று இஸ்லாம் சொல்லுகிறது.

இந்த கேள்வியை ஒரு ஹிந்து சகோதரர் கேட்டார் என்று எண்ணி பதில் எழுதுகிறேன்.

கிறிஸ்தவத்தைப் பரப்புதல் என்றால் என்ன? இயேசுவின் நற்செய்தியை உலகிற்கு எடுத்துச் சொல்வதாகும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தான் பெற்ற

இன்பத்தை தனக்குச் சொல்லப்பட்ட நற்செய்தியை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

இயேசு நமக்கு கொடுத்த பிரதானமான கட்டளையும் இதுதான்.

மத்தேயு 28:19-20

19. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் **சகல ஜாதிகளையும் சீஷராக்கி**, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,
20. நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி **அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்**; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.

1) நற்செய்தி அறிவிப்பது, அன்பின் வெளிப்பாடாகும்:

நம்மை நாம் நேசிப்பது போன்று பிறரையும் நேசிக்கவேண்டும் என்று இயேசு கட்டளை கொடுத்திருக்கிறார். நாம் அன்பு உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று பைபிள் சொல்கிறது. ஒரு அருமையான நற்செய்தி நம்மிடம் இருக்கும் போது, அதை மூடி மறைக்காமல் மற்ற மக்களுக்கும் சொல்வதுதான் அன்பின் வெளிப்பாடு. எனவே இயேசு பற்றிய அச்செய்தியை ஒரு கிறிஸ்தவன் பறைசாற்றுகின்றான், என்று சொன்னால் அவன் தன் அன்பை வெளிக்காட்டுகிறான் என்று அர்த்தம். அவன் மதத்தை பரப்புகிறான் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது.

கிறிஸ்தவர்கள் மதத்தை பரப்புகிறார்கள் என்று மற்றவர்கள் குற்றம்சாட்டுகிறார்கள். ஆனால் கிறிஸ்தவர்களைப் பொருத்தமட்டில் அவர்கள் அன்பு செலுத்தி, நற்செய்தியை சொல்கிறார்கள்.

செல்வ செழிப்புடன் வாழும் கிறிஸ்தவர்கள் இயேசுவின் மீது வைத்த அன்பின் காரணமாக தங்கள் வீடுகள் நாடுகளை விட்டு ஆப்பிரிக்கா காடுகளிலும் கிராமங்களிலும் சென்று ஏன் இயேசுவை பற்றி சொல்ல வேண்டும்? எய்ட்ஸ் நோயாளிகள், மற்றும் இதர நோயாளிகள் உள்ள அப்படிப்பட்ட கிராமங்களில் ஏன் சென்று ஊழியம் செய்ய வேண்டும்? உண்மையாக மதத்தைப் பரப்ப வேண்டும் என்றால், பட்டணங்களில் சொகுசு வாழ்வு வாழ்ந்து கொண்டு அந்த காரியத்தை செய்யலாமே? ஏன் ஆபத்தான இடங்களுக்கு சென்று தங்கள் உயிர்களை தியாகம் செய்து கிறிஸ்தவர்கள் இயேசுவைப் பற்றி சொல்லுகிறார்கள்? இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் பதில்களைத் தேடும் போது, நமக்கு கிடைக்கும் பதில், அன்பு என்பது மட்டும்தான்.

இதைப்பற்றி மேலும் அறிய ஆங்கில கட்டுரையை படிக்கவும்: **Why should I evangelize?**

கேள்வி 163: கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் ஏன் வெளிநாடுகளிலிருந்து அதிகமாக பணத்தை வாங்குகிறார்கள்? நீங்களே சொந்தமாக பணம் போட்டு ஊழியம் செய்யமுடியாதா?

பதில் 163: எந்த ஒரு நன்மையை செய்ய வேண்டும் என்றாலும், அதற்கு பணம் தேவை. பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கும் மருத்துவமனைகள் கட்டுவதற்கும், சபைகளை கட்டுவதற்கும் பணம் தேவை. இந்த பணத்தை மக்களிடம் இருந்து தான் பெற வேண்டும். சிலவேளைகளில், வெளிநாடுகளிலிருந்து பணத்தைப் பெறவேண்டி இருக்கும்.

நம் நாட்டிலேயே நமக்குள் நாமே பணத்தைப் போட்டு இப்படிப்பட்ட ஊழியங்களைச் செய்ய முடியும், இப்படிப்பட்ட ஊழியங்களும்இருக்கின்றன. அதே வேளையில் வெளிநாடுகளில் இருந்தும் உதவிகள் பெற்று செயல்படும் மருத்துவமனைகளும், ஊழியங்களும் இருக்கின்றன. வேலூர் CMC போன்ற மருத்துவமனைகள் மிஷினரி ஸ்தாபனங்களை நாம் கவனிக்கும் போது அதற்கு தேவையான பெரும் தொகை இந்தியாவிலிருந்து சேகரிக்க வேண்டும் என்றால் இது கடினம் தான். எனவே வெளிநாடுகளிலிருந்தும், உள் நாடுகளிலிருந்தும் உதவி பெற்று ஊழியம் செய்வதும் நன்மை செய்வதும் தவறு இல்லை.

இன்னொரு முக்கியமான விஷயத்தையும் சொல்லிவிடுகிறேன், ஆஃப்ரிக்காவில் உள்ள சில நாடுகளுக்கும், இலங்கை போன்ற நாடுகளுக்கும் நம் இந்திய நாட்டிலிருந்து உதவிகள் செல்கின்றன என்ற விவரம் உங்களுக்குத் தேரியுமா?

இதர மதசார்பற்ற தொண்டு ஸ்தாபனங்கள் கூட வெளிநாட்டு உதவியுடனும், உள்நாட்டு மக்களின் உதவியுடனும் தான் நடைபெறுகிறது.

கேள்வி 164: கிறிஸ்தவ ஊழியர்களில் பெரும்பான்மையானவர்கள் பண விஷயத்தில் ஏமாற்றுகிறார்கள் என்று நான் நினைக்கிறேன், இது சரியா?

பதில் 164: இந்த கேள்விக்கான பதிலை படிப்பதற்கு முன்பு முந்தைய கேள்விக்கான பதிலை படித்து விடுங்கள். ஆம், கிறிஸ்துவ ஊழியர்களில் சிலர் (பெரும்பான்மையானவர்கள் அல்ல) பணவிஷயத்தில் நேர்மையாக இல்லாமல் இருப்பதை நாம் காண முடியும். இதற்காக எல்லா ஊழியர்கள் மீதும் குற்றம் சுமத்த முடியாது. இயேசுக்கு உண்மையாக ஊழியம் செய்பவர்கள், பண ஆசை இல்லாமல் ஊழியம் செய்பவர்கள் இருக்கிறார்கள்.

பணத்தை தவறாக கையாளுகிறவர்களை அரசாங்கம் தண்டிக்க வேண்டும். கிறிஸ்தவ ஊழியர்கள் என்று பெயர் போட்டு கொண்டு, மக்களை ஏமாற்றுகிற சில ஓநாய்களை கண்டுபிடித்து சட்டம் தண்டிக்க வேண்டும். இப்படிப்பட்டவர்களின் மூலம் இயேசுவிற்கும் கிறிஸ்தவத்திற்கும் அவ பெயர் வருகிறது.

சட்டம் மட்டும் அல்ல, விசுவாசிகளும் தங்களுடைய பணத்தை ஞானமாக கையாளவேண்டும். ஊழியத்திற்கு கொடுக்கிறேன், இயேசுவின் சுவிசேஷம் உலகம் அனைத்திற்கும் செல்வதற்கு உதவியாக இருக்கிறேன் என்று நம்பி, சில தீய ஊழியர்களின் கையிலே பணத்தைக் கொடுத்து விசுவாசிகள் ஏமாறக்கூடாது.

கிறிஸ்தவர்கள் தாங்கள் சம்பாதித்த பணத்தில் ஒரு பகுதியை சபையை தாங்குவதற்கும், மிஷினரி ஊழியம் செய்வதற்கும், சமுதாயத்துக்கு தொண்டு செய்வதற்கும் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கும்போது, தீயவர்கள் கையிலே அந்தப் பணம் செல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பண ஆசை பிடித்த சில ஊழியர்கள் உருவாவதற்கு, கேள்வி கேட்காமல் பணத்தை அவர்கள் கையிலே கொடுக்கும் கிறிஸ்தவர்களும் குற்றவாளிகள்தான்.

ஒரு பாஸ்டரின் கையிலே தசம பாகத்தையும் காணிக்கையும் கொடுக்கும் விசுவாசிக்கு அந்த பணத்தை எதற்காக எப்படி செலவு செய்கிறேன் என்ற சான்றுகளை இந்த பாஸ்டர் விசுவாசிகளுக்கு கொடுக்க வேண்டும். பணத்தை வாங்கிக்கொண்டு, கொடுக்குற வரைக்கும் தான் உன் கடமை, பிறகு கேள்வி கேட்காதே கணக்கு கேட்காதே, என்று யாராவது உங்களிடம் சொன்னால், அவர் உங்களை ஏமாற்றுகிறார் என்று அர்த்தம். அவருடைய பிள்ளைகளுக்கும் அவர்களின் பிள்ளைகளுக்கும் தேவையான சொத்துக்களை உங்கள் பணத்தின் மூலம் அவர் சேகரித்துக் கொண்டிருக்கிறார் என்று அர்த்தம். இப்படி நான் சொல்லுகிறேன் என்பதனால், எல்லா ஊழியர்களையும் குற்ற படுத்துகிறேன் என்று அர்த்தமில்லை. ஒரு சில ஊழியக்காரர்கள் இப்படி பண ஆசை பிடித்து இருக்கிறார்கள் என்பதை மட்டும் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

கிறிஸ்தவர்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், கணக்கு கேட்க வேண்டும். இப்படி நாம் கேட்டால் கிறிஸ்துவத்திற்கு கெட்ட பெயரை கொண்டுவரும் ஊழியர்கள் எழும்புவது குறைந்துவிடும். மேலும் மற்றவர்கள் கிறிஸ்துவத்தை குறைகூறும் நிலையும் ஏற்படாது.

ஒரு கடைசி குறிப்பு, பணத்தை தவறாக பயன்படுத்துகிறவர்கள் எல்லா மதத்திலும் இருக்கிறார்கள், ஆனால் கிறிஸ்துவம் மட்டும் ஏன் இப்படி செய்திகளில் அதிகமாக வருகிறது? என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மற்றவர்களை குற்றப்படுத்துவதைக் காட்டிலும், நம்மிடத்தில் இருக்கிற குறைகளை சரி செய்வது தான் சரியான தீர்வு என்பதை நாம் மறக்கக் கூடாது.

கேள்வி 165: நான் ஒரு கிறிஸ்தவன், ரமளான் என்றால் இஸ்லாமியர்களின் பண்டிகை என்று எனக்குத் தெரியும், ஆனால் அதற்கு மேலாக ஒன்றும் தெரியாது. ரமளான் என்றால் என்ன? சிறிது விளக்கமுடியுமா?

பதில் 165: முஸ்லிம்கள் கொண்டாடும் பண்டிகைகளில் முக்கியமானவைகள் இரண்டு பண்டிகைகளாகும், அவை: ரம்ஜான் மற்றும் பக்ரீத் என்பவைகளாகும்.

சிலர் "ரமலான்" என்று அழைப்பார்கள், வேறு சிலர் "ரமளான்" என்றும், "ரமழான்/ரமதான்" என்றும் அழைப்பார்கள். நாம் இந்த கட்டுரையில் "ரமளான்" என்று பயன்படுத்துகிறோம்.

இஸ்லாமிய காலண்டர் சந்திரனின் சுழற்சியை அடிப்படையாகக் கொண்டது. இஸ்லாமியர்களின் மாதங்களில் ஒன்பதாவது மாதம் தான் ரமளான் எனப்படுகின்றது.

இஸ்லாமிய மாதங்களின் பெயர்கள் இவைகளாகும்:

1) முஹர்ரம், 2) ஸபர், 3) ரபியுல் அவ்வல், 4) ரபியுல் ஆஹிர், 5) ஜமாத்திலவ்வல், 6) ஜமாத்திலாஹிர், 7) ரஜப், 8) ஷஃபான், 9) ரமளான் (ரமலான்), 10) ஷவ்வால், 11) துல்காயிதா, 12) துல்ஹஜ்

ரமளான் என்றுச் சொல்லும் போது, எல்லாருக்கும் ஞாபகம் வருவது "நோன்பு" ஆகும். இந்த மாதம் முழுவதும் முஸ்லிம்கள் 30 நாட்கள் நோன்பு இருப்பார்கள்.

நோன்பு – இஸ்லாமிய கட்டாய கடமை

இஸ்லாமியர்கள் கடைபிடிக்கவேண்டிய முக்கியமான ஐந்து கடமைகளில் (இஸ்லாமிய தூண்களில்) ரமளான் மாதத்தில் நோன்பு இருக்கவேண்டும் என்பதும் ஒரு கடமையாகும்.

இந்த ரமளான் மாதத்தில் முப்பது நாட்கள் நோன்பு இருந்துவிட்டு, அதன் பிறகு பண்டிகையை முஸ்லிம்கள் கொண்டாடுவார்கள்.

கேள்வி 166: கிறிஸ்தவர்களின் உபவாசம் தான் ரமளான் நோன்பா? இவ்விரண்டிற்கும் இடையே இருக்கும் வித்தியாங்கள் என்ன?

பதில் 166: இஸ்லாமுடைய ரமலான் நோன்பும் இயேசு கிறிஸ்து கற்றுக்கொடுத்த நோன்பும் அல்லது உபவாசமும் ஒன்றல்ல. இவ்விரண்டுக்கும் இடையே பல வித்தியாசங்கள் உள்ளன.

இஸ்லாமிய நோன்பிற்கும், கிறிஸ்தவ நோன்பிற்கும் இடையே இருக்கும் வித்தியாசங்கள்:

1. இஸ்லாமிய நோன்பு என்பது இஸ்லாமிய கடமைகளில் ஒரு கடமையாகும். அதை தகுந்த காரணங்கள் இல்லாமல் மீறுவது இஸ்லாமிய சட்டத்தின் படிகுற்றமாகும். ஆனால், கிறிஸ்தவத்தில் நோன்பு (உபவாசம்) என்பது

நிச்சயமாக கடைபிடிக்கவேண்டிய கடமையல்ல. நம்முடைய தேவையைபொருத்து நாம் கடைபிடிக்கலாம். பழைய ஏற்பாட்டு காலத்தில் ஒரு ஆபத்து வந்தாலோ, யாராவது மரித்துவிட்டாலோ யூதர்கள் உபவாசம் இருப்பார்கள். யூதர்களுக்கு மோசேயின் மூலமாக ஒரு குறிப்பிட்ட நாளில் உபவாசம் இருக்கும்படி கூறப்பட்டுள்ளது.

2. **இஸ்லாமிய நோன்பு என்பது** அதிகாலை ஆரம்பித்து, சூரியன் அஸ்தமிக்கும்வரை தொடருகிறது, ஆனால், கிறிஸ்தவ உபவாசம் என்பது நாள்முழுவதும் தொடரும். இத்தனை மணிக்கு ஆரம்பித்து, இத்தனை மணிக்குமுடிக்கவேண்டும் என்ற நிபந்தனை இல்லை. பழைய மற்றும் புதியஏற்பாட்டில் நாள் முழுவதும் உபவாசம் இருந்ததாக அனேகஎடுத்துக்காட்டுகளை காணலாம். இதுமட்டுமல்லாமல், யூதர்கள் தனிப்பட்ட ஒரு நாள் உபவாசம் இருக்கும் போது, ஒரு நாளின் மாலையில் ஆரம்பித்து மறுநாள் மாலைவரை இருப்பார்கள் (முழு நாள்).

3. **இஸ்லாமில் வருடத்திற்கு** ஒரு முறை ரமளான் மாதத்தில் 30 நாட்கள்நோன்பு இருக்கவேண்டும் என்பது கட்டளை, ஆனால், கிறிஸ்தவத்திலே வருடத்தின் இந்த குறிப்பிட்ட மாதம் இத்தனை நாட்கள் நோன்புஇருக்கவேண்டும் என்ற கட்டளையில்லை. அவரவருக்கு விருப்பமான நாட்களில், விருப்பமான எண்ணிக்கையில் உபவாசம் இருப்பார்கள்.

4. **இஸ்லாமிய நோன்பில்,** அதிகாலையில் எழுந்திருந்து, சாப்பிடுவார்கள்,கிறிஸ்தவத்திலே இப்படி அதிகாலையில் எழுந்து சாப்பிடும்கட்டளையில்லை.

5. **முக்கியமாக, இஸ்லாமிலே ஒரு** குறிப்பிட்ட மாதம் ஒதுக்கி ரமளான்நோன்பு இருப்பதினால், எல்லாருக்கும் இவர் நோன்பு இருக்கிறார் என்பது தெரியவரும். ஆனால், கிறிஸ்தவத்தில் ஒருவன் உபவாசம் இருக்கிறேன்என்று சொன்னால் தவிர வெளியே தெரிய வழியில்லை. இஸ்லாமியர்களின் ரமளான் நோன்பு மத்தேயு 6ம் அதிகாரத்தில் இயேசுசொன்ன அறிவுரைக்கு எதிராக இருக்கிறது. அதாவது வெளிப்படையான ஒன்றாக இருக்கிறது.

6. **இஸ்லாமிய ரமளான் நோன்பு** என்பது இஸ்லாமிய கடமைகளில் ஒன்றாக இருப்பதினால், ஒருவேளை நோன்பு வைக்கமுடியாதவர்கள் அதற்கானபரிகாரங்கள் செய்யவேண்டும். ஆனால், கிறிஸ்தவ உபவாசத்தில் இப்படிப்பட்ட பரிகாரங்கள் ஒன்றுமில்லை.

7. **ரமளான் மாதம் நோன்பு** என்றுச் சொல்கிறீர்களே தவிர, மீதமுள்ளமாதங்களில் உணவுக்கு செலவாகும் பணத்தை விட ரமளான் மாதத்தில் அதிகமாக செலவாகும். அதாவது உணவு பணடங்களின் விற்பனையும் இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகமாக ஆகிறது. ஏதோ அதிகாலையிலிருந்து மாலைவரை நோன்பு இருக்கிறார்கள், மீதமுள்ள பாதிநாள் நன்றாக சாப்பிடுகிறார்கள். இப்படி பாதி நாள் நன்றாக சாப்பிடுவதை நான்

தவறு என்றுச் சொல்லவில்லை, ஆனால், இப்படிப்பட்ட வழக்கங்கள் கிறிஸ்தவத்தில் இல்லை என்றுச் சொல்கிறேன், அவ்வளவு தான்.

8. புகாரி ஹதீஸில் "ரமளான் மாதத்தில் நம்பிக்கையுடனும், நன்மையை எதிர்ப்பார்த்தும் நோன்பு நோற்கிறவர்களின் முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன" என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், கிறிஸ்தவத்தில் உபவாசம் இருப்பதினால் நம்முடைய முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும் என்ற கோட்பாடு இல்லை. (புகாரி பாகம் 2, அத்தியாயம் 30,எண் 1901). இயேசுக் கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்து, நம்முடைய பாவங்களை அவர் சிலுவையில் சுமந்து தீர்த்தர் என்பதை நம்பி, மேற்கொண்டு பாவமில்லாத வாழ்க்கையை வாழ நம்மை ஒப்புக்கொடுப்பதினால் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

கேள்வி 167: ஆலயங்களில் கிறிஸ்தவர்கள் செருப்பு அணிந்துக்கொண்டுச் சென்று தொழுதுக்கொள்வது, இறைவனை அவமானப்படுத்துவது ஆகாதா?

பதில் 167: எல்லா தேவாலயங்களிலும் செருப்பு அணிந்து கொண்டு செல்வதில்லை. உதாரணத்திற்கு, இந்திய தேவாலயங்களில் தரையில் உட்கார்ந்து தேவனை ஆராதிக்கும் இடங்களில் செருப்பை வெளியே விட்டு சென்றுதான் ஆராதிக்கிறார்கள். ஆனால் சில நாடுகளில் குளிர் அதிகமாக இருக்கும் பிரதேசங்களில் செருப்பு அணியாமல் இருக்கவே முடியாது, மேலும் கீழே உட்காராமல் பெஞ்சுகளில் உட்கார்ந்து ஆராதனை செய்வதினால் செருப்பை அணிந்து கொண்டு தான் உள்ளே செல்கிறார்கள்.

இது தவறு இல்லை, இது தேவனை அவமானப்படுத்துவதற்கு சமம் இல்லை. தேவன் எல்லா இடங்களிலும் இருக்கின்றார், நாம் வீடுகளில் இருந்தாலும் சாலைகளில் நடந்து சென்றாலும் அங்கும் அவர் இருக்கின்றார் என்று பொருள்.

செருப்பு அணிந்து கொண்டு சில தேவாலயங்களில் சென்று பெஞ்சுகளில் உட்கார்ந்து ஆராதனை செய்வதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அதாவது ஒரு சபையில் ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் ஆராதிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம், அதுவும் பெஞ்சுகளில் உட்கார்ந்து ஆராதிக்கும் போது, அவர்கள் வெளியே செருப்புகளை விட்டு வந்தால், ஆராதனை முடித்துவிட்ட பிறகு வெளியே சென்று தங்கள் செருப்புகளை தேடிக் கொள்வதற்கு அதிக நேரம் செலவாகும். சிறிய சபைகளில் இது சாத்தியப்படலாம் ஆனால் பெரிய சபைகளில் இது சாத்தியப்படாது.

தேவனை ஆராதிக்கும் கிறிஸ்துவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரை ஆராதிக்கிறார்கள். எனவே, செருப்பு அணிந்து கொண்டு பேச்சுக்களில் உட்கார்ந்து ஆராதிப்பது தவறில்லை.

இந்த கேள்வியை முஸ்லிம்கள் கேட்டதனால், இன்னொரு விபரத்தையும் சொல்லி விடுகிறேன். முஸ்லிம்கள் அல்லாஹ்வை தொழும்போது, ஒரே வரிசையில் நின்று, சில குர்ஆன் வசனங்களை சொல்லி, பிறகு குனிந்து மறுபடியும் எழுந்து நின்று, மறுபடியும் உட்கார்ந்து அல்லாஹ்வைத் தொழுது கொள்கிறார்கள். இப்படி பலநிலைகளில் அவர்கள் அல்லாஹ்வை தொழுதுக் கொள்கிறார்கள்.

ஆனால் கிறிஸ்தவ ஆராதனையில், இப்படிப்பட்ட நிலைகள் இருப்பதில்லை. குளிர் பிரதேசங்களில், பல்லாயிரக்கணக்கான மக்கள் இருக்கும் சபைகளில் செருப்புகளை அணிந்து கொண்டு, ஷூக்களை போட்டுக்கொண்டு ஆராதனை செய்வது தவறான காரியமல்ல.

கேள்வி 168: ஆலயங்களில் ஆண்களும் பெண்களும் அருகில் அமர்ந்துக்கொண்டு ஆராதனை/தொழுகை செய்வது சரியானச் செயலா? இப்படி செய்தால் ஆண்களில் மனதில் பாவமான ஆசைகள் வருமல்லவா?

பதில் 168: இந்தக் கேள்வியை முஸ்லிம்கள் தங்கள் மார்க்கம் தங்களது கற்றுக்கொடுத்த, போதனைகளின் படி கேட்கிறார்கள். இஸ்லாமின் படி பெண்கள் போதைப் பொருட்கள் போன்றவர்கள், ஆண்கள் பாவம் செய்வதற்கு பெண்கள் தான் காரணம். எனவே ஆண்களும் பெண்களும் ஒரே அலுவலகத்தில் வேலை செய்வதும், இறைவனை ஆராதனை செய்கிற இடங்களில் ஒன்றாக கூடி ஆராதனை செய்வதும் தவறான செயல் என்று முஸ்லிம்கள் போதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

உண்மையில் இந்த நம்பிக்கை ஆபத்தானதாகும். ஒரு குற்றம் நடந்தால் அதில் ஆணின் பங்கும் இருக்கும். ஆண்கள் தவறுகள் செய்யக்கூடாது என்பதற்காக பெண்களின் முகத்தை மறைப்பதைக் காட்டிலும், ஆண்களுக்கு சுய கட்டுப்பாட்டை கற்றுக்கொடுத்தால் இந்த பிரச்சனைக்கு தீர்வு உண்டாகும்.

இறைவனை தொழுது கொள்ள செல்லுமிடத்தில் தீய எண்ணங்கள் ஒரு ஆணுக்கு வருகிறது என்று சொன்னால், அதற்கு அவன் தான் காரணம். குடும்பமாக சென்று, தாயும் தந்தையும் சகோதரியும் சகோதரனும், சித்தப்பா பெரியப்பா மகனும் மகளும், உறவினர்களும் ஒன்றாக சேர்ந்து ஆராதிக்கும் போது எப்படி ஆண்கள் தீயவைகளை சிந்திப்பார்கள்?

தவறு செய்ய வேண்டும் நினைக்கும் ஆண்கள் திருச்சபையில் மாத்திரமல்ல எங்கும் தவறு செய்வார்கள், குடும்பத்திலும் செய்வார்கள் பள்ளிக்கூடங்களிலும் செய்வார்கள். ஆனால் சுத்தமாக இருக்க வேண்டும் என்றும் சுய கட்டுப்பாட்டுடன் வாழும் ஆண்கள், எந்த இடத்திலும் பரிசுத்தமாக வாழ்வார்கள்.

இதற்கும் சில பேர் வாலிபர்கள் மீது குற்றம் சுமத்தி, வாலிபர்கள் காதல் என்று சொல்லி, காதலில் விழுவதற்கு காரணம், வாலிப பெண்களும் சபைக்கு

வருவதுதான் என்று சொல்லுவார்கள். இது கூட ஒரு சரியான காரணம் இல்லை, நல்ல நோக்கத்துடன் தேவனை ஆராதிக்கும் போது இப்படிப்பட்ட செயல்களை செய்ய வேண்டும் என்று தோன்றாது.

மனிதன் என்று சொன்னால், ஒருசில சதவிகித ஆண்கள் அல்லது பெண்கள், சில காரியங்களில் ஈடுபட்டு விடுவதும் உண்டு. அதற்காக பெண்களை தனியாக பூட்டி வைப்போம் என்று சொன்னால், அது சரியான செயலாக இருக்காது. அது பைபிளின் போதனைகளுக்கு எதிரான செயலாக இருக்கும்.

இயேசு ஊழியம் செய்யும் போது அவருக்கு அனேக பெண்கள் ஊழியம் செய்தார்கள். அப்போஸ்தலர்கள் அதாவது இயேசுவின் சீடர்கள் ஊழியம் செய்யும் போதும், பெண்களும் சேர்ந்து ஊழியம் செய்தார்கள். தேவனை ஆராதிப்பது ஒரு ஆணுக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ, அதே உரிமை பெண்ணுக்கும் உண்டு.

கேள்வி 169: கிறிஸ்தவர்கள் இன்னும் முந்தைய ஜாதிப்பெயர்களை வைத்திருப்பது ஏன்?

பதில் 169: இந்தியாவில் ஆழமாக வேர்விட்டு வளர்ந்துள்ள இந்த ஜாதி என்ற தீயமரம் இன்னும் அடியோடு வெட்டப்படாமல் இருக்கிறது. இந்து மார்க்கத்திலிருந்து இயேசுவை ஏற்றுக்கொள்கின்ற சிலர் இன்னும் தங்களுடைய முந்தைய ஜாதிப் பெயரையே வைத்துக் கொண்டிருப்பது, ஒரு சங்கடமான செய்தியாகும்.

பைபிளில் ஜாதி இல்லை. ஒரே ஆண் பெண்ணிலிருந்து உலக மக்களை இறைவன் படைத்தார்.

ஆனால் இந்தியாவில் மட்டும் முக்கியமாக தமிழ்நாட்டில் இந்த ஜாதி பிசாசை விட்டு மக்கள் வெளியே வராமல் இருப்பதற்கு காரணம், கிறிஸ்தவர்கள் வேதத்தை சரியாக பின்பற்றாமல் இருப்பது தான்.

கடினமான சட்டங்கள் போட்டு மக்களை திருத்தலாம் என்று சொன்னால், அதற்கு பைபிளும் இடம் கொடுப்பதில்லை. ஆன்மீக விஷயத்தில் அரசு செய்கின்ற படி, அல்லது இஸ்லாம் செய்கின்ற படி கடினமான சட்டங்கள் போட்டு மக்களை கட்டாயப்படுத்த பைபிள் அனுமதிப்பதில்லை.

"மனிதனுக்கு சுதந்திரம்" மிகவும் முக்கியமானது என்பதில் கிறிஸ்தவம் திடமாக உள்ளது. இதே சுதந்திரம் தான், மக்கள் சிலருக்கு தாங்கள் விட்டுவந்த தீய ஜாதி பழக்கத்தை விடாமல் பின்பற்றும் படி செய்துள்ளது.

இந்த செயல் பைபிளுக்கு எதிரானது என்பதை இவர்கள் அறியவில்லை. சட்டங்கள் போட்டு இவர்களை சரிசெய்ய முடியாது, சரியான போதனைகள் மூலமும், வேத அறிவின் மூலமும் தான் இதை சரி செய்ய முடியும்.

இதற்காக நாம் கிறிஸ்தவத்தை குற்றம் சாற்றமுடியாது, பைபிள் மீது குற்றம் சுமத்தக்கூடாது. கடினமாக சட்டம் போட்டு, அவன் சுதந்திரத்தை பறிக்க முடியாது. ஆனால் அவனுக்கு நேர்வழியை கற்றுக் கொடுக்கலாம், அன்பாக சொல்லிக் கொடுக்கலாம். இதனை கிறிஸ்தவ சபை ஊழியர்கள் செய்ய வேண்டும்.

கேள்வி 170: கிறிஸ்தவர்கள் ஏன் ஞாயிறு அன்று ஆராதனைச் செய்கிறார்கள்?

பதில் 170: கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை தேவனை ஆராதிக்க வேண்டும் என்று பைபில் கட்டளையிடவில்லை. அதேபோன்று யூதர்கள் சனிக்கிழமை ஆரம்பித்தார்கள், அதை மாற்றி நீங்கள் ஞாயிற்றுக்கிழமை ஆராதியுங்கள் என்றும் பைபிள் சொல்லவில்லை.

ஆதியில் இருந்த கிறிஸ்தவ சபை, வாரத்தின் முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை அன்று ஒன்றாகக்கூடி ஜெபித்தார்கள், ஆராதித்தார்கள்..

அப்போஸ்தலர் 20:7

வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்.

மேலும் சபை மக்களுக்கு செய்ய வேண்டிய உதவிகளுக்காக பணத்தை சேகரித்து வையுங்கள், அதுவும் வாரத்தின் முதல் நாள் நீங்கள் ஒன்றாக சேர்ந்து தேவனை ஆராதிக்க நாளிலே அதை செய்யுங்கள் என்றும் அவர்களுக்கு ஆலோசனை சொல்லப்பட்டது.

1 கொரிந்தியர் 16:2

நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் **அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும்**, தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்.

இது எதைக் காட்டுகின்றது என்றால், ஆதி திருச்சபை இயேசுவின் உயிர்த்தெழுதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை அன்று ஒன்றாக கூடி தேவனை தொழுது இருக்கிறார்கள், சில முக்கியமான தீர்மானங்களை எடுத்திருக்கிறார்கள். எனவே காலப்போக்கில் அந்த நாளிலேயே கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிப்பது ஒரு வழக்கமாக மாறி இருக்கிறது.

இது மட்டுமல்ல, ஒரு குறிப்பிட்ட நாளை சிறப்பாக கொண்டாட வேண்டுமென்று நம் மனதிலே நிர்ணயித்துக் கொண்டால், காலம் நேரம் பார்க்காமல், நல்ல நேரம் கெட்ட நேரம் பார்க்காமல் அந்த நாளிலே காரியங்களை செய்ய பைபிள் நமக்கு அனுமதி கொடுத்திருக்கிறது. எனவே ஞாயிற்றுக்கிழமையில், அதாவது இயேசுவின் உயிர்த்தெழுந்த நாளிலே கிறிஸ்தவர்களாகிய நாங்கள் தேவனை ஆராதித்து கொண்டிருக்கிறோம்.

இன்னும் பல நாடுகளில் உள்ள கிறிஸ்துவர்கள், அந்த நாடுகளில் எந்த நாள் அரசு விடுமுறை நாளாக இருக்குமோ, அந்தநாளில் தேவனை ஆராதிக்கிறார்கள். உதாரணத்திற்கு அரேபிய நாடுகளில் வெள்ளிக்கிழமை அரசு விடுமுறை என்பதால் வெள்ளிக்கிழமை களிலேயே தேவனை ஆராதிக்கிறார்கள். இது பைபிளுக்கு எதிரானதும் கூட அல்ல.

கேள்வி 171: ஆரோக்கத்திற்காக கிறிஸ்தவர்கள் விருத்தசெதனம் செய்துக் கொள்ளலாமா?

பதில் 171: விருத்தசேதனம் என்பது பழைய ஏற்பாட்டில் யூதர்களுக்காக கர்த்தர் கொடுத்த கட்டளையாகும். புதிய ஏற்பாட்டின் படி கிறிஸ்தவர்கள் செய்ய வேண்டிய அவசியமில்லை. கிறிஸ்தவர்கள் இருதயத்தில் விருத்தசேதனம் செய்யப்பட்டவர்கள், சரீரத்தில் அல்ல. எனவே விருத்தசேதனம் கிறிஸ்தவர்களுக்கு கட்டளை இல்லை. விருத்தசேதனம் பற்றிய புதிய ஏற்பாட்டின் நிலைப்பாடு மிகவும் ஆழமாக படிக்கவேண்டிய தலைப்பு ஆகும். இங்கு சுருக்கமாகத்தான் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

ஆரோக்கியத்திற்காக ஒரு கிறிஸ்தவர் விருத்தசேதனம் செய்து கொள்வேன் என்று சொன்னால், அதில் எந்த பிரச்சினையும் இல்லை அவர் செய்து கொள்ளட்டும். இதற்கும் கிறிஸ்தவத்திற்கு எந்த சம்பந்தமும் இல்லை.

கேள்வி 172: கிறிஸ்தவத்தில் கண்திருஷ்டி உண்ட?

பதில் 172: கிறிஸ்தவத்தில் கண்திருஷ்டி என்பது இல்லை. அது ஒரு மூட பழக்க வழக்கமாகும். இஸ்லாமில் கண்திருஷ்டி இருக்கிறது என்று நம்புகிறார்கள், இதனை முஹம்மது கீழ்க்கண்ட புகாரி ஹதீஸில் கூறியுள்ளார்:

5944. அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்: இறைத்தூதர்(ஸல்) அவர்கள் '**கண்ணேறு (திருஷ்டிபடுவது) உண்மைதான்**' என்று கூறினார்கள். மேலும், பச்சை குத்துவதைத் தடை செய்தார்கள்

இதை ஏன் நான் மூடப்பழக்கவழக்கம் என்று சொல்கிறேன் என்றால், ஒருவர் மற்றவர் மீது கண் திருஷ்டி வைத்தால், அந்த அடுத்தவருக்கு அதன் மூலமாக தீமை உண்டாகும் என்றால்,

- இந்த தீமையை செய்பவன் யார்?
- இந்த தீமை செய்யப்படும்போது, அவனைப் படைத்த இறைவன் என்ன செய்து கொண்டிருக்கிறான்?
- ஒரு நேர்மையான நல்ல மனிதருக்கு எதிராக, ஒரு தீய மனிதன் கண் திருஷ்டி வைத்தால், அதனால் அவனுக்கு தீமை உண்டாகும் என்று சொன்னால், இதில் ஏதாவது நியாயம் இருக்கிறதா?
- இப்படி ஒரு நீதிமானுக்கு ஒரு தீய மனிதன் தீமை செய்யும் போது, அதைப் பார்த்துக்கொண்டு இறைவன் ஏன் சும்மா இருந்தான் எந்த கேள்வி எழுகின்றது?
- இதற்கெல்லாம் இஸ்லாத்தில் பதில் இல்லை?

இந்த கண் திருஷ்டியை கண்டு ஹிந்து உலகம் அப்படியே பயந்து போயுள்ளது? இது ஒரு வீணான பயம் என்பதை இவர்கள் அறியார்கள்?

ஒருவரைப் பார்த்து இன்னொருவர் நீ அழகாய் இருக்கிறாய் என்று சொல்வதும், அவர்கள் மீது கண் திருஷ்டி வைப்பதோ உண்மையாக இருந்தால், சினிமாவில் கதாநாயகனாக கதாநாயகியாக இருக்கும் ஒவ்வொருவரும் எப்போதும் பல தீமைகளுக்கு ஆளாகியிருப்பார்கள்? இவர்களின் அழகையும் நடிப்பையும் பார்த்து கண் வைக்காதவர்கள் சினிமா பார்ப்பவர்களில் யார் இருக்கிறார்கள்? கோடிக்கணக்கான மக்கள் இவர்களின் மீது கண் திருஷ்டி வைக்கிறார்கள், இருந்தபோதிலும் மிக நீண்ட ஆயுளோடு சினிமா நடிகர்கள் நடிகைகள் வாழுகிறார்கள். இவர்கள் மீது கண் திருஷ்டி இல்லையா?

எனவே, மேற்கண்ட கேள்விகளுக்கு இஸ்லாமிடமும், இந்துக்களிடமும் பதில்கள் இல்லை. அதனால் தான் சத்தியமார்க்கமாகிய கிறிஸ்தவம் நம்புவதில்லை.

கேள்வி 173: கிறிஸ்துவத்தில் விதி என்ற கோட்பாடு உண்டா?

பதில் 173: முதலில் ஒரு வரியில் பதில் சொல்லி விடுகிறேன், அதாவது பைபிளின் படி விதி என்பது இல்லை, கிறிஸ்தவம் விதியை நம்புவதில்லை.

பொதுவாக விதி என்றால், மனித கட்டுப்பாட்டுக்கு அப்பால், நாம் முயன்றாலும், நம்மால் செய்ய முடியாது ஒன்று தான் விதி என்று நம்பப்படுகிறது.

அதாவது நம்முடைய வாழ்க்கையில் இந்த ஒரு நிகழ்ச்சி நடந்த தீருமென்று ஏற்கனவே இறைவன் முடிவு செய்து விட்டால், அதை மாற்றுவதற்கு நான் ஏன்

முயல வேண்டும், அதுதான் மாறப்போவது இல்லையே என்ற நம்பிக்கை தான் விதி என்று சொல்லப்படுகிறது. இதனை கிறிஸ்துவம் ஏற்றுக் கொள்வதில்லை.

இஸ்லாமும் இந்துத்துவமும் இந்த விதி என்ற கோட்பாட்டை ஆழமாக நம்புகிறது. இஸ்லாமின் படி நீங்கள் எதை செய்தாலும் எந்த பாடுபட்டாலும் உங்கள் வாழ்க்கையில் அல்லாஹ் எதை முடிவு செய்து வைத்திருக்கின்றானோ, அதுதான் நடக்கும். எனவே அவனை நம்பி முழுவதுமாக அவர் மீது சார்ந்து விடுங்கள். இதேபோலத்தான் இந்து மார்க்கத்திலும் விதியினால் பல காரியங்கள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்தியாவில் வேரூன்றி இருக்கின்ற ஜாதி என்ற நிலைக்கு இந்துத்துவம் சொல்லும் விதியும் ஒரு காரணமாகும்.

விதி என்ற தலைப்பு, மிகவும் ஆழமான தலைப்பு. ஏன் பைபிள் இதை ஒப்புக் கொள்ளவில்லை, என்பதை அறிய கீழ்க்கண்ட கட்டுரையை இப்போதைக்கு படித்துக்கொள்ளுங்கள், தேவைப்பட்டால், இந்த விவரங்களை வேறு ஒரு கேள்வியில் காண்போம்.

What does the Bible say about fate / destiny?

கேள்வி 174: கிறிஸ்தவர்கள் தேவனை தொழுதுக்கொள்ளும் போது ஏன் பாடல்கள் பாடுகிறார்கள், இசைக்கருவிகளை இசைக்கிறார்கள்? இதனை பைபிள் அனுமதிக்கிறதா?

பதில் 174: ஆம் இசைக்கருவிகளை இசைத்து, தேவனை புகழ்ந்து பாடி அவரை ஆராதிப்பதை பைபிள் அனுமதிக்கிறது.

எபேசியர் 5:19. **சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும்** ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி,

மத்தேயு 26:30. அவர்கள் **ஸ்தோத்திரப்பாட்டைப் பாடின பின்பு**, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

இயேசுவும் ஸ்தோத்திரபாடலைப் பாடி அதன் பிறகு கெத்சமெனே தோட்டத்திற்கு கடந்துச் சென்றார்.

1. தேவனை பாடுவதற்கென்றே ஒரு புத்தம் (150 பாடல்கள்/அத்தியாயங்கள் கொண்ட புத்தகம்) உள்ளது.
2. தேவனுடைய ஆலயத்தில் பாடல்கள் பாடவும், இசைக்கருவிகளை இசைக்கவும், சாலொமோன் அரசன் பலரை நியமித்து இருந்தார்.

3. தாவீது ராஜாவோ, தேவனுடைய உடன்படிக்கை பெட்டிக்கு முன்பாக நடனமாடி, பாடிக்கொண்டுச் சென்றார்.

எனவே, ஆராதனைகளில் பாடல்கள் பாடுவதும் அருவிகள் இசைப்பதும் அனுமதிக்கப்பட்டது.

ஆனால் ஊழியர்கள் இதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், வெறும் பாடல் பாடுவதும் இசைக் கருவிகளை மீட்டுவது மட்டும்தான் ஆராதனை அல்ல, தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்வதும் தான் ஆராதனை.

இந்த 21 ஆம் நூற்றாண்டு காலத்தில், கிறிஸ்துவ பாடல்கள் பாடகர்கள் அதிகமாகி விட்டார்கள். ஆகையால் பைபிளின் சத்தியத்தை மாற்றாமல் எழுதப்படுகின்ற நல்ல பாடல்களை சபையில் அனுமதிக்க வேண்டும்.

இஸ்லாமியர்களும் ஜபூரும்:

தாவீது அரசனுக்கு அல்லாஹ் ஜபூர் என்ற ஒரு வேகத்தை கொடுத்தான், என்று நம்புகின்ற முஸ்லிம்கள், தாங்கள் அல்லாஹ்வைத் தொழுது கொள்ளும் போது, பாடல்கள் இல்லாமல் தொழுதுக் கொள்கிறார்கள். ஜபூர் என்றால் அது சங்கீதங்கள் அடங்கிய புத்தகம் என்பதை முஸ்லிம்கள் அறிய வேண்டும்.

இஸ்லாமில் இசைக்கு இடமில்லை. தங்கள் இறைவன் தாவீது என்ற தீர்க்கதரிசிக்கு பாடல்களை ஒரு சிறப்புத் தகுதியாக கொடுத்திருந்தான். ஆனால் அதே பாடல்கள் இன்று முஸ்லிம்கள் பாட விரும்புவதில்லை. இந்த கேள்வியை முஸ்லிம்கள் தங்கள் அறிஞர்களிடம் கேட்டு பதில் சொல்லவேண்டும்? குறைந்தபட்சம் முஸ்லிம்கள், அல்லாஹ் கொடுத்த ஜபூர் புத்தகத்தில் அல்லாஹ்வை புகழ்ந்து பாடிய பாடல்களையாவது பாடி மகிழலாம்.

கேள்வி 175: ஒரு நல்ல கிறிஸ்தவ பாடகர், ஊழியர் திடீரென்று கள்ள உபதேசம் செய்கின்றவராக மாறிவிட்டார் என்று வைத்துக்கொள்வோம்? அவர் பாடலை நம் சபைகளில் பாடலாமா?

பதில் 175: இந்த காலத்தில், இந்த கேள்வி மிகவும் முக்கியமான கேள்வி. தமிழ்நாட்டில் அனேக பாடகர்கள் இருக்கிறார்கள். கர்த்தருடைய பாடல்களை அருமையாக எழுதுகிறார்கள் மற்றும் பாடுகிறார்கள். அந்தப் பாடல்களில் சத்தியமும் உள்ளது, அவைகள் பைபிளுக்கு எதிராகவும் இல்லை. ஆனால் அந்த பாடலை பாடி எழுதியவர், பிரசங்கம் செய்யும் போது பல தவறான உபதேசங்களை போதித்துக் கொண்டிருக்கிறார் என்று காண்கிறோம்.

இப்பொழுது நமது கேள்வி, இப்படிப்பட்டவர் உடைய பாடலை நம் ஆராதனைகளில் பாடலாமா?

இதற்கு என்னுடைய தனிப்பட்ட பதிலைக் கேட்டால், சபை ஊழியர்கள் இப்படிப்பட்ட பாடகர்கள் பாடுகின்ற பாடலை தங்கள் சபையில் பாடாமல் இருப்பது நல்லது. ஏனென்றால், அவர் எழுதிய பாடலில் சத்தியம் இருக்கிறது, ஆனால் அவருடைய வாழ்க்கையில் சாட்சி இல்லை, தவறான உபதேசங்களை செய்கின்றார்.

யார் வேதத்திற்கு புறம்பாக போதனை செய்கிறாரோ, அவருடைய பாடல்கள் நமக்கு எதற்கு?

ஒரு வேளை இப்படிப்பட்ட பாடல்களை, சபையில் அனுமதித்தால், சபை விசுவாசிகள் மத்தியில் குழப்பங்கள் வரும். சிலர் சரியானது என்று சொல்வார்கள், சிலர் இது தவறு என்று சொல்வார்கள்.

எனவே, உண்மையாகவே அந்த பாடல்கள் நன்றாக இருந்தாலும், தேவனுடைய மகிமையை உயர்த்துவதாக இருந்தாலும், அந்த ஊழியர் தவறான உபதேசத்தைக் போதிக்கின்றபடியினால், அவருடைய பாடல்களை பாடாமல் இருப்பதே நல்லது.

கள்ள உபதேசக்காரர்களின் பாடல்களை நாம் அங்கீகரித்தால், அவருடைய உபதேசத்தையும் நாம் மறைமுகமாக ஏற்றுக்கொள்வது போல ஆகிவிடும். இதனால் சில விசுவாசிகள் குழப்பமடைய வாய்ப்பு இருக்கிறது.

தேவனுடைய ஆராதனையை பொருத்தவரையில், உண்மையும் சத்தியமும் உள்ளவர்களாக ஆராதிக்க வேண்டும். குழப்பத்திற்கு ஒரு சதவிகிதம் கூட இடம் கொடுக்கக் கூடாது. எனவே, தவறான உபதேசம் செய்கின்றவர்களின் பாடல்கள் சபைக்குத் தேவையில்லை.

கேள்வி 176: ஆங்கில பாணியில், பழமையான தமிழில் பாடப்பட்ட பழைய பாடல்கள் இன்று சபைக்குத் தேவையா?

பதில் 176: சில சபைகளில் இன்னும் பாரம்பரிய பாடல்களை பாடிக்கொண்டு இருக்கிறோம். இதுமட்டுமல்ல, நம்முடைய முன்னோர்களே எழுதிய தமிழ் பாணியில் அமைந்த பாடல்களையும் பாடிக்கொண்டு இருக்கிறோம். அப்படிப்பட்ட பாடல்கள் தேவையா இல்லையா? என்பது ஒரு பக்கம் இருந்தாலும், அந்த பாடல்களை சபையில் ஆராதனைகளில் இன்று பாடப்படும் போது, கீழ்கண்ட கேள்விகளுக்கு பதில்களை நாம் தேடவேண்டும்:

1) பழைய பாடல்கள் சபையில் உள்ளவர்களுக்கு புரிகின்றதா?

2) நம்முடைய வாலிபர்களுக்கு பழைய தமிழ் வார்த்தைகளில், கீர்த்தனைகளில் வரும் வார்த்தைகளின் அர்த்தம் புரிகின்றதா?

3) எத்தனைப் பேருக்கு பழமையான தமிழ் தெரியும்?

4) அர்த்தம் புரியாமல், ஆவியில் ஒரு தெளிவு இல்லாமல், பாடல்களை பாடுவதினால் நம்முடைய விசுவாசம் வளருமா?

5) கோயில்களில் சமஸ்கிருதத்தில் ஸ்லோகங்களை படித்தால் பக்தர்களுக்கு என்ன நன்மை என்று நாம் கேள்வி எழுப்புகிறோம். மசூதிகளில் தொழுகின்றவருக்கு புரியாமல் இருந்தாலும், அரபியில் தொழுகை செய்தால் என்ன நன்மை என்று கேள்வி எழுப்புகிறோம். நாம் நமக்கு புரியாமல் பாடல்களை பாடினால் என்ன நன்மை என்று கேட்டு இருக்கின்றோமா?

6) தமிழ் மொழியில் அனேக பழைய வார்த்தைகள் பயன்பாட்டில் இல்லை, அவைகளின் பொருளும் சபையில் உள்ள பெரும்பான்மை மக்களுக்கு தெரிவதில்லை, எனவே பொருள் தெரியாமல் பாடுவது ஏன்?

நாம் ஒன்று செய்யலாம், பாரம்பரிய பாடல்கள் பாடுகின்ற சபை மக்களுக்கு பாடல்களின் பொருளை கற்றுத்தரவேண்டும், அல்லது அர்த்தம் புரிகின்ற பாடல்களை பாடவேண்டும். ஃபாதர் பெர்க்மான்ஸ் அவர்களின் பாடல்கள், ஆராதனைகளில் எப்படிப்பட்ட மாற்றத்தை கொண்டு வந்துள்ளது என்பதை நாம் அறிவோம். இந்த பாடல்களின் வெற்றிக்கு காரணம், நமக்கு புரியும் மொழியில், நமக்கு தெரிந்த ராகத்தில் பாடப்பட்ட பாடல்கள் அவைகள் என்பதை நாம் மறுக்கமுடியுமா?

எனவே, என்னுடைய கருத்து என்னவென்றால், திருச்சபைக்குள், நமக்கு புரியாமல் எதையும் பாரம்பரியத்திற்காகச் செய்யக்கூடாது. சபைக்கு புரியவில்லையென்றால், சபை மக்கள் சபைக்கு வருவது ஒரு பாரமாக நினைப்பார்கள். எனவே, காலம் மாறிக்கொண்டு இருப்பதினால் சபையின் சில பாரம்பரியத்தை விட்டுவிட்டு புதியவைகளை ஏற்றுக்கொள்வது தான் சரியானது.

கிறிஸ்தவத்தின் அடிப்படை கோட்பாடுகளை விட்டுக்கொடுங்கள் என்றுச் சொல்லவில்லை, பாரம்பரிய சபையையும் நான் எதிர்க்கவில்லை. என் வேண்டுகோள் எல்லாம் "புரியாமல் பாடாதீர்கள்" என்பது தான். இதே போன்று ஆங்கில பாணியில் அமைந்த பாடல்களையும் புரியாமல் பாடவேண்டாம், சபையில் உள்ளவர்கள் அனைவருக்கும் புரிந்தால் மட்டும் பாடுங்கள்.

கேள்வி 177: அனேக பாடல்களை எழுதியவர், சபைகளில் அவரது பாடல்கள் பாடப்பட்டுக்கொண்டு இருந்தது. திடீரென்று ஒரு பகிரங்க பாவத்தில் விழுந்துவிட்டார் (விபச்சாரமோ, பண ஊழலோ, வேறு எதுவோ), அவரது சாட்சி கெட்டுவிட்டது, அதிலிருந்து அவர் மீளவில்லை. இவரது முந்தைய பாடல்களை ஆராதனைகளில் பாடலாமா?

பதில் 177: இந்த கேள்விக்கான பதிலை படிப்பதற்கு முன்பு, மேலே கொடுக்கப்பட்ட 3 கேள்விகளையும் பதில்களையும் படித்துவிடுங்கள்.

அருமையான பாடல்களை பாடியவர், ஊழியத்தை அருமையாக செய்தவர், திடீரென்று ஒரு பெரும் பாவத்தில் விழுந்து விட்டு, சாட்சியை இழப்பார் என்றால், அவருடைய பாடலை பாடுவது எப்படி? என்பதுதான் கேள்வி.

பல ஆண்டுகளாக அந்தப் பாடல்களைப் பாடும் போது, அவர் நேர்மையான தான் இருந்தார். ஆனால் பல ஆண்டுகள் கழித்து, இப்பொழுது அவர் பின் மாற்றம் அடைந்து, வெளிப்படையான தவறுகளை செய்திருக்கிறார். இத்தனை ஆண்டுகள் நாம் திருச்சபையில் அவருடைய பாடல்களை, பாடிக் கொண்டு ஆராதித்து கொண்டு தான் இருந்தோம், ஆனால் இப்போது அவைகளை தொடர்வதா அல்லது விட்டுவிடுவதா?

என்னுடைய பதில் என்னவென்றால், அவருடைய பாடல்களை நாம் இனி சபையில் பாடாமல் இருப்பதுதான் நல்லது. ஏனென்றால் இப்போது பெரும்பான்மையான விசுவாசிகளுக்கு யார் எந்தப் பாடல்களைப் பாடுகிறார்கள், அந்த ஊழியக்காரரர் யார்? அப்படியே தற்போதைய நிலை என்ன? போன்ற விவரங்கள் அறிந்திருக்கிறார்கள். எனவே தேவனை ஆராதிக்கும் நேரத்தில், இப்படிப்பட்டவர் உடைய ஒரு பாடலை நாம் தெரிவுசெய்து பாடினால், அந்த பாடலை பாடும் போதே விசுவாசிகளுக்கு அந்த பாடலாசியர் ஊழியக்காரரர் பற்றிய இப்போதைய நிலையில் ஞாபகத்துக்கு வரும்.

தேவனை ஆராதிக்கும் போது ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டும், விசுவாசிகளின் மனதிலே பலவகையான ஓட்டங்கள், எண்ணங்களை சிதறடிக்கும் காரியங்கள் வராதபடிக்கு நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இன்னும் சில விசுவாசிகள் அப்படிப்பட்ட பாடல்களை பாடும் போது, அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வண்ணமாக, ஆராதனையில் படாமலேயே சும்மா இருப்பார்கள். இந்த நிலைக்கு விசுவாசிகளை தள்ள முடியாது, தள்ளவும் கூடாது.

எனவே சாட்சியை காத்துக் கொள்ளாதவரின் பாடல்களை, ஆராதனைகளில் பாடாமல் இருப்பதே சபைக்கு நல்லது.

ஒருவேளை அந்த ஊழியர் கர்த்தருக்குள் மறுபடியும் வந்து, மன்னிப்பைப் பெற்று சிறப்பான ஊழியம் செய்தால், தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு தன் சாட்சியை மறுபடியும் காத்துக் கொள்வார் என்று சொன்னால், அவருடைய பாடல்களை பாடுவதில் தவறில்லை. சுருக்கமாக ஒரு வரியில் சொல்ல வேண்டுமென்றால், "யாருடைய பாடல்களை நாம் பாடினாலும் அவருடைய தற்கால நிலை என்ன என்பதை கவனித்து பாடினால் மிகவும் நன்றாக இருக்கும்".

கேள்வி 178: சில பாடல் வரிகளில் தவறான உபதேசம் இருப்பதாக தோன்றுகிறது, அவைகளை சபையில் பாடலாமா?

பதில் 178: இந்த கேள்விக்கு உதவியாக இருக்கும் வண்ணமாக, மேற்கண்ட கேள்வி பதில்களை படித்துக்கொள்ளுங்கள்.

மேலே சொன்ன இரண்டு பதில்களில் "பிரச்சனை, பாடல் எழுதியவர் மீது இருந்தது", "பாடல் பாடியவர் மீது இருந்தது". ஆனால் இந்த கேள்வியில் பாடலில் உள்ள சில வரிகள், தவறான உபதேசத்தை போதிப்பது போன்று தெரிகின்றது. இந்த பாடலை சபையில் பாடலாமா?

ஒரு கிறிஸ்தவராக, ஒரு ஊழியராக எல்லாவற்றையும் சோதித்து அறிந்து நலமானது பிடித்துக்கொள்ள நாம் அறிந்திருக்க வேண்டும். கள்ள உபதேசம் செய்கிற நபர்களை நாம் புறக்கணிப்பது போன்று, ஒரு பாடலில் ஒரு வரி நம் வேதத்திற்கு எதிராக இருக்கின்றது என்று நீங்கள் கருதினால், அடுத்த கேள்விக்கே இடமில்லை, அந்த பாடலை புறக்கணிக்க வேண்டியதுதான். அதை எழுதியவரும் அதை பாடியவரும் உலகப் புகழ்பெற்ற பெரிய ஊழியக்காரர் ஆக இருந்தாலும் சரி. அதை நாம் ஏற்க வேண்டியதில்லை.

கள்ள உபதேசங்கள் பிரசங்கியார் வடிவில் வந்தாலும் சரி, பாடல் வரிகளில் வந்தாலும் சரி அதனை நாம் புறக்கணிக்க வேண்டும். இது தான் பைபிள் நமக்கு கற்றுக் கொடுக்கும் பாடம்.

உதாரணத்திற்கு, ஒரு பாடல் வருகிறது அதில் ஒரு குறிப்பிட்ட இடத்தில், இயேசு சிலுவையில் மரிக்கவில்லை என்ற கோணத்தில் அர்த்தத்தைக் கொடுக்கிறது என்று நாம் கண்டால், இது நம்முடைய அடிப்படை சத்தியத்திற்கு எதிரானது, எனவே இந்த பாடல்களை நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

நமக்கு நல்ல பாடல்களுக்கு பஞ்சமா இருக்கிறது? ஆயிரக்கணக்கான அவர்கள் கிறிஸ்தவர்களால் எழுதப்பட்டு பாடப்பட்டு கொண்டு இருக்கின்றன. எனவே, எந்த நேரத்தில் நாம் சிலவற்றை கள்ள உபதேசம் என்று கண்டுபிடிப்போம், உடனே அதனை புறக்கணிக்க வேண்டும்.

கேள்வி 179: தானியேல் எருசலேமுக்கு நேராக திரும்பி (கிப்லாவை நோக்கி) தேவனை தொழுதுக்கொண்டார். எருசலேமின் தேவாலம் நோக்கியே பழைய ஏற்பாட்டில் யூதர்கள் தொழுதுக்கொண்டார்கள். முஸ்லிம்களுக்கும் முதல் 12/13 ஆண்டுகளுக்கு மேலாக எருசலேமை நோக்கியே தொழுதுக்கொண்டார்கள். கிறிஸ்தவர்களாகிய நீங்கள் ஏன் அது போல செய்வதில்லை.

பதில் 179: கிறிஸ்தவர்கள் எருசலேமின் தேவாலயத்தை நோக்கி தொழுது கொள்வதில்லை, என்ற பதிலுக்கு போவதற்கு முன்பாக, பழைய ஏற்பாட்டின்

நபர்கள் தீர்க்கதரிசிகள், மற்றும் யூதர்கள் எருசலேம் தேவாலயம் கட்டப்படுவதற்கு முன்பு எப்படி தேவனை தொழுது கொண்டார்கள் என்பதை சில வரிகளில் பார்க்கலாம்.

a) நோவா முதற்கொண்டு தேவாலயம் கட்டும்வரை எல்லோரும், எல்லா இடங்களிலும் பலிபீடம் கட்டி தொழுதார்கள்.

ஆதியாகமம் 8:20 அப்பொழுது நோவா **கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி**, சுத்தமான சகல மிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்துகொண்டு, அவைகளைப் பலிபீடத்தின்மேல் தகனபலிகளாகப் பலியிட்டான்.

ஆதியாகமம் 12:7 கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன் என்றார். அப்பொழுது அவன் தனக்குத் தரிசனமான கர்த்தருக்கு அங்கே ஒரு **பலிபீடத்தைக் கட்டினான்**.

யாத்திராகமம் 17:15 மோசே ஒரு **பலிபீடத்தைக் கட்டி**, அதற்கு யேகோவாநிசி என்று பேரிட்டு,

நியாயாதிபதிகள் 6:24 அங்கே கிதியோன் கர்த்தருக்கு **ஒரு பலிபீடத்தைக்** கட்டி, அதற்கு யெகோவா ஷாலோம் என்று பேரிட்டான்; . . .

b) சாலொமோன் ராஜா தேவாலயம் கட்டியபிறகு அவர் ஜெபிக்கும் போது, இந்த ஆலயத்தை நோக்கி, வேண்டுகிறவர்களின் ஜெபத்தை நீங்கள் கேட்டு பதில் கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டார்.

I இராஜாக்கள் 8:38. உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் அனைவரிலும் எந்த மனுஷனானாலும் தன் இருதயத்தின் வாதையை உணர்ந்து, இந்த ஆலயத்துக்கு நேராகத் தன் கைகளை விரித்துச் செய்யும் சகல விண்ணப்பத்தையும், சகல வேண்டுதலையும், 39. உம்முடைய வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு மன்னித்து,

c) அதன் பிறகு யூதர்கள், எருசலேமை நோக்கி தொழுதார்கள்.

d) ஆனால், மேசியாவாகிய இயேசு வந்த பிறகு, பிதாவை உலகில் எல்லா இடங்களிலும் தொழுதுக்கொள்வார்கள் என்றுச் சொன்னார். இங்கு இயேசு தேவாலய திசையை மட்டும் நீக்கவில்லை, தேவாலயத்தையே நீக்கியுள்ளார்.

யோவான் 4:21. அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு. நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, **எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங்காலம் வருகிறது**.

எனவே, கிறிஸ்தவர்கள் தேவனை தொழுதுக்கொள்ளும் போது, ஒரு இடமோ, திசையோ தேவையில்லை.

கேள்வி 180: முஸ்லிமள் தங்கள் நோன்பை முடித்துக்கொள்வதற்கு நாம் உதவி செய்யலாமா? உதாரணத்திற்கு, இந்த மாதத்தில் நோன்பாளிகளுக்காக மசூதிகளுக்கு திண்பண்டங்களை, பழங்களை வாங்கித் தரலாமா?

பதில் 180: சிலவேளைகளில் கிறிஸ்தவர்கள் தேவையில்லாத விஷயங்களில் அதிகமாக அக்கரைக்கொண்டு, உலக மக்கள் மீது இயேசுவிற்கு இருக்கும் அன்பை விட, தங்களுக்குத் அதிக அன்பு இருக்கிறது என்பதைக் காட்டிக்கொள்ள முயற்சி எடுக்கிறார்கள், அதனால், அனேக பிரச்சனைகளுக்குள் மாட்டிக்கொள்கிறார்கள்.

கீழ்கண்ட விவரங்களை நன்றாக கவனியுங்கள்.

1. ஒரு முஸ்லிம் பசியாக இருந்தால், அவனுக்கு உணவு கொடு.
2. ஒரு முஸ்லிம் தாகமாக இருந்தால், அவனுக்கு தண்ணீர் கொடு.
3. ஒரு முஸ்லிம் உடையில்லாமல் இருந்தால், அவனுக்கு உடை கொடு.
4. ஒரு முஸ்லிம் வீடு இல்லாமல் இருந்தாலும், உன்னிடம் பணம் அதிகமாக இருந்தால், அவனுக்கு ஒரு வீடு கட்டிக்கொடு.
5. ஒரு முஸ்லிம் வியாதியுள்ளவனாக இருந்தால், அவனுக்கு உதவி செய், அவனை விசாரித்து பராமரித்து, மருந்துகள் கொடுத்து சுகப்படுத்து.
6. ஒரு முஸ்லிம் அநியாயமாக சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு இருந்தால், அவனை விசாரித்து ஆறுதல் சொல் முடிந்தால் அவன் விடுதலையாக்க முயற்சி எடு.
7. ஒரு முஸ்லிம் அந்நியனாக இருந்தால், அவனுக்கு பாதுகாப்பு கொடுத்து சேர்த்துக்கொள்.

ஏனென்றால், உலகில் இன்னொரு மனிதனுக்கு நாம் என்ன செய்கின்றாயோ, அது தனக்கே செய்ததாக இயேசு கருதுகின்றார், இதனை நாம் இயேசுவின் போதனைகளில் பார்க்கமுடியும். அந்த மனிதன் யாராக இருந்தாலும் பிரச்சனையில்லை.

ஆனால்,

1) ஒரு முஸ்லிம் நோன்பு இருந்தால், அந்த நோன்பு சம்மந்தப்பட்ட எந்த விஷயத்திற்கும் உதவி செய்யாதே, இது கர்த்தருக்கு விரோதமான பாவமாகும்.

2) ஒரு முஸ்லிம் நோன்பு திறப்பதற்கு ஒரு பேரிச்சம் பழம் கூட நீ வாங்கித் தராதே, ஏனென்றால், அவனுடைய இறைநம்பிக்கையை நீ ஆதரிப்பதாக இது கருதப்படும்.

3) ஒரு முஸ்லிமின் ஏழ்மையை போக்க உன்னால் முடிந்தால், ஒரு இலட்சம் ரூபாய் செலவு செய், ஆனால், அவன் நோன்பு திறப்பதற்கு ஒரு குவளை தண்ணீர்

கொடுக்க முன் வராதே, ஏனென்றால், அவனது விக்கிர ஆராதனை என்ற பாவத்தில், அந்நிய தெய்வமாக கருத்தப்படும் அல்லாஹ்வை வணங்கும் பாவத்தில் உன்னை நீ இணைத்துக்கொள்வதாக அது கருதப்படும்.

4) ஒரு முஸ்லிமுக்கு விபத்து நேரிட்டல், ஒரு பாட்டில் இரத்தம் கொடுத்து அவனை காப்பாற்ற முயற்சி எடு, ஆனால், அவனது மார்க்க விஷயங்களில் உன் சுண்டு விரலிலிருந்து ஒழுகும் ஒரு சொட்டு தண்ணீர் கொடுத்து, நீ கர்த்தரின் கோபத்திற்கு உள்ளாகாதே.

கிறிஸ்தவர்கள் நன்மை எது, தீமை எது என்பதை சரியாக புரிந்துக்கொள்ளவேண்டும். கிறிஸ்தவர்கள் அன்புக்கும், அறியாமைக்கும் இடையே இருக்கும் மிகப்பெரிய வித்தியாசத்தை புரிந்துக்கொள்ளவேண்டும். செய்யப்படும் உதவி எல்லாம் அன்பாக கருதப்படாது. அறியாமையினால் செய்யும் சில உதவிகள் நம்மை அதிகமாக பாதிக்கும்.

உதவி செய்கிறேன் என்றுச் சொல்லி, நாம் மற்றவர்களின் மார்க்க விஷயங்களுக்காக உதவி செய்யக்கூடாது. முஸ்லிம்கள் சிறுவர்களுக்கு விருத்தசேதனம் (சுன்னத்துச்) செய்கிறார்கள் என்றுச் சொல்லி, நாம் அதற்கு டொனேஷன் தரக்கூடாது. மசூதி கட்டுமானப் பணிக்கு டொனேஷன் தரக்கூடாது. ஆனால், அதே முஸ்லிம் ஏழ்மையில் தவிக்கும் போது, உன் ஆடம்பர செலவுகளை குறைத்துக் கொண்டாவது, அவனுக்கு நீ உதவி செய்ய மறவாதே.

எனவே, ரமளான் மாதத்தில், முஸ்லிம்கள் நோன்பை முடித்துக்கொள்வதற்கு, நாம் ஒரு பேரிச்ச பழத்தையும், ஒரு குவளை தண்ணீரையும் தரக்கூடாது, இப்படி கொடுத்தால், இது கர்த்தருக்கு விரோதமான பாவமாகும். இஸ்லாம் என்பது பைபிளினால் சபிக்கப்பட்ட இன்னொரு சுவிசேஷத்தைச் சொல்கிறது, இன்னொரு இயேசுவை அறிமுகம் செய்கின்றது. பைபிள் இதனை கடுமையாக கண்டிக்கிறது, எனவே, அதிக நன்மையைச் செய்கிறேன் என்றுச் சொல்லி, நம் தலையில் நாமே நெருப்பை அள்ளி போட்டுக்கொள்ளக்கூடாது. நம் ஊர்களில் நடக்கும் மாரியம்மன் திருவிழாக்களில் கூழ்

ஊற்றுவதற்கும், கோவில் சிலைகளுக்கு பாலாபிஷேகம் செய்வதற்கும் ஒரு கிறிஸ்தவராக இருந்துக் கொண்டு, நீங்கள் பணத்தை கொடுப்பீர்களா? அதே போலத்தான் இதுவும்.

முஸ்லிம்களை நேசியுங்கள், ஆனால், அவர்களின் மார்க்க விஷயமாக, கர்த்தருக்கு அறுவருப்பான பாவங்களுக்கு பங்காளிகளாக ஆகாதிருங்கள்.

தலைப்பு: இஸ்லாமிய கலைச்சொற்கள்/அகராதி (180 – 210)

முஸ்லிம்களிடம் பேசும் போது, 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்று வாழ்த்திவிட்டு, அதன் பிறகு பேச்சை தொடருவார்கள். ஒரு எதிர்கால செயல்பற்றி பேசும் போது "இன்ஷா அல்லாஹ்" என்றுச் சொல்வார்கள். இந்த அரபி வார்த்தைகளின் அர்த்தமென்ன? இவைகளின் முக்கியத்துவம் என்ன? போன்ற போன்ற கேள்விகளுக்கு இந்த தொடரில் பதில்கள் கொடுக்கப்படுகின்றன.

இந்த தொடரில் இஸ்லாமிய கலைச்சொற்களை மட்டுமல்ல, இஸ்லாமில் முக்கியத்துவம் வாய்ந்த சில நபர்களின் விவரங்களையும், இடங்களையும் கற்றுக்கொள்வோம். இஸ்லாமை ஆழமாக அறிவதற்கு இவைகள் உதவும்.

அரபி மற்றும் எபிரேய மொழிகள் செமிடிக் மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகளாக இருப்பதினால், தேவையான இடங்களில் அரபி வார்த்தைகளுக்கு இணையான எபிரேய வார்த்தைகளையும் சம்மந்தப்படுத்தி பார்க்கப்போகிறோம். இதன் மூலமாக, பழைய ஏற்பாட்டின் முக்கியமான சில வார்த்தைகளையும் கற்றுக்கொள்ளலாம்.

கேள்வி 181: அப்த் (ABD) என்றால் என்ன?

பதில் 181: அரபியில் இதன் பொருள் “அடிமை” என்பதாகும். இது அரேபிய பெயர்களில் பரவலாக பயன்படுத்தப்படும் வார்த்தையாகும். உதாரணத்திற்கு, முஹம்மதுவின் தந்தையின் பெயர் “அப்துல்லாஹ்” என்பதாகும். இதன் பொருள் “அல்லாஹ்வின் அடிமை” ஆகும். “இறைவனுக்கு முழுவதுமாக கீழ்படிந்த அடிமையாக வாழ்வது தான்” முஸ்லிம்களின் நம்பிக்கையின் படி ஒரு சிறந்த வாழ்க்கையாகும்.

இதற்கு நேர் எதிராக, பைபிளில் நாம் காண்கின்ற படி, இயேசு தம்முடைய சீடர்களை “தன் அடிமைகள்” என்று அழைக்காமல், அவர்களை “தன் நண்பர்கள்” என்று அழைத்தார்.

யோவான் 15:15 இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். **நான் உங்களைச் சிநேகிதர் என்றேன்**, ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.

இஸ்லாமிய பெயர்கள்:

- **அப்துல்**: அடிமை அல்லது வேலைக்காரன் (யாருக்கு? அல்லாஹ்விற்கு)
- **அப்துல் நபி**: நபியின் அடிமை (அ) வேலைக்காரன்
- **அப்துல் ஜஹ்ரா**: முஹம்மதுவின் மகள் ஃபாத்திமா ஜஹ்ரா அவர்களின் அடிமை
- **அப்துல் ஹுசைன்**: ஹுசைனின் அடிமை (இவர் முஹம்மதுவின் பேரன்)

அரபி கிறிஸ்தவர்களிடமிருந்து சில உதாரணங்கள்:

- **அப்துல் மஸீஹ்:** மேசியாவின் அடிமை (மேசியா என்றால் இயேசு)
- **அப்துல் ஸாலிப்:** சிலுவையின் அடிமை (அ) ஊழியக்காரன்
- **அப்துல் ஷஹித்:** உயிர்தியாகம் செய்தவருக்கு (இயேசுவிற்கு) அடிமை/ஊழியக்காரன்
- **அப்த் யஷுஉ:** இயேசுவின் அடிமை (இயேசு தாஸ் என்று தமிழில் சொல்வோமே அதே பெயர் அரபியில்)

Source: **https://en.wikipedia.org/wiki/Abd_(Arabic)**

கேள்வி 182: அபூ (ABU) என்றால் என்ன?

பதில் 182: இதன் பொருள் ”தந்தை” என்பதாகும். அதாவது "இன்னாருடைய தந்தை" என்ற பொருளில் இவ்வார்த்தை பயன்படுத்தப்படுகின்றது. உதாரணத்திற்கு: அபூ ஹமீத், அபூ பக்கர் போன்ற பெயர்களை குறிப்பிடலாம். இதன் பொருள் ”ஹமீதுடைய தந்தை, பக்கருடைய தந்தை” என்பதாகும்.

இஸ்லாமிய உதாரணங்கள்:

- அபூ ஹுரைரா
- அபூ மூஸா
- அபூ சுஃப்யான்
- அபூ மஸ்வூத்

யூதர்களின் பயன்பாடு:

எபிரேய மொழியில் அப் (Ab) என்றும் அராமிக் மொழியில் அப்பா (Abba) என்றும் பயன்படுத்தப்படுகின்றது.

- அப்ராம் : உயர்ந்த தகப்பன்
- அப்ரஹாம்: பல ஜனங்களுக்கு தகப்பன்
- அப்சலோம்: அமைதியின் தகப்பன்

புதிய ஏற்பாட்டில் அப்பா (Abba):

புதிய ஏற்பாட்டில் முன்று முறை அப்பா (Abba) என்ற அராமிக் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

இயேசு ஜெபிக்கும் போது, அப்பா, பிதாவே (Abba, Father) என்று ஜெபித்தார். இதனை கிரேக்க மொழியாக்கம் செய்யும் போது கூட, அப்பா (Abba) என்ற வார்த்தையை அப்படியே எழுதியுள்ளார்கள்.

மாற்கு 14:36

36. **அப்பா பிதாவே (Abba, Father),** எல்லாம் உம்மாலே கூடும்; இந்தப் பாத்திரத்தை என்னிலிருந்து எடுத்துப்போடும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்றார்.

மீதமுள்ள இரண்டு இடங்கள் ரோமர் 8:15 மற்றும் கலாத்தியர் 4:6 ஆகும்.

ரோமர் 8: 15. அந்தப்படி, திரும்பவும்பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், **அப்பா பிதாவே (Abba, Father)**, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்.

கலாத்தியர் 4:6. மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், **அப்பா, பிதாவே! (Abba, Father)** என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்.

சிலர் அறிஞர்கள் இப்படியாக கூறுவார்கள், அதாவது ஆங்கிலத்தில் டாட்டி(Daddy) என்று அழைக்கும் போது, அழைப்பவர் குழந்தையாக மாறி இன்னும் அதிக அன்போடு அழைப்பது போன்று அப்பா (Abba) என்ற வார்த்தை உள்ளது என்று கூறுகிறார்கள்.

கேள்வி 183: அல் (Al)

பதில் 183: இந்த "அல்" வார்த்தையானது ஆங்கிலத்தில் உள்ள "the" என்ற வார்த்தைக்கு சமமானதாகும் (definite article - 'the'). அரபி எழுத்தாளர்கள் அரபி பெயர்களை வித்தியாசமாக எழுதுவதினால் அனேக முறை மக்கள் இந்த வார்த்தையினால் குழப்பமடைவது உண்டு, அதாவது நாம் ஏற்கனவே படித்த பெயர் இது தானா அல்லது வேறு பெயரா என்ற குழப்பம் வருவதுண்டு.

இவ்வார்த்தைப் பற்றிய சில விவரங்களை சரியாக புரிந்துக்கொண்டால் இதில் குழப்படைவதற்கு ஒன்றுமில்லை.

இஸ்லாமிய சரித்திர ஆசிரியர் மற்றும் குர்-ஆன் விரிவுரையாளர் "தபரி" என்பவரை சில அரபி எழுத்தாளர்கள் "அல்-தபரி (Al-Tabari)" என்று எழுதுவார்கள், வேறு சிலர் "அத்-தபரி (at-Tabari)" என்று எழுதுவார்கள். இதே போல அல்லாஹ்விற்கு உள்ள பெயர்களை எழுதும் போது கூட:

- சிலர் ---> அல்-ரஹ்மான், அல்-ஸமி, அல்-ஷகூர், அல்-நூர் ... என்று எழுதுவார்கள்.
- வேறு சிலர் ---> அர்-ரஹ்மான், அஸ்-ஸமி, அஷ்-ஷகூர், அந்-நூர் ... என்று எழுதுவார்கள்.

அரபி மொழியில் உள்ள எழுத்துக்கள் இரண்டு வகையாக பிரிக்கப்படுகின்றன: 1) சந்திர எழுத்துக்கள் 2) சூரிய எழுத்துக்கள்.

- க, ம, ப. . . போன்ற எழுத்துக்கள் சந்திர எழுத்துக்கள் ஆகும்.
- த, ந, ச. . . போன்ற எழுத்துக்கள் சூரிய எழுத்துக்கள் ஆகும்.

(சந்திர/சூரிய எழுத்துக்கள் அனைத்தையும் பற்றி அறிய **இந்த விகிபிடியா தொடுப்பை** சொடுக்கவும்.)

சந்திர எழுத்துக்களுக்கு முன்பாக "அல்" வந்தால், அந்த எழுத்துக்களை தெளிவாக உச்சரிக்க முடியும், அப்படிப்பட்ட எழுத்துக்களை சந்திர எழுத்துக்கள் என்றுச் சொல்வார்கள்.

உதாரணத்திற்கு:

கமர் (நிலா) என்ற சொல்லை எடுத்துக்கொள்ளலாம். இவ்வார்த்தைக்கு முன்பு அல் என்று சேர்த்து வாசிக்க முடியும் - அல்-கமர் (அந்த நிலா).

இதே போல, பலத் (balad - நாடு) என்ற வார்த்தையும் அல்-பலத் (அந்த நாடு) என்று வாசிக்கமுடியும். ஆனால், ஒரு வார்த்தை சூரிய எழுத்துடன் ஆரம்பித்தால், அதனை "அல்" என்ற வார்த்தையைச் சேர்த்து "அல்" என்றே உச்சரிக்க முடியாது. அதற்கு பதிலாக, "அல்" என்பதில் உள்ள "ல்" என்பதை நீக்கிவிட்டு, அவ்வார்த்தையின் முதல் எழுத்தை போட்டு வாசிக்க முடியும்.

உதாரணத்திற்கு:

ஷம்ஸ் (சூரியன் என்பது இதன் பொருள்) என்ற சொல்லுடன் "அல்-ஷம்ஸ்" என்று எழுதினால், அதனை அப்படியே வாசிக்கமுடியாது. எனவே, அதனை "அஷ்-ஷம்ஸ்" (அந்த சூரியன்) என்று வாசிக்க வேண்டும் (கவனிக்கவும்: ல் என்பதை நீக்கிவிட்டு ஷ் என்பதை சேர்த்துள்ளோம்) எழுதும் போது அல்-ஷம்ஸ் என்று (அ) அஷ்-ஷம்ஸ் என்று எழுதினாலும், அதனை அஷ்-ஷம்ஸ் என்றே வாசிக்கவேண்டும்.

எனவே அரபி எழுத்தாளர்கள் தங்கள் விருப்பப்படி "அல்-தபரி" என்றோ (எழுத்தின் படி எழுதுவது) அல்லது "அத்-தபரி" என்றோ (உச்சரிப்பின் படி எழுதுவது) எழுதுவார்கள், எப்படி எழுதினாலும் தவறில்லை. ஆனால், வாசகர்கள் படிக்கும் போது, சந்திர சூரிய எழுத்துக்களை கவனத்தில் கொண்டு படிக்கவேண்டும்.

கேள்வி 184: அல்ஹம்து லில்லாஹ்

பதில் 184: இந்த அரபி சொற்றொடருக்கு "எல்லா புகழும் அல்லாஹ்விற்கே (Praise be to Allah)" என்பதாகும்.

- அல் = The
- ஹம்து = புகழுதல் (Praise)
- அல்லாஹ் = அல்லாஹ் (Allah)

யூதர்களும் கிறிஸ்தவர்களும் "ஹல்லேலூயா" என்று சொல்வது போன்று, அரபியில் அல்ஹம்துலில்லாஹ்.

- ஹல்லேல் + யா = யெகோவா தேவனை புகழு

கேள்வி 185: அல்பா (Alpha)

பதில் 185: கிரேக்க மொழியின் முதல் எழுத்து "அல்பா" ஆகும், கடைசி எழுத்து "ஓமெகா" ஆகும். இந்த இரண்டு எழுத்துக்கள் இறைவனின் பட்டப்பெயர்களாக பைபிளில் காணலாம். அதாவது உலகத்தின் "முதலாமானவராகவும் கடைசியானவராகவும் இறைவன் இருக்கிறார்" என்பதை சுட்டிக்காட்ட இறைவன் தனக்கு இவைகளை பயன்படுத்துகிறார்.

1. தேவன் "அல்பா மற்றும் ஓமெகாவாக" இருக்கிறார்:

வெளிப்படுத்தின விசேஷம் 1:8

இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்: **நான் அல்பாவும், ஓமெகாவும்** ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார்.

2. இயேசுக் கிறிஸ்து "அல்பா மற்றும் ஓமெகாவாக" இருக்கிறார்:

வெளிப்படுத்தின விசேஷம் 21:6 மற்றும் பார்க்க 22:1-13

வெளி 21:6

அன்றியும், அவர் என்னை நோக்கி: ஆயிற்று, **நான் அல்பாவும் ஓமெகாவும்**, ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்.

கேள்வி 186: அல்லாஹு அக்பர்

பதில் 186: இவ்வார்த்தையின் பொருள் "அல்லாஹ் பெரியவன்" (Allah is most Great) என்பதாகும். முஸ்லிம்கள் இவ்வார்த்தைகள் அனேக சமயங்களில் பயன்படுத்துவர், அதாவது தொழுகைக்கு அழைப்பு கொடுக்கும் போதும், மிருகங்களை அறுக்கும் போதும் இதனை பயன்படுத்துவர்.

கடந்த காலத்திலும், தற்காலத்திலும் இஸ்லாமியர்கள் பேரணியாகச் செல்லும் போது, "அல்லாஹு அக்பர்" என்று கோஷமிட்டுக்கொண்டுச் செல்வார்கள். மேலும், போருக்குச் செல்லும் போது முஸ்லிம்கள் இந்த வார்த்தைகளை உரத்த சத்தத்தோடு உச்சரித்துக்கொண்டுச் செல்வார்கள். இப்படி கோஷமிட்டுச் செல்வது "அல்லாஹ்வும் இஸ்லாமும் முஸ்லிம்களும் உலகத்தில் உள்ள மற்ற எல்லாவற்றைக் கட்டிலும் சிறந்தவர்கள்" என்பதை அவர்கள் வெளிப்படுத்துவதாக அமைகிறது.

முஸ்லிம்கள் காஃபிர்களுக்கு (இஸ்லாமியரல்லாத மக்களுக்கு) எதிராக போர் செய்யும் போது, எப்படி இவ்வார்த்தைகளை பயன்படுத்துகிறார்கள் என்பதை "இஸ்லாமிய காலிஃபத்துவ ஆட்சி நடக்கும் நாடுகளில்" காணலாம், இதைப் பற்றி அறிந்துக்கொள்ள இந்த தொடுப்பை (புத்தகத்தை) சொடுக்கவும்: **THE CALIPHATE - ITS RISE, DECLINE, AND FALL FROM ORIGINAL SOURCES BY WILLIAM MUIR**.

கேள்வி 187: அன்சார் (அன்ஸார் - ANSAR)

பதில் 187: அரபியில் இதன் பொருள் "உதவியாளர்" என்பதாகும்.

மதினாவிலிருந்து முதன் முதலில் முஸ்லிமாக மாறியவர்களை "அன்ஸார்கள்" என்று குர்-ஆன் அழைக்கிறது. முஹம்மது மதினாவிற்கு இடம் பெயர்ந்த பிறகு, அவருக்கு உதவி செய்த அனைவரும் "அன்ஸார்கள்" என்று அழைக்கப்பட்டார்கள். இவர்கள் முஹம்மது புரிந்த போர்களிலும் பங்கு பெற்றார்கள்.

குர்-ஆன் 9:100, 117

9:100. இன்னும் முஹாஜிர்களிலும், **அன்ஸார்களிலும்**, முதலாவதாக (ஈமான் கொள்வதில்) முந்திக்கொண்டவர்களும், அவர்களை(எல்லா) நற்கருமங்களிலும் பின் தொடர்ந்தவர்களும் இருக்கின்றார்களே அவர்கள் மீது அல்லாஹ் திருப்தி அடைகிறான்; அவர்களும் அவனிடம் திருப்தியடைகின்றார்கள்; அன்றியும் அவர்களுக்காக, சுவனபதிகளைச் சித்தப்படுத்தியிருக்கின்றான், அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும், அவர்கள் அங்கே என்றென்றும் தங்கியிருப்பார்கள் - இதுவே மகத்தான வெற்றியாகும்.

9:117. நிச்சயமாக அல்லாஹ் நபியையும் கஷ்ட காலத்தில் அவரைப் பின்பற்றிய முஹாஜிர்களையும், **அன்ஸாரிகளையும்** மன்னித்தான் அவர்களில் ஒரு பிரிவினருடைய நெஞ்சங்கள் தடுமாறத் துவங்கிய பின்னர், அவர்களை மன்னித்(து அருள் புரிந்)தான் - நிச்சயமாக அவன் அவர்கள் மீது மிக்க கருணையும், கிருபையும் உடையவனாக இருக்கின்றான். (முஹம்மது ஜான் டிரஸ்ட் குர்-ஆன் தமிழாக்கம்)

கேள்வி 188: அஸர் (ASR)

பதில் 188: இஸ்லாமியர் செய்யும் மதிய நேர தொழுகையை "அஸர் தொழுகை" என்பார்கள்.

சரியாக காலை கழுவாமல் தொழுதால் நரகம் தான்:

ஸஹீஹ் புகாரி 96:

96. 'நாங்கள் சென்ற பயணம் ஒன்றில் நபி(ஸல்) அவர்கள் எங்களுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்தார்கள். **அஸர் தொழுகையின் நேரம் நெருங்கிவிட்ட நிலையில்** நாங்கள் உளூச் செய்து கொண்டிருக்கும்போது நபி(ஸல்) அவர்கள் எங்களை வந்தடைந்தார்கள். அப்போது நாங்கள் எங்கள் கால்களைத் தண்ணீரால் தடவிக் கொண்டிருந்தோம். (அதைக் கண்டதும்) '**குதிங்கால்களைச் சரியாகக் கழுவாதவர்களுக்கு நரகம் தான்!**' என்று இரண்டு அல்லது மூன்று முறை தம் குரலை உயர்த்திக் கூறினார்கள்' அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரலி) அறிவித்தார்.

522. ஆயிஷா(ரலி) அறிவித்தார்.

சூரிய(னி)ன் (ஒளி) என் அறையில் (மறையாமல்) விழுந்து கொண்டிருக்கும்போது நபி(ஸல்) அவர்கள் **அஸர்** தொழுவார்கள்.

அஸர் தொழுகையை தவரவிட்டால், குடும்பத்துக்கு ஆபத்து:

552. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'யாருக்கு அஸர் தொழுகை தவறிவிட்டதோ **அவன் குடும்பமும் சொத்துக்களும் அழிக்கப் பட்டவனைப்போன்று** இருக்கிறான்.' என இப்னு உமர்(ரலி) அறிவித்தார்.

கேள்வி 189: அஸ்தக்பீர் அல்லாஹ் (Astaghfir Allah)

பதில் 189: இந்த அரபி சொற்றொடரின் பொருள் "நான் அல்லாஹ்விடமிருந்து மன்னிப்பை கோருகிறேன்" என்பதாகும்.

கேள்வி 190: அஸ்ஸலாமு அலைக்கும் (ASSALAMU ALAIKUM)

பதில் 190: இது ஒரு இஸ்லாமிய வாழ்த்து ஆகும். இதன் பொருள் ”உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும்” என்பதாகும். ஒரு முஸ்லிம் முதன் முதலில் “அஸ்ஸலாமு அலைக்கும்” என்று மற்றவரை பார்த்து வாழ்த்து கூறும் போது, இதற்கு பதிலாக “வா அலைக்கும் ஸலாம்” என்று அவர் பதில் வாழ்த்து கூறுவார், இதன் பொருள், “உங்கள் மீதும் சாந்தி உண்டாகட்டும்” என்பதாகும்.

இதே வாழ்த்துதலை, இன்னும் நீட்டி, “அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மது அல்லாஹி வ பரகாதஹு” என்று கூறுவர், இதன் பொருள் “சாந்தியும் அல்லாஹ்வின் அருளும்,

ஆசீர்வாதமும் உங்கள் மீது உண்டாவதாக” என்பதாகும். (Full version is "Assalamu alaikum wa Rahmatu Allahi wa Barakatuhu", meaning "Peace and the Mercy and Blessings of God be upon you").

இயேசு கூட 'உங்களுக்கு சமாதானம் (ஷாலோம் அலேகும்)' என்று கூறினார் என்று முஸ்லிம்கள் கூறுவார்கள். ஆகையால், இயேசு கூட இஸ்லாமிய பாணியில் தான் வாழ்த்துக்கள் கூறினார் என்று முஸ்லிம்கள் சொல்வார்கள்.

இயேசு எப்போது ஷாலோம் அலேகும் என்றுச் சொன்னார்?

யோவான் 20:19. வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், **யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம்** என்றார்.

இயேசுக் கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு, சீடர்கள் பயத்தில் இருந்த சமயத்தில் இவ்வார்த்தைகளைச் சொல்லி அவர்களுடைய பயத்தை போக்கினார். அந்த வார்த்தைகள் அவர்களுடைய பயத்தை நீக்கவில்லை, சிலுவையில் அவரை மரித்தவராகக் கண்டு, கல்லறையில் அவர் வைக்கப்பட்ட பிறகு உயிர்த்தெழுந்து வந்து சொன்னதால் அவர்களின் பயம் நீங்கியது.

இயேசு உயிர்த்தெழுந்த பிறகு இவ்வார்த்தைகளைச் சொன்னார் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

முஹம்மதுவின் பெயரை உச்சரிக்கும் போது, 1400 நூற்றாண்டுகளாக கோடிக்கணக்கான முஸ்லிம்கள் "அவர் மீது சாந்து உண்டாகட்டும்" என்றுச் சொல்கிறார்கள். முஹம்மதுவிற்கே சமாதானம் வேண்டுமென்று நீங்கள் அல்லாஹ்வை வேண்டிக்கொண்டால், உங்கள் நிலை என்னவென்று சிந்தித்துப் பாருங்கள். உயிர்த்தெழுந்த இயேசுக் கிறிஸ்து "உங்களுக்கு சமாதானம்" என்று சொல்வது உங்களால் கேட்கமுடிகின்றதா?

கேள்வி 191: **ஆலிம் (ALIM)**

பதில் 191: பண்டிதர், அதிகம் கற்றறிந்தவர் (அ) அறிஞர் என்பது இதன் பொருளாகும்.

கேள்வி 192: இப்லிஷ் (சாத்தான், சைத்தான், ஷைத்தான்)

பதில் 192: சாத்தானின் இஸ்லாமிய பெயர் "இப்லிஷ்" என்பதாகும். குர்ஆனும் இதர ஆதாரபூர்வமான ஹதீஸ்களும் சாத்தான் பற்றிய சுவாரசியமான விவரங்களைத் தருகின்றது, அவையாவன:

- சாத்தான் முடிச்சு போடுகிறான்,
- இரவு நேரங்களில் மூக்கில் தங்கியிருக்கிறான்,
- பிறக்கும் குழந்தைகளை தொடுகிறான்,
- குழந்தைகளை அழ வைக்கிறான்,

- தீர்க்கதரிசங்களில் தில்லுமுல்லு செய்துவிடுகிறான்,
- மற்றவர்கள் பேசுவதை திருட்டுத்தனமாக ஒட்டுக் கேட்கிறான்,
- மனிதர்களின் காதுகளில் சிறுநீர் கழிக்கிறான்,
- கொட்டாவி விடுபவரைப் பார்த்து சிரிக்கிறான்
- அதே போல கொட்டாவி விடுபவர்களின் வாயில் புகுந்துவிடுகிறான்.

சாத்தான் யார் என்பதில் முரண்பட்ட கருத்துக்கள் குர்ஆனில் சொல்லப்பட்டுள்ளது; சாத்தான் என்பவன் தேவதூதனா? அல்லது தேவ தூதனாக இருந்தவன் பாவம் செய்து தள்ளிவிடப்பட்ட பிறகு ஜின்னாக மாறிவிட்டானா? மனிதன் உண்டாக்கப்பட்ட நிகழ்ச்சியிலும், அதன் பிறகு அவன் பாவம் செய்த நிகழ்ச்சியிலும் சாத்தானின் பங்கு என்ன? இந்நிகழ்ச்சிகளில் அல்லாஹ்வின் முரண்பட்ட விவரங்கள் என்ன? போன்றவைகளை அறிந்துக்கொள்ள இந்த கட்டுரையை படிக்கவும்: "அல்லாஹ், ஆதாம் மற்றும் தேவதூதர்கள்".

முஹம்மதுவின் வாழ்வில் சாத்தானின் தாக்கம் இருந்திருக்கின்றது என்பதை விளக்கும் கட்டுரைகளை இங்கு படிக்கவும்: முஹம்மதுவும் சாத்தானும்

சாத்தான் பற்றிய இதர இஸ்லாமிய விவரங்கள்:

• இப்லீஸ் “ஜின்” இனத்தைச் சேர்ந்தவனாக இருக்கிறான், குர்ஆன் 18:50

அன்றியும், “ஆதமுக்கு ஸுஜூது செய்யுங்கள்” என்று நாம் மலக்குகளிடத்தில் கூறியதை (நபியே!) நினைவு கூர்வீராக; அப்போது இப்லீஸைத்தவிர, அவர்கள் ஸுஜூது செய்தார்கள்; அவன் (இப்லீஸ்) ஜின் இனத்தைச் சேர்ந்தவனாக இருந்தான்; அவன் தன் இறைவனுடைய கட்டளையை மீறி விட்டான்; ஆகவே நீங்கள் என்னையன்றி அவனையும் அவன் சந்ததியாரையும் (உங்களைப்) பாதுகாப்பவர்களாக எடுத்துக் கொள்வீர்களா? அவர்களோ உங்களுக்குப் பகைவர்களாக இருக்கிறர்கள்; அக்கிரமக்காரர்கள் (இவ்வாறு) மாற்றிக் கொண்டது மிகவும் கெட்டதாகும்.(குர்ஆன் 18:50)

• ஒருவர் உறங்கும்போது பிடரியில் ஷைத்தான் மூன்று முடிச்சுகளைப் போடுகிறான்

1142. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"உங்களில் ஒருவர் உறங்கும்போது பிடரியில் ஷைத்தான் மூன்று முடிச்சுகளைப் போடுகிறான். ஒவ்வொரு முடிச்சின் போதும் இரவு இன்னும் இருக்கிறது, உறங்கு என்று கூறுகிறான். அவர் விழித்து அல்லாஹ்வை நினைவு கூர்ந்தால் ஒரு முடிச்சு அவிழ்கிறது. அவர் உளூச் செய்தால் இன்னொரு முடிச்சு அவிழ்கிறது. அவர் தொழுதால் மற்றொரு முடிச்சும் அவிழ்கிறது. அவர் மகிழ்வுடனும் மன அமைதியுடனும் காலைப் பொழுதை அடைகிறார். இல்லையெனில் அமைதியற்றவராக, சோம்பல் நிறைந்தவராகக் காலைப் பொழுதை அடைகிறார்' என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். Volume :1 Book :19 (சஹி புஹாரி நூல்)

• தூங்கும் போது மூக்கின் உட்பகுதிக்குள் ஷைத்தான் புகுந்து மேல் பாகத்தில் தங்கியிருக்கிறான்

3295. அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.

நீங்கள் தூக்கத்திலிருந்து எழுந்து உளூச் செய்தால் மூன்று முறை (நீர் செலுத்தி) நன்கு மூக்கைச் சிந்தி (தூய்மைப்படுத்தி)க் கொள்ளுங்கள். ஏனெனில், நீங்கள் (தூங்கும் போது) மூக்கின் உட்பகுதிக்குள் ஷைத்தான் தங்கியிருக்கிறான். என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். Volume :3 Book :59 (சஹீ புஹாரி நூல்)

• பிறக்கும் குழந்தைகளை தொடுகிறான், அழவைக்கிறான்

3431. ஸயீத் இப்னு முஸய்யப்(ரலி) அறிவித்தார்

" 'ஆதமின் மக்களில் (புதிதாகப்) பிறக்கும் குழந்தை எதுவாயினும் அது பிறக்கும் போதே ஷைத்தான் அதைத் தீண்டுகிறான். ஷைத்தானின் தீண்டலால் அக்குழந்தை கூக்குரலெழுப்பும். மர்யமையும் அவரின் மகனையும் தவிர' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்துவிட்டு பிறகு, 'நான் இக் குழந்தைக்காகவும் வருங்கால வழித்தோன்றலுக்காகவும் சபிக்கப்பட்ட ஷைத்தானைவிட்டு உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்" என்னும் (மர்யமுடைய தாய் செய்த பிரார்த்தனையை கூறும் - என்ற 3:36-வது) இறைவசனத்தை ஓதுவார்கள். Volume :4 Book :60 (சஹீ புஹாரி நூல்)

மேற்கண்ட ஹதீஸில் காணப்படும் ஒரு சுவாரசியமான விவரம் என்னவென்றால், உலக மக்கள் பிறக்கும் போது அனைவரையும் சாத்தான் தொட்டானாம், ஆனால் இயேசுவின் தாய் மரியாளையும், இயேசுவையும் தொடவில்லையாம். ஒருவரை சாத்தான் தொட்டால் என்னவாகும்?

• சாத்தான் வெளிப்பாடுகளில் குழப்பத்தை உருவாக்கி, தன் சொந்த வார்த்தைகளை நுழைத்துவிடுகின்றான்: குர்ஆன் 22:52

(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பி வைத்த ஒவ்வொரு தூதரும், நபியும், (ஓதவோ, நன்மையையோ) நாடும்போது, அவர்களுடைய அந்த நாட்டத்தில் ஷைத்தான் குழப்பத்தை எறியாதிருந்ததில்லை; எனினும் ஷைத்தான் எறிந்த குழப்பத்தை அல்லாஹ் நீக்கியப் பின்னர் அவன் தன்னுடைய வசனங்களை உறுதிப்படுத்துகிறான் - மேலும், அல்லாஹ் யாவற்றையும் அறிந்தவனாகவும், ஞானம் மிக்கோனாகவும் இருக்கின்றான்.(குர்ஆன் 22:52)

சாத்தானின் வசனங்கள் பற்றிய விவரங்களை படிக்க இந்த கட்டுரையை சொடுக்கவும்: Satanic Verses?

• திருட்டுத்தனமாக ஒட்டுக் கேட்கும் ஷைத்தான், குர்ஆன் 15:17-18, 37:8

விரட்டப்பட்ட ஒவ்வொரு ஷைத்தானை விட்டும் நாம் அவற்றைப் பாதுகாத்தோம். திருட்டுத்தனமாக ஒட்டுக் கேட்கும் ஷைத்தானைத்தவிர; (அப்போது) பிரகாசமான தீப்பந்தம் அந்த ஷைத்தானை (விரட்டிப்) பின் பற்றும்.(குர்ஆன் 15:17-18)

(அதைத்) தீய ஷைத்தான்கள் அனைவருக்கும் தடையாகவும் (ஆக்கினோம்). (அதனால்) அவர்கள் மேலான கூட்டத்தார் (பேச்சை ஒளிந்து) கேட்க முடியாது; இன்னும், அவர்கள் ஒவ்வோர் திசையிலிருந்தும் வீசி எறியப்படுகிறார்கள். (அவர்கள்) துரத்தப்படுகிறார்கள்; அவர்களுக்கு நிலையான வேதனையுமுண்டு. (குர்ஆன் 37:7-9)

• தொழாமல் தூங்கிக்கொண்டு இருப்பவர்களின் காதில் சாத்தான் சிறுநீர் கழிக்கிறான்:

1144. அப்துல்லாஹ்(ரலி) அறிவித்தார்.

ஒருவர் விடியும் வரை தூங்கி கொண்டே இருக்கிறார். தொழுகைக்கு எழுவதில்லை என்று நபி(ஸல்) அவர்களிடம் கூறப்பட்டது. அதற்கு நபி(ஸல்) அவர்கள் 'ஷைத்தான் அவர் காதில் சிறுநீர் கழித்துவிட்டான்' என்று விடையளித்தார்கள். Volume :1 Book :19 (சஹி புஹாரி நூல்)

கொட்டாவி விடுதல்:

o அல்லாஹ் கொட்டாவியை வெறுக்கிறார்:

6223. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்'

அல்லாஹ் தும்மலை விரும்புகிறான்; கொட்டாவியை வெறுக்கிறான். எனவே, ஒருவர் தும்மியவுடன் 'அல்ஹம்துலில்லாஹ்' (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே) என்று சொன்னால், அதைக் கேட்கும் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் அவருக்கு ('யர்ஹமுக்கல்லாஹ் - அல்லாஹ் உங்களுக்குக் கருணை புரியட்டும்' என்று) மறுமொழி கூறுவது அவசியமாகும். ஆனால், கொட்டாவி ஷைத்தானிடமிருந்து வருவதாகும். உங்களில் எவரேனும் கொட்டாவிவிட்டால் முடிந்தவரை அதைக் கட்டுப்படுத்தட்டும். ஏனெனில், யாரேனும் (கட்டுப்படுத்தாமல்) 'ஹா' என்று (கொட்டாவியால்) சப்தமிட்டால் ஷைத்தான் சிரிக்கிறான். என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். Volume :6 Book :78 (சஹி புஹாரி நூல்)

o மனிதர்கள் கொட்டாவி விடும் போது சாத்தான் அவர்களுக்குள் செல்கிறான்

5719. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

உங்களில் ஒருவருக்குக் கொட்டாவி ஏற்பட்டால், அவர் தமது வாயின் மீது கையை வைத்து அதைத் தடுக்கட்டும். ஏனெனில், ஷைத்தான் (அப்போது வாய்க்குள்) நுழைகின்றான். இதை அபூசயீத் அல்குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். Book :53 (சஹி முஸ்லிம்)

o ஒருவர் (கட்டுப்படுத்தாமல் 'ஹா' என்று சப்தமிட்டுக்) கொட்டாவிவிட்டால் அதைப் பார்த்து ஷைத்தான் சிரிக்கிறான்

6226. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்'

அல்லாஹ் தும்மலை விரும்புகிறான். கொட்டாவியை வெறுக்கிறான். எனவே, ஒருவர் தும்மியவுடன் 'அல்ஹம்துலில்லாஹ்' (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே) என்று சொன்னால், அதைக் கேட்கும் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் அவருக்கு ('அல்லாஹ் உங்களுக்குக் கருணை புரிவானாக' என) மறுமொழி கூறுவது அவசியமாகும். ஆனால், கொட்டாவி ஷைத்தானிடமிருந்து வருவதாகும். எனவே, உங்களில் எவரேனும் கொட்டாவிவிட்டால் முடிந்தவரை அதைக் கட்டப்படுத்தட்டும். ஏனெனில், உங்களில் ஒருவர் (கட்டுப்படுத்தாமல் 'ஹா' என்று சப்தமிட்டுக்) கொட்டாவிவிட்டால் அதைப் பார்த்து ஷைத்தான் சிரிக்கிறான். என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். Volume :6 Book :78 (மேலும் பார்க்க சஹி புஹாரி எண் : 6223)

சாத்தான் பற்றிய இதர குர்ஆன் வசனங்கள்:

குர்ஆன் 2:34,36,168; 3:36,155,175; 4:38,60,76,116-117,119-120,140,145; 5:90-91; 6:38,43,68; 7:11-12,20-21,27,175,200-201; 8:11,48; 12:5,42,100; 14:22; 15:30-40; 16:63,98; 17:27,53,61,64; 18:50-51; 18:63; 19:44-45; 20:53,116,120; 22:52; 24:21; 25:29; 26:95; 27:24; 28:15; 29:38; 31:21; 34:20-21; 35:6; 36:60; 37:65; 38:41,74-85; 41:36; 43:62; 47:25; 58:10,19; 59:16

கேள்வி 193: இமாம்

பதில் 193: முஸ்லிம் தலைவர்; முஸ்லிம்களின் ஆன்மீக தலைவர்; மசூதியில் தொழுகையை நடத்தும் தலைவர்.

ஒரு இஸ்லாமிய ஆன்மீக தலைவர் அரபி மொழியில் புலமை பெற்று இருக்கவேண்டும், முக்கியமாக குறைஷி அரபி மொழி வழக்கத்தை (உச்சரிப்பை) நன்கு கற்றறிந்தவராக இருக்கவேண்டும் (சஹிஹ் புகாரி 6.507)

ஷியா பிரிவில் உள்ள முஸ்லிம்கள் "இன்றும் இமாம்கள் மறைந்து வாழ்ந்துக்கொண்டு இருக்கிறார்கள்" என்று நம்புகிறார்கள். முஹம்மதுவின் மகள் ஃபாத்திமா மற்றும் அலி மூலமாக வந்த 12 இமாம்களை ஷியா முஸ்லிம்கள் நம்புகிறார்கள். இமாம்கள் பாவமில்லாதவர்கள் என்றும் ஷியாக்கள் நம்புகிறார்கள்.

மூஸாவின் வேதம் ஒரு இமாமாகவும் (நேர்வழி காட்டியாகவும்) ரஹ்மத்தாகவும் இருக்கிறது:

46:12. இதற்கு முன்னர் **மூஸாவின் வேதம் ஒரு இமாமாகவும் (நேர்வழி காட்டியாகவும்) ரஹ்மத்தாகவும் இருந்தது;** (குர்ஆனாகிய) இவ்வேதம் (முந்தைய வேதங்களை) மெய்யாக்குகிற அரபி மொழியிலுள்ளதாகும்; இது அநியாயம் செய்வோரை அச்சமூட்டி எச்சரிப்பதற்காகவும், நன்மை செய்பவர்களுக்கு நன்மாராயமாகவும் இருக்கிறது.

கேள்வி 194: கலீஃபா (கலிஃபா)

பதில் 194: கலிஃப்: இஸ்லாமிய நாட்டை தலைமை தாங்கி நடத்துபவரை கலிஃபா என்று அழைப்பார்கள். சஹீஹ் புகாரி ஹதீஸின் படி, இவர் அரபிய குறைஷி வம்சத்தில் பிறந்தவராக இருக்கவேண்டும். (Sahih Bukhari 8.817)

முஹம்மதுவிற்கு பிறகு இஸ்லாமிய நாட்டின் தலைவர்களை கலிஃபா என்று அழைப்பார்கள். முதல் நான்கு கலிஃபாக்களின் பெயர்களாவன: அபூ பக்கர், உமர், உஸ்மான் (உதமான்) மற்றும் அலி. அதன் பிறகு உம்மாயத் வம்சமும், அதன் பிறகு அப்பாஸித் வம்சமும் இஸ்லாமிய நாடுகளின் தலைவர்களாக ஆட்சி செய்தார்கள்.

கேள்வி 195: குறைஷ் (குரைஷ் - ஒரு வம்சத்தின் பெயர்)

பதில் 195: முஹம்மது பிறந்த வம்சம் "குறைஷி" வம்சமாகும். இஸ்லாமுக்கு முந்தைய காலத்தில் காபா என்ற மக்காவின் ஆலயத்தின் பாதுகாவலர்களாக (பராமரிப்பவர்களாக) இருந்தவர்கள், இந்த பிரிவினர் தான். குர்ஆனின் 106ம் அத்தியாயத்திற்கு "குறைஷின் (குறைஷிகள்)" என்று பெயர்.

கேள்வி 196: தபரி (Tabari)

பதில் 196: அபூ ஜபர் முஹம்மத் இப்னு ஜரீர் அத்தபரி என்பது இவரது முழு பெயராகும். இவர் கி.பி. 839ம் ஆண்டு ஈரானிலுள்ள அமோல், தபரிஸ்தானில் பிறந்தார். இவர் ஈராக்கில் உள்ள பாக்தாத்தில் கி.பி. 923ம் ஆண்டு காலமானார். இவர் ஒரு முக்கியமான இஸ்லாமிய அறிஞராவார். இவர் இஸ்லாமின் ஆரம்ப கால விவரங்களை பல அறிஞர்களிடமிருந்து சேகரித்து தொகுத்தார்.

இவருக்கு பிறகு வந்த இஸ்லாமிய அறிஞர்கள் தபரியின் இந்த தொகுப்பை அதிகமாக பயன்படுத்துகின்றனர். இவரது தொகுப்பிலிருந்து தான், அல்பிரட் குல்லேம் (Alfred Guillaume) இப்னு இஷாக்கின் "முகம்மதுவின் சரிதையிலிருந்து" தொலைந்து விட்ட பகுதிகளை மீட்டு எடுத்தார். இப்னு ஹிஷாம் தம்முடைய சரிதையில் அவ்விவரங்களை வேண்டுமென்றே நீக்கி இருந்தார்.

இஸ்லாமின் சுன்னி பிரிவு முஸ்லிம்களின் கோட்பாடுகளுக்கு தபரியின் தொகுப்பு ஒரு முக்கியமான மூலமாக இருந்துள்ளது. இவரைப் பற்றி சில விவரங்களை இந்த தொடுப்பில் காணலாம் (**wikipedia**)

கேள்வி 197: நிம்ரோத்

பதில் 197: இஸ்லாமின் படி, ஆபிரகாமும் (இப்ராஹிம்) நிம்ரோத்தும் சமகாலத்தவர்கள். உண்மையில் இவ்விருவரும் வெவ்வேறு காலத்தவர்கள்.

பைபிளின் படி நிம்ரோத் "கூஷ்" என்பவரின் மகன், கூஷ் "ஹாம்"மின் மகன், இந்த "ஹாம்" நோவாவின் மகன் (பார்க்க ஆதியாகமம் 10:6,8), அதாவது நிம்ரோத் நோவாவின் கொள்ளுப்பேரனாவார்.

ஆபிரகாமின் வம்ச வரலாறு இவ்விதமாக உள்ளது, அதாவது ஆபிரகாம் தேராவின் மகன், தேராவின் தந்தை நாகோர், அவரின் தந்தை செரூகு, அவரின் தந்தை ரெகூ, அவரின் தந்தை பேலேகு, அவரின் தந்தை ஏபேர், அவரின் தந்தை சாலா, அவரின் தந்தை அர்பக்சாத், அவரின் தந்தை சேம், அவரின் தந்தை நோவா (ஆதியாகமம் 11:10-27). ஆபிரகாமுக்கும் நோவாவிற்கு இடையே 9 வம்சங்கள் இருக்கின்றன.

கேள்வி 198: நிய்யத் (நிய்யா)

பதில் 198: ஒரு செயலை செய்வதற்கு முன்பாக அதை செய்வேன் என்று மனதில் எண்ணி, அதாவது முடிவு செய்து அறிக்கையிடுவதாகும்.

உதாரணத்திற்கு, முஸ்லிம்கள் நோன்பு தொடங்குவதற்கு முன்பு நிய்யத் செய்வதாகும் (இன்று ஒரு நாள் நோன்பு இருப்பேன் என்றுச் சொல்லி அறிக்கையிடுவதாகும்).

கேள்வி 199: மஹ்றம்

பதில் 199: மஹ்றம் என்பது முஸ்லிம்களில் ஒருவருக்கு அவரது பிறப்பின் காரணமாகத் திருமண உறவு வைத்துக்கொள்ளத் தடுக்கப்பட்டோராவர். பொதுவாக ஏற்கப்பட்டுள்ள கருத்தின்படி, பெண்கள் (ஹஜ்) பயணம் செய்யும்போது பயணத்தில் அவர்களுக்குத் துணையிருக்கத் தகுதியுள்ள ஒரு ஆடவர் உடன் செல்ல வேண்டும். பெண் புனிதப் பயணியைப் பொருத்தவரை, ஹஜ் நிறைவேற்றுவதற்கான ஒரு நிபந்தனையாகவும் இது கருதப்படுகிறது.

பெண் புனிதப் பயணிக்கு அவரின் கணவர் உடன் செல்லலாம். ஆனால் அவர் மஹ்றமல்லர். ஒரு பெண்ணுக்கு மஹ்றமானோர் அவரது தந்தை, தந்தையின் தந்தை, தாயின் தந்தை, தந்தையின் அல்லது தாயின் உடன் பிறந்தான், தன் உடன் பிறந்தான், மகன், மகனின் அல்லது மகளின் மகன் முதலியோர் ஆவர்.

ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கும் போதும் அவரது மஹ்றமான ஆண் ஒருவரே அப்பெண்ணின் பாதுகாவலராக இருக்க வேண்டும். அப்படி மஹ்றமான ஆண் இல்லாத வேளையில், சரீஅத் சட்ட நீதிபதி அல்லது மேற்படி நீதிபதியின் அனுமதியுடன் அவரது பிரதிநிதி அத்திருமணத்தை நடத்தி வைக்கலாம்.

கேள்வி 200: மஸீஹி

பதில் 200: இதன் அர்த்தம் “கிறிஸ்தவர்கள்” என்பதாகும். இந்த வார்த்தை “அல்-மஸீஹ்” என்ற வார்த்தையிலிருந்து வந்தது. அல்-மஸீஹ் என்றால், “கிறிஸ்து”என்று பொருள். கிறிஸ்தவர்கள் மேசியா என்றுச் சொல்வார்கள், குர்-ஆன் மேசியாவை “அல்-மஸீஹ்” என்று அரபியில் சொல்கிறது.

கிறிஸ்தவர்கள் என்று அரபியில் சொல்லவேண்டுமென்றால் அவர்களை "மஸீஹி" என்பார்கள்.

கேள்வி 201: மாஷா அல்லாஹ்

பதில் 201: இதன் அர்த்தம் "அல்லாஹ் நாடினால்" அல்லது "அல்லாஹ் எப்படி இந்த ஆச்சரியமானவைகளை உண்டாக்கியிருக்கிறார்!" என்றுச் சொல்லி ஆச்சரியப்படுவது ஆகும். பொதுவாக, முஸ்லிம்கள் ஆச்சரியமானவைகளை பார்த்துவிட்டால் "மாஷா அல்லாஹ்" என்றுச் சொல்லி, "இப்படிப்பட்டவைகளை படைத்த அல்லாஹ்வை புகழுவார்கள்".

கேள்வி 202: முஹர்ரம் (முஹரம் – முஃகர்ரம்)

பதில் 202: இஸ்லாமிய நாட்காட்டியில் (காலண்டரில்) "முஹர்ரம்" என்பது முதல் மாதமாகும். ஷியா முஸ்லிம்கள் முஹர்ரம் மாதத்தின் முதல் பத்து நாட்களை துக்க நாட்களாக அனுசரிக்கிறார்கள். கர்பலா என்ற இடத்தில் முஹம்மதுவின் பேரன் "ஹுசைன்" கொல்லப்பட்ட மாதமாக முஹர்ரம் இருப்பதால், அவரின் மரணத்தை நினைவு கூறும் வண்ணமாக இப்படி துக்க நாட்களை அனுசரிக்கிறார்கள். இந்த நாட்களில் அவர்கள் எந்த ஒரு கேளிக்கை காரியங்களிலும் ஈடுபடமாட்டார்கள்.

எகிப்தின் பார்வோன் கையிலிருந்து இஸ்ரவேல் மக்களை இறைவன் விடுவித்ததற்காக, சுன்னி (பிரிவினர்) முஸ்லிம்கள், முஹர்ரம் மாதத்தின் 9, 10 மற்றும் 11ம் நாட்களை நினைவு கூறுகிறார்கள்.

யூதர்கள் செய்கிறார்களே என்பதற்காக தானும் செய்வேன் என்று முஹம்மது முடிவு செய்தார்:

3397. இப்னு அப்பாஸ்(ரலி) அறிவித்தார்

நபி(ஸல்) அவர்கள் மதீனா நகருக்கு வந்தபோது யூதர்கள் ஒரு நாளில் நோன்பு நோற்பதைக் கண்டார்கள் அதாவது ஆஷூராவுடைய (முஹர்ரம் 10வது) நாளில் (யூதர்கள்) நோன்பு நோற்று வந்ததை இப்னு அப்பாஸ்(ரலி) குறிப்பிடுகிறார்கள் - யூதர்கள், 'இது மாபெரும் நாள். மூஸா(அலை) அவர்களை இந்த நாளில் தான் அல்லாஹ் காப்பாற்றினான்; ஃபிர்அவ்னின் கூட்டத்தாரை (கடலில்) மூழ்கடித்தான். எனவே, மூஸா(அலை) அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் விதத்தில் நோன்பு நோற்றார்கள்' என்று கூறினார்கள். நபி(ஸல்) அவர்கள், 'நான் அவர்களை விட மூஸா அவர்களுக்கு, மிக நெருக்கமானவன்' என்று கூறிவிட்டு, அந்த நாளில் தாமும் நோன்பு நோற்று, தம் தோழர்களுக்கும் (உபரியான) நோன்பு நோற்கும்படி ஆணையிட்டார்கள்.

கேள்வி 203: யாஜித் 1 (முதலாம் யாஜித், ஆட்சி காலம் 680-683)

பதில் 203: முதலாம் யாஜித் "முஅவியாவின்" மகன் ஆவார். இவர் உம்மயத் வம்சத்தின் வழியில் வந்த இரண்டாவது காலிஃபா ஆவார். இவரது தந்தை மரித்த ஏப்ரில் 7ம் நாள் 680ம் ஆண்டு இவர் கலிஃபாவாக பதவி ஏற்றார். இவரது தந்தை "முஅவியா" தனக்குப் பிறகு ஆட்சித் தலைவராக தன் மகனாகிய யாஜித் வரவேண்டும் என்று முடிவு செய்தார். இவரைத்

தொடர்ந்து, சொந்த குடும்பத்தார்களே, ஆட்சித் தலைவர் பதவி வகிக்கவேண்டும் என்ற ஒரு பழக்கமாக வந்துவிட்டது.

இந்த முதலாம் யாஜித் என்பவரினால் தான் ஹுசைன் மற்றும் அவரது குடும்பம் கர்பலா என்ற இடத்தில் முழுவதுமாக அழிந்துவிட்டது. இவர் நான்கு ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். இவர் ஆட்சி புரிந்த காலத்தில் முஸ்லிம்கள் “கோராசன்” மற்றும் “கவிர்ஜம்” என்ற இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டார்கள். இவர் ஒரு கவிஞரும் கூட. அரபி கஜல் என்ற பாடல்களை பாடும் ஹஃபிஜ் என்பவர், தன்னுடைய ”திவான்” என்ற கவிதையில், முதலாவது மற்றும் கடைசி வரிகளை இந்த யாஜித் என்பவரின் கவிதைகளிலிருந்து எடுத்துள்ளார்.

இவரைப் பற்றி மேலும் படிக்க:

- இஸ்லாமின் அரச குடும்பம்: பாகம் 6: யாஜித்தும் ஹுசைனும்
- இஸ்லாமிய மூல நூல்களிலிருந்து கலிஃபத்துவத்தின் துவக்கம், சரிவு மற்றும் முழுவதுமான வீழ்ச்சி (ஆங்கில புத்தகம்)

கேள்வி 204: ரஜப்

பதில் 204: இஸ்லாமிய காலண்டரில் (நாட்காட்டியில்) 7 வது மாதமாக “ரஜப்” மாதம் இருக்கிறது.

கேள்வி 205: ரஜம் (Rajm) - கல்லெரிந்து கொல்லுதல்

பதில் 205: இஸ்லாமில் காணப்படும் “விபச்சாரத்திற்கு கல்லெரிந்து கொல்லும் தண்டனைப் பற்றிய” விவரங்களை படிக்க இந்த கட்டுரையை சொடுக்கவும்: Stoning and Flogging in Islam.

இஸ்லாமிய ஹதீஸ்களின் படி, ”கல்லெரிந்து கொல்லுதல் பற்றிய வசனம்” முஹம்மதுவிற்கு இறக்கப்பட்டதாம், ஆனால், அந்த வசனம் தற்காலத்தில் நம்மிடம் இருக்கும் குர்-ஆனில் காணப்படவில்லை. இதைப் பற்றி மேலும் அறிய படிக்கவும்: Verses of Stoning.

மூலம்

கேள்வி 206: ரஸூல் அல்லாஹ்

பதில் 206: இதன் அர்த்தம் “அல்லாஹ்வின் தூதர்” என்பதாகும். இந்த பட்டப்பெயர் முஹம்மதுவை பொதுவாக குறிக்க பயன்படுத்தப்படுகிறது.

கேள்வி 207: லைலத்துல் கத்ர்

பதில் 207: இதன் பொருள் கண்ணியமிக்க இரவு என்பதாகும். இந்த இரவு ஆயிரம் மாதங்களை விட சிறப்புத் தகுதி பெற்றுள்ளதாக குர்ஆன் கூறுகிறது. இந்த இரவில் குர்-ஆன் இறக்கப்பட்டதாக குர்-ஆன் வசனம் கூறுகின்றது.

குர்-ஆன் 97:1-5

நிச்சயமாக நாம் அதை (குர்ஆனை) கண்ணியமிக்க (லைலத்துல் கத்ர்) என்ற இரவில் இறக்கினோம். மேலும் கண்ணியமிக்க இரவு என்ன என்பதை உமக்கு அறிவித்தது எது? கண்ணியமிக்க (அந்த) இரவு ஆயிரம் மாதங்களை விட மிக்க மேலானதாகும். அதில் மலக்குகளும், ஆன்மாவும் (ஜிப்ரீலும்) தம் இறைவனின் கட்டளையின் படி (நடைபெற வேண்டிய) சகல காரியங்களுடன் இறங்குகின்றனர். சாந்தி (நிலவியிருக்கும்); அது விடியற்காலை உதயமாகும் வரை இருக்கும்.

இதைப் பற்றி மேலும் அறிய கீழ்கண்ட கட்டுரையை படிக்கவும்: குர்ஆன் முரண்பாடு: குர்ஆன் இறங்கிய விதம் - சிறிது சிறிதாக இறங்கியதா? அல்லது ஒரே முறை மொத்தமாக இறங்கியதா?

கேள்வி 208: லைலா - முஹம்மதுவிற்கும் லைலாவிற்கும் என்ன சம்மந்தம்?

பதில் 208: லைலா என்ற ஒரு பெண் முஹம்மதுவை திருமணம் செய்ய மறுத்துவிட்டார்கள்? ஏன்?

இஸ்லாமிய சரித்திர அறிஞர் தபரி "The History of Al-Tabari: The Last Years of the Prophet" என்ற முஹம்மதுவின் சரித்திரத்தில் கீழ்கண்ட நிகழ்ச்சியை குறிப்பிடுகிறார்.

முஹம்மது தெருவில் நடந்துச் சென்றுக்கொண்டு இருக்கும்போது, லைலா என்ற ஒரு பெண் அவருக்கு பின்னால் சென்று பின்பக்கத்திலிருந்து அவரது தோல்பட்டையில் தட்டுகிறாள். அவர் திரும்பி பார்த்ததும். என்னை திருமணம் செய்துக்கொள்கிறாயா? என்று கேட்கிறாள். அதற்கு "நான் உன்னை திருமணம் செய்துக்கொள்கிறேன்", என்றுச் சொல்லி தன் சம்மதத்தை முஹம்மது அளிக்கிறார். இந்தப் பெண் தன் ஜனங்களிடம் சென்று "முஹம்மதுவை நான் திருமணம் செய்துக்கொள்கிறேன், அவர் இதற்கு சம்மதம் என்று கூறினார்" என்று கூறுகிறாள். இதற்கு அம்மக்கள் "நீ ஒரு நல்ல குடும்பத்துப் பெண், ஆனால் முஹம்மது ஒரு பெண் பித்து பிடித்தவர்", இப்படிப்பட்டவரை நீ திருமணம் செய்துக்கொள்வது சரியானது அல்ல. எனவே, அவரிடம் சென்று, இந்த திருமணத்தில் தனக்கு விருப்பமில்லை என்றுச் சொல்லி, அவரிடமிருந்து விலகி வந்துவிடு" என்று கூறினார்கள். இந்தப் பெண்ணும் அப்படியே முஹம்மதுவிடம் சென்று, தனக்கு விருப்பமில்லை, இந்த ஒப்பந்தத்தை முறித்துவிடுங்கள் என்று கூறுகிறாள், முஹம்மதுவும் இதற்கு ஒப்புதல் அளித்துவிடுகிறார்.

... Layla bt. al-Khatim b. 'Adi b. 'Amr b. Sawad b. Zafar b. al-Harith b. al-Khazraj approached the Prophet while his back was to the sun, and clapped him on his shoulder. He asked who it was, and she replied, "I am the daughter of one who competes with the wind. I am Layla bt. al-Khatim. I have come to offer myself [in marriage] to you, so marry me." He replied, "I accept." She went back to her people and said that the

Messenger of God had married her. They said, "What a bad thing you have done! You are a self-respecting woman, but the Prophet is a womanizer. Seek an annulment from him." She went back to the Prophet and asked him to revoke the marriage and he complied with [her request].

(The History of Al-Tabari: The Last Years of the Prophet, translated and annotated by Ismail K. Poonawala [State University of New York Press, Albany, 1990], Volume IX, p. 139; bold emphasis ours) மூலம்

இறைவனின் தீர்க்கதரிசி என்றுச் சொல்லக்கூடிய ஒரு நபர் செய்யக்கூடிய செயலா இது? முஹம்மதுவை அம்மக்கள் ஒரு பெண் பித்துபிடித்தவர் என்று ஏன் கூறினார்கள்? இதைப் பற்றி மேலும் அறிய இந்த கட்டுரையை படிக்கவும்: முஹம்மது, பெண் பித்து பிடித்தவரா? லைலா ஏன் அவரை மணமுடிக்கவில்லை?

கேள்வி 209: ஜம் ஜம் கிணறு (தண்ணீர்)

பதில் 209: மக்காவில் உள்ள இந்த கிணற்றிலிருந்து தான் ஆகார் தண்ணீர் குடித்து தன்னுடைய மற்றும் தன் மகன் இஸ்மாயிலுடைய தாகத்தை தணித்துக்கொண்டார் என்று இஸ்லாமியர்கள் நம்புகிறார்கள். அதாவது ஆபிரகாம் ஆகாரையும் இஸ்மவேலையும் வீட்டை விட்டு அனுப்பிவிட்ட போது இந்த நிகழ்ச்சி நடந்ததாக இஸ்லாமியர்கள் நம்புகிறார்கள். முஸ்லிம்கள் ஒவ்வொரு ஆண்டும் "மக்காவிற்கு புனிதப்பயணம் (ஹஜ்)" செய்யும் போது இந்த நிகழ்ச்சியை நினைவு கூறுகிறார்கள்.

மேலும் ஹஜ் செய்து திரும்பும் முஸ்லிம்கள், இந்த ஜம் ஜம் தண்ணீரை தங்கள் நாட்டிற்கு (வீட்டிற்கு) கொண்டு வருகிறார்கள். அதனை தங்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் உறவினர்களுக்கும் கொடுக்கிறார்கள். இந்த தண்ணிரை குடித்தால் நோய்கள் தீரும் என்றும் முஸ்லிம்கள் நம்புகிறார்கள்.

கேள்வி 210: ஷியா

பதில் 210: ஷியா என்றால் "பின்பற்றுபவர்கள்" அல்லது "ஒரு கட்சியின் உறுப்பினர்கள்" என்று பொருளாகும். முஹம்மதுவின் மருமகனாகிய "அலி" அவர்களை பின்பற்றுபவர்கள் "ஷியா" பிரிவினர் என்று அழைக்கப்படுகிறார்கள். முஹம்மதுவின் மரணத்திற்கு பிறகு இஸ்லாமிய சமுதாயத்திற்கு தலைமை (கலிஃபா) பொறுப்பேற்ற தலைவர்களில் "அலி" நான்காவதாக இருக்கிறார்கள். இந்த பிரிவினர், முதல் மூன்று தலைவர்களை அதிகாரபூர்வமான தலைவர்களாக அங்கீகரிப்பதில்லை. இவர்களின் கருத்துப்படி, முஹம்மதுவிற்கு அடுத்தபடியாக, இஸ்லாமிய சமுதாயத்தின் தலைவராக பதவி வகிப்பதற்கு முஹம்மதுவின் மருமகன் "அலி" அவர்களுக்குத் தான் உரிமை உள்ளது. அலி முஹம்மதுவின் மகள் பாத்திமாவின் கணவராவார். அலிக்கு பிறகு அந்த கலிஃபா பதவி அலியின் மகன்கள் ஹசேன், ஹுசேன் என்பவர்களுக்கு கிடைக்கவேண்டும் என்று ஷியா மக்கள் விரும்பினார்கள். ஆனால், ஹசேன் தன் உரிமையை விட்டுக்கொடுத்துவிட்டார். தனக்கு தலைமைப் பதவி கிடைக்கவேண்டும் என்று ஹுசேன் போராடியதால், கி.பி. 680ம் ஆண்டு, கர்பலா என்ற இடத்தில் நடந்த போரில் கொல்லப்பட்டார். ஹுசேனின் இந்த மரணம் (உயிர்த்தியாகம்) ஷியா முஸ்லிம்களுக்கு அதி முக்கியமான நிகழ்வாகும். இதனை அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் நினைவு கூறுகிறார்கள். ஒரு வகையில் சொல்லவேண்டுமென்றால், ஷியா முஸ்லிம்கள், தங்கள் தலைவர் அடைந்த துக்கத்தை ஒவ்வொரு ஆண்டும் நினைவு கூர்ந்து இவர்களும் துக்கமடைகிறார்கள்.

ஷியா இமாம்கள் "ஷியா சமுதாயத்தை" 12வது இமாம் வரை தலைமை தாங்கி நடத்திக்கொண்டு வந்தார்கள். அதன் பிறகு கி.பி. 874ஆண்டு அவர்கள் மறைந்து விட்டார்கள். இந்த 12வது இமாமும், அவருக்கு அடுத்தபடியாக பதவியேற்ற இமாம்களும் மறைந்திருக்கிறார்கள் என்றும், ஒரு குறிப்பிட்ட காலம் வரை மறைந்திருந்து அதன் பிறகு இவர்கள் தங்களை உலகிற்கு வெளிப்படுத்துவார்கள் என்று நம்பப்படுகின்றது. அவர்களுக்கு தனிப்பட்ட புத்தகங்கள் இருப்பதாகவும், அவைகள் குர்ஆனின் விளக்கவுரைகளாக இருக்கின்றன என்றும் நம்பப்படுகின்றது. ஷியாக்கள் பெரும்பான்மையாக ஈரான், ஈராக் மற்றும் லெபனானில் வாழ்கிறார்கள். சுன்னி முஸ்லிம்கள் பயன்படுத்தும் உஸ்மான் தயாரித்த பிரதியில் இருப்பதைக் காட்டிலும் வேறுவிதமான குர்ஆன் ஓதுதலை இவர்கள் கொண்டு இருக்கிறார்கள்.

இமாம்கள் பற்றி ஷியா பிரிவினரின் கீழ்கண்டவாறு நம்புகிறார்கள்:

- மலக்குகளுக்கும் (தேவதூதர்களுக்கும்), தீர்க்கதரிசிகளுக்கும், இறைத்தூதர்களுக்கும் கொடுக்கப்பட்டு இருக்கும் ஞானம், இமாம்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது (பக்கம் 255).
- கடந்த காலத்தில் நடந்துமுடிந்த அனைத்து விஷயங்களையும், எதிர் காலத்தில் நடக்கவிருக்கும் அனைத்து விஷயங்களையும் இமாம்கள் அறிவார்கள், இவர்களுக்கு மறைவாக எதுவும் இருக்காது (பக்கம் 260)
- இமாம்கள் தவிர வேறு யாராலும் 100 சதவிகிதம் சரியாக குர்ஆனை தொகுக்க முடியாது, குர்ஆனில் உள்ள எல்லா ஞானமும் இமாம்களுக்கு உள்ளது (பக்கம் 228) (அல் காஃபியின் கருத்து)
- இமாம்கள் உலகமனைத்திலும் ஆட்சி புரிய அதிகாரம் பெற்று இருக்கிறார்கள் "Certainly, the Imam commands a noble station and lofty position; a creative vicegerency to whose rule and power submit the very atoms of all creation!" (Khumaini, in his book, The Islamic Government page 52-53)

சில இஸ்லாமிய நாடுகள் ஷியா என்ற பிரிவு இல்லாமல் போகவேண்டும் என்று அதனை தங்கள் நாட்டில் தடை செய்கிறார்கள், உதாரணத்திற்கு மலேசியாவைச் சொல்லலாம். இந்த நாட்டில் ஷியா பிரிவை ஒழித்துக் கட்ட முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

தலைப்பு: இஸ்லாம் (211 – 240)

உலகம் முஸ்லிம்களை சரியாக புரிந்துக்கொள்ளவில்லை, முஸ்லிம்கள் உலகை சரியாக புரிந்துக் கொள்ளவில்லை. முஸ்லிமல்லாத மக்களுக்கு முஸ்லிம்கள் ஒரு புரியாத புதிராகவே உள்ளார்கள். எல்லோருக்கும் புரியும் விஷயம் முஸ்லிம்களுக்கு மட்டும் புரிவதில்லை, அதே போன்று முஸ்லிம்கள் பேசுவதை அகராதிகள் வைத்துக்கொண்டு தான் புரிந்துக்கொள்ள வேண்டியுள்ளது.

முஸ்லிம்களை புரிந்துக் கொள்ளவேண்டுமென்றால், முஸ்லிம்கள் பின்பற்றும் இஸ்லாமை நாம் தெரிந்துக்கொள்ளவேண்டும். முஸ்லிம்களின் நம்பிக்கை என்ன? பழக்க வழக்கங்கள் என்ன? அவர்களின் கலாச்சாரம் என்ன? அவர்கள் மனதில் ஓடும் எண்ணங்கள் என்ன? போன்ற கேள்விகளுக்கு பதில்களைக் கண்டால் தான், அவர்களை புரிந்துக் கொள்ளமுடியும்.

நான் ஏன் முஸ்லிம்களையும், இஸ்லாமையும் புரிந்துக்கொள்ளவேண்டும்? என்று கேள்வி கேட்கவேண்டாம். நம் வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்கும், ஒரு குறிப்பிட்ட மக்களை புறக்கணித்துவிட்டு, இந்த உலகில் நிம்மதியாக நாம் வாழமுடியாது என்பதை கவனத்தில் வைத்துக்கொள்ளவும். நாம் ஒருவரை ஒருவர் சார்ந்துள்ளோம் என்பதை கவனத்தில் வைத்துக்கொள்ளவும்.

கேள்வி 211: முஸ்லிம் என்றால் யார்?

பதில் 211: இஸ்லாம் என்ற மதத்தை பின்பற்றுகிறவர்களை முஸ்லிம்கள் என்பார்கள். இஸ்லாமுடைய இறைவனின் பெயர் "அல்லாஹ்" என்பதாகும். முஹம்மது என்பவர் அல்லாஹ்வின் தூதர் (தீர்க்கதரிசி) என்றும் இவர்கள் நம்பவேண்டும். குர்ஆன் என்பது இஸ்லாம் மதத்தின் வேதமாக முஸ்லிம்களால் கருதப்படுகின்றது.

கேள்வி 212: முஸ்லிம்கள், இஸ்லாமியர்கள் மற்றும் முஹம்மதியர்கள், வித்தியாசம் என்ன?

பதில் 212: இந்த மூன்று வார்த்தைகளும் முஸ்லிம்களையே குறிக்கிறது. இஸ்லாம் என்பது ஒரு மதம், இதனை பின்பற்றுகிறவர்களை "இஸ்லாமியர்கள்" என்றும் முஸ்லிம்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

முஹம்மது என்பவர் அல்லாஹ்வின் இறைத்தூதர் என்று முஸ்லிம்கள் நம்புகிறார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு " முஹம்மதியர்கள்" என்ற பொதுவான பெயரில் முஸ்லிம்கள் அழைக்கப்பட்டு இருந்தார்கள். சமீப காலமாக "முஹம்மதியர்கள்" என்ற வார்த்தை கைவிடப்பட்டு முஸ்லிம்கள், இஸ்லாமியர்கள் என்ற வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றது.

கேள்வி 213: அரேபியர்கள் அனைவரும் முஸ்லிம்களா?

பதில் 213: இல்லை, அரேபியர்கள் அனைவரும் முஸ்லிம்கள் அல்ல. அரேபியா என்பது ஒரு தீபகர்ப்பம். இந்த நிலப்பரப்பில் வாழ்ந்த பழங்குடியினர்கள் அரேபியர்கள் என்று இஸ்லாமுக்கு முன்பும் அழைக்கப்பட்டு இருந்தார்கள். அக்காலத்தில் அரேபிய பகுதியில் அரபி பேசும் கிறிஸ்தவர்களும், யூதர்களும் கூட வாழ்ந்துக்கொண்டு இருந்தார்கள்.

ஏழாம் நூற்றாண்டில் அந்த அரேபிய பழங்குடியினரில் தோன்றிய முஹம்மது, முழு அரேபியாவை ஆக்கிரமித்து, அதனை இஸ்லாமிய மயமாக மாற்றினார். அவருக்கு பிறகு அடுத்து வந்த கலீஃபாக்கள் கூட பல மத்திய கிழக்கு நாடுகள் மீது யுத்தம் செய்து அவைகளை ஆக்கிரமித்தார்கள், இஸ்லாமை பரப்பினார்கள். இன்று அரேபியர்கள் என்றால் அனைவருக்கும் "முஸ்லிம்கள்" தான் ஞாபகத்திற்கு வருகிறது.

உலக முஸ்லிம்கள் ஜனத்தொகையில் அரபி பேசுபவர்கள் 15% உள்ளதாக கூறப்படுகின்றது. மீதமுள்ள முஸ்லிம்கள் (85%) அரபி பேசாத மற்ற உலக நாடுகளில் வாழ்பவர்கள் ஆவார்கள். தங்கள் தங்கள் நாட்டின் தாய் மொழியை பேசுகிற முஸ்லிம்கள் இவர்கள் ஆவார்கள். தமிழ் மற்றும் மளையாலம் பேசும் முஸ்லிம்கள் இருக்கிறார்கள், உருது பேசும் முஸ்லிம்கள் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் தொழுதுக்கொள்ளும் போது மட்டுமே அரபியில் தொழுதுக்கொள்வார்கள், மற்றபடி இவர்களுக்கு அரபி மொழி பேசவும் வராது, இவர்களுக்கு புரியாதும் கூட. இமாம்கள் என்றுச் சொல்லக்கூடிய அறிஞர்கள் மட்டுமே அரபி மொழியை பேசமும் புரிந்துக்கொள்ளவும் செய்வார்கள்.

இந்தியர்கள் என்றால் "இந்துக்கள் மட்டும்" என்றுச் சொல்வது எப்படி தவறோ! அது போல அரபியர்கள் என்றால் வெறும் முஸ்லிம்கள் என்றுச் சொல்வது

தவறு. அரபி பேசும் முஸ்லிமல்லாதவர்களும் (கிறிஸ்தவர்களும், யூதர்களும்,..) இருக்கிறார்கள்.

கேள்வி 214: முஸ்லிம்களுக்கும், யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையேயுள்ள சம்மந்தம் என்ன?

பதில் 214: யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் சம்மந்தமுள்ளது, ஆனால் முஸ்லிம்களுக்கும் மற்ற இருவருக்கும் எந்த ஒரு சம்மந்தமும் இல்லை.

கேள்வி 215: இஸ்லாமுக்கும் யூத கிறிஸ்தவர்களுக்கும் நிறைய சம்மந்தம் இருக்கிறதே (ஆபிரகாம், இஸ்மாயீல், எருசலேம்...)? நீங்கள் இல்லை என்றுச் சொல்கிறீர்களே!

பதில் 215:

நபர்கள்:

யூதர்களின் தகப்பன் ஆபிரகாம் (கி.மு. 2000). ஆபிரகாமுக்கு 2000 ஆண்டுகள் கழித்து இயேசுக் கிறிஸ்து யூதராக வந்தார், அவரை பின்பற்றுகிறவர்கள் கிறிஸ்தவர்கள்.

இயேசுவிற்கு 600 ஆண்டுகளுக்கு பிறகு அரேபியாவில் 'முஹம்மது' என்ற பெயரில் ஒருவர் வந்து, ஆபிரகாம், இயேசுவின் வழியில் வந்த நபி என்று தன்னைப் பற்றி கூறிக்கொண்டார். இவர் உண்டாக்கிய மதம் தான் இஸ்லாம். இந்த மூன்றும் ஆபிரகாமிய மதங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

வேதங்கள்:

யூதர்களின் வேதம் பைபிளில் உள்ள பழைய ஏற்பாடு. கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டையும் பின்பற்றுகிறார்கள், புதிய ஏற்பாட்டையும் பின்பற்றுகிறார்கள். முஸ்லிம்களின் வேதம் குர்ஆன். முந்தைய வேதமாகிய பைபிளை (பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள்) நம்புகிறோம் என்று முஸ்லிம்கள் சொல்வார்கள், ஆனால் அதனை படிக்கமாட்டார்கள், அவைகள் மாற்றப்பட்டுவிட்டது என்று குற்றம்சாட்டுவார்கள்.

குர்ஆனில் பைபிளின் நிகழ்ச்சிகள் மறுபதிவு செய்யப்பட்டிருக்கிறது, இதனால் தான் பைபிளில் வரும் நபர்களின் பெயர்கள், நிகழ்ச்சிகள் குர்ஆனிலும் வருகின்றது.

சொந்தம் கொண்டாடுதல்:

குர்ஆன் யூத கிறிஸ்தவர்களின் பல விவரங்களை சொந்தம் கொண்டாடுகின்றது.

- யூத கிறிஸ்தவர்களின் வேதங்களை குர்ஆன் சொந்தம் கொண்டாடுகிறது.
- பைபிளின் இறைவனாகிய "யெகோவா தேவனை" குர்ஆன் சொந்தம் கொண்டாடி, அல்லாஹ் தான் யெகோவா தேவன் என்று சொல்கிறது.
- பைபிளின் தீர்க்கதரிசிகளை குர்ஆன் சொந்தம் கொண்டாடுகிறது.
- கடைசியாக எருசலேமையும் இஸ்லாமின் மூன்றாம் புனித பூமி என்றுச் சொல்லி, இஸ்லாம் சொந்தம் கொண்டாடுகிறது.

இஸ்லாம் யூத கிறிஸ்தவர்களிடமிருந்து எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு, "நீங்கள் தவறு, நான் தான் சரி" என்றுச் சொல்கிறது. இங்கே தான் யூத கிறிஸ்தவர்களுக்கும் நெஞ்சு எரிகிறது. யூதர்களும் கிறிஸ்தவர்களும் முஹம்மதுவை ஒரு நபியாக ஏழாம் நூற்றாண்டிலிருந்தே ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆக, இஸ்லாம் பைபிளின் இறைவனை எடுத்துக்கொண்டது, நபிமார்களை எடுத்துக்கொண்டது, வேதங்களை எடுத்துக்கொண்டது, கடைசியாக எருசலேம் நகரத்தையும் எடுத்துக்கொண்டது.

அதே நேரத்தில் பைபிளில் உள்ள பல சத்தியங்களை, கட்டளைகளை மாற்றிச் சொல்கிறது. அதனால், பைபிளின் படி முஹம்மது ஒரு கள்ள நபி, குர்ஆன் யெகோவா அனுப்பிய வேதமில்லை. பைபிளின் இறைவனாகிய யெகோவா, குர்ஆனின் இறைவன் அல்லாஹ் இல்லை.

இப்போது புரிகின்றதா, யார் யாரை **சொந்தம்** கொண்டாடுகிறார்கள் என்று!

கேள்வி 216: இஸ்லாமின் மூன்று புனித நகரங்கள் யாவை?

பதில் 216: முஸ்லிம்கள் மூன்று நகரங்களை புனிதமாக கருதுகிறார்கள்:

1) மக்கா: முஹம்மது பிறந்த ஊர், மற்றும் காபா என்ற ஆலயம் இருக்கும் இடம். இந்த காபா உள்ள திசையை நோக்கி முஸ்லிம்கள் தொழுகிறார்கள்.

2) மதினா: முஹம்மது மக்காவிலிருந்து உயிர் தப்பச் சென்ற இன்னொரு ஊர். இந்த இடத்தில் இஸ்லாமின் முதல் மசூதி உள்ளது. இஸ்லாம் வளர்ந்தது இந்த ஊரிலிருந்த போது தான்.

3) எருசலேம் நகரம்: முந்தைய வேதக்காரர்களான யூத கிறிஸ்தவர்களின் புனிதப் பட்டணம். இந்த பட்டணத்தை முஹம்மதுவிற்கு அடுத்த ஆட்சி புரிந்த உமர் அவர்கள் முற்றுகையிட்டு ஆக்கிரமித்தார்கள்.

உலக அரசியிலும் மத்திய கிழக்கு நாடுகளில் நடக்கும் சண்டைகள் இந்த நகரத்தையும், இஸ்ரேல் மண்ணையும் சுற்றியே நடப்பதை செய்திகளில் காணலாம்.

கேள்வி 217: முஸ்லிம்கள் ஒரு நாளுக்கு எத்தனை முறை தொழுகிறார்கள்?

பதில் 217: முஸ்லிம்களில் இரண்டு பெரிய பிரிவுகள் உள்ளன. சன்னி பிரிவினர், ஷியா பிரிவினர்.

சன்னி பிரிவினர் ஒரு நாளைக்கு ஐந்த வேளை தொழுகிறார்கள்.

ஷியா பிரிவினர் ஒரு நாளைக்கு மூன்று வேளை தொழுகிறார்கள்.

இந்த மூன்று வேளைகளில் ஐந்து தொழுகைகளையும் சேர்த்து இவர்கள் தொழுது விடுகிறார்கள் என்று ஷியா பிரிவினர் கூறுகிறார்கள்.

கேள்வி 218: முஸ்லிம்களில் தினமும் மூன்று முறை மட்டும் தொழுபவர்கள் இருக்கிறார்களா?

பதில் 218: மேலே சொன்னது போன்று, ஷியா முஸ்லிம் பிரிவினர் மூன்று வேளை தொழுகிறார்கள். அதே போன்று "குர்ஆன் மட்டும்(Quran Only Muslims)" என்று ஒரு முஸ்லிம் குழுவினரும் இருக்கிறார்கள். இவர்கள் மூன்று வேளை மட்டுமே தொழுகிறார்கள். இவர்களின் கூற்றுப்படி குர்ஆன் மட்டும் தான் வேதம், ஹதீஸ்கள் மற்றும் இதர இஸ்லாமிய புத்தகங்களை அவர்கள் ஏற்பதில்லை.

குர்ஆனை மட்டும் நம்பும் இவர்கள் ஏன் மூன்று மட்டும் தொழவேண்டும்? என்று கேள்வி கேட்டால், இதற்கு பதில் "குர்ஆன் சொல்வது வேறும் மூன்று வேளை தொழுகை மட்டும் தான்" என்பதாகும்.

ஒரு முஸ்லிம் செய்யவேண்டிய கடமையை கூட குர்ஆன் தெளிவாகச் சொல்வதில்லை என்பது கசப்பான உண்மை.

கேள்வி 219: இஸ்லாமின் படி அல்லாஹ்விற்காக கட்டப்பட்ட முதலாவது மஸ்ஜித்(மசூதி, வணக்கஸ்தலம்) எது?

பதில் 219: இன்று மக்கா நகரில் காணும் காபா என்ற ஆலயம் தான் அல்லாஹ்விற்காக முதலாவது கட்டப்பட்ட ஆலயம் என்று இஸ்லாம் சொல்கிறது.

பைத்துல்லாஹ் என்றும் காபாவை அழைப்பார்கள். பைத் என்றால் வீடு, ஆகையால் பைத்துல்லாஹ் என்றால் அல்லாஹ்வின் வீடு என்று இதன் பொருள்.

கேள்வி 220: காபாவை கட்டியது யார்?

பதில் 220: அரபி மொழி வார்த்தை "காபா" என்றால் “கனசதுரம் (Cube)” என்று பொருள். மக்கா நகரில் உள்ள பெரிய மசூதியின் நடுப்பகுதியில் ஒரு கனசதுர வடியில் இது கட்டப்பட்டுள்ளது. இந்த காபாவை முதன் முதலில் ஆதாம் கட்டியதாகவும், அதன் பிறகு இப்றாஹீமும் இஸ்மாயீலும் கட்டியதாக இஸ்லாம் சொல்கிறது, இதற்கு சரித்திர ஆதாரங்கள் எதுவும் இல்லை.

இந்த காபாவில் 360 சிலைகளை வைத்து மக்கா பழங்குடியினர் வணங்கிக்கொண்டு இருந்தனர், இவர்களில் முஹம்மதுவும் ஒருவராவார். முஹம்மது மக்காவை கைப்பற்றிய பிறகு, அந்த சிலைகள் அனைத்தையும் காபாவிலிருந்து அகற்றிவிட்டார்.

முஸ்லிம்கள் முதல் 12+ ஆண்டுகள் எருசலேம் திசையை நோக்கி தொழுதார்கள், அதன் பிறகு தங்கள் வணக்கதிசையை (கிப்லா) காபாவிற்கு மாற்றிவிட்டார்கள். அன்றிலிருந்து இன்று வரை உலகில் உள்ள முஸ்லிம்கள் அனைவரும், எந்த நாட்டில் இருந்தாலும், அவர்கள் மக்காவை/காபாவை நோக்கி தொழுகிறார்கள்.

கேள்வி 221: காபா மற்றும் எருசலேம் ஆலயத்திற்கு இடையே 40 ஆண்டுகள் இடைவெளியா?

பதில் 221: முஹம்மது ஒரு சரித்திர தவறை செய்துள்ளார், அதாவது சாலொமோன் என்ற அரசர் எருசலேமில் கட்டிய ஆலயத்திற்கும், காபா கட்டப்படுவதற்கும் இடையே 40 ஆண்டுகள் என்றுச் சொல்லியுள்ளார். முதலாவது முஹம்மது கூறியவற்றை படிக்கவும்:

ஸஹீஹ் புகாரி பாகம் 4, அத்தியாயம் 60, எண் 3366 கீழ்கண்டவிதமாக கூறுகிறது:

அபூ தர்(ரலி) அறிவித்தார்

நான் (நபி(ஸல்) அவர்களிடம்),'இறைத்தூதர் அவர்களே! பூமியில் முதன் முதலாக அமைக்கப்பட்ட பள்ளிவாசல் எது?' என்று கேட்டேன். அவர்கள்,'அல் மஸ்ஜிதுல் ஹராம் - மக்கா நகரிலுள்ள புனித (கஅபா அமைந்திருக்கும்) இறையில்லம்" என்று பதிலளித்தார்கள். நான்,'பிறகு எது?' என்று கேட்டேன். அவர்கள்,'ஜெரூஸத்தில் உள்ள) அல் மஸ்ஜிதுல் அக்ஸா" என்று பதிலளித்தார்கள். நான்,'அவ்விரண்டுக்கு மிடையே எத்தனை ஆண்டுக் காலம் (இடைவெளி) இருந்தது" என்று கேட்டேன். அவர்கள்,'**நாற்பதாண்டுகள்**' (மஸ்ஜிதுல் ஹராம்

அமைக்கப்பட்டு நாற்பதாண்டுகள் கழித்து மஸ்ஜிதுல அக்ஸா அமைக்கப்பட்டது) பிறகு,'நீ தொழுகை நேரத்தை எங்கு அடைந்தாலும் உடனே, அதைத் தொழுதுவிடு. ஏனெனில், நேரப்படி தொழுகையை நிறைவேற்றுவதில் தான் சிறப்பு உள்ளது" என்று கூறினார்கள்.

மேலும் அதே ஸஹீஹ் புகாரி பாகம் 4, அத்தியாயம் 60, எண் 3425 என்ற ஹதீஸையும் படிக்கவும், இந்த ஹதீஸின் முடிவுரையில் சில மாற்றம் உண்டு, ஆனால், சரித்திர விவரம் ஒன்று போலவே உள்ளது:

பாகம் 4, அத்தியாயம் 60, எண் 3425

அபூ தர்(ரலி) அறிவித்தார்

நான் நபி(ஸல்) அவர்களிடம்), 'இறைத்தூதர் அவர்களே! முதலாவதாக அமைக்கப்பட்ட பள்ளிவாசல் எது?' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'அல்மஸ்ஜிதுல் ஹராம் (மக்காவிலுள்ள புனித இறையில்லம்)" என்று பதிலளித்தார்கள். நான், 'பிறகு எது?' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'பிறகு 'அல் மஸ்ஜிதுல் அக்ஸா' (ஜெரூசலம் நகரிலுள்ள 'அல் அக்ஸா' பள்ளி வாசல்)" என்று பதிலளித்தார்கள். நான், 'அவ்விரண்டிற்குமிடையே எவ்வளவு காலம் (இடைவெளி) இருந்தது?' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், '**நாற்பதாண்டு காலம் (இடைவெளி) இருந்தது**" என்று கூறினார்கள். பிறகு, 'உன்னைத் தொழுகை (நேரம்) எங்கே வந்தடைந்தாலும் நீ தொழுது கொள். ஏனெனில், பூமி முழுவதுமே உனக்கு ஸஜ்தா செய்யுமிடம் (இறைவனை வழிபடும் தலம்) ஆகும்" என்று கூறினார்கள்.

நாம் தோராயமாக கணக்கிட்டால், ஆபிரகாம் வாழ்ந்த காலகட்டம் கி.மு. 2000 ஆகும், சாலொமோன் வாழ்ந்த காலம் கி.பி. 950 ஆகும். முஹம்மதுவின் கூற்றுப்படி, ஆபிரகாம் காபாவை கட்டினார் (புகாரி - பாகம் 4, அத்தியாயம் 60, எண் 3365), அதன் அடித்தளத்தை "ஆபிரகாம் அமைத்தார்" (புகாரி - பாகம் 4, அத்தியாயம் 60, எண் 3368). ஆபிரகாம் மக்காவிற்குச் சென்றார் என்பது பைபிளுக்கு முரண்பட்ட கருத்தாகும். உண்மையாகவே ஆபிரகாம் மக்காவிற்குச் சென்றார் என்று ஆதாரத்தோடு நிருபியுங்கள் என்று கேட்டால், இதுவரை யாரும் இதற்கு சரியான பதிலை தரவில்லை. இந்த கட்டுரையை பொருத்தமட்டில், ஆபிரகாம் மக்காவிற்கு சென்றாரா இல்லையா என்பது முக்கியமல்ல, “ஆபிரகாம் மக்காவிற்குச் சென்றார் என்று முஹம்மது நம்பினார்” அதனால் அவர் அப்படி கூறியுள்ளார் என்பது மட்டும் தெரிகிறது. எருசலேமில் முதல் ஆலயத்தை கட்டியது சாலொமோன் ஆவார்.

ஆபிரகாமுக்கும், சாலொமோனுக்கும் இடையே இருப்பது 40 ஆண்டு கால இடைவெளி இல்லை, கிட்டத்தட்ட 1000 ஆண்டுகளுக்கும் அதிகமான இடைவெளியாகும். இந்த முரண்பாடு குர்ஆனின் முரண்பாடு இல்லை, இதை ஏன் நாம் தெரிந்துக்கொள்ளவேண்டுமென்றால், இது ஹதீஸில் காணப்படுகிறது. அதாவது முஹம்மதுவின் மூளை எதனை சரி என்று நம்பியதோ அதுதான்

குர்ஆனிலும் உண்டு, ஹதீஸ்களிலும் உண்டு. குர்ஆனில் அனேக சரித்திர பிழைகள் உண்டு, அது போலவே, முஹம்மதுவின் சொல்லும் செயலும் அடங்கிய ஹதீஸிலும் அனேக சரித்திர தவறுகளை காணலாம்.

கேள்வி 222: கிஸ்வாஹ் (Kiswah) என்றால் என்ன?

பதில் 222: காபா என்பது ஒரு கனசதுர வடியில் உள்ள ஒரு கட்டிடம் என்று பார்த்தோம். இந்த கட்டிடம் மீது போர்த்தப்பட்டிருக்கும் ஆடைக்கு பெயர் தான் கிஸ்வாஹ் அல்லது கிஸ்வா ஆகும். ஒவ்வொரு வருடமும், புனித யாத்திரை செய்யப்படும் நாட்களில், 9ம் நாள் துல்ஹஜ் மாதம், இந்த கிஸ்வா துணி மாற்றப்படுகின்றது. இந்த ஆடை தயாரிப்பிற்காக சௌதி அரசு பல இலட்சங்கள் செலவிடுகிறது.

கேள்வி 223: இந்துக்கள் கோயில்களையும், மரங்களையும் சுற்றி வருவது போன்று, முஸ்லிம்கள் ஏன் காபாவை சுற்றி வருகிறார்கள்?

பதில் 223: முந்தைய காலங்களில் காபாவைச் சுற்றி மக்கள் நிர்வாணமாக தவாஃப் (சுற்றி வருதல்) செய்ததாக சொல்கிறார்கள். அதன் பிறகு அது நிறுத்தப்பட்டு, இடுப்பில் துண்டை கட்டிக்கொண்டு மக்கள் அதை சுற்றி வந்துள்ளனர்.

ஏன் நீங்கள் இப்படி சுற்றுகிறீர்கள் என்று கேட்டால், அல்லாஹ் குர்ஆனில் சொல்லியுள்ளான், முஹம்மதுவும் அதனை செய்துள்ளார், எனவே நாங்களும் செய்கிறோம் என்றுச் சொல்வார்கள்.

பார்க்க குர்ஆன் 22:26 & 22:29 மற்றும் புகாரி ஹதீஸ் எண் 328:

22:26. (நபியே!) இப்ராஹீமை நம்முடைய வீட்டின் சமீபமாக வசிக்கும்படிச் செய்து (அவரை நோக்கி) "நீங்கள் எனக்கு எவரையும் இணையாக்காதீர்கள். என்னுடைய (இந்த) வீட்டை **(தவாஃப்) சுற்றி வருபவர்களுக்கும்**, அதில் நின்று, குனிந்து, சிரம் பணிந்து தொழுபவர்களுக்கும் அதனைப் பரிசுத்தமாக்கி வையுங்கள்" என்று நாம் கூறிய சமயத்தில்,

22:29. பின்னர் (தலைமுடி இறக்கி, நகம் தரித்து, குளித்துத்) தங்கள் அழுக்குகளைச் சுத்தம் செய்து, தங்களுடைய நேர்ச்சைகளையும் நிறைவேற்றி, கண்ணியம் பொருந்திய பழமை வாய்ந்த **ஆலயத்தையும் தவாஃப் செய்யுங்கள்**.

328. 'ஹஜ்ஜின்போது நான் நபி(ஸல்) அவர்களிடம் ஸஃபியாவுக்கு மாதவிடாய் ஏற்பட்டுவிட்டது' எனக் கூறினேன். அதற்கு நபியவர்கள் 'அவள் நம்மைப் பயணத்தைவிட்டு நிறுத்தி விடுவாள் போலிருக்கிறதே! உங்களுடன் அவள்

தவாஃப் செய்யவில்லையா?' என்று கேட்டார்கள். '**தவாஃப் செய்துவிட்டார்**' என (அங்கிருந்தோர்) கூறினார்கள். 'அப்படியானால் புறப்படுங்கள்' என்று நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்' என ஆயிஷா(ரலி) அறிவித்தார்.

காபா ஒரு விக்கிரத ஆராதனை ஆலயமாக இருந்தது, கோயில்களை சுற்றிவருதல் பழமையான தெய்வ வழிப்பாட்டு முறையாக இருந்ததால், அதையே முஹம்மது இஸ்லாமிலும் புகுத்தியுள்ளார்.

இஸ்லாமுக்கு முன்பாக இருந்த பலபழக்க வழக்கங்கள், விக்கிர ஆராதனை தெய்வ வழிப்பாட்டு முறைகளை முஹம்மது இஸ்லாமின் சட்டமாக மாற்றியுள்ளார், அவைகளில் காபாவை சுற்றுவதும் ஒன்றாகும்.

கேள்வி 224: காபாவின் உள்ளே என்ன இருக்கிறது?

பதில் 224: காபாவிற்கு உள்ளே 360 கற்சிலைகள் இருந்ததாக இஸ்லாம் சொல்கிறது. அந்த சிலைகளையே முஹம்மதுவும் வணங்கிக்கொண்டு இருந்தார். அவர் அல்லாஹ்வின் நபி என்று மாறிய பிறகு மக்காவை ஆக்கிரமித்தபோது, காபாவில் இருந்த அந்த சிலைகள் அனைத்தையும் அழித்துவிட்டார். இப்போது காபாவில் ஒன்றுமில்லை.

நவம்பர் 2016ம் ஆண்டு கூகுள் இந்த காபாவின் உள்ளே படம் எடுத்து இருக்கிறது, அதனை 360 டிகிரி பார்க்கும் படி செய்துள்ளது. இதனை பார்க்க **இந்த தொடுப்பை** சொடுக்கவும்:

முஸ்லிமல்லாதவர்கள் மக்கா நகருக்குள் சென்று காபாவை பார்க்க முடியாது, எனவே, மேலே உள்ள தொடுப்பை சொடுக்கி ஒரு முறை பார்த்து விடுங்களேன்!

கேள்வி 225: ஒரு முஸ்லிம் ஐந்து வேளை தொழுவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்?

பதில் 225: ஒரு முறை தொழுகைக்கு 5 லிருந்து 8 நிமிடங்கள் வரை பிடிக்கும். தொழும் போது சிலர் நிதானமாக, சிலர் சிறிது வேகமாக குர்ஆன் வசனங்களை ஓதுவார்கள். இதனை கவனத்தில் வைத்துசொன்னால், அதிகபட்சமாக 10 நிமிடங்களுக்குள் ஒருவேளை தொழுகை முடிந்துவிடும்.

இது மட்டுமல்லாமல், தொழுவதற்கு முன்பாக உளூ என்றுச் சொல்லக்கூடிய "மத சுத்திகரிப்பு" உண்டு, அதில் கை கால்களை, முகங்களை கழுவுவதற்கு இன்னொரு 5 நிமிடங்கள் பிடிக்கலாம்.

கூட்டி கழித்துப் பார்த்தால், ஒரு தொழுகைக்கு 15 நிமிடங்கள் பிடிக்கலாம். ஐந்துவேளை என்று கணக்கிட்டால் 15 x 5 = 75 நிமிடங்கள் ஒரு நாளுக்கு அதிகபட்சமாக பிடிக்கும்.

கேள்வி 226: நாய் குறுக்கே வந்தால் தொழுகை முறிந்துவிடுமா?

பதில் 226: தொழுகை என்பது மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையே நடக்கும் ஒரு உரையாடல். மனிதன் தன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து இறைவனை துதித்து, புகழ்ந்து அவரை போற்றி தன் விண்ணப்பங்களை தெரிவிக்கும் ஒரு செயலாகும். ஒரு வேளை மற்றவர்கள் நம் கவனத்தை முறித்தாலும், இதற்காக இறைவன் கோபித்துக்கொள்ளமாட்டான்.

நாய்கள் குறுக்கே வரக்கூடாது என்று விரும்புகிறவர்கள் வீட்டிற்குள் கதவை மூடிக்கொண்டு தொழட்டும், அதற்காக நாய்களைக் கொள்வது சரியான செயலாகுமா? தொழுகையின் இலக்கணத்தை சரியாக புரிந்துக்கொள்ளாத முஹம்மது எப்படி தீர்க்கதரிசியாக இருக்கமுடியும்?

நாய்கள் தொழுகையை முறித்துவிடும் என்று முஹம்மது கூறியுள்ளார், கறுப்பு நாய்களை கொல்லவேண்டும் என்றும் சொல்லியுள்ளார்.

ஸஹீஹ் முஸ்லிம் எண் 882:

882. அப்துல்லாஹ் பின் அஸ்ஸாமித் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அபூதர் அல்கிஃபாரீ (ரலி) அவர்கள், உங்களில் ஒருவர் (திறந்தவெளியில்) தொழ நிற்கும் போது தமக்கு முன்னால் வாகன (ஒட்டக)த்தின் (சேணத்திலுள்ள) சாய்வுக்கட்டை போன்றது இருந்தால் அதுவே அவருக்குத் தடுப்பாக அமைந்துவிடும். சாய்வுக்கட்டை போன்றது இல்லாவிட்டால் கழுதை, பெண் மற்றும் கறுப்புநாய் ஆகியன அவரது (கவனத்தை ஈர்த்து) தொழுகையை முறித்துவிடும் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்றார்கள். உடனே நான், அபூதர் (ரலி) அவர்களே! சிவப்பு நிறநாய், மஞ்சள் நிற நாய் ஆகியவற்றை விட்டுவிட்டுக் கறுப்பு நிற நாயை மட்டுமே குறிப்பிடக் காரணம் என்ன? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், என் சகோதரரின் புதல்வரே! நீங்கள் என்னிடம் கேட்டதைப் போன்றே நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்டேன். **அதற்கு அவர்கள் கறுப்பு நாய் ஷைத்தான் ஆகும்** என்று கூறினார்கள் என்றார்கள்.

கேள்வி 227: முஸ்லிம் ஆண்கள் 4 திருமணங்கள் வரை செய்துக்கொள்ளலாம் என்று அனுமதி அளிக்கும் குர்ஆன் வசனம் எது?

பதில் 227: குர்ஆன் 4:3ம் வசனம் பலதார மணத்திற்கு அனுமதி அளிக்கிறது

4:3. அநாதை(ப் பெண்களைத் திருமணம் செய்து அவர்)களிடம் நீங்கள் நியாயமாக நடக்க முடியாது என்று பயந்தீர்களானால், உங்களுக்குப் பிடித்தமான பெண்களை மணந்து கொள்ளுங்கள் - **இரண்டிரண்டாகவோ, மும்மூன்றாகவோ, நன்னான்காகவோ;** ஆனால், நீங்கள் (இவர்களிடையே) நியாயமாக நடக்க முடியாது என்று பயந்தால் ஒரு பெண்ணையே (மணந்து கொள்ளுங்கள்), அல்லது உங்கள் வலக்கரங்களுக்குச் சொந்தமான (ஓர் அடிமைப் பெண்ணைக் கொண்டு) போதுமாக்கிக் கொள்ளுங்கள் - இதுவே நீங்கள் அநியாயம் செய்யாமலிருப்பதற்குச் சுலபமான முறையாகும்.

கேள்வி 228: நாங்கள் இயேசுவை நம்புகிறோம், நேசிக்கிறோம் என்று முஸ்லிம்கள் கிறிஸ்தவர்களிடம் சொல்கிறார்களே! இதனை கிறிஸ்தவர்கள் எப்படி எடுத்துக்கொள்வது?

பதில் 228: நாங்கள் இயேசுவை நேசிக்கிறோம் என்று முஸ்லிம்கள் சொல்கிறார்கள். எந்த இயேசுவை? என்று நாம் கேள்வி கேட்கவேண்டும்?

இந்த **கூகுள் தொடுப்பை** சொடுக்கிப்பாருங்கள், முஸ்லிம்கள் இயேசுவை நேசிக்கிறோம் என்றுச் சொல்லி பொய்ப்பிரச்சாரம் செய்வதை காணலாம்.

இயேசுவின் சீடர்கள் இயேசுவைப் பற்றி நற்செய்தி நூல்களில் விவரித்துள்ளார்கள். இவர்கள் இயேசுவோடு நடந்தார்கள், அவரோடு உட்கார்ந்து சாப்பிட்டார்கள், அவரோடு பேசினார்கள், அவர் செய்த அற்புதங்களை தங்கள் கண்களால் கண்டார்கள். அவர்கள் இயேசுவை முழுவதுமாக அறிந்திருந்தார்கள்.

இதே போல, இயேசுவிற்கு 600 ஆண்டுகளுக்கு பிறகு வந்த குர்-ஆனிலும் இயேசுவைப் பற்றி சிறிது விவரிக்கப்பட்டுள்ளது. குர்-ஆனின் ஆசிரியருக்கு உண்மையான இயேசு யார் என்று தெரியாது, அவர் இயேசுவை பார்த்ததும் இல்லை, இயேசு வாழ்ந்த இடத்திலும் காலத்திலும் அவர் வாழ்ந்தது இல்லை.

இதன் அடிப்படையில் பார்த்தால், குர்-ஆன் சொல்லும் இயேசுவும் பைபிள் விவரிக்கும் இயேசுவும் வித்தியாசமானவர்கள். முஸ்லிம்கள் விளம்பரப்படுத்திய அந்த வாசகம், மக்களை குழப்புவதாக உள்ளது. கிறிஸ்தவர்கள் நம்பும் அதே இயேசுவை நாங்களும் நம்புகிறோம் என்ற பொய்யான அறிக்கையை அவர்கள் பதித்து இருந்தார்கள்.

ஆனால் உண்மையென்ன? பைபிளின் இயேசு 'தேவ குமாரனாக இருக்கிறார், திரித்துவத்தின் இரண்டாம் நபராக இருக்கிறார், அவர் சிலுவையில் அறையப்பட்டார், மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தார், மனித இனத்தின் பாவநிவர்த்தியாக இருந்தார்'. குர்-ஆனின் இயேசு எப்படிப்பட்டவர்? குர்-ஆன்

இயேசுவின் திரித்துவ தெய்வீகத்தையும், அவரது மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பாவநிவர்த்தியை மறுக்கிறது. இவைகள் வெறும் மேலோட்டமான வித்தியாசங்கள் என்று கருதக்கூடாது, இவைகள் அடிப்படை வித்தியாசங்களாகும். கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுத்தால், நீங்கள் உண்மையான இயேசுவை மறுதலிக்கிறீர்கள் என்று அர்த்தம்.

பைபிள் சொல்லும் இயேசுவை முஸ்லிம்கள் நம்பவில்லை? அவர்கள் நம்பும் இயேசு இஸ்லாமிய சாயம் பூசப்பட்ட ஒரு டூப்ளிகேட் இயேசு ஆவார். குர்ஆனில் சொல்லப்பட்ட இயேசு பைபிளில் சொல்லப்பட்ட இயேசு அல்ல.

ஒருவேளை கிறிஸ்தவர்கள் "நாங்கள் முஹம்மதுவை நம்புகிறோம், அவரை மதிக்கிறோம், ஆனால் அவரை ஒரு நபியாக நம்பமாட்டோம்" என்றுச் சொன்னால், முஸ்லிம்கள் ஒப்புக்கொள்வார்களா?

முஸ்லிம்கள் நம்மிடம் வந்து "இஸ்லாம் வெளிப்படுத்தும் முஹம்மதுவை நீங்கள், நம்பவேண்டும், உங்கள் கற்பனையில் உதித்த முஹம்மதுவை நம்பக்கூடாது" என்றுச் சொல்வார்கள். இதே போலத்தான், "பைபிள் வெளிப்படுத்தும் இயேசுவை முஸ்லிம்கள் நம்பவேண்டும், முஹம்மதுவின் கற்பனையில் உண்டான இயேசுவை நம்பக்கூடாது".

முஸ்லிம்களின் கூற்றுக்களைக் கேட்டு ஏமாறவேண்டாம் என்று கிறிஸ்தவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் படிக்கவும்: **முஸ்லிம்கள் இயேசுவை நேசிக்கிறார்களா?**

கேள்வி 229: முஸ்லிம்கள் தாடியை வைத்து மீசையை எடுக்கிறார்களே! இதன் பின்னணி என்ன?

பதில் 229: ஒருவரது மீசையும், தாடியும் அவருக்கே சொந்தம், அவைகளை அவர் என்னவாவது செய்யலாம் தவறில்லை. இதே போல, ஒரு மார்க்கத்தின் அடிப்படையில் நம் வெளிப்புற தோற்றத்தை நாம் மாற்றிக் கொள்ளலாம், இதிலும் தவறில்லை. ஆனால், மற்ற மதத்தவர்களுக்கு எதிராக நாங்கள் நடந்துக் கொள்கிறோம் என்று காட்டிக்கொள்ள இப்படி செய்வது, கேவலமானதாகும். அமைதி மார்க்கம் என்றுச் சொல்லிக்கொள்ளும் இஸ்லாமின் இறைத்தூதர் இப்படி கேவலமான கட்டளைகளை கொடுத்துள்ளார். சமுதாயத்தின் ஒற்றுமையை குலைக்க, சமுதாய மக்களிடையே ஏற்றத்தாழ்வு மனப்பான்மையை உருவாக்க, மற்ற மதத்தவரிடம் வெறுப்புணர்வை வெளிப்படையாக காட்டிக் கொள்ள வித்திட்டவர் இஸ்லாமிய இறைத்தூதர் முஹம்மது ஆவார். இவைகளை இஸ்லாமின் புனித நூல்கள் புகாரி, முஸ்லிம் மற்றும் அஹ்மத் போன்றவைகளில் காணலாம், இதோ அந்த ஆதாரங்கள்:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இணைவைப்பாளர்களுக்கு மாறு செய்யுங்கள்: **தாடிகளை வளரவிடுங்கள்**. மீசையை ஒட்ட நறுக்குங்கள். என இப்னு உமர்(ரலி) அறிவித்தார். (ஸஹீஹ் புகாரி எண்: 5892)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இணைவைப்பாளர்களுக்கு மாறு செய்யுங்கள்: **மீசையை ஒட்ட நறுக்குங்கள். தாடியை வளரவிடுங்கள்**.-இதை இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (ஸஹீஹ் முஸ்லிம் 434)

நாங்கள், அல்லாஹ்வின் தூதரே, வேதமுடையவர்கள் தங்களது தாடிகளை (ஒட்ட) கத்தரித்துக் கொள்கிறார்கள்; மீசைகளை வளர விடுகிறார்கள் என்று கூறினோம். அதற்கு நபி (ஸல்) அவர்கள், உங்களது மீசைகளை நீங்கள் கத்தரியுங்கள். தாடிகளை வளர விடுங்கள். **வேதமுடையவர்களுக்கு மாறு செய்யுங்கள்** என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூ உமாமா (ரலி),

நூல்: அஹ்மது (21252)

இதர மார்க்க மக்களின் "தீய பழக்கவழக்கங்களை செய்யாமல் இருங்கள்" என்று முஹம்மது கட்டளையிட்டிருக்கவேண்டும். மீசையை வளரவிடுவதில் என்ன தவறு இருக்கிறது? தாடியை ஒட்ட கத்தரிப்பதில் (ட்ரிம் செய்வதில்) என்ன தவறு இருக்கிறது? இதில் அல்லாஹ்விற்கு எதிரான பாவம் என்ன இருக்கிறது? முஹம்மதுவின் ஒரே நோக்கம், முஸ்லிமல்லாதவர்களுக்கு எதிராக செயல்படவேண்டும் அவ்வளவு தான். இதைத் தான் முஸ்லிம்கள் இன்றும் செய்துக் கொண்டு இருக்கிறார்கள். என்னே அறியாமை! முஸ்லிம்களின் மனதில் மாற்று மதத்தவரைப் பற்றிய விஷ வெறுப்புணர்வை இப்படிப்பட்ட கட்டளைகள் விதைத்துவிடுமல்லவா?

இப்படிப்பட்ட தீய செயல்களைச் செய்யும்படி முஹம்மது கட்டளையிட்டுள்ளார் என்று பெரும்பான்மையான முஸ்லிம்களுக்குத் தெரியாது. தங்கள் மசூதிகளில் இமாம்கள், பெரியவர்கள் சொல்கிறார்கள் என்று நம்பி இவர்கள் மீசையை எடுத்து தாடி வைக்கிறார்கள். ஆனால், உண்மையான நோக்கத்தை இஸ்லாமிய நூல்களில் காணலாம்.

கேள்வி 230: சில இஸ்லாமிய அறிஞர்கள் ஏன் பல ஹதீஸ்களை புறக்கணிக்கிறார்கள்?

பதில் 230: இஸ்லாமிய அடிப்படை நூல்கள் இரண்டு: குர்ஆன் மற்றும் ஹதீஸ் தொகுப்புக்கள்.

ஹதீஸ்களில் இலட்சக்கணக்கான பொய்கள் கலந்துள்ளன. இதனால் தான் முஸ்லிம் அறிஞர்கள் ஹதிஸ்கள் புறக்கணிக்கிறார்கள்.

சன்னி பிரிவு முஸ்லிம்களின் 6 ஹதீஸ் தொகுப்புக்களும் அவைகளில் உள்ள பொய்களும்:

இஸ்லாமிய சமுதாயம் பெரிய அளவில் இரண்டாக பிரிந்துள்ளது, ஒன்று சன்னி (சுன்னி) முஸ்லிம்கள், அடுத்தது ஷியா முஸ்லிம்கள்.

சன்னி முஸ்லிம்கள் தான் பெரும்பான்மை என்பதால், அவர்கள் நம்பும் புத்தகங்களை மட்டுமே கருத்தில் கொள்ளப்படுகின்றது. ஷியா முஸ்லிம்களின் புத்தகங்களை நாம் அதிகமாக ஆய்வு செய்வதில்லை.

சன்னி முஸ்லிம் சமுதாயம் 6 வகையான ஹதீஸ்கள் அதிகார பூர்வமான ஹதீஸ்கள் என்று நம்புகிறார்கள். இவைகளில், முதலாவது புகாரி என்பவரால் தொகுக்கப்பட்ட ஹதீஸ்கள், இரண்டாவதாக, முஸ்லிம் என்பவரால் தொகுக்கப்பட்ட ஹதீஸ்கள். இப்படி, குர்-ஆனுக்கு அடுத்தபடியாக இவ்வதீஸ்கள் முஸ்லிம்களுக்கு வழிகாட்டிகளாக உள்ளன.

கீழ்கண்ட அட்டவணையில் இவ்வதீஸ்கள் பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன (புகாரி, முஸ்லிம், நஸயி, அபூதாவுத், திர்மிதி, இப்னு மாஜா).

ஹதீஸ்	தொகுத்தவை	பொய்யானவை	உண்மையானவை	உண்மை சதவிகிதம் (%)	பொய் சதவிகிதம் (%)
புகாரி	600000	592603	7,397	1.23%	98.77%
முஸ்லிம்	300000	296000	4,000	1.33%	98.67%
நஸயி	500000	494730	5,270	1.05%	98.95%
அபூ தாவுத்	500000	495200	4,800	0.96%	99.04%
திர்மிதி	400000	396044	3,956	0.99%	99.01%
இப்னு மாஜா	400000	395659	4,341	1.09%	98.91%

படம் 3: சன்னி பிரிவினரின் அதிகாரபூர்வமான 6 ஹதீஸ் தொகுப்புக்கள்

முஹம்மதுவிற்கு பிறகு, 200 – 250 ஆண்டுகள்வரை, வாய் வழியாக முஹம்மது பற்றிய கதைகள் உலாவந்தபடியினால், அல்லாஹ்வின் வஹியில் பல புதிய பொய்யான விவரங்கள் மக்களின் வாய்வழியாக பரப்பப்பட்டது.

உதாரணம்:

புகாரி:

புகாரி (கி.பி. 810 - 870) என்ற இஸ்லாமியர் ஹிஜ்ரி 194ல் பிறக்கிறார். பல ஆண்டுகள் பாடுபட்டு, பல இடங்களுக்குச் சென்று ஹதீஸ்களை சேகரித்தார்.

- அவர் சேகரித்த ஹதீஸ்களின் எண்ணிக்கை: 6,00,000 (ஆறு லட்சம்).
- இவைகளில் ஆதாரபூர்வமான, உண்மையான ஹதீஸ்கள் எவைகள் என்று அவர் ஆய்வு செய்து கண்டுபிடித்த எண்ணிக்கை: 7,397
- அப்படியானால், மீதமுள்ள 5,92,603 ஹதீஸ்கள் பொய்யானவை, இட்டுக்கட்டப்பட்டவை, கறைப்படுத்தப்பட்டவை என்று அவர் ஒதுக்கிவிட்டார்.
- இதனை சதவிகிதத்தின் படி பார்த்தால், அவர் சேகரித்தவைகளில் 1.23% தான் உண்மையானவை, 98.77% பொய்யானவையாகும்.

இதே போல, சன்னி முஸ்லிம்கள் நம்பும் ஆறு ஹதீஸ் தொகுப்புக்கள் பற்றி மேற்கண்ட அட்டவணையில் நான் பதித்துள்ளேன்.

(குறிப்பு: திர்மிதி மற்றும் இப்னு மாஜா என்பவர்கள், எத்தனை ஹதீஸ்களை தொகுத்தார்கள் என்ற எண்ணிக்கை எனக்கு கிடைக்கவில்லை என்பதால், மேற்கண்ட அட்டவணையில் நான் 4,00,000 (நான்கு லட்சம்) என்று ஒரு சராசரி எண்ணிக்கை கொடுத்துள்ளேன். எனக்கு சரியான எண்ணிக்கை கிடைத்தால், அதனை இந்த அட்டவணையில்/இக்கட்டுரையில் மாற்றுவேன். வாசகர்களுக்கு இவ்விவரம் தெரிந்தால் எனக்கு தெரிவிக்கவும்).

இப்படி ஃபில்டர் செய்த பிறகும் கூட தற்கால அறிஞர்கள் இன்னும் சில ஹதீஸ்கள் பொய்கள் என்று ஒதுக்கிறார்கள் என்பது ஒரு முக்கியமான இன்னொரு குறிப்பு.

கேள்வி 231: ஹதீஸ்கள் இல்லாமல் போனால், இஸ்லாமின் நிலை என்ன? இதனால் அதிக பாதிப்பு உண்டா?

பதில் 231: ஹதீஸ்கள் இல்லையென்றால், இஸ்லாம் ஒரு லைட் வெயிட்(Light Weight) மதமாக மாறிவிடும். அதாவது இன்று முஸ்லிம்கள் பின்பற்றுகின்ற பல சட்டங்கள், தொழுகை முறைகள்(Heavy Weight) போன்றவைகள் இல்லாமலேயே போய்விடும்.

உதாரணத்திற்கு சிலவற்றை இங்கு தருகிறேன்:

1. முஸ்லிம்களின் ஷஹதா என்றுச் சொல்லக்கூடிய இஸ்லாமிய விசுவாச அறிக்கையை செய்யமுடியாது. "அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை, முஹம்மது அல்லாஹ்வின் இறைத்தூதர்" என்ற இந்த வாக்கியம் குர்ஆனில் இல்லை.
2. முஸ்லிம்கள் ஐந்துவேளை தொழமுடியாது, மூன்று வேளை மட்டுமே தொழமுடியும்

3. மக்காவிற்கு ஹஜ் பயணம் செய்யும் போது, அங்கு என்னன்ன செய்யவேண்டும் என்று முஸ்லிம்களுக்கு தெரியாமல் போய்விடும்.
4. இஸ்லாமுடைய தூண் என்றுச் சொல்லக்கூடிய ஜகாத் என்ற தர்மம் எவ்வளவு (சதவிகிதம்%) செய்யவேண்டும், எவைகளைச் செய்யவேண்டும் போன்ற விவரங்கள் குர்ஆனில் இல்லை.

இப்படி சொல்லிக்கொண்டே போனால், காற்றைவிட லேசானதாக இஸ்லாம் மாறிவிடும். ஆகையால், ஹதீஸ்கள் இல்லையென்றால், உடல் இல்லாத எலும்புக்கூடு தான் இஸ்லாம்.

கேள்வி 232: ஏன் எல்லா ஹதீஸ்களையும் முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது?

பதில் 232: அது எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

இன்று நாம் ஹாலிவுட் படங்களில் காண்கின்ற ஸ்பைடர் மேன், பேட்மேன், சூப்பர் மேன் போன்று முஸ்லிம்கள் முஹம்மது மீது இட்டுக்கட்டிய அனைத்துவிட ஸ்டண்ட் விவரங்கள் அனைத்தையும் ஹதீஸ்களில் படிக்கும் சாதாரண முஸ்லிமல்லாத மக்கள், இஸ்லாமை காறிதுப்புவார்களே என்பதற்காக அவைகளை நீக்கினார்கள்.

இதுமட்டுமல்ல, அலிபாபா நாற்பது திருடர்கள் படத்தில் வருவது போன்றும், இன்னும் பல விஞ்ஞானத்திற்கு முரணான விவரங்கள் ஹதீஸ்களில் உள்ளது. அவைகளை ஏற்க இங்கு யாரும் காதில் காலிஃபளவர் வைத்துக்கொண்டு இல்லையே! எனவே முஸ்லிம்கள் அவைகளை நீக்கினார்கள்.

கடைசியாக, ஆபாசம் என்று எடுத்துக்கொண்டால் 'என்னத்தைச் சொல்ல' அவைகளை என் வாயால் சொல்லமாட்டேனுங்கோ, அப்படிப்பட்ட விவரங்கள் ஹதீஸ்களில் உள்ளது. எனவே எந்த முகத்தை வைத்துக்கொண்டு ஹதிஸ்கள அனைத்தையும் முஸ்லிம்கள் ஏற்பார்கள் சொல்லுங்கள்?

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்றுச் சொல்வார்கள், ஹதீஸ்கள் எப்படி முஸ்லிம்களை பிரிக்கிறது என்பதற்கு ஒரே ஒரு உதாரணம்.

நீங்கள் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால், கீழ்கண்ட வீடியோக்களில் முஸ்லிம் அறிஞர்கள் 'ஒரு பெண் ஒரு வாலிபனுக்கு தன் மார்ப்பகத்திலிருந்து குழந்தைக்கு பால் ஊட்டுவது போன்று பாலை குடிக்க கொடுத்து, அவனை தன் மகனைப்போல ஆக்கிக்கொள்வது எப்படி என்று முஹம்மது சொன்னதாக வரும் ஹதீஸ் பற்றிய விவாதம் புரிவதைப் பாருங்கள்". ஒரு பிரிவினர் ஆதரிப்பதையும், இன்னொரு பிரிவினர் எதிர்ப்பதையும் பாருங்கள்.

- **பால் குடி சம்பந்தமான கட்டுக்கதையை ஆதரிக்கும் அறிவீனர்களிடம் சில கேள்விகள்**

* **[பால் குடி சட்டம் சம்மந்த்தமான ஹதீஸை விளங்க தெரியாத tntj]**
* **[சாலிம் (ரலி)அவர்களின் பால் குடி ஹதீஸ் குரானுக்கு எதிரானதா?ஆபாசமானதா?~| மௌலவி முஜாஹித் இப்னு ரஸீன்]**
* **[மறுக்கப்படும்-பால்குடி-ஹதீஸ்-நிலைப்பாடு-என்ன?-QA2]**

இத்தனைக்கும் இந்த ஹதீஸ் உண்மையானதென்று இன்றுவரை இஸ்லாமிய உலகம் ஏற்றுக்கொண்ட ஒன்று தான்.

கேள்வி 233: ஷரியா என்றால் என்ன?

பதில் 233: ஷரியா என்றால் 'சட்டம்' என்று பொருள். இது இஸ்லாமிய சட்டத்தைக் குறிக்கிறது. இஸ்லாம் ஆட்சி செய்யும் நாடுகளில் ஷரியா சட்டம் அமுலில் இருக்கும்.

இஸ்லாமிய ஷரியாவை, குர்ஆன் மற்றும் ஹதிஸ்களின் அடிப்படையில் முஸ்லிம் அறிஞர்கள் உருவாக்குகிறார்கள்.

இந்திய பீனல் கோட் என்றுச் சொல்கிறோமில்லையா! அது போன்று இஸ்லாமிய நாடுகளில் இஸ்லாமிய அரசு பின்பற்றக்கூடிய சட்டம் தான் ஷரியா. மனிதன் செய்கின்ற குற்றங்களுக்கு தண்டனைகள் குர்ஆன் மற்றும் ஹதீஸ்களின் அடிப்படையில், அதாவது முஹம்மதுவின் வாழ்க்கையின் அடிப்படையில் உருவாக்கப்படுவது தான் ஷரியா.

குறிப்பு: இன்றிலிருந்து 1400 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு மனிதரின் வாழ்க்கையை சார்ந்து இன்று சட்டம் இயற்றி அதனை நாம் பின்பற்றினால், இது சாத்தியப்படுமா? என்ற கேள்வி தோன்றலாம். அதனால் தான் இன்றைய படித்த உலகம் இஸ்லாமை மிகவும் கடுமையாக விமர்சிக்கிறது.

ஒரு உதாரணத்தைப் பாருங்கள்: ஒருவன் திருடினால் அவன் கை வெட்டப்படும். இன்னொருவன் ஒரு பெண்ணை கற்பழித்துவிட்டால், அவனுக்கு சிறை தண்டனை கொடுத்து, அபராதமாக பணத்தை வசூலிப்பார்கள்.

பணத்தை திருடியவன் வாழ்நாள் முழுவதும் முடவனாக தன் குடும்பத்தை காப்பாற்ற முடியாதவனாகவும், தனக்கும் தன் சமுதாயத்திற்கும் ஒரு பாரமாகவும் மாறிவிடுகின்றான். ஆனால், ஒரு பெண்ணை கற்பழித்து அவள் வாழ்வை கெடுத்தவன், அபராதத்தை கட்டிவிட்டு, சில நேரங்களில் தண்டனையை அனுபவித்துவிட்டு, இரண்டு கைகளை ஆட்டிகொண்டு ஹாயாக வாழுகின்றான். இதனை பார்க்கும் அறிவுள்ள மனிதன் என்ன செய்வான்? இஸ்லாமை விமர்சிப்பானா இல்லையா? இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

கேள்வி 234: "வெள்ளிக்கிழமை தொழுகையின் போது, இமாம் செய்யும் பிரசங்கத்திற்கு என்ன பெயர்?

பதில் 234: பெரும்பான்மையாக வெள்ளிக்கிழமை தொழுகையின்போது, மக்கள் மசூதிகளில் கூடி இருக்கும் போது, மசூதியின் இமாம் செய்யும் பிரசங்கத்தை குத்பா என்பார்கள். இதே போன்று, ரமலான் மற்றும் பக்ரீத் பண்டிகையின் போதும், இமாம்கள் செய்யும் பிரசங்கத்தையும் குத்பா என்பார்கள்.

கேள்வி 235: ஜம் ஜம் கிணறு (தண்ணீர்) எங்கு இருக்கிறது

பதில் 235: மக்காவில் உள்ள இந்த கிணற்றிலிருந்து தான் ஆகார் தண்ணீர் குடித்து தன்னுடைய மற்றும் தன் மகன் இஸ்மாயிலுடைய தாகத்தை தணித்துக்கொண்டார் என்று இஸ்லாமியர்கள் நம்புகிறார்கள். அதாவது ஆபிரகாம் ஆகாரையும் இஸ்மவேலையும் வீட்டை விட்டு அனுப்பிவிட்ட போது இந்த நிகழ்ச்சி நடந்ததாக இஸ்லாமியர்கள் நம்புகிறார்கள். முஸ்லிம்கள் ஒவ்வொரு ஆண்டும் "மக்காவிற்கு புனிதப்பயணம் (ஹஜ்)" செய்யும் போது இந்த நிகழ்ச்சியை நினைவு கூறுகிறார்கள்.

மேலும் ஹஜ் செய்து திரும்பும் முஸ்லிம்கள், இந்த ஜம் ஜம் தண்ணீரை தங்கள் நாட்டிற்கு (வீட்டிற்கு) கொண்டு வருகிறார்கள். அதனை தங்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் உறவினர்களுக்கும் கொடுக்கிறார்கள். இந்த தண்ணிரை குடித்தால் நோய்கள் தீரும் என்றும் முஸ்லிம்கள் நம்புகிறார்கள்.

கேள்வி 236: ஆரம்பத்தில் முஸ்லிம்கள் 50 முறை தொழுதுக்கொண்டு இருந்தார்களா?

பதில் 236: ஒரு முறை முஹம்மதுவை ஜிப்ரீல் தூதன் ஏழாம் வானம் வரைக்கும் அழைத்துச் சென்றாராம். அங்கு அல்லாஹ் முஸ்லிம்களுக்கு 50 முறை தொழவேண்டும் என்று கட்டளையிட்டானாம், ஆனால், மோசே முஹம்மதுவை சந்தித்து, 50 முறை ஒரு நாளுக்கு தொழுவது முடியாத காரியம் எனவே குறைத்துத் தரும்படி அல்லாஹ்விடம் கேள் என்றுச் சொல்ல, முஹம்மதுவும் கேட்டாராம், உடனே அல்லாஹ் அதனை 40 முறையாக குறைத்தாராம். மறுபடியும் மோசே இதுவும் அதிகம் தான் மேலும் குறைக்கச்சொல் என்று சொல்ல, முஹம்மது மறுபடியும் அல்லாஹ்விடம் சென்று கேட்டு, 30 முறையாக குறைத்துக்கொண்டாராம். மறுபடியும் மோசே முஹம்மதுவிற்கு அறிவுரை கூற தொழுகைகள், 20, 10, மற்றும் 5 என்று கடைசியாக குறைக்கப்பட்டதாம். இப்போது கேள்வி என்னவென்றால், ஆதியாகமத்தில் ஆபிரகாம் தேவனிடம் வேண்டிக்கொண்ட நிகழ்ச்சியை அப்படியே காபி அடித்து மாற்றி முஹம்மது கூறியுள்ளார். இதுமாத்திரமல்ல, மோசேக்கு இருக்கின்ற அறிவு கூட அல்லாஹ்விற்கும், முஹம்மதுவிற்கும் இல்லாமல் போனதுதான் ஆச்சரியம்.

மக்களின் நிலையை மோசே புரிந்துக்கொண்டது போல அல்லாஹ் புரிந்துக்கொள்ளவில்லை. முஹம்மது கேள்விப்பட்ட பைபிளின் நிகழ்ச்சிகளை தனக்கு தோன்றியபடி மாற்றி கூறியுள்ளார்.

பார்க்க: **ஆதியாகமம் 18:16-33, ஸஹீஹ் புகாரி 3207 & 349**

3207. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நான் இறையில்லம் கஅபாவில் இருமனிதர்களுக்கிடையே (பாதி) தூக்கமாகவும் (பாதி) விழிப்பாகவும் இருந்தபோது நுண்ணறிவாலும் இறைநம்பிக்கையாலும் நிரப்பப்பட்ட தங்கத் தட்டு ஒன்று என்னிடம் கொண்டு வரப்பட்டது. என்னுடைய நெஞ்சம் காறையெலும்பிலிருந்து அடி வயிறு வரை பிளக்கப்பட்டது. பிறகு ஸம்ஸம் நீரினால் என் வயிறு கழுவப்பட்டது. பிறகு, (என் இதயம்) நுண்ணறிவாலும் இறைநம்பிக்கையாலும் நிரப்பப்பட்டது. மேலும், கோவேறுக் கழுதையை விடச் சிறியதும் கழுதையை விடப் பெரியதுமான 'புராக்' என்னும் (மின்னல் வேக) வாகனம் ஒன்றும் என்னிடம் கொண்டு வரப்பட்டது. நான் (அதில் ஏறி) ஜிப்ரீல்(அலை) அவர்களுடன் சென்றேன். . . .

பிறகு என் மீது ஐம்பது (நேரத்) தொழுகைகள் கடமையாக்கப்பட்டன. நான் முன்னேறிச் சென்று இறுதியில் மூஸா(அலை) அவர்களை அடைந்தேன். அவர்கள், 'என்ன செய்தாய்?' என்று கேட்டார்கள். நான், 'என் மீது ஐம்பது தொழுகைகள் கடமையாக்கப்பட்டுள்ளன" என்று பதிலளித்தேன். அதற்கு அவர்கள், 'எனக்கு மக்களைப் பற்றி உங்களை விட அதிகமாகத் தெரியும். நான் பனூ இஸ்ராயீல்களுடன் பழகி நன்கு அனுபவப்பட்டுள்ளேன். உங்கள் சமுதாயத்தினர் (இதைத்) தாங்க மாட்டார்கள். எனவே, உங்களுடைய இறைவனிடம் திரும்பிச் சென்று அவனிடம் (தொழுகைகளின் எண்ணிக்கையைக்) குறைத்துத் தரும்படி கேளுங்கள்" என்றார்கள். நான் திரும்பச் சென்று இறைவனிடம் (அவ்வாறே) கேட்டேன். அதை அவன் நாற்பதாக ஆக்கினான். பிறகும் முதலில் சொன்னவாறே நடந்தது. மீண்டும் (சென்று நான் கேட்க, இறைவன் அதை) முப்பதாக ஆக்கினான். மீண்டும் அதைப் போன்றே நடக்க (அதை) இறைவன் இருபதாக ஆக்கினான். நான் மூஸா(அலை) அவர்களிடம் சென்றபோது அவர்கள் முன்பு போன்றே சொல்ல (நான் இறைவனிடம் மீண்டும் குறைத்துக் கேட்க) **அவன் அதை ஐந்தாக ஆக்கினான்**. பிறகு நான் மூஸா(அலை) அவர்களிடம் சென்றேன். அவர்கள், 'என்ன செய்தாய்?' என்று கேட்க, 'அதை இறைவன் ஐந்தாக ஆக்கிவிட்டான்" என்றேன். அதற்கு அவர்கள், 'முன்பு சொன்னதைப் போன்றே (இன்னும் குறைத்துக் கேட்கும்படி) சொன்னார்கள். அதற்கு, 'நான் (இந்த எண்ணிக்கைக்கு) ஒப்புக் கொண்டேன்" என்று பதிலளித்தேன். அப்போது (அல்லாஹ்வின் தரப்பிலிருந்து அசரீரியாக), 'நான் என் (ஐந்து வேளைத் தொழுகை எனும்) விதியை அமல்படுத்தி விட்டேன். என் அடியார்களுக்கு (ஐம்பது வேளைகளிலிருந்து ஐந்து வேளையாகக் குறைத்து கடமையை) லேசாக்கி விட்டேன். ஒரு நற்செயலுக்குப் பத்து நன்மைகளை நான் வழங்குவேன்" என்று அறிவிக்கப்பட்டது.

கேள்வி 237: முஸ்லிம்களின் அன்னைகள் என்று அழைக்கப்படுபவர்கள் யார்?

பதில் 237: முஹம்மதுவின் மனைவிகள் அனைவரும் முஸ்லிம்களுக்கு அன்னைகளாவார்கள் என்று இஸ்லாம் சொல்கிறது?

குர்ஆன் 33:6. இந்த நபி முஃமின்களுக்கு அவர்களுடைய உயிர்களைவிட மேலானவராக இருக்கின்றார்; இன்னும், அவருடைய மனைவியர் அவர்களுடைய தாய்மார்களாக இருக்கின்றனர். (ஒரு முஃமினின் சொத்தை அடைவதற்கு) மற்ற முஃமின்களை விடவும், (தீனுக்காக நாடு துறந்த) முஹாஜிர்களை விடவும் சொந்த பந்துக்களே சிலரைவிட சிலர் நெருங்கிய (பாத்தியதையுடைய)வர்களாவார்கள்; இது தான் அல்லாஹ்வின் வேதத்திலுள்ளது; என்றாலும், நீங்கள் உங்கள் நண்பர்களுக்கு நன்மை செய்ய நாடினால் (முறைப்படி செய்யலாம்) இது வேதத்தில் எழுதப்பட்டுள்ளதாகும்.

அப்படியானால், முஸ்லிம்களின் தந்தை முஹம்மது தானே! என்று நீங்கள் எண்ணிக்கொள்ளாதீர்கள், இங்கு தான் இஸ்லாம் சிக்ஸர் அடிக்கிறது, நாம் பொதுவாக நினைப்பது போன்று இஸ்லாம் செயல்படாது. முஹம்மது யாருக்கும் தந்தை ஆகமாட்டார், ஏன் இப்படி என்று உங்கள் முஸ்லிம் நண்பர்களிடம் கேட்டுப்பாருங்கள்.

குர்ஆன் 33:40. **முஹம்மது(ஸல்) உங்கள் ஆடவர்களில் எவர் ஒருவருக்கும் தந்தையாக இருக்கவில்லை;** ஆனால் அவரோ அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் இறுதி (முத்திரை)யாகவும் இருக்கின்றார்; மேலும் அல்லாஹ் எல்லாப் பொருள்கள் பற்றியும் நன்கறிந்தவன்.

கேள்வி 238: இஸ்லாம் ஒரு நாள் உலகை ஆளும் என்று அடிக்கடி முஸ்லிம்கள் சொல்வதை கேட்கமுடிகின்றது இது உண்மையா?

பதில் 238: இன்று பல கோடி முஸ்லிம்களை 'இஸ்லாம் ஒரு நாள் உலகை ஆளும்' என்ற நம்பிக்கை ஆட்டிப்படைத்துக்கொண்டு இருக்கிறது. இந்த நம்பிக்கையினால், சில முஸ்லிம்கள் ஒரு கையில் துப்பாக்கியை பிடித்துக்கொண்டும், இன்னொரு கையில் குர்-ஆனை பிடித்துக்கொண்டும், உலகை ஒருநாள் இஸ்லாம் ஆளும் என்று கோஷமிட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இன்னும் சிலர் உடலில் வெடிகுண்டுகளை கட்டிக்கொண்டு "அந்த நாளுக்கான ஆயத்தங்களை இன்று நாங்கள் செய்ய ஆரம்பித்துவிட்டோம்" என்று சொல்லிக்கொண்டு, பட்டனை சட்டென்று அழுத்தி, குண்டுகளை வெடிக்கச்செய்து தாங்களும் அழிந்து மற்றவர்களையும் அழித்துக்கொண்டு இருக்கிறார்கள். இஸ்லாமிய ஆட்சியின் கீழ் உலகை கொண்டுவரவேண்டும் என்ற தீராத ஆசையால் தான் அன்று அல்கெய்தா, இன்று ஐஎஸ்ஐஎஸ் ஆட்டம் போட்டுக்கொண்டு இருக்கிறது. தீவிரவாதி

முஸ்லிம்களாகிய பக்தாதி முதற்கொண்டு, அமைதியை விரும்பும் ரஹீம் பாய் வரை 'இஸ்லாம் ஒரு நாள் உலகை ஆளும்' என்ற நம்பிக்கையை அடிமனதில் வைத்துக்கொண்டு தான் வாழ்கிறார்கள். ஆனால், முஹம்மதுவின் ஒரு குறிப்பிட்ட முன்னறிவிப்பு, உலகை இஸ்லாம் ஆளாது, அதற்கு பதிலாக, ஒரு பாம்பு தனக்கு ஆபத்து வரும் போது எப்படி தன் புற்றுக்குச் சென்று அபயம் பெறுமோ (தப்பித்துக்கொள்ளுமோ), அது போல இஸ்லாமும் "தான் உருவான இடத்திற்கே சென்று அபயம் பெரும்" என்று சொல்கிறது.

இது உண்மையா?

இந்த விவரம் இஸ்லாமிய ஆதாரநூல்களான ஹதீஸ்களில் காணப்படுகின்றது.

1) குறைந்த எண்ணிக்கையில் தொடங்கி, அதே எண்ணிக்கையில் முடிவடையும் இஸ்லாம்:

இஸ்லாம் ஒரு மனிதரோடு தொடங்கியது, அந்த மனிதர் முஹம்மது ஆவார். அவருக்கு அடுத்து, அவரது மனைவி கதிஜா அவர்கள், அதன் பிறகு இதர நண்பர்கள், உறவினர்கள் என்று பலர் ஏற்றனர். மதினாவிற்கு முஹம்மது ஹிஜ்ரி செய்யும் போது கூட சில நூறு பேரை மட்டுமே இஸ்லாம் சம்பாதித்து இருந்தது.

கீழ்கண்ட ஹதீஸ்களில் இஸ்லாமின் எதிர்காலம் பற்றி முஹம்மது என்ன சொல்கிறார் என்பதை கவனியுங்கள்:

முஸ்லிம் ஹதீஸ் எண்: 232, 233, 234 மற்றும் புகாரி ஹதீஸ் எண்: 1876

232. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இஸ்லாம் குறைந்த எண்ணிக்கை கொண்ட மக்களிடையேதான் தோன்றியது. அது தோன்றிய பழைய நிலைக்கே திரும்பிச்செல்லும். அந்தக் குறைந்த எண்ணிக்கையிலான மக்களுக்கு சுபம் உண்டாகட்டும். இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது.

இதைப் பற்றிய ஆய்வு கட்டுரையை இங்கு படிக்கவும்: **இஸ்லாம் உலகை ஆளுமா? (அ) உலகிலிருந்து அழிந்தே போகுமா? முஹம்மதுவின் முன்னறிவிப்பு என்ன?**

கேள்வி 239: முஸ்லிம்களும் இயேசுவை நம்புவதினால், அவர்களுக்கு நற்செய்தி அறிவிக்கவேண்டியதில்லை அல்லவா?

பதில் 239: இல்லை, முஸ்லிம்களுக்கு உண்மையான இயேசுவைத் தெரியாது, அவர்களுக்கு தெரிந்ததெல்லாம், இயேசுவைப் பற்றிய ஒரு பொய்யான பிம்பம்

தான். குர்ஆனிலும், ஹதீஸ்களிலும் சொல்லப்பட்ட இயேசு ஒரு பொய்யான இயேசு ஆவார். அப்படிப்பட்டவர் உலகில் பிறக்கவே இல்லை.

இயேசுவிடம் வந்து அவரைப் பார்த்து நீர் ஒரு நபி என்று சொல்பவர்களுக்கு இரட்சிப்பு இல்லை. யார் இயேசுவை 'தேவனுடைய வார்த்தையாகவும், தங்களுக்காக சிலுவையில் மரித்து மறுபடியும் உயிரோடு எழுந்தார் என்றும், மறுபடியும் அவர் வருவார் என்றும் நம்புகிறார்களோ' அவர்கள் தான் உண்மையான இயேசுவை விசுவாசித்தவர்கள் ஆவார்கள்.

இயேசுவைப் பற்றி முஸ்லிம்கள் இப்படி நம்புவதில்லை, எனவே அவர்களுக்கு நற்செய்தியை அறிவிக்கவேண்டும், அவர்களையும் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு பங்காளிகளாக மாற்ற முயற்சிக்கவேண்டும். இதற்காகத் தான் இந்த கேள்வி பதில் தொடர்களும், இதர கட்டுரைகளும் எழுதப்படுகின்றன.

யோவான் 3:15-18

15. தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும்.

16. தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.

17. உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.

18. அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டாயிற்று.

கேள்வி 240: உலகிலேயே முஹம்மது தான் மிகவும் நல்லவர் என்று என் முஸ்லிம் நண்பர் சொல்கிறார், இது உண்மையா?

பதில் 240: ஒருவரை(முஹம்மதுவை அல்லது வேறு யாராக இருந்தாலும்) நல்லவர் என்று நாம் சொல்லவேண்டுமென்றால் குறைந்தபட்சம் நாம் கீழ்கண்டவைகளை செய்திருக்கவேண்டும்:

a) அந்த நபரைப் பற்றிய புத்தகங்களை படிப்பது:

அவரைப் பற்றிய அனைத்து விவரங்களையும் அறிந்து இருக்கவேண்டும். முஹம்மதுவைப் பற்றி குர்ஆனில், ஹதீஸ்களில், சரித்திர நூல்களில் சொல்லப்பட்டவைகள் அனைத்தையும் படித்து இருக்கவேண்டும்? உங்கள் முஸ்லிம் நண்பரிடம் இந்த விவரங்களைக் கேட்டுப்பாருங்கள், நிச்சயம் இல்லை என்று பதில் வரும்.

b) அவரோடு கூட இருந்து கவனிப்பது:

பொதுவாக ஒருவரைப் பற்றி எழுதப்படும் சரித்திரங்கள், புத்தகங்களில் 100% உண்மை இருக்கும் என்றும் சொல்லமுடியாது. சரித்திர ஆசிரியர்கள், அந்த ஒருவரை ஆதரிப்பவர்கள் சிறிது இங்கும் அங்குமாக சில பொய்யான அல்லது அதிகபடியான விவரங்களை சொந்தமாக சேர்த்தும் எழுதுவார்கள். எனவே, ஒருவரோடு கூட இருந்து பார்த்தால் தான் அவர் உண்மையாகவே நல்லவரா இல்லையா என்பது புரியும்.

c) உள்ளத்தில் இருப்பதை யார் காண்பார்கள்?

ஒருவேளை நாம் ஒருவரோடு கூட இருந்து பக்கத்திலிருந்து கவனித்தாலும், அவரது தீய காரியங்கள் வெளிப்படாமல் அவர் பார்த்துக்கொண்டால், அது எப்படி நமக்குத் தெரியும்? மனதில் இருப்பதை யார் பார்க்கமுடியும்?

மேலும், "நல்லவர்", "கெட்டவர்" என்ற வார்த்தைகளின் வரையறையை யார் நிர்ணயிப்பது? ஒரு திருடன் கூட தன் குடும்பத்திற்கு நல்லவனே? மற்றவர்களுக்குத் தான் அவன் தீயவன். ஒருவன் எல்லோரிடமும், ஒரு காலத்தில், நல்லவனாக வாழலாம். ஆனால், எல்லோரிடமும் எல்லா காலத்திற்கும் நல்லவனாக வாழமுடியாது. எனவே பொத்தம் பொதுவாக 'நல்லவன்', 'கெட்டவன்' என்றுச் சொல்வது, பயனில்லாத வார்த்தைகள்.

d) உலகில் இருக்கும் அனைத்து மனிதர்களைப் பற்றி அறிந்துக்கொள்ளவேண்டும்

உலகத்திலேயே 'என் அப்பா தான் நல்லவர்' என்று நான் சொன்னால், இது ஒரு வேடிக்கையாக எடுத்துக் கொள்ளவேண்டிய விஷயம், இதனை சீரியஸாக எடுத்துக் கொள்ளமுடியாது. ஏனென்றால், "உன் அப்பா பற்றி உனக்குத் தெரியும், உலகில் உள்ள இதர அப்பாக்கள் பற்றி உனக்கு எப்படித் தெரியும்?" என்ற கேள்வி எழும். உலகில் உள்ள மற்றவர்கள் பற்றி ஒன்றுமே தெரியாத நீ எப்படி, உன் அப்பாவை அவர்களோடு ஒப்பிட்டுச் சொல்கிறாய்? இது அறிவுள்ளவர்கள் சொல்லும் கூற்று அல்ல. "என் அப்பா எனக்கு நல்லவராக இருக்கிறார்" என்றுச் சொல்லிக்கொள்ளலாமே தவிர, அவரை உலக மக்களோடு ஒப்பிடக்கூடாது.

இதே போலத்தான், முஸ்லிம்களும் "முஹம்மது எங்கள் பார்வையில் நல்லவர் என்றுச் சொல்லவேண்டுமே ஒழிய, உலகத்திலுள்ள அனைத்து மக்களைக்

காட்டிலும், என் நபி தான் ரொம்ப நல்லவர்" என்று சொல்லும்போது மற்றவர்களுக்கு எறிகிறது.

முஹம்மது நல்லவரா கெட்டவரா?

ஒருவர் நல்லவரா, கெட்டவரா என்ற கேள்வி தேவையற்றது மற்றும் குழப்பம் தரக்கூடியது என்பதை மேலே கண்டோம்.

ஆனால், ஒருவரைப் பற்றி அவரை சார்ந்துள்ள மக்கள் எழுதும் புத்தகங்களை படித்தால், குறைந்தபட்சம் அவர் நல்லவர் என்ற ஒரு பிம்பம் வருகிறதா? என்று பார்க்கவேண்டும். அதன் பிறகு "ஆமாம், இன்னின்ன புத்தகங்களில் சொல்லப்பட்டதின்படி அவர் நல்லவர்/கெட்டவர்" என்று சொல்லமுடியுமல்லவா?

இதன் அடிப்படையில், முஹம்மது பற்றிய புத்தகங்கள் மூன்று பிரிவுகளாக நம்மிடம் உள்ளது: குர்ஆன், ஹதீஸ்கள், அவரது வாழ்க்கை சரித்திர புத்தகங்கள்.

இந்த மூன்று புத்தகங்களையும் ஒரு நபரிடம் கொடுத்து, விருப்பு வெறுப்பு இன்றி நேர்மையாக அவைகளை படித்து, முஹம்மது எப்படிப்பட்டவர் என்று சொல்லமுடியுமா? என்று கேட்டால் என்ன பதில் அவர் சொல்லுவார்? இந்த சவாலை முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ளத் தயாரா?

1. குர்ஆனின் படி தன் வளர்ப்பு மகனின் மனைவியை முஹம்மது திருமணம் செய்தார்.
2. 10க்கும் அதிகமான திருமணங்களை முஹம்மது செய்துள்ளார்.
3. தனக்கு 53 வயது ஆகும் போது, 9 வயது சிறுமியை திருமணம் செய்தார்.
4. தன்னை எதிர்த்தவர்களை கொன்றார்.
5. வழிப்பறி கொள்ளைகளில் ஈடுபட்டார், இது பழிக்கு பழி வாங்கின நிகழ்வுகள் என்பார்கள் முஸ்லிம்கள்.
6. அரேபியாவை சுற்றியுள்ள நாடுகள் மீது வலியச் சென்று போர் செய்து, தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.
7. திருமண பந்தத்திற்கு வெளியே பெண்களை கற்பழிக்க முஹம்மது அனுமதி அளித்தார்.
8. மக்களை மூட பழக்கவழக்கங்களைச் செய்யும் படி, விஞ்ஞானத்திற்கு எதிரான காரியங்களை நம்பும்படி செய்தார்.
9. போரில் பிடிபட்ட பெண்களை கற்பழித்தார், முஸ்லிம்கள் கற்பழிக்க அனுமதி அளித்தார்.

இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். இவைகளையெல்லாம் முஸ்லிம்கள் எழுதிய புத்தகங்களிலிருந்து வெளிப்படும் அவருடைய செயல்கள் ஆகும்.

இவைகளை அறியும் ஒருவர் முஹம்மதுவைப் பற்றி என்ன கூறுவார்? அவர் நல்லவர் என்று கூறுவாரா?

இவ்விவரங்கள் ஒவ்வொன்றிற்கும் முஸ்லிம்கள் ஒரு காரணத்தைச் சொல்வார்கள், ஆனால் முஸ்லிமல்லாதவருக்கு அக்காரணங்கள் முட்டாள்தனமான வாதங்களாக தோன்றும்.

எனவே, ஒரு நபரைப் பார்த்து 'இவர் நல்லவர்/கெட்டவர்' என்றுச் சொல்லும்போது, அதன் பொருள் என்னவென்றால், 'அந்த நபருக்கு இவர் நல்லவர் போல அல்லது கெட்டவர் போல தெரிகின்றார்' என்பதாகும். ஆனால், அது உண்மையாக இருக்கலாம் இல்லாமலும் போகலாம்.

முஸ்லிமல்லாதவர்கள் "முஹம்மது ஒரு கெட்டவர்" என்றுச் சொன்னால், "அவர்கள் பார்வையில், அவர்களுக்கு கிடைத்துள்ள விவரங்களின்படி முஹம்மது கெட்டவர் ஆவார்". ஆனால், அதுவும் அவர்களுக்கு கிடைத்த விவரங்களின் படி தான் அவர்கள் சொல்கிறார்கள் என்று பொருள். அது உண்மையாக இருக்கலாம் இல்லாமலும் போகலாம். அவர்களுக்கு கிடைத்த விவரங்கள் என்னவென்று நாம் கவனித்து தான் முடிவு எடுக்கமுடியும்?

சரி, கடைசியாக ஒரு கேள்வி, குர்ஆன் ஹதீஸ்களின் மூலமாக மேற்கண்ட விவரங்கள் முஹம்மதுவைப் பற்றி நமக்கு கிடைத்துள்ளன. இவைகளின் படி முஹம்மது எப்படிப்பட்டவர் என்று முஸ்லிம்களால் சொல்லமுடியுமா?


தலைப்பு: ஹதீஸ்கள்/சீரா (241 – 270)

கேள்வி 241: ஹதீஸ்கள் என்றால் என்ன?

பதில் 241: இஸ்லாமிய நபி முஹம்மதுவின் சொல்லும் செயல்களும் அடங்கிய தொகுப்பை ஹதீஸ்கள் என்பார்கள். சன்னி முஸ்லிம்களுக்கும் ஷியா முஸ்லிம்களுக்கும் தனித்தனி ஹதீஸ் தொகுப்புக்கள் உள்ளன.

கேள்வி 242: ஹதீஸ்கள் கூட அல்லாஹ்வின் வஹியா?

பதில் 242: இஸ்லாமின் படி ஹதீஸ்களும் அல்லாஹ்வின் மூலமாக முஹம்மதுவிற்கு கொடுக்கப்பட்டதே (வஹியே) ஆகும். முஹம்மது முஸ்லிம்களின் வழிகாட்டி, அல்லாஹ்விடமிருந்து பெற்றுத்தான் அவர் முஸ்லிம்களுக்கு வழிகாட்டினார் என்று முஸ்லிம்கள் நம்புகிறார்கள்.



கேள்வி 243: ஹதிஸ்கள் அல்லாஹ்வால் பாதுகாக்கப்பட்டுள்ளதா?

பதில் 243: இல்லை, ஹதீஸ்களை பாதுகாப்பேன் என்று அல்லாஹ் வாக்கு கொடுக்கவில்லை, இதைப் பற்றி குர்ஆனில் வசனமில்லை. மேலும் முஹம்மதுவிற்கு பிறகு, குர்ஆனை தொகுத்த உஸ்மான் கலீஃபா அவர்களும், இதர சஹாபாக்களும் ஹதிஸ்களை புத்தக வடியில் எழுதிவைக்க முயற்சி எடுக்கவில்லை.

கேள்வி 244: ஹதிஸ்கள் அல்லாஹ்வினால் பாதுகாக்கப்படவில்லையென்றால், அது அல்லாஹ்வின் வஹி இல்லையா?


பதில் 244: ஹதீஸ்களும் அல்லாஹ்வின் வஹி என்று தான் இஸ்லாமும் சொல்கிறது, முஸ்லிம்களும் இதைத் தான் நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். தன் வஹியை பாதுகாப்பதா? அல்லது அழிந்து தொலைந்து போகட்டும் என்று விட்டுவிடுவதா? என்று அல்லாஹ் தான் முடிவு செய்யவேண்டும்.

சரி, அல்லாஹ் தன் ஹதீஸ் வஹியை பாதுகாத்தானா? இல்லையா? என்று கேட்டால், "ஹதீஸ்கள் பாதுகாக்கவில்லை" என்று இஸ்லாம் பதில் கூறும்.

முஹம்மது உயிரோடு இருக்கும் போது, தனக்கு இறக்கப்பட்ட குர்-ஆன் வசனங்களை (வஹியை) அவ்வப்போது, தோல்களிலும், எலும்புகளிலும், இலைகளிலும் எழுதும் படி செய்தார். இருந்தாலும், முஸ்லிம்கள் அதிகமாக மனப்பாடம் செய்துக்கொள்வதையே அதிகமாக நம்பினர். முஹம்மது உயிரோடு இருக்கும் போது இன்று நம்மிடம் உள்ள (114 அத்தியாயங்கள் அடங்கிய) முழு குர்-ஆனையும் அவர் கண்களால் காணவில்லை.

ஆனால், முஹம்மது பெற்றுக்கொண்ட இதர வஹியை தன் பேச்சிலும், செயலிலும் காட்டினார். இவ்வஹி புத்தகமாக முஹம்மதுவின் காலத்தில் எழுதப்படவில்லை. முஹம்மதுவிற்கு பிறகு 200+ ஆண்டுகளுக்கு பிறகு தான் பேச்சு வழக்கில் உலாவிய கதைகளை (அல்லாஹ்வின் வஹியை) சில முஸ்லிம் அறிஞர்கள் தொகுத்து புத்தகமாக்கினார்கள், அவைகளைத் தான் நாம் ஹதீஸ்கள் என்கிறோம். ஒரு கதை 200 ஆண்டுகளுக்கு மேலாக வாய்வழியாக பரவினால் என்னவாகும்? அக்கதையின் உண்மைக்கரு சிதையும், பல பொய்கள் சேர்க்கப்படும்.

பார்க்க: **அல்லாஹ் எப்படி தன் ஹதீஸ் வஹியை கறைபடுத்தப்பட விட்டுக்கொடுத்தான்**



கேள்வி 245: எத்தனை ஹதீஸ்கள் ஆரம்பத்தில் தொகுக்கப்பட்டன, அவைகளில் எத்தனை உண்மையென ஒப்புக்கொள்ளப்பட்டன.

பதில் 245: ஒரே வரியில் சொல்லவேண்டுமென்றால், ஹதீஸ்களில் 1.5% சதவிகிதத்திற்கும் குறைவான ஹதீஸ்கள் உண்மையென்றும், மீதமுள்ள 98.5% சதவிகிதத்திற்கும் அதிகமான ஹதீஸ்கள் பொய்யானவை என்றும் இஸ்லாமிய அறிஞர்கள் கூறுகிறார்கள்.

இஸ்லாமிய சமுதாயம் பெரிய அளவில் இரண்டாக பிரிந்துள்ளது, ஒன்று சன்னி (சுன்னி) முஸ்லிம்கள், அடுத்தது ஷியா முஸ்லிம்கள்.

சன்னி முஸ்லிம்கள் தான் பெரும்பான்மை என்பதால், அவர்கள் நம்பும் புத்தகங்களை மட்டுமே கருத்தில் கொள்ளப்படுகின்றது. ஷியா முஸ்லிம்களின் புத்தகங்களை நாம் அதிகமாக ஆய்வு செய்வதில்லை.

சன்னி முஸ்லிம் சமுதாயம் 6 வகையான ஹதீஸ்கள் அதிகார பூர்வமான ஹதீஸ்கள் என்று நம்புகிறார்கள். இவைகளில், முதலாவது புகாரி என்பவரால் தொகுக்கப்பட்ட ஹதீஸ்கள், இரண்டாவதாக, முஸ்லிம் என்பவரால் தொகுக்கப்பட்ட ஹதீஸ்கள். இப்படி, குர்-ஆனுக்கு அடுத்தபடியாக இவ்வதீஸ்கள் முஸ்லிம்களுக்கு வழிகாட்டிகளாக உள்ளன.

கீழ்கண்ட அட்டவணையில் இவ்வதீஸ்கள் பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன (புகாரி, முஸ்லிம், நஸயி, அபூதாவுத், திர்மிதி, இப்னு மாஜா).

படம்: சன்னி பிரிவினரின் அதிகாரபூர்வமான 6 ஹதீஸ் தொகுப்புக்கள்

ஹதீஸ்	தொகுத்தவை	பொய்யானவை	உண்மையானவை	உண்மை சதவிகிதம் (%)	பொய் சதவிகிதம் (%)
புகாரி	600000	592603	7,397	1.23%	98.77%
முஸ்லிம்	300000	296000	4,000	1.33%	98.67%
நஸயி	500000	494730	5,270	1.05%	98.95%
அபூ தாவுத்	500000	495200	4,800	0.96%	99.04%
திர்மிதி	400000	396044	3,956	0.99%	99.01%
இப்னு மாஜா	400000	395659	4,341	1.09%	98.91%

முஹம்மதுவிற்கு பிறகு, 200 – 250 ஆண்டுகள்வரை, வாய் வழியாக முஹம்மது பற்றிய கதைகள் உலாவந்தபடியினால், அல்லாஹ்வின் வஹியில் பல புதிய பொய்யான விவரங்கள் மக்களின் வாய்வழியாக பரப்பப்பட்டது.

உதாரணம்:

புகாரி:

புகாரி (கி.பி. 810 - 870) என்ற இஸ்லாமியர் ஹிஜ்ரி 194ல் பிறக்கிறார். பல ஆண்டுகள் பாடுபட்டு, பல இடங்களுக்குச் சென்று ஹதீஸ்களை சேகரித்தார்.

- அவர் சேகரித்த ஹதீஸ்களின் எண்ணிக்கை: 6,00,000 (ஆறு லட்சம்).
- இவைகளில் ஆதாரபூர்வமான, உண்மையான ஹதீஸ்கள் எவைகள் என்று அவர் ஆய்வு செய்து கண்டுபிடித்த எண்ணிக்கை: 7,397
- அப்படியானால், மூதமுள்ள 5,92,603 ஹதீஸ்கள் பொய்யானவை, இட்டுக்கட்டப்பட்டவை, கறைப்படுத்தப்பட்டவை என்று அவர் ஒதுக்கிவிட்டார்.
- இதனை சதவிகிதத்தின் படி பார்த்தால், அவர் சேகரித்தவைகளில் 1.23% தான் உண்மையானவை, 98.77% பொய்யானவையாகும்.

இதே போல, சன்னி முஸ்லிம்கள் நம்பும் ஆறு ஹதீஸ் தொகுப்புக்கள் பற்றி மேற்கண்ட அட்டவணையில் நான் பதித்துள்ளேன்.

கேள்வி 246: ஹதீஸ்களில் பலவீனமான, உண்மையான ஹதீஸ்கள் இருப்பதாகச் சொல்கிறார்களே? உண்மையா?

பதில் 246: நாம் மேலே கண்ட விவரங்களின் படி, 1.5% ஹதீஸ்கள் தான் உண்மையானவை, மீதமுள்ளவை பொய்யானவை.

மொத்தமாக ஹதிஸ்களை நான்கு வகையாக முஸ்லிம்கள் பிரிக்கிறார்கள் (இந்த நான்கிற்குள்ளும் உப பிரிவுகள் உள்ளன).

1) ஸஹீஹ் (ஆதாரப்பூர்வமானவை):

இந்த விவரத்தை நிச்சயம் முஹம்மது கூறியிருப்பார், செய்திருப்பார் என்று இஸ்லாமிய அறிஞர்கள் வகைப்படுத்தியவைகள், உண்மையான (ஸஹீஹ்) ஹதீஸ்கள் என்று கூறுகிறார்கள்.

2) மவ்ளூவு (இட்டுக்கட்டப்பட்டது):

முஹம்மது சொல்லாத, செய்யாத விவரங்களை அவர் சொன்னார்/செய்தார் என்று பொய்யாக பரப்பப்பட்ட கதைகள் இந்த வகையைச் சார்ந்தவைகளாகும். யார் மூலமாக ஹதீஸ் கிடைத்ததோ, அந்த சங்கிலித்தொடரில் வருபவரில் ஒருவர் பொய்யராக இருந்தால், அவர் சொல்லும் ஹதீஸ்கள் பொய்யானவை என்று கருதப்படுகின்றது. ஏன் இப்படி பொய்கள் ஹதீஸ்களில் கலந்துள்ளன என்பதற்கு பல காரணங்கள் உள்ளன, அவைகளை வேறு கேள்வியில் பார்ப்போம்.

சில உதாரணங்கள்:

- கத்திரிக்காய் சாப்பிடுவது எல்லா நோய்களுக்கும் மருந்தாகும்.
- உங்கள் உணவில் கீரைகளைச் சேர்த்துக் கொள்ளுங்கள்! ஏனெனில் அது ஷைத்தானை விரட்டியடிக்கும்.
- ஆகாயத்தில் உள்ள பால் வெளி, அர்ஷின் கீழ் இருக்கும் பாம்பின் வியர்வையினால் படைக்கப்பட்டது.
- தர்மம் செய்ய ஏதும் கிடைக்காவிட்டால் யூதர்களையும் கிறிஸ்துவர்களையும் சபியுங்கள்! அது தர்மம் செய்ததற்கு நிகராக அமையும்.
- சாக்கடையில் விழுந்த ஒரு கவள உணவை யாரேனும் கழுவிச் சாப்பிட்டால் அவரது பாவங்கள் மன்னிக்கப்படும்.
- முட்டையும் பூண்டும் சாப்பிட்டால் அதிகமான சந்ததிகள் பெற முடியும்.
- பெண்களிடம் ஆலோசனை கேளுங்கள்! ஆனால் அதற்கு மாற்றமாக நடங்கள்.
- 160 ஆண்டுகளுக்குப் பிறகு குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதை விட நாயை வளர்ப்பது மேலாகும்

3) மத்ரூக் (விடப்படுவதற்கு ஏற்றது):

அறிவிப்பாளர்களில் பொய்யர் என்று சந்தேகிக்கப்பட்டவர் இடம் பெறுவது மத்ரூக் ஹதீஸ்கள் எனப்படும். முந்தைய பிரிவில் அந்த அறிவிப்பாளர் பொய்யர் என்று நிரூபிக்கப்பட்டு இருக்கும். ஆனால், இந்த பிரிவில் உள்ளவர் 'பொதுவாக பொய்யர், என்று சந்தேகத்து உட்பட்டவராக இருப்பார்'.

4) ளயீப் (பலவீனமானது):

முஹம்மது இந்த விவரத்தை (ஹதீஸை) கூறினார்களா இல்லையா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தக் கூடியவை ளயீப் ஹதீஸ்கள் எனப்படும். ஏன் இந்த சந்தேகம் வருகிறது? இவைகளுக்கு காரணங்கள் என்னவென்பதை தனி கேள்வியில் காண்போம்.

கேள்வி 247: இஸ்னத்(Isnad/Sanad - சங்கிலித்தொடர்) என்றால் என்ன?

பதில் 247: இஸ்னத் என்றால் சங்கிலித்தொடர் என்றுச் சொல்லலாம். ஸனது என்பது இஸ்னத் என்பதின் பன்மையாகும். முஹம்மது கூறியவைகளையும், அவரிடம் பார்த்த செயல்களையும் எழுத்துவடிவில் தொகுத்த புத்தகங்களை (செய்திகளை) ஹதீஸ்கள் என்கிறோம்.


அவைகள் புத்தகங்களாக எப்போது தொகுக்கப்பட்டன, என்று கேட்டால், முஹம்மதுவின் மரணத்திற்கு 200 ஆண்டுகளுக்கு பிறகு அவைகள் புத்தகங்களாக எழுதப்பட்டன. அதுவரை அவைகள் வாய் வழியாக பரப்பப்பட்டன.

முஹம்மது ஒரு செய்தியை தம் சஹாபா என்கிற நண்பருக்குச் சொல்கிறார், அல்லது அவரது மனைவி ஆயிஷா அவர்களிடம் சொல்கிறார், அல்லது அவர்கள் அவருடைய செயல்களைப் பார்க்கிறார்கள். இந்த செய்தியை அவரது தோழரோ, மனைவியோ மற்றவர்களுக்குச் சொல்கிறார்கள். இவர்களிடம் செய்தியை கேட்ட மற்றவர்கள் வேறு நபர்களுக்குச் சொல்கிறார்கள். இப்படி 200+ ஆண்டுகள் முஹம்மது சொன்ன ஒரு செய்தி வாய் வழியாக பல நபர்கள் மூலமாக பரப்பப்படுகின்றது. கடைசியாக, கி.பி. 810க்கு பிறகு பிறந்த புகாரி, முஸ்லிம் மற்றும் திரிமிதி போன்ற இஸ்லாமிய அறிஞர்கள் பல ஆண்டுகள் பல நாடுகளுக்கு சுற்றித்திரிந்து அனைவரிடமிருந்து செய்திகளை சேகரித்தார்கள்.

முஹம்மதுவின் தோழர்கள் மற்றும் குடும்பத்தார்கள் தான் நேரடியாக முஹம்மது சொல்ல அல்லது அவர் செய்யக்கண்டு செய்திகளை அறிந்தார்கள்.

மற்றவர்கள் அனைவரும் முஹம்மதுவை கண்டவர்கள் அல்ல, அவர்கள் வாய்வழியாக செய்திகளை கேட்டவர்கள். முஹம்மதுவின் தோழர்கள் முதற்கொண்டு, புகாரி/முஸ்லிம்/திர்மிதி போன்ற அறிஞர்களுக்கு முன்பு வரை யார் காதுவழியாக கேட்டார்களோ, அந்த தொடரைத் தான் இஸ்னத் என்பார்கள், அதாவது முஹம்மது தொடங்கி ஒரு சங்கிலி போன்று செய்தி, ஒருவர் மாறி ஒருவருக்கு சொல்லப்பட்டு கடைசியாக புத்தகமாக 200 ஆண்டுகளுக்கு பிறகு எழுதப்பட்டது.

இதனை சுருக்கமாக கீழ்கண்ட படத்தில் தமிழில் கொடுத்துள்ளேன்.



இந்த படத்தை பெரிய அளவில் பார்க்க **இந்த தொடுப்பை** சோடுக்கவும்.

கீழ்கண்ட இஸ்லாமிய தளத்தில் இதே விவரங்களை வெறு வகையான படத்தின் மூலமாக விவரித்துள்ளார்கள், அதனையும் க்ளிக் செய்து பார்க்கவும்:

www.islamic-awareness.org/hadith/ayyubchain.gif

இந்த கீழ்கண்ட வீடியோவில், ஸனது (சங்கிலித் தொடர்) இல்லாத ஹதீஸ்களை எப்படி கையாளுவது என்பதைப் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது:

புகாரியில் சனது இல்லாத ஹதீஸ்களை எப்படி அறிந்துகொள்ளவது?

கேள்வி 248: ஒரே நிகழ்ச்சி அல்லது விவரம் பல ஹதீஸ்களில் வருவது ஏன்?

பதில் 248: இந்த கேள்வியை படிப்பதற்கு முன்பாக, முந்தைய கேள்வியின் பதிலையும்,படங்களையும் (இஸ்னத்/ஸனது - சங்கிலித்தொடர்) படித்துக்கொள்ளவும்.

- எந்த செய்தியாக இருந்தாலும், அது ஒருவரிடமிருந்து அதாவது முஹம்மதுவிடமிருந்து மட்டுமே வரும்.
- முஹம்மதுவிடமிருந்து அது பல பேருக்கு வந்து சேருகிறது. முஹம்மதுவின் தோழர்கள், மதினாவில் இருந்த அன்ஸாரிகள், மற்றும் அவரது மனைவிகள் என்று அனைவரிடமும் செய்தி வந்து சேருகிறது.
- இவர்களிடமிருந்தும் அந்த ஒரே செய்தி இன்னும் பலருக்கு சேருகிறது, இப்படி 200+ ஆண்டுகள் வாய்வழியாக பரவுகிறது.
- கடைசியாக, புகாரி மற்றும் மூஸ்லிம் போன்ற அறிஞர்கள் செய்திகளை சேகரிக்கும் போது, ஒரே நிகழ்ச்சி பல அறிவிப்பாளர்களின் மூலமாக வந்ததாக ஹதீஸ்களில் பதிவு செய்கிறார்கள்.

கேள்வி 249: குர்ஆனில் சொல்லப்பட்டவைகளோடு ஹதிஸ்கள் முரண்படுமா?

பதில் 249: ஹதீஸ்களில் சொல்லப்பட்டவைகள் குர்ஆனோடு முரண்படும்.

முஸ்லிம் அறிஞர்கள், ஹதீஸ்களின் தரத்தை பரிசோதிக்கும்போது, அவர்கள் முன்வைத்த ஒரு நிபந்தனை என்னவென்றால், 'எந்த ஒரு செய்தி/ஹதீஸ், குர்ஆனில் சொல்லப்பட்டவைகளோடு நேரடியாகவோ மறைமுகமாகவோ முரண்படுமானால், அந்த ஹதீஸை பொய்யான/பல்வீனமான ஹதீஸாக கருதவேண்டும்' என்பதாகும்.

மேலே கண்ட பதில்களில் படித்ததின் படி, 98.5% ஹதீஸ்கள் பொய்யானவை என்று முஸ்லிம்கள் கண்டறிந்து தரம் பிரித்துள்ளார்கள். புறக்கணிக்கப்பட்ட ஹதீஸ்களில் குர்ஆனுக்கு எதிராக உள்ள ஹதீஸ்களும் அடங்கும் என்பதை கவனிக்கவும்.

கேள்வி 250: முஹம்மதுவின் தோழர்களில்/உறவினர்களில் ஹதிஸ்களை அதிகமாக சொன்னவர்கள் யார்?

பதில் 250: இஸ்லாமிய அறிஞர்கள் கீழ்கண்ட பட்டியலைத் தருகிறார்கள்:

1. அபூ ஹுரைரா = 5374
2. அப்துல்லா இப்னு உமர் (உமரின் மகன்) = 2630
3. அனஸ் இப்னு மாலிக் = 2286
4. ஆயிஷா அவர்கள் (முஹம்மதுவின் மனைவி) = 2210
5. அப்துல்லா இப்னு அப்பாஸ் = 1660
6. ஜபீர் இப்னு அப்துல்லாஹ் = 1540
7. அபூ சையத் அல்துத்ரி = 1170

Source: **questionsonislam.com/article/companions-who-narrated-most-hadiths**

கேள்வி 251: ஹதீஸ்களை அறிவித்தவர்களில் அபூ ஹுரைரா முதலிடம் வகிக்கிறாரே! இவர் முஹம்மதுவோடு நபித்துவ தொடக்கம் முதல் இருந்தாரா?

பதில் 251: அபூ ஹுரைரா ஹிஜ்ரி 7ம் ஆண்டு இஸ்லாமை ஏற்றுக்கொண்டார் என்று இஸ்லாம் சொல்கிறது. அதாவது முஹம்மதுவோடு அபூ ஹுரைரா வெறும் இரண்டு ஆண்டுகளுக்குள் மட்டுமே வாழ்ந்திருக்கிறார் (சிலர் இரண்டு ஆண்டுகள் மூன்று மாதங்கள் என்றும் சொல்கிறார்கள்).

ஆனால் இவர் மட்டும் 5000க்கும் அதிகமான ஹதீஸ்களை எப்படி சொல்லமுடியும் என்ற சந்தேகம் வருகிறது. இந்த கீழ்கண்ட பட்டியலைப் பாருங்கள்:

- 1. அபூ ஹுரைரா = 5374 (முதல் இடம்)
- 4. ஆயிஷா = 2210 (நான்காவது இடம்)
- 10. உமர் = 537 (பத்தாவது இடம்)
- 11. அலி = 536 (பதினோராவது இடம்)

- 31. அபூ பக்கர் = 142 (முப்பத்தி ஒராவது இடம்)

முஹம்மதுவோடு 23 ஆண்டுகள் இருந்தவர், ஹிஜ்ரி செய்தவர், நெருக்கமானவராகிய அபூ பக்கர் அவர்கள் வெறும் 142 நிகழ்ச்சிகளை (ஹதீஸ்களை) கூறியுள்ளார்கள், ஆனால், அதிகபட்சம் இரண்டாண்டுகள் மட்டுமே இருந்த அபூ ஹுரைரா மட்டும் முதல் இடத்தில் 5000க்கும் அதிகமான செய்திகளைச் சொல்லியுள்ளார். இதுமட்டுமல்ல, முஹம்மதுவிற்கு பிரியமான மனைவியாகிய ஆயிஷா அவர்களும், உமர், அலி போன்ற சஹாபாக்களும் மிகவும் குறைவான ஹதீஸ்களை சொல்லியுள்ளார்கள்.

அபூ ஹுரைரா பொய் சொல்லக்கூடியவர் என்றும், கலீஃபாக்களுக்காக ஹதீஸ்களை இட்டுக்கட்டி பேசுபவர் என்றும், இவரை உமர் பெஹ்ரைன் நாட்டிக்கு ஆளுநராக நியமித்ததாகவும், அதன் பிறகு இவர் பணத்தில் உண்மையாக இல்லாமல் ஏமாற்றியதால், இவரை வேலை நீக்கம் செய்ததாகவும் கீழ்கண்ட இஸ்லாமிய தளம் கூறுகிறது. இரண்டாம் கலிஃபா உமர் அவர்கள் இவரை எச்சரித்த பிறகு, அவரது மரணம் வரைக்கும் இவர் ஹதீஸ்களைச் சொல்வதை விட்டுவிட்டாராம். உமர் மரித்த பிறகு மறுபடியும் ஹதீஸ்களை சொல்ல ஆரம்பித்தவிட்டாராம்.

Abu-Hurayrah, the man who narrated thousands of Hadiths

ஒருவேளை அபூ ஹுரைரா பொய் சொல்பவராக இருப்பாரானால், இவர் சொன்ன ஹதீஸ்களை எப்படி நம்புவது?

கேள்வி 252: முஹம்மது சென்றுவிட்ட பிறகு "அவரது சொல் மற்றும் செயல்களை ஹதீஸ் புத்தகங்களாக தொகுத்துக் கொள்ளுங்கள்" என்று குர்ஆனில் ஏதாவது வசனம் உண்டா?

பதில் 252: இல்லை, குர்ஆனில் முஹம்மதுவின் சொல் மற்றும் செயல்களை புத்தகங்களாக தொகுத்து, அது சொல்வது போல முஸ்லிம்கள் பின்பற்ற வேண்டும் என்று குர்ஆன் சொல்லவில்லை.

ஹதீஹ்களை விடுங்கள், அல்லாஹ் முஹம்மதுவிற்கு இறக்கிய குர்ஆன் வசனங்களையே ஒரு புத்தகமாக தொகுத்துக் கொள்ளுங்கள் என்று முஹம்மதுவிற்கும் குர்ஆன் சொல்லவில்லை, மற்றவர்களுக்கும் சொல்லவில்லை.

அப்படியானால் முஹம்மதுவின் மரணத்திற்கு பிறகு, அபூ பக்கர் அவர்களும், அதன் பிறகு உஸ்மான் அவர்களும் குர்ஆன் வசனங்களை புத்தகமாக தொகுத்தது குர்ஆனுக்கு முரணான செயலா? என்ற கேள்வி எழுந்தால், "ஆம்" என்பது தான் பதில்.

குர்ஆனை புத்தகமாக தொகுத்தது, மனிதனின் சமயோசித புத்தியாகும், அல்லாஹ்வின் ஞானமல்ல. அல்லாஹ்விற்கும் அவனது நபிக்கும் தோன்றாத ஐடியா, சஹாபாக்களுக்கு தோன்றியதின் விளைவே, இன்று முஸ்லிம்கள் குர்ஆனை படித்துக்கொண்டு இருக்கிறார்கள். An idea can change your life என்று சொல்வது போல, குர்ஆனை புத்தகமாக தொகுக்கவேண்டும் என்ற ஐடியா தான் குர்ஆனை முஸ்லிம்களிடம் சேர்த்துள்ளது.

அல்லாஹ்வின் ஐடியா படி செய்திருந்தால்(குர்ஆனை மனப்பாடம் மட்டும் செய்திருந்தால்), இஸ்லாம் உலகில் இன்று இருந்திருக்குமோ! இல்லையோ! சந்தேகம் தான்.

கேள்வி 253: குர்ஆன் வசனங்களின் பின்னணி ஹதீஸ்களில் கிடைக்கும் என்கிறார்களே, அனைத்து குர்ஆன் வசனங்களுக்கும் பின்னணியை ஹதீஸ்களில் காணலாமா?

பதில் 253: இல்லை, குர்ஆனில் 6236 வசனங்கள் உள்ளன, இவைகள் அனைத்திற்கான பின்னணி ஹதீஹ்களில் இல்லை.

உதாரணம்: நான் "(திருக்குர்ஆன்" என்ற வார்த்தையை புகாரி ஹதீஸில் தேடிப்பார்த்தேன், அதாவது ஒரு நிகழ்ச்சியை குறிப்பிட்டுவிட்டு, அதன் பிறகு 'இந்த குறிப்பிட்ட குர்ஆன் வசனம்' இறங்கியது என்று வருகின்ற இடத்தை கணக்கிட்டால், நமக்கு 605 இடங்கள் வருகின்றன.

குர்ஆனில் உள்ள வசனங்களில் ~10% வசனங்களுக்கு பின்னணியை புகாரியில் காணலாம். இதர ஐந்து ஹதீஸ்களையும் சேர்த்தால் இன்னொரு 10% வசனங்களுக்கு பின்னணி கிடைக்கலாம்(போனால் போகட்டும் பெரிய மனசு எனக்கு). மொத்தத்தை கூட்டினால் ~20% வசனங்களுக்கு பின்னணிகள் கிடைக்கலாம். மீதமுள்ள 80% வசனங்களுக்கு வேறு இஸ்லாமிய நூல்களிலிருந்தும், விளக்கவுரைகளிலிருந்தும், சீராக்களிலிருந்தும் கிடைக்கும். இன்னும் ஆழமாக ஆய்வு செய்தால், இந்த கேள்விக்கு இன்னும் சரியான பதில் கிடைக்கும்.

கேள்வி 254: முஹம்மதுவின் சரித்திர நூல்களில் சொல்லப்பட்டவைகளோடு ஹதீஸ்கள் முரண்படுமா?

பதில் 254: ஆம், ஹதிஸ்களும், முஹம்மதுவின் வாழ்க்கை சரித்திர நூல்களும் முரண்படும்.

உதாரணம்:

இப்னு இஷாக்கின் "சீரத் ரஸூலல்லாஹ்" என்ற சரித்திர நூல் தான், ஹதீஸ்களுக்கும் முந்தையது. இதில் சொல்லப்பட்ட பல விவரங்கள், ஹதீஸ்களில் இருப்பதில்லை. மேலும், பல தர்மசங்கடமான விவரங்கள் இந்த சீராவில் உள்ளன. அதாவது "சாத்தானின் வசனங்கள்" பற்றிய நிகழ்ச்சி சீராவில் உள்ளது, ஹதீஸ்களில் இல்லை.

குறிப்பு: ஹதீஸ்களில் இல்லை என்றுச் சொல்வதைக் காட்டிலும், மறைமுகமாக உள்ளது எனலாம்.

கேள்வி 255: சாத்தானின் வசனங்கள் பற்றி ஹதீஸ்களில் இல்லை என்றுச் சொல்வது உண்மையா?

பதில் 255: முஸ்லிம்களின் பிரதானமான ஹதீஸ் தொகுப்பு 'ஸஹீஹ் புகாரி' ஆகும். குர்ஆனுக்கு அடுத்தபடியான ஆதாரமாக புகாரி நூல் உள்ளது. இந்த நூலில், சாத்தானின் வசனங்கள் பற்றி குறிப்பு உண்டு. ஆனால், சீராக்களில் சொல்லப்பட்டது போன்று பின்னணி விளக்கம் அளிக்காமல் குறிப்பிடப்பட்டுள்ளது.

பார்க்க: நூல் புகாரி, எண்கள்: 1071 & 4862

1071. இப்னு அப்பாஸ்(ரலி) அறிவித்தார்.

நபி(ஸல்) அவர்கள் நஜ்மு அத்தியாயத்தை ஓதி ஸஜ்தாச் செய்தார்கள். அவர்களுடன் இருந்த **முஸ்லிம்களும் இணைவைப்பவர்களும் ஏனைய மக்களும் ஜின்களும் ஸஜ்தாச் செய்தனர்**.

4862. இப்னு அப்பாஸ்(ரலி) அறிவித்தார்

நபி(ஸல்) அவர்கள் (53 வது அத்தியாயமான) 'அந்நஜ்கி' அத்தியாயத்தை ஓதி (ஓதலுக்கான) சிரவணக்கம் (சஜ்தா) செய்தார்கள். அவர்களுடன் இருந்த **முஸ்லிம்களும், இணைவைப்பாளர்களும், ஏனைய மக்களும், ஜின்களும் சஜ்தாச் செய்தனர்**. இந்த ஹதீஸ் மற்றோர் அறிவிப்பாளர் தொடர் வழியாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்னு உலைய்யா(ரஹ்) தம் அறிவிப்பில் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களை (அவர்கள் அறிவித்ததாக)க் குறிப்பிடவில்லை.

கேள்வி 256: சாத்தானின் வசனங்கள் பற்றிய பின்னணியை சுருக்கமாக விளக்கமுடியுமா?

பதில் 256:

இந்த ஹதீஸின் (சாத்தானின் வசனங்களின்) பின்னணி:

அனேக இஸ்லாமியர்கள் இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி (சாத்தானின் வசனங்கள்) நடைபெறவில்லை என்றுச் சொல்கிறார்கள். ஆனால், உண்மையில் "சாத்தானின் வசனங்கள்" நிகழ்ச்சி பற்றிய விவரங்கள் ஆரம்பகால இஸ்லாமிய நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது மட்டுமல்ல, இந்த விவரங்கள் ஹதீஸ்கள் மற்றும் குர்ஆனில் உள்ள விவரங்களோடு ஒத்துப்போகிறது.

முஹம்மது தன்னை நம்புகிறவர்களின் துன்பங்களுக்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்று விரும்பினார். அதே நேரத்தில் தன் ஊர் மக்களாகிய மக்காவினரோடு சமாதானமாக இருக்க விரும்பினார். இந்த பிரச்சனைகளுக்கு முடிவு கட்ட அல்லாஹ் ஒரு வெளிப்பாட்டை அனுப்புவார் என்று முஹம்மது நம்பினார்.

"இறைத்தூதர் தன் மக்களின் நலனில் அதிக அக்கரையுள்ளவராக இருந்தார் மற்றும் மக்காவினரோடு ஒற்றுமையடைந்து சமாதானமாக இருக்க விரும்பினார்..." Tabari vol 6, page 107, 108.

இந்த சந்தர்ப்பத்தை சாத்தான் பயன்படுத்திக்கொண்டு முஹம்மதுவின் வாயில் தன் வசனங்களை போட்டுவிட்டான். முஹம்மது சாத்தானின் வார்த்தைகளை அப்படியே அல்லாஹ்வின் வார்த்தையாக வெளிப்படுத்திவிட்டார் மற்றும் மக்காவினரின் தெய்வங்களுக்கு மரியாதையும் செய்ய அனுமதித்து விட்டார்.

குர்ஆன் 53:19-20 நீங்கள் (ஆராதிக்கும்) லாத்தையும், உஸ்ஸாவையும் கண்டீர்களா? மற்றும் மூன்றாவதான "மனாத்"தையும் (கண்டீர்களா?) **இவைகள்**

உயர பறப்பவைகள், இவர்களின் மத்தியஸ்தம் அங்கீகாரத்தோடு ஏற்றுக்கொள்ளப்படும்.

முஹம்மதுவின் வார்த்தைகளை மக்கா மக்கள் ஏற்றுக்கொண்டனர், ஏனென்றால், இவர் அவர்களின் தெய்வங்களை அங்கீகரித்தார்.

"குரைஷிகள் இதை கேட்டதும், மட்டில்லா மகிழ்ச்சி கொண்டனர், மற்றும் அவர் தங்கள் தெய்வங்கள் பற்றி சொன்ன விதம் அவர்களுக்கு அதிக சந்தோஷத்தை கொடுத்தது..." Tabari vol 6, page 108.

இந்த இடத்தில் நடந்த நிகழ்ச்சியைத் தான் மேற்கண்ட ஹதீஸ்கள் கூறுகின்றன, அதனை இன்னொரு முறை இங்கு படியுங்கள்:

புகாரி 1071. இப்னு அப்பாஸ்(ரலி) அறிவித்தார்.

நபி(ஸல்) அவர்கள் நஜ்மு அத்தியாயத்தை ஓதி ஸஜ்தாச் செய்தார்கள். அவர்களுடன் இருந்த முஸ்லிம்களும் இணைவைப்பவர்களும் ஏனைய மக்களும் ஜின்களும் ஸஜ்தாச் செய்தனர்.

கவனிக்கவும், முஸ்லிம்களோடு சேர்ந்து இணைவைப்பாளர்கள் ஸஜ்தா (சிரம் பணிந்து தொழுதுக்கொள்வது) செய்தனர். இந்த ஹதீஸின் படி, முஸ்லிம்கள், இணைவைப்பாளர்களாகிய மக்கா மக்கள், ஜின்கள் என்று எல்லோரும் ஸஜ்தா செய்தனர்.

இதுவரை தங்கள் தெய்வங்களை திட்டிக்கொண்டு இருந்த முஹம்மது, இப்போது அவைகள் பற்றி நன்றாக கூறி குர்ஆன் வசனங்களை ஓதியுள்ளாரே என்ற மகிழ்ச்சியில், இணைவைப்பாளர்கள் ஒன்றாக சேர்ந்து தொழுதார்கள்.

பிறகு நடந்தென்ன?

எல்லோரும் ஒன்றாக ஸஜ்தா செய்துவிட்டு, வீட்டிற்குச் சென்றுவிட்டனர். அதன் பிறகு காபிரியேல் தூதன் முஹம்மதுவை கடிந்துக்கொண்டு அவரின் தவறை திருத்தினார். இதனால், முஹம்மது குர்ஆனில் இருந்த அந்த சாத்தானின் வசன பகுதிக்கு பதிலாக வேறு வசனத்தைச் சொன்னார், மறுபடியும் இது மக்காவினரின் மனதை வேதனைக்குள்ளாக்கியது. முஹமம்து தன் பாவத்திற்காக அதிகமாக வேதனையடைந்தார், ஆகையால், காபிரியேல் முஹம்மதுவிடம் "அல்லாஹ் உன் தவறை லேசாக எடுத்துக்கொண்டார்" என்றுச் சொன்னார், அதாவது சாத்தானின் பொய்யான வசனத்தை குர்ஆனோடு சேர்த்த முஹம்மதுவின் பாவத்தை அல்லாஹ் அவ்வளவு பெரிய பாவமாக கருதவில்லை. இதோடு நின்றுவிடாமல், முந்தைய நபிகளும் இதே போல சாத்தானால் தூண்டப்பட்டு, இதே பாவத்தை செய்தார்கள், அதாவது சாத்தானின் வசனத்தை இறைவனின் வசனமாகச் சொன்னார்கள் என்றும் அல்லாஹ் கூறினார்.

சாத்தானின் வசனத்தை சொல்லிவிட்டோமே என்று துக்கப்பட்ட முஹம்மதுவை தேற்றும் அல்லாஹ்:

டாக்டர். முஹம்மது ஜான் தமிழாக்கம்:

குர்ஆன் 22:52. (நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பி வைத்த ஒவ்வொரு தூதரும், நபியும், (ஓதவோ, நன்மையையோ) நாடும்போது, அவர்களுடைய அந்த நாட்டத்தில் **ஷைத்தான்** குழப்பத்தை எறியாதிருந்ததில்லை; எனினும் ஷைத்தான் எறிந்த குழப்பத்தை அல்லாஹ் நீக்கியப் பின்னர் அவன் தன்னுடைய வசனங்களை உறுதிப்படுத்துகிறான் - மேலும், அல்லாஹ் யாவற்றையும் அறிந்தவனாகவும், ஞானம் மிக்கோனாகவும் இருக்கின்றான்.

அப்துல் ஹமீது பாகவி தமிழாக்கம்:

குர்ஆன் 22:52. (நபியே!) உங்களுக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு நபியும், தூதரும் (எதையும்) ஓதிய சமயத்தில் அவருடைய ஓதுதலில் **ஷைத்தான்** குழப்பத்தை உண்டு பண்ண முயற்சிக்காமல் இருக்கவில்லை. (அவர்களுடைய ஓதுதலில்) ஷைத்தான் உண்டுபண்ணிய (தப்பான)தை அல்லாஹ் நீக்கிய பின்னர்தன்னுடைய வசனங்களை உறுதிப்படுத்தி விடுகின்றான். அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவனும் ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்.

இன்று நம்மிடமுள்ள குர்ஆனில், கீழ்கண்ட வசனத்தில், கடைசி பாகம் இருப்பதில்லை.

குர்ஆன் 53:19-20 நீங்கள் (ஆராதிக்கும்) லாத்தையும், உஸ்ஸாவையும் கண்டீர்களா? மற்றும் மூன்றாவதான "மனாத்"தையும் (கண்டீர்களா?) ~~இவைகள் உயர பறப்பவைகள், இவர்களின் மத்தியஸ்தம் அங்கீகாரத்தோடு ஏற்றுக்கொள்ளப்படும்~~.

சாத்தனின் வசனங்கள் பற்றிய விவரங்களை நமக்கு கீழ் கண்ட ஆரம்ப கால இஸ்லாமிய மூலங்களிலிருந்து (Early Muslim Resources) கிடைக்கின்றன:

(1) Ibn Ishaq, (இபின் இஷாக்)

(2) Wakidi, (வாகிடி)

(3) Ibn Sa'd, (இபின் சத்)

(4) al-Tabari, (அல்-தபரி)

(5) Ibn Abi Hatim, (இபின் அபி ஹடிம்)

(6) Ibn al-Mundhir, (இபின் அல்-முந்திர்)

(7) Ibn Mardauyah, (இபின் மர்டவ்யா)

(8) Musa ibn 'Uqba, and (மூசா இபின் அக்பா)

(9) Abu Ma'shar.[6] (அபு மஷர்)

இப்போதைக்கு இந்த விவரங்கள் போதும், இதைப் பற்றி விவரமாக வேறு கேள்வியில் காண்போம்.

கேள்வி 257: சன்னி ஹதீஸ்கள் ஆறும் தமிழாக்கம் செய்யப்பட்டு இணையத்தில் கிடைக்குமா?

பதில் 257: இல்லை, வெறும் இரண்டு தமிழாக்கங்கள் மட்டும்தான் முழுவதுமாக தமிழில் கிடைக்கிறது.

- ஸஹீஹ் புகாரி
- ஸஹீஹ் முஸ்லிம்

தொடுப்பு: www.tamililquran.com

கேள்வி 258: தபரி என்ற இஸ்லாமிய சரித்திர ஆசிரியர் பற்றி சிறிது விளக்கவும்.

பதில் 258: அபூ ஜபர் முஹம்மத் இப்னு ஜரீர் அத்தபரி என்பது இவரது முழு பெயராகும். இவர் கி.பி. 839ம் ஈரானிலுள்ள அமோல், தபரிஸ்தானில் பிறந்தார். இவர் ஈராக்கில் உள்ள பாக்தாத்தில் கி.பி. 923ம் ஆண்டு காலமானார். இவர் ஒரு முக்கியமான இஸ்லாமிய அறிஞராவார். இவர் இஸ்லாமின் ஆரம்ப கால விவரங்களை பல அறிஞர்களிடமிருந்து சேகரித்து தொகுத்தார்.

இவருக்கு பிறகு வந்த இஸ்லாமிய அறிஞர்கள் தபரியின் இந்த தொகுப்பை அதிகமாக பயன்படுத்துகின்றனர். இவரது தொகுப்பிலிருந்து தான், அல்பிரட் குல்லேம் (Alfred Guillaume) இப்னு இஷாக்கின் "முகம்மதுவின் சரிதையிலிருந்து" தொலைந்து விட்ட பகுதிகளை மீட்டு எடுத்தார். இப்னு ஹிஷாம் தம்முடைய சரிதையில் அவ்விவரங்களை வேண்டுமென்றே நீக்கி இருந்தார்.

இஸ்லாமின் சுன்னி பிரிவு முஸ்லிம்களின் கோட்பாடுகளுக்கு தபரியின் தொகுப்பு ஒரு முக்கியமான மூலமாக இருந்துள்ளது.

இவர் குர்ஆன் விளக்கவுரையையும் முஹம்மதுவின் வாழ்க்கை சரிதையையும் எழுதினார்:

- Tafsir al-Tabari ('Commentary of al-Tabari'); Qur'anic commentary (tafsir).
- Tarikh al-Rusul wa al-Muluk (History of the Prophets and Kings), historical chronicle, often referred to as Tarikh al-Tabari.

Source: en.wikipedia.org/wiki/Al-Tabari

முக்கிய குறிப்பு: தபரி என்று பெயர் பெற்ற இன்னொருவர் இருக்கிறார், அவரோடு மேலே குறிப்பிட்ட தபரியை சம்மந்தப்படுத்தி குழப்பிக்கொள்ளவேண்டாம்.

இவரது பெயர் "அலி பி. இரப்பான் தபரி, (Ali b. Rabban at-Tabari) ஆகும், இவர் கி.பி. 855ம் ஆண்டு காலமானார். இவர் "Firdaws al-Hikma (கி.பி. 850)" மற்றும் "The Book of Religion and Empire" என்ற புத்தகங்களையும், இதர நூல்களையும் எழுதியுள்ளார். இவர் கிறிஸ்தவ பின்னணியைக்

கொண்டவர், இவர் இஸ்லாமை தழுவியிருந்தார். மேலும் கிறிஸ்தவர்களுக்கு எதிராகவும் இவர் எழுதியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

கேள்வி 259: முஹம்மது தமது மரணத்தருவாயில் யூத கிறிஸ்தவர்களை சபித்ததாக வரும் ஹதீஸ் எது?

பதில் 259: முஹம்மது மரிக்கும் போது, மற்றவர்களை சபித்தார், பார்க்க:

புகாரி நூல் எண்கள்: 435, 436:

435. ஆயிஷா(ரலி) அறிவித்தார். நபி(ஸல்) அவர்கள் மரண வேளை நெருங்கியபோது தங்களின் போர்வையைத் தம் முகத்தின் மீது போடுபவர்களாகவும் மூச்சுத் திணறும்போது அதைத் தம் முகத்தைவிட்டு அகற்றுபவர்களாகவும் இருந்தனர். இந்த நிலையில் அவர்கள் இருக்கும்போது '**தங்கள் நபிமார்களின் அடக்கஸ்தலங்களை வணக்கத் தலங்களாக ஆக்கிய யூத கிறிஸ்தவர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் ஏற்படட்டும்!**' எனக் கூறி அவர்களின் செய்கை பற்றி எச்சரித்தார்கள்.

இயேசு தன்னை சிலுவையில் அறைந்தவர்களை மன்னித்தார். இவ்விருவருக்கும் இடையே இருக்கும் வித்தையாசத்தை கவனித்தீர்களா?

லூக்கா 23: 34. அப்பொழுது இயேசு: பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்...

கேள்வி 260: "ஸஃபியுர் ரஹ்மான் முபாரக்பூரி" எழுதிய “ரஹீக்” புத்தகத்தின் முக்கியத்துவம் என்ன?

பதில் 260: முஹம்மதுவின் வாழ்க்கை வரலாறு ஹதீஸ்களில் முழுவதுமாக இல்லை. குர்-ஆனில் முஹம்மதுவின் வரலாறு 1% கூட இல்லை என்றுச் சொல்லலாம். ஆரம்ப கால இஸ்லாமிய அறிஞர்கள் முஹம்மதுவின் வாழ்க்கை வரலாற்றை ஒரு கோர்வையாக எழுதினார்கள், அதில் முக்கியமானவர் இப்னு இஷாக் என்பவர் ஆவார். இவர் எழுதிய கையெழுத்துப் பிரதிகள் இப்போது நம்மிடம் இல்லை, ஆனால், இவரைத் தொடர்ந்து இப்னு இஷாம், மற்றும் தபரி போன்றவர்கள், இவருடைய புத்தகத்திலிருந்து முழுவதுமாக மேற்கோள் காட்டியுள்ளார்கள். அதாவது, அழிந்துவிட்ட இப்னு இஷாக்கின் சரித்திரம் முழுவதும் இவ்விருவரின் புத்தகங்களில் கிடைத்துவிடும். தமிழ் முஸ்லிம்களின் துரதிர்ஷ்டம் என்னவென்றால், இந்த சரித்திரங்கள் அனைத்தும் இதுவரை தமிழில் மொழியாக்கம் செய்யப்படவில்லை என்பதாகும் [ஆங்கிலத்தில் உண்டு].

”அர்ரஹீக்குல் மக்தூம்” அல்லது ரஹீக் என்ற பெயரில் ஒரு புத்தகம் தமிழில் முஸ்லிம்களால் மொழியாக்கம் செய்யப்பட்டது. இதில் சொல்லிக்கொள்ளும் அளவிற்கு முஹம்மதுவின் சரித்திரம் ஒரு கோர்வையாக எழுதப்பட்டுள்ளது.

இப்புத்தகத்துக்கு ஒரு சிறப்பு உண்டு. ”உலக இஸ்லாமிய லீக்” என்ற இயக்கம் மக்காவை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. 1976ம் ஆண்டு, முஹம்மதுவின் வாழ்க்கை வரலாற்றை இஸ்லாமிய சரித்திரத்தின் அடிப்படையில் சிறப்பாக எழுதுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும் (மொத்தம் 1,50,000 சௌதி ரியால்கள்) என்று அறிவித்தது. உலகமனைத்திலும் இருந்து 1182 ஆய்வுகள் பல மொழிகளில் பல இஸ்லாமிய அறிஞர்கள் எழுதி அனுப்பினார்கள். அதில் கடைசியாக 183 ஆய்வுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, முடிவாக 5 ஆய்வுகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இதில் முதல் பரிசை தட்டிச்சென்றது இந்த “ரஹீக்” என்ற புத்தகம். இதனை தமிழிலும் மொழியாக்கம் செய்து வெளியிட்டார்கள். முஹம்மதுவைப் பற்றிய விவரங்களை கோர்வையாக படிக்க இந்த புத்தகம் பேருதவியாக உள்ளது.

- இப்புத்தகத்தின் இதர விவரங்களை அறியவும், PDFல் மற்றும் ஆடியோவில் பதிவிறக்கம் செய்யவும் இந்த தொடுப்பிற்குச் செல்லவும்: **இஸ்லாம் கல்வி**
- இணையத்தில் படிக்க இங்கு சொடுக்கவும்: **தமிழில் குர்-ஆன் - முஹம்மதுவின் வரலாறு**

ஆக, பாகிஸ்தானும், சௌதியும் (உலக முஸ்லிம் தலைவர்கள்) ஒன்றாக சேர்ந்து ஆய்வு செய்து, இது தான் உண்மையான ஆதார பூர்வமான முஹம்மதுவின் சரித்திரம் என்று பாராட்டி, பரிசுகள் வழங்கிய புத்தகம் தான் ரஹீக் (அர்ரஹீக்குல் மக்தூம் என்றால், முத்திரையிடப்பட்ட உயர்ந்த மதுபானம் என்று பொருள்). இதன் இன்னொரு சிறப்பு, இப்புத்தகத்தின் ஆசிரியர் ஒரு இந்தியர் (உத்திர பிரதேசம்) என்பதாகும்.

கேள்வி 261: முஹம்மது பாவங்கள் செய்யவில்லை என்று முஸ்லிம்கள் சொல்கிறார்கள், ஆனால் அவர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கோரியதாக ஹதீஸ்களில் உள்ளது என்கிறார்கள், இது உண்மையா?

பதில் 261: முஹம்மது சொன்னதை நம்பவேண்டுமா? அல்லது முஸ்லிம்கள் சொல்வதை நம்பவேண்டுமா?

முஹம்மது செய்த விண்ணப்பத்தை முஸ்லிம்களின் நம்பகமான ஸஹீஹ் (புகாரி) ஹதீஸ்களில் காண்போம்.

a) நான் (முஹம்மது) பாவங்கள் புரிந்துள்ளேன்:

பாகம் 6, அத்தியாயம் 80, எண் 6306

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்'

'அல்லாஹும்ம! அன்த்த ரப்பீ. லா இலாஹ இல்லா அன்த்த. கல்க்த்தனீ. வ அன அப்துக்க. வ அன அலா அஹ்திக்க, வ வஅதிக்க மஸ்ததஅத்து. அஊது பிக்க மின் ஷர்ரி மா ஸனஅத்து. அபூ உ லக்க பி நிஅமத்திக்க அலய்ய, வ அபூ உ லக்க பி தன்பீ. ஃபஃக்பிர்லீ. ஃபஇன்னஹு லா யஃக்பிருத் துன}ப இல்லா அன்த்த' என்று ஒருவர் கூறுவதே தலைசிறந்த பாவமன்னிப்புக் கோரலாகும்.

(பொருள்: அல்லாஹ்! நீயே என் அதிபதி. உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. நீயே என்னைப் படைத்தாய். நான் உன் அடிமை நான் உனக்குச் செய்து கொடுத்த உறுதி மொழியையும் வாக்குறுதியையும் என்னால் இயன்ற வரை நிறைவேற்றியுள்ளேன். நான் செய்தவற்றின் தீமைகளிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன். நீ எனக்கு அருட் கொடைகளை வழங்கியுள்ளாய் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். மேலும், நான் பாவங்கள் புரிந்துள்ளதையும் உன்னிடம் (மறைக்காமல்) ஒப்புக்கொள்கிறேன். எனவே, என்னை மன்னிப்பாயாக! ஏனெனில், பாவத்தை மன்னிப்பவன் உன்னைத் தவிர வேறெவரும் இல்லை.) …. என ஷத்தாத் இப்னு அவ்ஸ்(ரலி) அறிவித்தார்

b) எனக்கும் என் தவறுகளுக்குமிடையே நீ இடைவெளியை ஏற்படுத்துவாயாக

பாகம் 6, அத்தியாயம் 80, எண் 6368

ஆயிஷா(ரலி) அறிவித்தார்.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்' …

(பொருள்: இறைவா! உன்னிடம் நான் சோம்பலிலிருந்தும், தள்ளாமையிலிருந்தும் பாவத்திலிருந்தும், கடனிலிருந்தும், மண்ணறையின் சோதனையிலிருந்தும், அதன் வேதனையிலிருந்தும், நரகத்தின் சோதனையிலிருந்தும், அதன் வேதனையிலிருந்தும், செல்வத்தின் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புக் கோருகிறேன். மேலும், நான் உன்னிடம் வறுமையின் சோதனையிலிருந்தும் பாதுகாப்புக் கோருகிறேன். (பெருங்குழப்பவாதியான) மஸீஹுத் தஜ்ஜாலின் சோதனையிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன். இறைவா! பனிக்கட்டியாலும் ஆலங்கட்டியாலும் என் தவறுகளை என்னிலிருந்து கழுவுவாயாக! மேலும், அழுக்கிலிருந்து வெண்மையான ஆடையை நீ தூய்மைப் படுத்துவதைப் போன்று தவறுகளிலிருந்து என் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவாயாக! கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையே நீ ஏற்படுத்திய இடைவெளியைப் போன்று எனக்கும் என் தவறுகளுக்குமிடையே நீ இடைவெளியை ஏற்படுத்துவாயாக)

c) நான் வேண்டுமென்றே அறிந்து செய்த பாவங்களையும் மன்னிப்பாயாக:

பாகம் 6, அத்தியாயம் 80, எண் 6398

அபூ மூஸா(ரலி) அறிவித்தார்.

நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு பிரார்த்திப்பது வழக்கம்: ரப்பிஃக்ஃபிர் லீ கத்தீஅத்தீ, வ ஜஹ்லீ, வ இஸ்ராஃபி ஃபீ அம்ரீ குல்லிஹி, வமா அன்த்த அஉலமு பிஹி மின்னீ, அல்லாஹும்மஃக்ஃபிர்லீ கத்தாயாய, வ அம்தீ, வ ஜஹ்லீ, வ ஜத்தீ வ குல்லு தாலிக்க இந்தீ. அல்லாஹும்ம ஃக்ஃபிர் லீ மா கத்தகித்து, வ மா அஉலன்த்து, அன்த்தல் முகத்திமு, வ அன்த்தல் முஅக்கிரு, வ அன்த்த அலா குல்லி ஷையின் கதீர்.

(பொருள்: என் இறைவா! என் குற்றங்களையும், என் அறியாமையையும், என் செயல்கள் அனைத்திலும் நான் மேற்கொண்ட விரயத்தையும் மன்னித்திடுவாயாக. மேலும், என்னை விட நீ எவற்றையெல்லாம் அறிந்துள்ளாயோ அவற்றையும் மன்னித்திடுவாயாக. இறைவா! நான் தவறுதலாகச் செய்ததையும், வேண்டுமென்றே செய்ததையும், அறியாமல் செய்ததையும், அறிந்து செய்ததையும் மன்னித்திடுவாயாக. இவை யாவும் என்னிடம் இல்லாமலில்லை. இறைவா! நான் முன்னால் செய்ததையும், பின்னால் செய்ததையும், இரகசியமாகச் செய்ததையும் பம்ரங்கமாகச் செய்ததையும் மன்னித்திடுவாயாக. நீயே முன்னேற்றம் அடையச் செய்பவன். பின்னடைவு ஏற்படச் செய்பவனும் நீயே! நீ அனைத்தின் மீதும் ஆற்றல் பெற்றவன்.

d) என்னிடம் பாவம் இல்லாமல் இல்லை, மன்னித்திடு:

பாகம் 6, அத்தியாயம் 80, எண் 6399

அபூ மூஸா அல் அஷ்அரீ(ரஹ்) அவர்கள்கூறினார்:

நபி(ஸல்) அவர்கள் (பின்வருமாறு) பிரார்த்தித்துவந்தார்கள். அல்லாஹும்ம ஃக்ஃபிர் லீ கத்தீஅத்தீ, வ ஜஹ்லீ, வ இஸ்ராஃபீ ஃபீ அம்ரீ, வமா அன்த்த அஉலமு பிஹி மின்னீ, அல்லாஹும்ம ஃக்ஃபிர் லீ ஹஸ்லீ, வ ஜித்தீ, வ கத்தயீ, வ அம்தீ, வ குல்லு தாலிக்க இந்தீ.

(பொருள்: இறைவா! என் குற்றங்களையும் என் அறியாமையையும், என் செயல்களில் நான் மேற்கண்ட விரயத்¡யும், மேலும், என்னை விட நீ எவற்றையெல்லாம் அறிந்துள்ளாயோ அவற்றையும் மன்னித்திடுவாயாக! இறைவா! நான் விளையாட்டாகச் செய்ததையும், வினையாகச் செய்ததையும், தவறுதலாகச் செய்ததையும், வேண்டுமென்றேச் செய்ததையும் மன்னித்திடுவாயாக! இவை யாவும் என்னிடம் இல்லாமலில்லை.)

இந்த பாவமன்னிப்பின் ஜெபத்தில் அவர் "பாவம்" என்பதற்கு வேறு ஒரு வார்த்தையை பயன்படுத்துகிறார். அவர் "தன்ப்" என்ற வார்த்தைக்கு பதிலாக "**க்ஹடிய – khati'a**" என்ற வார்த்தையை பயன்படுத்துகிறார்.

இஸ்லாமிய கலைக் களஞ்சியம் (The Encyclopedia of Islam [9]) "க்ஹடிய – khati'a" என்ற வார்த்தையின் பொருளை கீழ்கண்டவாறு விவரிக்கிறது:

"Moral lapse, sin, a synonym of dhanb. The root means "to fail, stumble", "make a mistake", "of an archer whose arrow misses the target".

"நற்குண குறைபாடு, பாவம், 'தன்ப்' என்ற வார்த்தைக்கு சுமமானது". இதன் மூல வார்த்தையின் பொருள் "தவறுவது, தடுமாறுவது", "தவறு செய்வது", "குறி தவறிய அம்பை எய்தவன்" என்பவைகளாகும்.

முஹம்மது தன்னுடைய விண்ணப்பத்தில் (ஜெபத்தில்), பாவத்தின் அனைத்து விதங்களையும் அங்கீகரிக்கிறார்:

அதாவது:

- தீய செயல்கள்,
- தவறுகள்,
- தெரியாமல் செய்த தவறுகள்,
- பிழைகள்,
- தற்செயலாக செய்த பிழைகள்,
- வேண்டுமென்றே தெரிந்தே செய்த பாவங்கள்,
- கடந்த கால பாவங்கள்,
- எதிர்கால பாவங்கள் மற்றும்
- பெரிய பாவங்கள்

என்று அனைத்து விதமான பாவங்கள் பற்றியும் கூறுகிறார். இந்த செயல்கள் அனைத்தும் வெறும் சிறிய "தவறுகள்" அல்ல, அதற்கு பதிலாக இவைகள் அனைத்தும் "தண்டனைக்கு உகந்த பாவங்கள்" ஆகும், இதனை முஹம்மதுவின் விண்ணப்பத்தை கவனித்தால் புரிந்துக்கொள்ளலாம்.

முஹம்மது ஒரு பாவி என்று அவரே அங்கீகரித்து விட்டார். அவர் செய்த பாவ மன்னிப்பின் விண்ணமானது, அவர் தன்னுடைய பாவத்தின் தீவிரத்தை அறிந்திருக்கிறார் என்பதை நமக்கு காட்டவில்லையா? அல்லாஹ் பாவங்கள் செய்யும் மனிதர்களை தண்டிக்கிறார் என்பதை அறிந்திருந்தார், அதனால் தான் அவர் பாவமன்னிப்பிற்காக அல்லாஹ்விடம் வேண்டினார். தன்னுடைய குற்றங்களுக்காக நரகத்தில் எரிய முஹம்மது விரும்பவில்லை.

கேள்வி 262: ஹதீஸ்களில் விஞ்ஞான பிழைகள் உண்டா? நிலவு பிளந்த அற்புதத்தை முஹம்மது செய்தாரா?

பதில் 262: சந்திரன் பிளக்கப்பட்டதைப் பற்றி முஸ்லிம் ஹஹீஸில் பதிவுசெய்யப்பட்டுள்ள விவரங்கள்:

5395. அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது காலத்தில் சந்திரன் இரண்டு துண்டுகளாகப் பிளந்தது. அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "(நான் இறைவனின் தூதர் என்பதற்கு) நீங்கள் சாட்சிகளாக இருங்கள்" என்று சொன்னார்கள். இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது.

மேலும் பார்க்க: ஸஹீஹ் முஸ்லிம் ஹதீஸ் எண்கள்: 5396, 5397, 5398, 5399, 5400

இந்த ஹதீஸ்களை மேலோட்டமாக படிக்கும் போதும், அவைகளில் தவறுகள் இருப்பதை காணமுடியும்.

கேள்விகள்:

- யாரிடம் முஹம்மது “(நான் இறைவனின் தூதர் என்பதற்கு) நீங்கள் சாட்சிகளாக இருங்கள்” என்று கூறினார்? முஹம்மதுவின் தோழர்கள் ஏற்கனவே அவரை நபி என்று நம்பிவிட்டார்களே! அவர்களிடம் ஏன் மறுபடியும் நீங்கள் சாட்சிகளாக இருங்கள் என்று கேட்கிறார்?
- சந்திரனின் விட்டம் எவ்வளவு என்று இந்த ஹதீஸை அறிவித்த அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் என்பவருக்குத் தெரியுமா?
- சந்திரன் இரண்டாக பிளந்து ஒரு துண்டு ஹிரா மலைக்கு மேற்பகுதியில் காணப்பட்டதாம், இன்னொரு துண்டு ஹிரா மலைக்கு கீழ்பகுதிக்கு சென்றதாம்.
- பூமியில் அளவில் நான்கில் ஒரு பாகம் சந்திரனின் அளவு ஆகும் (27%).
- சந்திரனின் விட்டம் 1737 கிலோ மீட்டராகும்.
- பூமியில் நின்றுக்கொண்டு சந்திரனை பார்ப்பவர்கள் (அக்கால அரேபியர்கள்), சந்திரனின் அளவு நம் இரண்டு கைகளால் பிடிக்கக்கூடிய அளவிற்கு இருக்கும் ஒரு பந்து போல என்று நினைத்துக்கொண்டு மேற்கண்ட ஹதீஸை சொல்லியுள்ளார்கள். ஆனால், 1737 கிமீ விட்டம் கொண்ட ஒரு பந்தை இரண்டாக பிளந்தால், அதன் பின்னால், ஹிரா மலையென்ன, அரேபியாவின் பாதி அப்படியே மறைந்துவிடும்.

மேற்கண்ட ஹதீஸ் ஒரு பொய்யான ஹதீஸ் என்பது இதிலிருந்து நமக்குத் தெரிகின்றது. ஒருவர் கனவு கண்டால், அதில் மேற்கண்ட விதமாக பார்த்தார் என்றுச் சொன்னால், அதனை ஏற்கலாம், ஏனென்றால் கனவில் (கற்பனைப்போன்று) எல்லாம் சாத்தியம். ஆனால், இங்கு நாம் ஆய்வு செய்துக்கொண்டு இருப்பது, உண்மையான நிலவு இரண்டாக பிளந்தது பற்றியதாகும். எனவே, முஹம்மது சந்திரனை பிளந்து அற்புதம் செய்தார் என்பது பொய்யான கூற்று மேலும், குர்-ஆனின் போதனைக்கு எதிராக ஒன்று.

கேள்வி 263: ஷியா முஸ்லிம்கள் எத்தனை ஹதீஸ் தொகுப்புக்களை பின்பற்றுகிறார்கள்

பதில் 263: சன்னி முஸ்லிம் பிரிவினர் ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் என்று "ஆறு தொகுப்புக்களை" வைத்துள்ளார்கள் என்பதை வேறு ஒரு பதிலில் கண்டோம் (புகாரி, முஸ்லிம், நஸயி, அபூதாவுத், திர்மிதி, இப்னு மாஜா).

இதே போன்று ஷியா முஸ்லிம்கள் தங்களுக்கென்று நான்கு ஹதீஸ் தொகுப்புக்களை அதிகாரபூர்வமானதாக கருதுகிறார்கள். இதனை “அல்-குதுப் அல்-அர்பா (al-Kutub al-ʾArbaʿah)” என்பார்கள். குதுப் என்றால் புத்தகங்கள், அர்பா என்றால் நான்கு என்று பொருள்.

அவைகள்: (நூல், தொகுத்தவர், எண்ணிக்கைகள்)

1. கிதாப் அல்-காஃபி (முஹம்மது இப்னு யாகூப் அல்-குலேனி அல்-ராசி, 16,199)
2. மன் லா யஹதுருஹு அல்-ஃபாகிஹ் (முஹம்மது இப்னு பாபாவே, 9,044)
3. தஹ்திப் அல்-அஹ்கம் (ஷேக் முஹம்மது துசி, 13,590)
4. அல்-இஸ்திப்சர் (ஷேக் முஹம்மது துசி, 5,511)

மூலம்: https://en.wikipedia.org/wiki/The_Four_Books

கேள்வி 264: முதலில் எழுதப்பட்டவைகள் எவை? ஹதீஸ்களா அல்லது முஹம்மதுவின் சீரா என்கின்ற வாழ்க்கை சரிதை நூல்களா?


பதில் 264:

ஸஹீஹ் ஹதீஸ்களான புகாரி, முஸ்லிம் தொகுப்புக்களை விட இப்னு இஷாக்கின் சீரா (வாழ்க்கை சரித்திரம்) தான் முந்தையது.

இப்னு இஷாக் - முஹம்மதுவின் வாழ்க்கை சரித்திரம்

முஹம்மதுவின் வாழ்க்கை சரித்திரத்தை முதன் முதலாக தொகுத்து எழுதிய இப்னு இஷாக் என்பவர், ஹிஜ்ரி 85ல் பிறந்தவர். இவருடைய சரித்திரம் தான் சஹீஹ் ஹதீஸ்களை விட முந்தையது. ஆனால், முஸ்லிம்கள் இவரது சரித்திரத்தை ஆதார பூர்வமானதாக கருதமாட்டார்கள், ஏனென்றால், சில தர்மசங்கடமான விவரங்கள், இந்த சரித்திரத்தில் இருப்பதினால் தான் (உதாரணத்திற்கு, சாத்தானின் வசனங்களை முஹம்மது அல்லாஹ்வின் வஹியாக சொன்ன நிகழ்ச்சியைச் சொல்லலாம்).

படம்: இப்னு இஷாக்கின் மற்றும் ஹதீஸ்களின் காலவரிசை



ஹிஜ்ரி 100க்குள் இப்னு இஷாக்கின் பிறப்பு, ஹிஜ்ரி 200க்குள் புகாரியின் பிறப்பு. முஸ்லிம்கள் இப்னு இஷாக்கின் சரித்திரத்தை ஆதாரமாக எடுத்துக் கொண்டு இருந்திருந்தால், இன்னொரு 100 ஆண்டுகளில் நுழைந்த பொய்களை தவிர்த்து இருந்திருக்கலாம்.

(குறிப்பு:இப்னு இஷாக்கின் சரித்திரம், புத்தகமாக நம்மிடம் இப்போது இல்லை, ஆனால், அவரது மாணவர்களாகிய இப்னு இஷாம், மற்றும் தபரி போன்றவர்கள், அவரது புத்தகத்திலிருந்து பல மேற்கோள்களை சுட்டிக் காட்டியுள்ளார்கள். அவைகளை வைத்துத் தான், இப்னு இஷாக்கின் சரித்திர விவரங்கள் கிடைத்துள்ளன.)

கேள்வி 265: அல்லாவிற்கு 99 பெயர்கள் உள்ளன என்றுச் சொல்லும் ஹதீஸ் எது?

பதில் 265: புகாரியிலும், முஸ்லிம் ஹதீஸ் தொகுப்பிலும் இரண்டு ஹதீஸ்கள் கிடைத்துள்ளன.

ஸஹீஹ் புகாரி எண்கள்: 6410 & 7392

புகாரி எண் 6410. அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். **அல்லாஹ்விற்கு தொண்ணூற்று ஒன்பது நூற்றுக்கு ஒன்று குறைவான - பெயர்கள் உண்டு**. அவற்றை (நம்பிக்கை கொண்டு) மனனமிட்டவர் யாரும் சொர்க்கம் நுழையாமல் இருப்பதில்லை. அல்லாஹ் ஒற்றையானவன். ஒற்றைப்படையையே அவன் விரும்புகிறான்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

புகாரி எண் 7392. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் அறிவித்தார்கள்: நிச்சயமாக அல்லாஹ்விற்கு **தொண்ணூற்று ஒன்பது - நூற்றுக்கு ஒன்று குறைவான - பெயர்கள் உள்ளன**. அவற்றை (நம்பிக்கை கொண்டு) மனனமிட்டவர் சொர்க்கத்தில் நுழைவார். என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். (இந்த ஹதீஸின் மூலத்திலுள்ள) 'அஹ்ஸா' எனும் சொல்லுக்கு 'மனனமிடல்' என்று பொருள்.

ஸஹீஹ் முஸ்லிம் எண்கள்: 5198 & 5199

முஸ்லிம் எண் 5198. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வுக்குத் **தொண்ணூற்று ஒன்பது** பெயர்கள் உள்ளன. அவற்றை (நம்பிக்கை கொண்டு) மனனமிட்டவர் சொர்க்கம் செல்வார். மேலும், அல்லாஹ் ஒற்றையானவன். ஒற்றைப்படையையே அவன் விரும்புகிறான். இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

இந்த ஹதீஸ் மூன்று அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது.

அவற்றில் இப்னு அபீஉமர் (ரஹ்) அவர்களது அறிவிப்பில், ("அவற்றை மனனமிட்டவர்" என்பதைக் குறிக்க "மன் ஹஃபிழஹா" என்பதற்குப் பகரமாக) "மன் அஹ்ஸாஹா" என இடம்பெற்றுள்ளது.

முஸ்லிம் எண் 5199. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: **அல்லாஹ்வுக்குத் தொண்ணூற்று ஒன்பது (நூற்றுக்கு ஒன்று குறைவான) பெயர்கள் உள்ளன**. அவற்றை (நம்பிக்கை கொண்டு) மனனமிட்டவர் சொர்க்கம் நுழைவார். இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. அவற்றில் ஹம்மாம் பின் முனப்பிஹ் (ரஹ்) அவர்களது அறிவிப்பில், "அல்லாஹ் ஒற்றையானவன். ஒற்றைப்படையையே அவன் விரும்புகிறான்" என்று கூடுதலாக இடம்பெற்றுள்ளது.

முஸ்லிம்கள்/கிறிஸ்தவர்கள் சிந்திக்க சில கேள்விகள்:

1. அல்லாஹ்வின் 99 பெயர்களை மனனம் செய்தால் சொர்க்கம் செல்ல அனுமதி கிடைத்துவிடுமா?
2. முஸ்லிம்கள் சொர்க்கம் செல்வதற்கு ஐந்து வேளை வாழ்நாள் முழுவதும் தொழுவதும், தான தர்மங்கள் செய்வதும், மற்ற காரியங்களைச் செய்வதும் தேவையில்லை தானே?
3. கிறிஸ்தவர்களே! எங்கேயாவது பைபிளில் "இந்த வசனங்களை அல்லது தேவனின் பட்டப்பெயர்களை மனப்பாடம் செய்யுங்கள், அப்போது பரலோகம் நிச்சயம்" என்று சொல்லப்பட்டுள்ளதா?
4. முஸ்லிம்களே! இந்த ஹதீஸில் முஹம்மது சொல்லியுள்ளவைகள்(99 பெயர்களை மனனமிட்டவர் சொர்க்கம் நுழைவார்), குர்ஆனின் மற்றும் இஸ்லாமின் இதர சட்டங்களுக்கு எதிராக உள்ளதல்லவா?

கேள்வி 266: ஹதீஸ்களை தொகுத்தவர்கள் யார்? (முஹம்மதுவா? சஹாபாக்களா?)

பதில் 266: ஹதீஸ்களை முஹம்மது தொகுக்கவில்லை, சஹாபாக்கள் கூட தொகுக்கவில்லை. முஹம்மதுவிற்கு 200 ஆண்டுகளுக்கு பிறகு வந்த முஸ்லிம்கள் தொகுத்தார்கள்.

கேள்வி 267: இப்னு இஷாக்கின் "ஸீரத் ரஸூல் அல்லாஹ்" புத்தகத்தை எங்கு வாங்கலாம்?

பதில் 267:

ஹதீஸ்களுக்கு முன்பாக எழுதப்பட்ட ஸீரத் ரஸூல் அல்லாஹ் சரித்திர புத்தகத்தை கீழ்கண்ட அமேஜான் தளத்தில் வாங்கலாம்:

- https://www.amazon.in/Life-Muhammad-Translation-Ishaqs-Jubilee/dp/0195778286

இணையத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்துக்கொள்ள கீழ்கண்ட தொடுப்பை சொடுக்கவும்:

- Ibn Ishaq's Sirat Rasul Allah - The Life of Muhammad Translated by A. Guillaume

கேள்வி 268: முஹம்மதுவின் காலத்தில் ஒரு கிறிஸ்தவன் முஸ்லிமாக மாறி, முஹம்மதுவின் வஹியை எழுதுபவனாக இருந்து, மறுபடியும் இஸ்லாமை விட்டுவிட்டதாகச் சொல்கிறார்களே, இதைப் பற்றிய ஹதீஸ் இருந்தால் கொடுக்கமுடியுமா?

பதில் 268: கீழ்கண்ட ஹதீஸை படிக்கவும்:

நூல் புகாரி எண்: 3617

3617. அனஸ்(ரலி) அறிவித்தார்.

ஒருவர் கிறிஸ்தவராக இருந்தார். பிறகு, அவர் இஸ்லாத்தைத் தழுவினார். 'அல்பகரா' மற்றும் 'ஆலு இம்ரான்' அத்தியாயங்களை ஓதினார். அவர் நபி(ஸல்) அவர்களுக்காக (வேத வெளிப்பாட்டை) எழுதி வந்தார். அவர் (மீண்டும்) கிறிஸ்தவராகவே மாறிவிட்டார். அவர் (மக்களிடம்) 'முஹம்மதுக்கு, நான் அவருக்கு எழுதித் தந்ததைத் தவிர வேறெதுவும் தெரியாது' என்று சொல்லிவந்தார். பிறகு அல்லாஹ் அவருக்கு மரணத்தையளித்தான். அவரை மக்கள் புதைத்துவிட்டனர். ஆனால் (மறு நாள்) **அவரை பூமி துப்பிவிட்டிருந்தது**. உடனே, (கிறிஸ்தவர்கள்), 'இது முஹம்மது மற்றும் அவரின் தோழர்களின் வேலை. எங்கள் தோழர் அவர்களைவிட்டு ஓடி வந்துவிட்டதால் அவரின் மண்ணறையைத் தோண்டி எடுத்து அவரை வெளியே போட்டுவிட்டார்கள்' என்று கூறினார். எனவே, அவருக்காக இன்னும் அழகாக ஒரு புதை குழியைத் தோண்டினர். (அதில் புதைத்த பின்பு) மீண்டும் பூமி அவரை (வெளியே) துப்பி விட்டிருந்தது. அப்போதும், 'இது முஹம்மது மற்றும் அவரின் தோழர்களுடைய வேலைதான். நம் தோழர் அவர்களைவிட்டு வந்துவிட்ட காரணத்தால் அவரைத் தோண்டி எடுத்து மண்ணறைக்கு வெளியே போட்டுவிட்டனர்' என்று கூறினர். மீண்டும் அவர்களால் குழியை அவருக்காகத் தோண்டி அதில் அவரைப் பூமி அவரை முடிந்த அளவிற்கு மிக அழமான குழியை அவருக்காகத் தோண்டி அதில் அவரைப் புதைத்தனர். ஆனால், அவரை பூமி மீண்டும் துப்பி விட்டிருந்தது. அப்போதுதான் அது மனிதர்களின் வேலையல்ல. (இறைவனின் தண்டனை தான்) என்று புரிந்து கொண்டனர். அவரை அப்படியே (வெளியிலேயே) போட்டுவிட்டனர்.

முஹம்மதுவிற்கு பிறகு எழுதப்பட்ட கட்டுக்கதைகளில் இதுவும் ஒன்று.

கேள்வி 269: ஹதீஸ்களில் இந்தியா பற்றி ஏதாவது விவரங்கள் உள்ளன?

பதில் 269: ஒரு குறிப்பிட்ட இந்திய குச்சிக்கு மருத்துவ குணம் உள்ளது என்று முஹம்மது கூறியதாக, ஹதீஸ்கள் உள்ளது.

நூல் புகாரி 5692, 5713, 5715 & 5718:

5692. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் இந்த **இந்திய (கோஷ்ட)க் குச்சியை** அவசியம் பயன்படுத்துங்கள். ஏனெனில், அதில் ஏழு நிவாரணங்கள் உள்ளன. அடிநாக்கு அழற்சிக்காக அதை(த் தூளாக்கி எண்ணெயில் குழைத்து) மூக்கில் சொட்டு மருந்தாக இடப்படும். (மார்புத் தசைவாதத்தால் ஏற்படும்) விலா வலிக்காக அதை வாயின் ஒரு பக்கத்தில் சொட்டு மருந்தாகக் கொடுக்கப்படும்.

என உம்மு கைஸ் பின்த் மிஹ்ஸன்(ரலி) அறிவித்தார்.

கேள்வி 270: "கஜ்வா ஈ ஹிந்த்(Ghazwa-e-Hind - Battle of India)" என்ற பெயரில் முஹம்மது “இந்தியாவின் மீது முஸ்லிம்களின் யுத்தம்” பற்றி முன்னறிவித்தார் என்று சொல்கிறார்களே, இது என்ன?

பதில் 270: சன்னி முஸ்லிம்களின் ஆறு ஹதீஸ்களில் ஒன்றான "நஸயி" என்ற ஹதீஸ் தொகுப்பில் "இந்தியாவை முஸ்லிம்கள்" வெல்வார்கள் என்று முஹம்மது கூறியதாக ஹதீஸ் வருகிறது.

இது பலவீனமான ஹதீஸ்(Da'if) என்று கீழ்கண்ட தொடுப்பும், சில முஸ்லிம்களும், இது உண்மையான ஹதீஸ் என்று **வேறு சிலறும்** கூறுகிறார்கள்.

41) Chapter: Invading India

It was narrated that Abu Hurairah said:

"The Messenger of Allah (ﷺ) promised us that we would **invade India**. If I live to see that, I will sacrifice myself and my wealth. If I am killed, I will be one of the best of the martyrs, and if I come back, I will be Abu Hurairah Al-Muharrar." [1] [1] Al-Muharrar: The one freed (from the Fire).

நாங்கள் **இந்தியா** மீது படையெடுப்போம் என்று அல்லாஹ்வின் தூதர் (ﷺ) எங்களுக்கு வாக்குறுதி அளித்தார். அதைப் பார்க்க நான் வாழ்ந்தால், நானும் எனது எனது செல்வத்தையும் தியாகம் செய்வேன். நான் கொல்லப்பட்டால், நான் தியாகிகளில் மிகச் சிறந்தவனாக இருப்பேன், நான் அந்த போரில் வெற்றிப்பெற்று திரும்பி வந்தால், நான் (அபு ஹுரைரா) அல் முஹர்ராக இருப்பேன்(நெருப்பிலிருந்து - நரகத்திலிருந்து விடுபட்டவானாக இருப்பேன்).

- Grade : Da'if (Darussalam)
- Reference : Sunan an-Nasa'i 3173
- In-book reference : Book 25, Hadith 89
- English translation : Vol. 1, Book 25, Hadith 3175

Source: **sunnah.com/nasai/25**

தலைப்பு: பெண்கள் (271 – 300)

கேள்வி 271: கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம், இதில் எந்த மார்க்கம் பெண்களை கௌரவப்படுத்துகிறது?

பதில் 271: ஒரே ஒரு வரியில் இதற்கு பதில் சொல்ல நான் விரும்பவில்லை. நான் நம்புவதை உங்கள் மீது திணிக்கவும் விரும்பவில்லை.

பைபிள் மற்றும் குர்ஆனில் பெண்கள் பற்றி சொல்லப்பட்டுள்ள விவரங்களை ஆழமாக நாம் ஆய்வு செய்யப்போகிறோம். அவைகளை புரிந்துக்கொள்ளுங்கள், இந்த தலைப்பில் கொடுக்கப்படும் அனைத்து பதில்களையும் படித்து, ஆய்வு செய்து அதன் பிறகு முடிவு செய்யுங்கள்.

"கௌரவம்" என்ற வார்த்தை இடத்தைப் பொருத்து, கலாச்சாரத்தைப் பொருத்து, மனிதர்களைப் பொருத்து மாறுபடும்.

உச்சஞ்தலை முதற்கொண்டு, உள்ளங்கால் வரை பெண்களை ஆடைகளால் மூடும் ஒரு கலாச்சாரத்தை பின்பற்றுகிறவர்கள், இப்படி மூடுவது தான் பெண்களுக்கு கௌரவம் என்கிறார்கள். இன்னொருவர், பெண்களுக்கு நாகரீகமான உடைகள் அணிய அனுமதி கொடுப்பது தான் அவர்களை கௌரவப்படுத்துவது ஆகும் என்கிறார்கள்.

இதில் யார் சரி? யார் தவறு? இந்த முடிவை யார் எடுப்பது?

வாசகர்களிடமே இந்த முடிவை விட்டுவிடுவோம். அறிவுடமையோடு சிந்தித்து முடிவு எடுப்பவர்கள் எடுத்துக்கொள்ளட்டும்.

கேள்வி 272: குர்ஆனில் வரும் ஒரே பெண்ணின் பெயர் என்ன? இப்படி குர்ஆனை அமைத்த அல்லாஹ் எதனை சொல்ல வருகின்றான்?

பதில் 272: குர்ஆன் முஹம்மதுவிற்கு 23 ஆண்டுகள், சிறிது சிறிதாக கொடுக்கப்பட்டது என்று முஸ்லிம்கள் நம்புகிறார்கள். குர்ஆனில் 6236 வசனங்கள் உள்ளன, இவைகளில் மனித தொடக்கம் முதற்கொண்டு, உலக முடிவு வரை பல நிகழ்ச்சிகள், விவரங்கள் சொல்லப்பட்டுள்ளன.

நூற்றுக்கணக்கான உரையாடல்கள், நிகழ்ச்சிகள் அலசப்பட்டன. ஆனால், ஒரே ஒரு பெண்ணின் பெயர் மட்டும் தான் குர்ஆனில் குறிப்பிடப்பட்டது?

அல்லாஹ் பெண்களின் பெயர்களை தன் வேதத்தில் பயன்படுத்த விரும்பவில்லை. இயேசுவின் தெய்வீகத்தை எதிர்க்கவேண்டுமென்பதற்காக,

"மர்யமின் மகன் ஈஸா" என்று குறிப்பிட விரும்பி, மரியாளின் பெயரை மட்டுமே முழு குர்ஆனிலும் குறிப்பிட்டுள்ளான்.

இயேசுவின் தாய் மரியாளின் பெயர் உள்ளதே, இது உங்களுக்கு (கிறிஸ்தவர்களுக்கு) மகிழ்ச்சி இல்லையா? என்று கேட்கவேண்டாம், இது எங்களுக்கு மகிழ்ச்சி இல்லை. மரியாளின் பெயர் குர்ஆனில் வந்தாலும், அவர்களுடைய நம்பிக்கைக்கு எதிரான விவரங்கள் குர்ஆனில் சொல்லியிருப்பதினால், கிறிஸ்தவர்களுக்கு எந்த ஒரு மகிழ்ச்சியும் இல்லை. அவர்களுடைய வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளை தலை கீழாக மாற்றி குர்ஆனில் பதிவு செய்யப்பட்டு இருப்பதினால், அது மரியாளுக்கு அவமரியாதை ஆகும்.

பெண்களின் பெயர்களை குர்ஆனில் பயன்படுத்துவதா? இல்லையா? என்பது அல்லாஹ்வின் விருப்பம் என்று சிலர் சொல்லக்கூடும். ஆமாம், அது அல்லாஹ்வின் விருப்பம் தான். ஆனால் ஏன் அல்லாஹ் பெண்களின் பெயர்களை குர்ஆனில் பயன்படுத்தவில்லை? இதற்கு ஏதாவது உள்நோக்கம் இருக்குமா? பெண்கள் பற்றிய தவறான எண்ணம் கொண்டவன் தான் குர்ஆனை கொடுத்தானா? போன்ற கேள்விகள் நமக்கு எழுவது நியாயமே! இதற்கான பதிலை தெரிந்துக்கொள்ளவேண்டுமென்றால், இந்த தொடரில் உள்ள அனைத்து கேள்விகளையும் படித்து, நீங்களே ஆய்வு செய்துப் பாருங்கள், உண்மை விளங்கும்.

கேள்வி 273: பெண்களை அடிப்பதற்கு குர்ஆன் அனுமதியளிக்கிறது என்றுச் சொல்வது பொய் தானே!

பதில் 273: இல்லை, உண்மையாகவே முஸ்லிம் ஆண்கள் தங்கள் மனைவிகளை அடிக்க குர்ஆன் அனுமதி அளிக்கிறது.

குர்ஆனின் இந்த வசனத்தை தமிழில் மொழியாக்கம் செய்தவர்களுக்கு இது தர்மசங்கடமாக இருந்துள்ளது, எனவே, தான் "**லேசாக அடியுங்கள்**" என்றும், "**காயம் ஏற்பாடாதவாறு அடியுங்கள்**" என்றும் குர்ஆனில் இல்லாத வார்த்தைகளை போட்டு மொழியாக்கம் செய்துள்ளார்கள்.

டாக்டர். முஹம்மது ஜான் தமிழாக்கம்:

4:34. . . .; எந்தப் பெண்கள் விஷயத்தில் - அவர்கள் (தம் கணவருக்கு) மாறு செய்வார்களென்று நீங்கள் அஞ்சுகிறீர்களோ, அவர்களுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள்; (அதிலும் திருந்தாவிட்டால்) அவர்களைப் படுக்கையிலிருந்து விலக்கிவிடுங்கள்; (அதிலும் திருந்தாவிட்டால்) **அவர்களை (இலேசாக) அடியுங்கள்.** அவர்கள் உங்களுக்கு வழிப்பட்டுவிட்டால், அவர்களுக்கு எதிராக

எந்த வழியையும் தேடாதீர்கள் - நிச்சயமாக அல்லாஹ் மிக உயர்ந்தவனாகவும், வல்லமை உடையவனாகவும் இருக்கின்றான்.

அப்துல் ஹமீது பாகவி தமிழாக்கம்:

4:34. . . .. எவளும் கணவனுக்கு மாறு செய்வாளென்று நீங்கள் அஞ்சினால் அவளுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள். (அவள் திருந்தாவிடில்) படுக்கையில் இருந்து அவளை அப்புறப்படுத்தி வையுங்கள். (அதிலும் அவள் சீர்திருந்தாவிடில்) **அவளை (இலேசாக) அடியுங்கள்**. அதனால் அவள் உங்களுக்கு கட்டுப்பட்டு விட்டால் அவள் மீது (வேறு குற்றங்களைச் சுமத்த) யாதொரு வழியையும் தேடாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் மிக மேன்மையானவனும் மிகப் பெரியவனுமாக இருக்கின்றான்.

இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட் (IFT) தமிழாக்கம்:

4:34 . . .மேலும், எந்தப் பெண்கள் குறித்து அவர்கள் (தம் கணவருக்கு)மாறு செய்வார்கள் என்று நீங்கள் அஞ்சுகின்றீர்களோ அந்தப் பெண்களுக்கு நல்லறிவு புகட்டுங்கள்; படுக்கைகளிலிருந்தும் அவர்களை ஒதுக்கி வையுங்கள்! **மேலும் அவர்களை அடியுங்கள்!** ஆனால் அவர்கள் உங்களுக்குக் கீழ்ப்படிந்துவிட்டால், பிறகு அவர்களுக்கு எதிராகக் கை நீட்ட எந்த சாக்குபோக்குகளையும் தேடாதீர்கள்! திண்ணமாக நம்புங்கள்: அல்லாஹ் மேலே இருக்கின்றான்; அவன் உயர்வானவனும் பெரியோனுமாய் இருக்கின்றான்.

மன்னர் ஃபஹத் வளாகம் (சவூதி) தமிழாக்கம்:

4:34 . . .இன்னும், (அப்பெண்களாகிய) அவர்களில் (தம் கணவனுக்கு) எவர்களின் மாறுபாட்டை அஞ்சுகிறீர்களோ, அப்போது அவர்களுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள், (அவர்கள் திருந்தாவிடில்) படுக்கைகளிலும் அவர்களை வெறுத்து (ஒதுக்கி) விடுங்கள், (அதிலும் அவர்கள் சீர்திருந்தாவிடில்) **அவர்களை (காயமேற்படாது) அடியுங்கள்,** அதனால் அவர்கள் உங்களுக்குக் கீழ்ப்பட்டுவிட்டால், அவர்கள் மீது (இதர குற்றங்களைச் சுமத்த) யாதொரு வழியையும் தேடாதீர்கள், நிச்சயமாக அல்லாஹ் மிக உயர்வானவனாக, மிகப் பெரியவனாக இருக்கின்றான்.

பீஜே தமிழாக்கம்:

4:34 . . .பிணக்கு ஏற்படும் என்று (மனைவியர் விஷயத்தில்) நீங்கள் அஞ்சினால் அவர்களுக்கு அறிவுரை கூறுங்கள்! படுக்கைகளில் அவர்களை விலக்குங்கள்! **அவர்களை அடியுங்கள்!** அவர்கள் உங்களுக்குக் கட்டுப்பட்டு விட்டால் அவர்களுக்கு எதிராக வேறு வழியைத் தேடாதீர்கள்! அல்லாஹ் உயர்ந்தவனாகவும், பெரியவனாகவும் இருக்கிறான்.66

இரண்டு பேர் மட்டும் "அவர்களை அடியுங்கள்" என்று குர்ஆனில் உள்ளது போன்று தமிழாக்கம் செய்துள்ளார்கள். மற்றவர்கள் "லேசாக, காயமில்லாதவாறு" என்று சொந்த வார்த்தைகளை எழுதி, முஸ்லிம் பெண்களை காப்பாற்ற முயன்றுள்ளார்கள். ஆனால், முஸ்லிம் ஆண்கள் இவர்களுடைய வார்த்தைகளை கேட்பார்களா?

கேள்வி 274: பெண்களை திருத்தமுடியாது என்று முஹம்மது கூறியுள்ளாரா?

பதில் 274: முஹம்மது கீழ்கண்ட விதமாக ஒட்டுமொத்த பெண்கள் பற்றி கூறியுள்ளார். தன் குடும்ப பெண்களைப் பற்றியோ, அல்லது சஹாபாக்கள் குடும்ப பெண்களைப் பற்றியோ கூறியிருந்தால், அது அவருடைய தனிப்பட்ட கருத்து என்று விட்டுவிடலாம். ஆனால்,பொதுவாக உலக பெண்கள் அனைவர் பற்றியும், எல்லா காலத்துக்கும் பொருந்தும் என்ற கருத்து வரும் வண்ணமாக இப்படி கூறியுள்ளார். இதனை எப்படி ஏற்றுக்கொள்வது?

ஸஹீஹ் புகாரி நூல், எண்: 5184 (மேலும் பார்க்க: 3331)

5184. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்"

பெண், (வளைந்த) விலா எலும்பைப் போன்றவளாவாள். **அவளை நீ நிமிர்த்த நினைத்தால் அவளை ஓடித்தேவிடுவாய்**. (அதற்காக அப்படியே) அவளை நீ அனுபவித்துக்கொண்டே இருந்தால், **அவளில் கோணல் இருக்க அனுபவிக்க வேண்டியதுதான்**. என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.

ஸஹீஹ் முஸ்லிம் நூல், எண்: 2913 (மேலும் பார்க்க: 2912 & 2914)

2913. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

பெண் (வளைந்த) விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டிருக்கிறாள். **ஒரே (குண) வழியில் உனக்கு அவள் ஒருபோதும் இணங்க மாட்டாள்**. அவளை நீ அனுபவித்துக் கொண்டே இருந்தால், அவளில் **கோணல் இருக்கவே அனுபவிக்க வேண்டியதுதான்**. அவளை நீ (ஒரேயடியாக) நிமிர்த்தப்போனால் அவளை ஒடித்தேவிடுவாய். அவளை "ஒடிப்பது" என்பது, அவளை மணவிலக்குச் செய்வதாகும். இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.


ஆண்கள் மட்டும் உலகத்தில் நல்லவர்கள் போலவும், பெண்களை திருத்தமுடியாது போலவும் முஹம்மது கூறியுள்ளார். இது அவரது குறும்புத்தியைக் காட்டுகிறது, இது ஒரு தீர்க்கதரிசிக்கு அழகல்ல. பெண்களை அவர் எப்படி பார்க்கிறார் அல்லது இஸ்லாம் பெண்களை பார்க்கிறது என்பதைத் தான் இது காட்டுகிறது.

இதே போன்று அவர் ஆண்கள் பற்றி சொல்லியிருக்கலாம் அல்லவா? அவர் சொல்லமாட்டார், அவரால் சொல்லமுடியாது, உள்ளத்தின் நிறைவினால் வாய் பேசும்.

கேள்வி 275: அதிக சாபமிடுபவர்கள், அறிவு மற்றும் மார்க்க கடமை குறைவு உள்ளவர்கள், கணவனுக்கு நன்றி கெட்டவர்கள், நரகத்தில் அதிகமாக உள்ளவர்கள் பெண்கள் என்று கூறியது யார்?

பதில் 275: உலகத்தின் மேன்மைக்காக அல்லாஹ் அனுப்பிய கடைசி தீர்க்கதரிசி மற்றும் முஸ்லிம்கள் அணுவணுவாக பின்பற்றும் முஹம்மது தான் இப்படி சொல்லியுள்ளார்.

முஹம்மது மற்றும் அல்லாஹ்வின் பார்வையில் பெண்கள் - புகாரி நூல் ஹதீஸை படமாக காட்டியுள்ளேன் காணுங்கள்:



புகாரி நூல் எண்: 304

304. 'ஹஜ்ஜுப் பெருநாளன்றோ நோன்புப் பெருநாளன்றோ தொழும் திடலிற்கு நபி(ஸல்) அவர்கள் சென்று கொண்டிருந்தபோது சில பெண்களுக்கு அருகே அவர்கள் சென்று, 'பெண்கள் சமூகமே! தர்மம் செய்யுங்கள்! ஏனெனில், **நரக**

வாசிகளில் அதிகமாக இருப்பது நீங்களே என எனக்குக் காட்டப்பட்டது' என்று கூறினார்கள்.

'இறைத்தூதர் அவர்களே! ஏன்' என்று அப்பெண்கள் கேட்டதற்கு, '**நீங்கள் அதிகமாகச் சாபமிடுகிறீர்கள்; கணவனுக்கு நன்றி கெட்டவர்களாக இருக்கிறீர்கள்; மார்க்கக் கடமையும் அறிவும் குறைந்தவர்களாக இருந்து கொண்டு** மன உறுதியான கணவனின் புத்தியை மாற்றி விடக்கூடியவர்களாக உங்களை விட வேறு யாரையும் நான் காணவில்லை' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறியபோது 'இறைத்தூதர் அவர்களே! எங்களுடைய மார்க்கக் கடமையும் எங்களுடைய அறிவும் எந்த அடிப்படையில் குறைவாக உள்ளன' என்று பெண்கள் கேட்டனர்.

'ஒரு பெண்ணின் சாட்சி ஓர் ஆணின் சாட்சியில் பாதியாகக் கருதப்படவில்லையா?' என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டததற்கு, 'ஆம்' என அப்பெண்கள் பதில் கூறினர். 'அதுதான் அவர்கள் அறிவு குன்றியவர்கள் என்பதைக் காட்டுகிறது; ஒரு பெண்ணிற்கு மாதவிடாய் ஏற்பட்டால் அவள் தொழுகையையும் நோன்பையும்விட்டு விடுவதில்லையா?' என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டதற்கும் 'ஆம்!' எனப் பெண்கள் பதில் கூறினர். 'அதுதான் பெண்கள் மார்க்கக் கடமையில் குறைவானவர்களாக இருக்கின்றனர் என்பதற்கு ஆதாரமாகும்' என்று நபி(ஸல்) கூறினார்கள்' என அபூ ஸயீதுல் குத்ரி(ரலி) அறிவித்தார்.

வன்மையாக கண்டிக்கப்படவேண்டிய விவரம்:

தனிப்பட்ட முறையிலே, அக்காள் தங்கை, அண்ணன்களோடு ஒரு பெரிய குடும்பத்தில் பிறந்து, கூட்டுக்குடும்பத்தில் வளர்ந்த ஒரு நபராக, முஹம்மதுவின் மேற்கண்ட கூற்றை நான் வன்மையாக கண்டிக்கிறேன். பெரியம்மா, சின்னம்மா, அண்ணி என்று பல உறவுகளில் வாழ்ந்து, என்னைச் சுற்றியுள்ள பெண்களை கவனித்து பார்த்ததில், முஹம்மதுவின் கூற்றில் உண்மையில்லை என்று சொல்லமுடியும்.

பொதுவாக சில பெண்களிடத்தில் ஓரிரு கெட்ட குணங்கள் இருக்கும், இதே போன்று சில ஆண்களிடத்திலும் சில கெட்ட குணங்கள் இருக்கும். ஆனால், "உங்களில் சிலர் இப்படி உண்டு" என்றுச் சொல்வதை விட்டுவிட்டு, ஒட்டுமொத்த பெண் இனத்தை விமர்சிப்பது நபிக்கு அழகல்ல.

ஆண்கள் அனைவரும் வக்கிர புத்தி கொண்டவர்கள், பெண்களை மோகப்பொருளாகவே ஆண்கள் பார்க்கிறார்கள் என்று ஒட்டுமொத்த ஆண் இனத்தின் மீது குற்றம் சுமத்தினால் 'அது சரியான கூற்றாக இருக்குமா'?

ஒருவேளை முஹம்மதுவைச் சுற்றியிருந்த அவரது மனைவிகள், சொந்தங்கள், தாய்மார்கள், அக்காமார்கள், அண்ணிமார்கள், பெரியம்மா, சின்னம்மா மற்றும் சஹாபாக்களின் மனைவிகள் போன்ற பெண்கள் அவருடைய கண்களுக்கு

மேற்கண்ட குணங்களை உடையவர்களாக இருந்திருக்கலாம். அதற்காக, அவர் உலகத்தில் பிறக்கும் எல்லா பெண்களும் இப்படி இருப்பார்கள் என்று எண்ணுவது அறிவுடமையன்று.

இதனை முஸ்லிம் பெண்கள் வன்மையாக கண்டிக்கவேண்டும். முஹம்மதுவின் கூற்றில் உண்மையில்லை என்று நம்புகிற முஸ்லிம் ஆண்களும் கண்டிக்கவேண்டும்.

கேள்வி 276: பெண்கள் அறிவில் குறைவு - இதற்கு காரணம் குர்ஆனின் கட்டளை என்று முஹம்மது கூறியிருக்கும் போது, முஹம்மதுவை ஏன் குற்றப்படுத்தவேண்டும்?

பதில் 276: பெண்கள் பற்றிய தவறான கருத்தை முஹம்மது சொன்னதற்கு காரணம் அல்லாஹ் என்றுச் சொல்ல வருகின்றீர்களா?

2:282. . . . தவிர, (நீங்கள் சாட்சியாக ஏற்கக் கூடிய) உங்கள் ஆண்களில் இருவரை சாட்சியாக்கிக் கொள்ளுங்கள்; ஆண்கள் இருவர் கிடைக்காவிட்டால், சாட்சியங்களில் நீங்கள் பொருந்தக்கூடியவர்களிலிருந்து ஆடவர் ஒருவரையும், **பெண்கள் இருவரையும் சாட்சிகளாக எடுத்துக் கொள்ளுங்கள்; (பெண்கள் இருவர்) ஏனென்றால் அவ்விருவரில் ஒருத்தி தவறினால், இருவரில் மற்றவள் நினைவூட்டும் பொருட்டேயாகும்**; . . ..

- ஒரு பெண்ணின் சாட்சி ஒரு ஆணின் சாட்சியில் பாதி என்று குர்-ஆன் 2:282ல் சொன்னதால், பெண்கள் அறிவில் குறைவுள்ளவர்களா?

அல்லது

- பெண்கள் பிறப்பிலிருந்தே அறிவில் குறைவுள்ளவர்கள் என்று அல்லாஹ்வும் முஹம்மதுவும் கருதிவிட்டார்களா?

இதில் எது உண்மை. இது ஒரு தவறான, நடைமுறைக்கு ஒவ்வாத ஒரு வசனமாகும்.

இதை உலகத்தில் யார் சொல்லியிருந்தாலும், போகட்டும் நாக்கிலே எலும்பு இல்லை என்பதால் மனிதன் எதையானாலும் பேசுவான் என்று விட்டுவிடலாம். ஆனால், எல்லாம் அறிந்த இறைவன் என்றுச் சொல்லக்கூடிய "அல்லாஹ்" இதைச் சொன்னதால் மனதுக்கு கஷ்டமாக உள்ளது.

பிறக்கும்போது யாரும் புத்திசாலியாக பிறப்பதில்லை, மற்றும் முட்டாளாக பிறப்பதில்லை. நாம் அந்த மூளைக்குத்தரும் பயிற்சி, படிப்பு, சூழ்நிலை மற்றும் நண்பர்கள் முலமாக மனிதன் (ஆண், பெண்), அறிவாளியாகவோ அல்லது சிறிது அறிவில் குறைவுள்ளவனாகவோ மாறுகிறான். இதில் ஆண்கள் அறிவில் எப்போதும் சிறந்து விளங்குவார்கள், பெண்கள் முட்டாள்களாக இருப்பார்கள்

என்றுச் சொல்வது மிகப்பெரிய தவறாகும். பிறக்கும்போது மூளைவளர்ச்சி குன்றியவர்களை நாம் இதில் செர்த்துக்கொள்ளக்கூடாது. அப்படி சேர்த்துக்கொண்டாலும் இதிலும் இருவர் ஆண் பெண் உண்டு.

என் மனைவி, அல்லது சகோதரி அறிவில் சிறிது குறைவுள்ளவள், பக்தியில் அதிக ஈடுபாடு காட்டுவதில்லை என்றுச் சொல்ல முஹம்மதுவிற்கு உரிமை உண்டே தவிர, உலகத்தில் உள்ள பெண்கள் அனைவரும், அறிவில் குறைவுள்ளவர்களாக இருப்பார்கள், எனவே அவர்களின் சாட்சி ஆணின் சாட்சியில் பாதி என்றுச் சொல்ல அவருக்கும் உரிமையில்லை, அல்லாஹ்விற்கும் உரிமையில்லை.

பகுத்தறிவு, நேர்மை, நீதி, நியாயம், உண்மை, பொய், கடமை இவைகளின் இனம் (Sex) என்ன இருக்கிறது? ஆண்கள் எப்போதும் நேர்மையாகவே இருப்பார்கள், பெண்கள் நேர்மை தவறுவார்கள் என்றுச் சொல்லி, இவைகளுக்கு ஒரு இனத்தை(Sex) கொடுத்த பெருமை இஸ்லாமையேச் சாரும்.

இதனை படிப்பவர்களில் யாராவது, என் தாய், மனைவி, அக்காள், தங்கை, மகள் இவர்கள் எல்லோரும் அறிவில் குறைவுள்ளவர்கள் என்றுச் சொல்லமுடியுமா?

குர்ஆன் பெண்களுக்கு எதிரானது என்பதற்கு இதைவிட பெரிய சான்று வேண்டுமா?

கேள்வி 277: ஆட்சியதிகாரத்தை ஒரு பெண்ணிடம் ஒப்படைத்த சமுதாயம் ஒருபோதும் உருப்படாது என்று முஹம்மது கூறினாரா?

பதில் 277: பெண்களை தலைவர்களாக நியமித்தால், அந்த நாடு அல்லது நிறுவனம் முன்னேறாது என்று முஹம்மது சொல்லியிருப்பது இப்போதுள்ள மனிதனுக்குத் தெரிந்தால், அவன் எவ்வித கஷ்டத்தில் இருந்தாலும், ஒரு நிமிடம் தன்னை மறந்து சிரித்துவிடுவான்.

புகாரி நூல், எண் 4425:

4425. அபூ பக்ரா(ரலி) அறிவித்தார்

ஜமல் போர் சமயத்தில், அதில் ஈடுபட்டவர்களுடன் நானும் சேர்ந்துகொண்டு (ஆயிஷா(ரலி) அவர்களுக்கு ஆதரவாகப்) போரிட முனைந்தபோது, இறைத்தூதர்(ஸல்) அவர்களிடமிருந்து நான் செவியுற்றிருந்த ஒரு சொல் எனக்குப் பயனளித்தது. பாரசீகர்கள் கிஸ்ராவின் மகளைத் தங்களுக்கு அரசியாக்கிவிட்டார்கள் எனும் செய்தி இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்கு எட்டியபோது, அவர்கள் '**தம் ஆட்சியதிகாரத்தை ஒரு பெண்ணிடம் ஒப்படைத்த சமுதாயம் ஒருபோதும் உருப்படாது**' என்று கூறினார்கள். (இதுதான் எனக்குப் பயனளித்த நபி(ஸல்) அவர்களின் சொல்.)

இது எவ்வளவு பெரிய முட்டாள்தனமான வாதம் பாருங்கள்! இது நடைமுறைக்கு ஏற்ற வாதமாக உள்ளதா? முஹம்மதுவின் இந்த கூற்று தவறு என்பதை உலக பெண்கள் நிரூபித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இதோ உலகத்தின் சரித்திரத்தில் நீங்கா இடம்பிடித்த சில பெண் முத்துக்கள்:

1. 1901 லிருந்து 2019 வரை 53 பெண்கள் நோபல் பரிசுகள் பெற்றுயிருக்கின்றனர்.

அமைதிக்கான நோபல் பரிசை பதினேழு பெண்கள் வென்றுள்ளனர், பதினைந்து பேர் இலக்கிய நோபல் பரிசை வென்றுள்ளனர், பன்னிரண்டு பேர் மருத்துவத்துக்கான நோபல் பரிசை வென்றுள்ளனர், ஐந்து பேர் வேதியியலுக்கான நோபல் பரிசை வென்றுள்ளனர், மூன்று பேர் இயற்பியலுக்கான நோபல் பரிசை வென்றுள்ளனர், மற்றும் இரண்டு, எலினோர் ஆஸ்ட்ரோம் மற்றும் எஸ்தர் டுஃப்லோ, பொருளாதார அறிவியலுக்கான நோபல் நினைவு பரிசை வென்றுள்ளனர்.

(Source: **https://en.wikipedia.org/wiki/List_of_female_Nobel_laureates**)

2. சரோஜினி நாயுடு, அன்னை தெரேசா, இந்திய பிரதம மந்திரியாக இருந்த இந்திரா காந்தி, இலங்கை பிரதமர் பண்டாரநாயகே, தமிழ்நாட்டின் முன்னால் உயர்நிதீ மன்றத்தின் நீதிபதி பாத்திமா பீவி அவர்கள், இந்தியாவின் முதல் ஐ.பி.எஸ் கிரன் பேடி அவர்கள், இமயமலை சிகரத்தை அடைந்த முதல் ஜப்பானிய பெண் "ஜுன்கோ டெபை - ஆண்டு 1975" இன்னும் பலர்.

3. இஸ்லாமிய சட்டம் நடைபெறும் சவுதி அரேபியாவில் பெண்கள், கார் ஓட்டுவதற்கு முன்பாகவே , காபிர் நாடாகிய (என் அருமை தாய் நாடு) இந்தியாவின் அருமை புதல்வி "கல்பனா சாவ்லா" வின்னிற்கு ராக்கெட்டில் சென்று விட்டாள். உம்முடைய சட்டம் நடைபெறும் நாட்டின் பெண்கள் தேர்தலில் ஓட்டுரிமை பெறுவதற்குள், காபிர் நாடுகளில் பெண்கள் முதலமைச்சர்கள், பிரதமமந்திரிகள் ஆகிவிடுகின்றனர். இவர்களின் அறிவு குறைபாடுள்ளதா? அல்லது நீங்கள் சொன்னது இஸ்லாமிய பெண்களுக்கு மட்டும் தானா?

4. சரித்திரத்தில் முதன்முறையாக ஒரு இஸ்லாமிய பெண்ணிற்கு "2003 அமைதி நோபல் பரிசு" கிடைத்தது. அவர் தான் "ஷீரின் எபாடி(Shirin Ebadi)". இந்த பரிசு இப்பெண்மனிக்கு எதற்காகத் கிடைத்தது தெரியுமா? இவர் ஈரானில் உள்ள பெண்களுக்கு எதிராக நடக்கும் இழி செயல்களிலிருந்தும், கொடுமைகளிலிருந்தும் காப்பாற்றும்படியாக அதிகமாக உழைத்ததால் தான்.

இவர் வழக்கறிஞராக பல ஆண்டுகள் பெண்களுக்கு சேவைசெய்தார். இவருக்கு நீதிபதியாக பதவி உயர்வு கிடைக்கும்போது, ஈரானின் இமாம்கள், இது இஸ்லாமிற்கு எதிரானது, ஒரு பெண்ணின் அறிவுரையை ஆண்கள்

கேட்கக்கூடாது என்றும், பெண்களை ஆளுகை செய்கிறவர்களாக நியமிக்கக்கூடாது என்றும் ஹதீஸில் முஹம்மது சொல்லியிருக்கிறார், எனவே இது செல்லாது என்றுச் சொல்லி, இவரை நீதிபதி பதவியிலிருந்து நீக்கிவிட்டார்கள்.

இவர் தன் முயற்சியை விடாது போராடிக்கொண்டிருந்தார். 15 ஆண்டுகளுக்கு பிறகு இதே இமாம்கள், இதே இஸ்லாம், “இது செல்லும்” என்றுச் சொல்லி மறுபடியும், இவரை நீதிபதி செய்தார்கள். இவருடைய 15 ஆண்டுகளின் சேவை இஸ்லாம் சட்டத்தால் வீணாக்கப்பட்டது. எத்தனை பெண்களின் வாழ்க்கை மலர்ந்திருக்குமோ! இதற்கெல்லாம் காரணம். அல்லாஹ்வும், முஹம்மதுவும் தான்.

கேள்வி 278: பெண் தீர்க்கதரிசிகள் இல்லை என்று குர்ஆன் சொல்கிறதா?

பதில் 278: ஆண்களை மட்டுமே நபிகளாக (தீர்க்கதரிசிகளாக) அனுப்பியதாக குர்ஆன் சொல்கிறது. மூன்று தமிழாக்கங்களில் இந்த வசனத்தை படியுங்கள்.

அப்துல் ஹமீது பாகவி தமிழாக்கம்:

21:7. (நபியே!) உங்களுக்கு முன்னரும் (மனிதர்களில்) **ஆண்களையே** தவிர வேறொருவரையும் நாம் நம்முடைய தூதராக அனுப்பவில்லை. (உங்களுக்கு அறிவிப்பது போன்றே நம்முடைய கட்டளைகளை) அவர்களுக்கும் வஹீ (மூலம்) அறிவித்தோம். ஆகவே, (இவர்களை நோக்கி நீங்கள் கூறுங்கள்: இது) உங்களுக்குத் தெரியாதிருந்தால் முன்னுள்ள வேதத்தை உடையவரிடத்தில் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

மன்னர் ஃபஹத் வளாகம் (சவூதி) தமிழாக்கம்:

21:7. மேலும், (நபியே!) உமக்கு முன்னரும் (மனிதர்களிலிருந்து) **ஆடவர்களையே** அன்றி, வேறெவரையும் நாம் நம்முடைய தூதராக அனுப்பவில்லை, (உமக்கு அறிவிக்கிற பிரகாரமே) அவர்களுக்கு நாம் வஹீ அறிவித்தோம், ஆகவே, (இவர்களிடம் நீர் கூறுவீராக! இதனை) நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் (வேதத்தை) அறிந்தோரிடம் கேட்டுக் கொள்ளுங்கள்.

பிஜே தமிழாக்கம்:

21:7. (முஹம்மதே!) உமக்கு முன் **ஆண்களையே** தூதர்களாக அனுப்பினோம். அவர்களுக்கு தூதுச்செய்தி அறிவித்தோம். நீங்கள் அறியாதிருந்தால் அறிவுடையோரிடம் கேளுங்கள்!

மேற்கண்ட வசனத்தில் "நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் (வேதத்தை) அறிந்தோரிடம் கேட்டுக் கொள்ளுங்கள்" என்று அல்லாஹ் அறிவுரை கூறுகின்றான். அதாவது குர்ஆனில் சந்தேகம் வந்தால், முஸ்லிம்கள் யாரிடம் சென்று தெரிந்துக்கொள்ளவேண்டும்? முந்தைய வேதங்கள் கொடுக்கப்பட்ட யூதர்களிடமும், கிறிஸ்தவர்களிடம் சென்று தெரிந்துக்கொள்ளவேண்டும். முஹம்மதுவிற்கும் சந்தேகம் வந்தாலும் சரி, அவர் யூத கிறிஸ்தவர்களிடம் வரவேண்டியது தான்.

கேள்வி 279: பெண் தீர்க்கதரிசிகள் உண்டென்று பைபிள் சொல்கிறதா?

பதில் 279: முந்தைய வேதங்கள் என்ன சொல்கின்றன? யெகோவா தேவன் பெண் நபிகளை அனுப்பியுள்ளாரா?

இந்த பதிலை படிப்பவர்கள், ஒரு விவரத்தை தெளிவாக புரிந்துக்கொள்வார்கள், அது என்னவென்றால், குர்ஆனின் அல்லாஹ்வும், பைபிளின் யெகோவா தேவனும் வெவ்வேறானவர்கள் என்பதைத் தான். அல்லாஹ் மூன்று இடங்களில், நான் ஆண்களை மட்டுமே தூதர்களாக அனுப்பினேன் என்று கூறுகின்றான், ஆனால் பைபிளின் தேவனோ, அனேக பெண் தீர்க்கதரிசிகளை, தூதர்களை அனுப்பியுள்ளார். இவ்விருவர்களும் எப்படி ஒருவராக முடியும்? ஒருவேளை, அல்லாஹ்விற்கு கடந்த கால நிகழ்ச்சிகளை மறந்துபோகும் வியாதி இருந்ததா? என்று கேட்கத்தோன்றுகிறது. அப்படி இல்லையென்றால், ஏன் அல்லாஹ் குர்ஆனில் வெறும் ஆண்களையே தூதர்களாக அனுப்பினேன் என்றுச் சொல்லமுடிந்தது? அல்லாஹ் மறந்தானா? அல்லது மறைத்தானா?

பைபிளிலிருந்து சில பெண் தீர்க்கதரிசிகளை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவைகளுக்கான வசன ஆதாரங்களையும் தருகிறேன், இவைகளை படித்த பிறகு குர்ஆன் 21:7ஐ படியுங்கள். உண்மையை புரிந்துக்கொள்ளுங்கள்.

- அல்லாஹ் இறைவன் என்றால் அவனால் மறக்கமுடியுமா? முடியாது
- அல்லாஹ் தான் யெகோவா என்றால், எப்படி தான் பெண் தீர்க்கதரிசிகளை அனுப்பியதை மறைத்து, குர்ஆனில் எழுதமுடியும்?
- இதுவும் இல்லை, அதுவும் இல்லையென்றால், என்ன தான் பதில்?

இதற்கு பதில் சொல்வது மிகவும் சுலபம், அதாவது அல்லாஹ் யெகோவா தேவன் இல்லை என்பது தான் அது. இவ்விருவரும் நேர் எதிர் துருவங்கள். இது சரியான பதில் இல்லையென்றுச் சொல்லும் முஸ்லிம்களிடம் வேறு பதில் உண்டா?

- பெண் நபி 1: மிரியாம் - யாத்திராகமம் 15:20
- பெண் நபி 2: தெபொராள் - நியாயாதிபதிகள் 4:4
- பெண் நபி 3: உல்தாள் - II இராஜாக்கள் 22: 13 -15 & 2 நாளாகமம் 34:21-22

- பெண் நபி 4: ஏசாயாவின் மனைவி ஒரு தீர்க்கதரிசி - ஏசாயா 8:3
- பெண் நபி 5: அன்னாள் - லூக்கா 2:36-38

இதைப் பற்றி மேலும் அறிய இந்த கட்டுரையை படிக்கவும்: **குர்ஆம் 21:7 அல்லாஹ் ஆண்களை மட்டுமே நபிகளாக அனுப்பினானா? மொழியாக்கங்கள் ஏன் உண்மையை மறைக்க முயலுகின்றன?**

கேள்வி 280: முதல் மனைவியின் அனுமதியுடன் தான் முஸ்லிம்கள் இரண்டாவது திருமணம் செய்துக் கொள்கிறார்களா?

பதில் 280: இஸ்லாமின் படி ஒரு முஸ்லிம் ஆண் நான்கு திருமணங்கள் செய்துக்கொள்ளலாம். மேலும் முதல் மனைவியின் அனுமதி இல்லாமல், முஸ்லிம் ஆண் இரண்டாம் திருமணம் செய்யலாம்.

குர்-ஆனின் வரையறை: குர்-ஆன் 4:3

அனாதைகள் விஷயத்தில் நேர்மையாக நடக்க மாட்டீர்கள் என்று அஞ்சினால் உங்களுக்குப் பிடித்த பெண்களை **இரண்டிரண்டாக, மும்மூன்றாக, நான்கு நான்காக மணந்து கொள்ளுங்கள்!** (மனைவியரிடையே) நீதியாக நடக்க மாட்டீர்கள் என்று அஞ்சினால் ஒருத்தியை அல்லது உங்களுக்கு உடைமையாக உள்ள அடிமைப் பெண்களை (போதுமாக்கிக் கொள்ளுங்கள்!). இதுவே நீங்கள் வரம்பு மீறாமலிருக்க நெருக்கமான வழி. (பீஜே தமிழாக்கம்)

இந்த வசனத்தின் படி, ஒரு இஸ்லாமிய ஆண் நான்கு திருமணம் செய்துக்கொள்ள அனுமதி பெறுகிறான். இந்த வசனத்திலோ அல்லது குர்-ஆனின் இதர வசனங்களிலோ, எங்கும், முதல் மனைவியின் அனுமதி பெற்று தான் ஒரு முஸ்லிம் இரண்டாவது, மூன்றாவது அல்லது நான்காவது திருமணம் செய்யவேண்டும் என்று சொல்லப்படவில்லை.

குர்-ஆன் அனுமதிக்காத ஒன்றை, முஸ்லிம்கள் செய்யமாட்டார்கள். அதாவது நான்கு திருமணங்கள் பற்றி அல்லாஹ் கட்டளையிட்டு இருக்கும் போது, அதைச் செய்யலாமா செய்யக்கூடாதா என்று மனிதர்களிடம் முக்கியமாக தன் முதல் மனைவியிடம் கேட்டு செய்யமாட்டார்கள் இஸ்லாமியர்கள்.

ஆக, இதன் அடிப்படையில் பார்த்தால், ஒரு முஸ்லிமுக்கு அடுத்தடுத்து திருமணம் செய்ய, முதல் மனைவியின் அனுமதி தேவையில்லை என்பது விளங்கும்.

இதைப் பற்றி மேலும அறிய இந்த கட்டுரையை படியுங்கள்: **முதல் மனைவியின் அனுமதியுடன் தான் முஸ்லிம்கள் இரண்டாவது திருமணம் செய்துக் கொள்கிறார்களா?**

கேள்வி 281: நரகத்தில் பெண்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று முஹம்மது கண்டாரா?

பதில் 281: தனக்கு அல்லாஹ் நரகத்தை காட்டினான், அதில் அதிகமான பேர் பெண்கள் இருப்பதாக தாம் கண்டதாக முஹம்மது கூறுகின்றார்.

புகாரி நூல் எண்: 304

304. 'ஹஜ்ஜுப் பெருநாளன்றோ நோன்புப் பெருநாளன்றோ தொழும் திடலிற்கு நபி(ஸல்) அவர்கள் சென்று கொண்டிருந்தபோது சில பெண்களுக்கு அருகே அவர்கள் சென்று, 'பெண்கள் சமூகமே! தர்மம் செய்யுங்கள்! **ஏனெனில், நரக வாசிகளில் அதிகமாக இருப்பது நீங்களே என எனக்குக் காட்டப்பட்டது**' என்று கூறினார்கள்.

'இறைத்தூதர் அவர்களே! ஏன்' என்று அப்பெண்கள் கேட்டதற்கு, 'நீங்கள் அதிகமாகச் சாபமிடுகிறீர்கள்; கணவனுக்கு நன்றி கெட்டவர்களாக இருக்கிறீர்கள்; மார்க்கக் கடமையும் அறிவும் குறைந்தவர்களாக இருந்து கொண்டு மன உறுதியான கணவனின் புத்தியை மாற்றி விடக்கூடியவர்களாக உங்களை விட வேறு யாரையும் நான் காணவில்லை' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறியபோது . . .

முஹம்மது சொன்னது உண்மையாக இருந்தால்?

உண்மையாகவே அல்லாஹ் முஹம்மதுவிற்கு நரகத்தை காட்டி, அதில் அதிகமாக பெண்கள் இருப்பதாக முஹம்மது கண்டுயிருந்தால், இதன் அர்த்தமென்ன? உலகத்தில் உள்ள பெரும்பான்மையான பெண்கள் முஹம்மது சொன்ன அந்த நான்கு குணங்களை உடையவர்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும்.

இதனை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன், முஹம்மது பொய் சொன்னார் என்பதைத் தான் நடைமுறையில் நாம் பார்க்கிறோம். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

முஹம்மது சொன்னது பொய்யாக இருந்தால்?

முஹம்மது தனக்கு தோன்றியபடி, தன் சொந்த கருத்தைத் தான் சொன்னார், ஆனால் அதற்கு அல்லாஹ்வின் மதச்சாயம் பூசிவிட்டார் என்று நினைத்தால். முஸ்லிம்கள் இஸ்லாமையும், முஹம்மதுவையும் புறக்கணிக்கவேண்டும்.

கிறிஸ்தவமும் நரகம் இருப்பதை நம்புகிறது, ஆனால், எந்த ஒரு இடத்திலும், அதில் “இந்த குழு மக்கள்(ஆண்களோ, பெண்களோ)” அதிகமாக இருப்பார்கள் என்றுச் சொன்னதில்லை.

வெளி 21:8 பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும்,

விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்.

கேள்வி 282: முஸ்லிம்களின் வலக்கரத்திற்கு சொந்தமான பெண்கள் அவர்களுக்கு என்ன உறவு?

பதில் 282: குர்ஆனின் படி ஒரு முஸ்லிம் ஆணுக்கு வலக்கரத்திற்கு சொந்தமானவர்கள் என்றால், அவர்களுக்கு போரில் கிடைத்த அடிமைகள், முக்கியமாக அடிமைப்பெண்கள். பணம் படைத்தவர்கள் மார்கெட்டுக்குச் சென்று ஒரு அடிமைப்பெண்ணை விலைக்கு வாங்கி வீட்டில் வைத்துக்கொள்வதும் வலக்கரங்களுக்குச் சொந்தமானவர்கள் என்று பொருள்.

வலக்கரத்துக்கு சொந்தமான ஆண்களை (அடிமை ஆண்களை) வீட்டு வேலை செய்வதற்கு பயன்படுத்துக்கொள்வார்கள். வலக்கரத்துக்கு சொந்தமான பெண்களை (அடிமை பெண்களை) முஸ்லிம் ஆண்கள், திருமணம் செய்துக்கொள்ளாமல், அவர்களுடன் உடலுறவு கொள்ளலாம். இந்த உரிமையை குர்ஆன் முஸ்லிம்களுக்கும், முஹம்மதுவிற்கும் கொடுத்துள்ளது.

கீழ்கண்ட குர்ஆன் வசனங்களை கவனமாக படித்துப் பாருங்கள்:

a) திருமணம் செய்யாமல் அடிமைப்பெண்களோடு உடலுறவு கொள்ளலாம் (குர்ஆன் 4:3):

குர்ஆன் 4:3. அநாதை(ப் பெண்களைத் திருமணம் செய்து அவர்)களிடம் நீங்கள் நியாயமாக நடக்க முடியாது என்று பயந்தீர்களானால், உங்களுக்குப் பிடித்தமான பெண்களை மணந்து கொள்ளுங்கள் - இரண்டிரண்டாகவோ, மும்மூன்றாகவோ, நன்னான்காகவோ; ஆனால், நீங்கள் (இவர்களிடையே) நியாயமாக நடக்க முடியாது என்று பயந்தால் ஒரு பெண்ணையே (மணந்து கொள்ளுங்கள்), **அல்லது உங்கள் வலக்கரங்களுக்குச் சொந்தமான (ஓர் அடிமைப் பெண்ணைக் கொண்டு) போதுமாக்கிக் கொள்ளுங்கள்** - இதுவே நீங்கள் அநியாயம் செய்யாமலிருப்பதற்குச் சுலபமான முறையாகும்.

இந்த வசனத்தை கவனிக்கவும், "அல்லது உங்கள் வலக்கரங்களுக்குச் சொந்தமான (ஓர் அடிமைப் பெண்ணைக் கொண்டு) போதுமாக்கிக் கொள்ளுங்கள் " என்ற வரியில் அல்லாஹ் சொல்ல வருவது என்ன?

விடுதலையான பெண்ணை திருமணம் செய்யவேண்டுமென்றால், மஹர் கொடுக்கவேண்டும். பெண்களுக்கு மஹர் பணம் கொடுக்க முடியாத ஆண்கள் என்ன செய்யவேண்டும்? அதற்கு அல்லாஹ் பதில் சொல்கிறான் "உன்னிடம் உள்ள அடிமைப்பெண்ணோடு நீ உடலுறவு வைத்துக்கொள்". திருமணத்திற்கு வெளியே உடலுறவு வைக்க அல்லாஹ் அனுமதி அளிக்கின்றான்.

உலகம் இதனை விபச்சாரம் என்று அழைக்கிறது, ஆனால், முஸ்லிம்கள் இதனை அப்படி அழைப்பதில்லை.

மேலும் இவ்வசனத்தை தமிழாக்கம் செய்த "முஹம்மது ஜான்" அவர்கள் "**ஓர் அடிமைப்பெண்**" என்று அடைப்பிற்குள் எழுதுகின்றார். ஆனால், அரபியில் ஒரு அடிமைப்பெண்ணோடு மட்டுமே நீ உடலுறவு வைத்துக்கொள்ளவேண்டும் என்றுச் சொல்லவில்லை. இவருக்கு இந்த குர்ஆன் வசனத்தை தமிழாக்கம் செய்ய வெட்கமாக இருந்துள்ளது, தர்மசங்கடமாக இருந்துள்ளது, எனவே "ஓர் அடிமைப்பெண்" என்று எழுதுகின்றார்.

இவ்வசனத்தை மொழியாக்கம் செய்த மற்றவர்களும் எப்படி தர்மசங்கடத்தில் மூழ்கி இதனை மொழியாக்கம் செய்துள்ளதைப் பாருங்கள்.

அப்துல் ஹமீது பாகவி தமிழாக்கம்:

. . .அல்லது நீங்கள் வாங்கிய அடிமைப் **பெண்ணையே** (போதுமாக்கிக்) கொள்ளுங்கள். நீங்கள் தவறு செய்யாமலிருப்பதற்கு இதுவே சுலபமா(ன வழியா)கும்.

இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட் (IFT) தமிழாக்கம்:

. . .அல்லது உங்கள் கைகள் சொந்தமாக்கிக் கொண்ட **பெண்களையே** மனைவியாக்கிக் கொள்ளுங்கள். நீதி தவறாமலிருப்பதற்கு இதுவே மிக நெருக்கமானதாகும்.

மன்னர் ஃபஹத் வளாகம் (சவூதி) தமிழாக்கம்:

. . .அல்லது உங்கள் வலக்கரம் சொந்தமாக்கிக்கொண்ட **(அடிமைப்பெண்ணில் உள்ள)தை(க்கொண்டு போதுமாக்கிக்கொள்ளுங்கள்)**. நீங்கள் அநீதி செய்யாமலிருப்பதற்கு, இதுவே சுலப(மான வழியா)கும்.

பீஜே தமிழாக்கம்:

. . .அல்லது உங்களுக்கு உடைமையாக **உள்ள அடிமைப் பெண்களை**107 (போதுமாக்கிக் கொள்ளுங்கள்!). இதுவே நீங்கள் வரம்பு மீறாமலிருக்க நெருக்கமான வழி.

இந்த வலக்கரம் சொந்தமாக்கிக்கொண்டவர்கள் பற்றி மேலும் அறிய படிக்கவும்: குர்ஆன் 4:25, 23:6, 33:50, 33:52, 70:30

இந்த சட்டம் இன்னும் குர்ஆனில் உள்ளது, இன்றைய முஸ்லிம்களும் இதனை செய்கிறார்கள். ஆனால் அடிமைகளை விற்பது நாகரீகமடைந்த நாடுகளில் தடை செய்யப்பட்டு இருப்பதினால், நம் முஸ்லிம் ஆண்களுக்கு வலக்கரத்துக்கு

சொந்தமானவர்கள் யாருமில்லை. இஸ்லாமிய ஆட்சி நடக்கும் சில நாடுகளில் இன்றும் இந்த அவலம் உண்டு, நம் முஸ்லிம் நண்பனும் செய்வான்.

இதை ஒருவேளை படிப்பவர்கள் இந்திய முஸ்லிம்களாக இருந்தால், உங்கள் தகப்பனாரும், அண்ணனும், தம்பியும் இதை செய்வான், ஏனென்றால் இது அல்லாஹ்வின் படி ஹலால் ஆகும். உலகத்தின் படி ஹராம் - விபச்சாரம் ஆகும்.

கேள்வி 283: போரில் பிடிபட்ட பெண்கள் பற்றி பழைய ஏற்பாடும் சொல்கிறதல்லவா? ஏன் குர்ஆனை மட்டுமே குற்றப்படுத்துகிறீர்கள்?

பதில் 283: அடிமைப்பெண்களை வாங்கி அல்லது போரில் பிடிபட்ட பெண்களை திருமணம் செய்துக்கொள்ளாமல், அவர்களை கற்பழிக்க உரிமை கொடுத்த குர்ஆனை குற்றப்படுத்தாமல் என்ன செய்யமுடியும்?

இன்றிலிருந்து 3000 ஆண்டுகளுக்கு முன்பாக இருந்த உலகத்தை கண்டால், பல இனக்குழுக்கள், அரசர்கள் போர்கள் புரிந்து, மக்களை சீரழித்துக்கொண்டு இருந்தார்கள் என்பதை அறியலாம். ஆனால், அந்த அடிமை மனிதர்களையும் படைத்த இறைவன் அவர்களை எப்படி பார்த்துக் கொள்ள்வேண்டும் என்று சொல்லும் விவரங்கள் தான், அவன் உண்மையான இறைவனா, அல்லது பொய்யான இறைவனா என்பதை அறியமுடியும்.

கி.பி. 610ல் வந்த குர்ஆன் சொல்வது போன்று அல்லாமல், கி.மு. 1500ல் கொடுக்கப்பட்ட மோசேயின் சட்டத்தில் இதைப் பற்றி யெகோவா தேவன் என்ன சொல்லியுள்ளார் என்பதை கவனித்தால், எந்த ஒரு முஸ்லிமும் குர்ஆனின் பக்கம் தலைவைத்து கூட படுக்கமாட்டார்கள்.

சுருக்கமான விவரங்களை இங்கு தருகிறேன், மேலதிக விவரங்களை கீழ்கண்ட கட்டுரையில் படியுங்கள்.

1. ஒரு யூதன் அடிமைப்பெண்ணை திருமணம் செய்யாமல் அவளைத் தொடக்கூடாது(உடலுறவு கொள்ளக்கூடாது).
2. அந்த பெண்ணுக்கு 30 நாட்கள் தன் குடும்ப நபர்களை நினைத்து துக்கம் கொண்டாட தன் வீட்டிலேயே அனுமதி அளிக்கவேண்டும்.
3. இந்த 30 நாட்களிலும் அவளை தொடக்கூடாது.
4. அதன் பிறகு திருமணம் செய்துக்கொண்டு, அவளுக்கு புருஷனாக அவளோடு வாழவேண்டும், அவள் அவனுக்கு மனைவியாக இருப்பாள்.
5. மேலும், அவளை மறுபடியும் விற்க இந்த யூதனுக்கு அனுமதி இல்லை, அந்தப் பெண் விடுதலையான பெண்ணாக வாழ விட்டுவிடவேண்டும்.

உபாகமம் 21:10 லிருந்து 14ம் வசனம் வரை:

10. நீ உன் சத்துருக்களுக்கு எதிராக யுத்தத்திற்குப் புறப்பட்டு, உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன் கையில் ஒப்புக்கொடுக்கிறதினால், அவர்களைச் சிறைபிடித்துவந்து, 11. சிறைகளில் ரூபவதியான ஒரு ஸ்திரீயைக்கண்டு, **அவளை விவாகம்பண்ண விரும்பி**, 12. அவளை உன் வீட்டிற்குள் அழைத்துக்கொண்டு போவாயானால், அவள் தன் தலையைச் சிரைத்து, தன் நகங்களைக் களைந்து, 13. **தன் சிறையிருப்பின் வஸ்திரத்தையும் நீக்கி**, உன் வீட்டிலிருந்து, **ஒரு மாதமட்டும் தன் தகப்பனையும் தாயையும் நினைத்துத் துக்கங்கொண்டாடக்கடவள்**; அதன்பின்பு நீ அவளோடே சேர்ந்து, **அவளுக்கு புருஷனாயிரு, அவள் உனக்கு மனைவியாயிருப்பாள்**. 14. அவள்மேல் உனக்குப் பிரியமில்லாமற்போனால், நீ அவளை பணத்திற்கு விற்காமல், **அவளைத் தன் இஷ்டப்படி போகவிடலாம்**; நீ அவளைத் தாழ்மைப்படுத்தினபடியினால் அவளாலே ஆதாயம் பெறும்படி தேடவேண்டாம்.

மேலும் அறிய இக்கட்டுரையை படிக்கவும்: **போரில் பிடிபட்ட பெண் கைதிகளுக்கு நல்வாழ்வு தரும் நல்லவர்**

யெகோவா தேவன் எங்கே, அல்லாஹ் எங்கே! நீங்களே ஒப்பிட்டுப்பாருங்கள்.

கேள்வி 284: முஸ்லிம் பெண்கள் மாதவிடாய் நேரத்தில் குர்ஆனை தொடக்கூடாது, மசூதிக்குள் வரக்கூடாது, தொழுகையும் செய்யக்கூடாது என்கிறார்களே, இது உண்மையா?

பதில் 284: ஆம், இஸ்லாமின் படி பெண்கள் இப்படிப்பட்ட நேரங்களில் மசூதிக்குள் வரக்கூடாது, குர்ஆனை தொடக்கூடாது, அவர்கள் தொழக்கூடாது. அவர்கள் இஸ்லாமிய மத சடங்கின்படி தீட்டுப்பட்டவர்கள் ஆவார்கள்.

முஸ்லிம் பெண்கள் "மார்க்க கடமையை நிறைவேற்றுவதற்கு தடையாக இருப்பது", பெண்களின் மாதவிடாய் என்று முஹம்மது கீழ்கண்ட ஹதீஸில் கூறியுள்ளார்.

புகாரி நூல் எண்: 304

. . .'இறைத்தூதர் அவர்களே! எங்களுடைய மார்க்கக் கடமையும் எங்களுடைய அறிவும் எந்த அடிப்படையில் குறைவாக உள்ளன' என்று பெண்கள் கேட்டனர்.

. . . **ஒரு பெண்ணிற்கு மாதவிடாய் ஏற்பட்டால் அவள் தொழுகையையும் நோன்பையும்விட்டு விடுவதில்லையா?'** என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டதற்கும் 'ஆம்!' எனப் பெண்கள் பதில் கூறினர். '**அதுதான் பெண்கள் மார்க்கக் கடமையில் குறைவானவர்களாக இருக்கின்றனர் என்பதற்கு**

ஆதாரமாகும்' என்று நபி(ஸல்) கூறினார்கள்' என அபூ ஸயீதுல் குத்ரி(ரலி) அறிவித்தார்.

கேள்வி 285: கிறிஸ்தவ பெண்கள் மாதவிடாய் நேரத்தில் பைபிளை படிக்கலாமா? சர்சுக்குச் சென்று தேவனை ஆராதிக்கலாமா?

பதில் 285: பெண்கள் மாதவிடாய் நேரத்தில் பைபிளை படிக்கலாம் மற்றும் சர்சுக்குச் சென்று தேவனை ஆராதிக்கலாம்.

இயேசுவின் கூற்றின் படி நம் மனதிலிருந்து வருகின்றவைகளே நம்மை தீட்டுப்படுத்தும். உடலிலிருந்து வருகின்ற வியர்வையானாலும் சரி, வேறு எதுவானாலும் சரி, அது நம்முடைய உடலை மட்டுமே அழுக்காக்கும், நம் மனதை அழுக்காக்காது. நாம் பைபிளை படிப்பதிலிருந்து எதுவும் நமக்கு தடை விதிக்காது.

சில நேரங்களில் சில கிறிஸ்தவர்கள் (ஆண்களானாலும், பெண்களானாலும்) கழிவறையில் உட்கார்ந்துக்கொண்டு மற்ற குடும்ப நபர்களுக்கு தெரியாமல் பைபிளை படிக்கிறார்கள். பைபிளை படித்தால் அடி உதை கிடைக்கும், வீட்டில் சண்டை நடக்கும் என்று பயப்படும்போது, இப்படி சிலர் பைபிளை படிப்பதுண்டு. எந்த இடம் என்பது முக்கியமில்லை, முழு மனதுடன் ஆர்வத்தோடு பைபிளை படித்து, புரிந்துக்கொண்டு, அதற்கு கீழ்படிவதையே இயேசு விரும்புகிறார்.

என்னைப்போன்று முஸ்லிம் குடும்பத்திலிருந்து பெற்றோருக்குத் தெரியாமல், இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள், பைபிளை மறைந்து இருந்து படிக்கிறார்கள், எந்த இடம் என்று பார்ப்பதில்லை.

குர்ஆனைப் போன்று பைபிள் தேவையில்லாத சட்டங்களை கொடுப்பதில்லை.

கேள்வி 286: கிறிஸ்தவ பெண்கள் மாதவிடாய் நேரத்தில் பைபிளை படிக்கலாம், சர்சுக்குப் போகலாம் என்பதை புதிய ஏற்பாட்டிலிருந்து நிருபிக்கமுடியுமா?

பதில் 286: பைபிளிலிருந்து ஒரு அருமையான உதாரணத்தை எடுத்துக்காட்டுவதற்கு முன்பு, உங்கள் பகுதியில் உள்ள திருச்சபைகளை சிறிது கவனித்துப் பாருங்கள். திருச்சபைக்குச் செல்லும் பெண்களை நிறுத்தி இந்த கேள்வியை கேட்டுப் பாருங்கள் (கேட்கின்ற நீங்கள் பெண்களாக இருக்கவேண்டும்). உங்களுக்கு இதற்கான பதில் கிடைக்கும்.

பெண்கள் திருச்சபைக்கு வரும் போது, அவர்களின் மாதவிடாய் கணக்குப்படி, நாப்கின் கூட தங்கள் பைகளில் கொண்டுச் செல்கிறார்கள். தேவனை

ஆராதிக்கும் நேரத்தில் ஒருவேளை, மாதவிடாய் ஏற்படுமானால் அமைதியாக ரெஸ்ட் ரூமுக்குச் சென்று வருகிறார்கள், அதன் பிறகு தேவனை ஆராதிக்கிறார்கள். திருச்சபை போதகரும் ஒன்றும் சொல்வதில்லை, இயேசுக் கிறிஸ்துவும் இதற்கு மறுப்பு தெரிவிப்பதில்லை. (இதை ஏன் இப்படி வெளிப்படையாக எழுதுகிறீர்கள் என்று சில கிறிஸ்தவர்கள் என்னிடம் கேட்கக்கூடும். என்ன செய்வது முஸ்லிம்களுக்கு நம் வேதத்தின் மேன்மையை கற்றுக்கொடுக்க இப்படி எழுதவேண்டியுள்ளது, மன்னிக்கவும்)

கிறிஸ்தவம் உடல் சுத்தத்திற்கு முக்கியத்தும் கொடுப்பதில்லை, மனது சுத்தமாக இருப்பதையே விரும்புகிறது.

பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஸ்திரீ:

இந்த கீழ்கண்ட நிகழ்ச்சி மட்டும் பைபிளில் இல்லாமல் இருந்தால், சில கிறிஸ்தவர்கள் மாதவிடாய் பெண்கள் சபைக்கு வரக்கூடாது என்று கூட சொல்லியிருப்பார்கள்.

மத்தேயு 9:20. அப்பொழுது, **பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஸ்திரீ**: 21. நான் அவருடைய வஸ்திரத்தையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று தன் உள்ளத்தில் எண்ணிக்கொண்டு, அவர் பின்னாலே வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள். 22. இயேசு திரும்பி, அவளைப் பார்த்து: **மகளே, திடன் கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். அந்நேரம்முதல் அந்த ஸ்திரீ சொஸ்தமானாள்**.

யூத மார்க்கத்தின் மத சட்டங்களின் படி மாதவிடாய் பெண்கள் ஆலயத்திற்கு வரக்கூடாது, யாரையும் தொடக்கூடாது. ஆனால், இந்த பெண்ணுக்கு 12 ஆண்டுகளாக பெரும்பாடு நிற்கவில்லை. இருந்தபோதிலும், இயேசுவைத் தொட்டு சுகமானாள். இயேசு திரும்பி பார்த்து, இந்த நிலையில் இருக்கும் நீ தீட்டுள்ளவள், எப்படி என்னைத் தொடலாம் என்று கேட்கவில்லை, அப்பெண்ணின் விசுவாசத்தை மெச்சிக்கொண்டார்.

இயேசு தான் தேவனுடைய வார்த்தை, நம்முடைய கையில் இருக்கும் பைபிளும் தேவனுடைய வார்த்தை, இயேசுவை பெரும்பாடுள்ள பெண் தொடும் போது, கோபம் கொள்ளாதவர், எப்படி நாம் அவரை தொட்டால் கோபம் கொள்வார்?

கிறிஸ்தவர்கள் பைபிளை தொடும் போதெல்லாம் அவர்கள் இயேசுவையல்லவா தொடுகிறார்கள்!

புதிய ஏற்பாட்டில் எங்கும், மாதவிடாய் உள்ள பெண்கள் பைபிளைத் தொடக்கூடாது என்றோ, ஜெபிக்கக்கூடாது என்றோ, சபைக்கு வந்து மற்றவர்களோடு சேர்ந்து ஆராதிக்கக்கூடாது என்றோ கட்டளையிடவில்லை.

மருத்துவர்கள் கூற்றுப்படி, மாதவிடாய் என்பது 'கர்ப்பப்பையை சுத்திகரிக்கும் ஒரு நிகழ்ச்சி' ஆகும். மாதவிடாய் என்பது பிள்ளை பெருவதற்கு உடலை தயார்படுத்தும் ஒரு நிகழ்ச்சியாகும். பெண்களை தேவன் படைத்த போது, இந்த ஒரு விஷயத்தை அவர் தெரிந்தே வைத்திருக்கிறார். உலக நன்மைக்காகவும், பெருக்கத்திற்காகவும் அவர் இப்படி செய்துள்ளார் என்பதை நாம் மறக்கக்கூடாது.

கேள்வி 287: முஹம்மது தம் மனைவியை அடித்துள்ளாரா?

பதில் 287: முஸ்லிம் ஹதீஸில் முஹம்மது ஆயிஷா அவர்களை நெஞ்சில் அடித்ததாக ஒரு நிகழ்ச்சி வருகிறது.

தமிழில் இந்த ஹதீஸை "முஹம்மது நெஞ்சில் கையை வைத்து தள்ளினார்கள்" என்று மொழியாக்கம் செய்துள்ளார்கள். முஹம்மது அடித்தார் என்று தமிழாக்கம் செய்தால் தங்கள் நபிக்கு அவமானமாக இருக்கும் என்று எண்ணினார்களோ என்னவோ!

ஸஹீஹ் முஸ்லிம் நூல், எண்: 1774

1774. . . . அவர்கள் "ஓ நீதான் எனக்கு முன்னால் நான் கண்ட அந்த உருவமா?" என்று கேட்டார்கள். நான் "ஆம்" என்றேன். **உடனே அவர்கள் என் நெஞ்சில் கையை வைத்துத் தள்ளினார்கள். எனக்கு வலித்தது**.. . .

ஆங்கிலத்தில் "முஹம்மது என் நெஞ்சில் அடித்தார், அதனால் என் நெஞ்சில் வலி உண்டானது" என்று வருகிறது.

Sahih Muslim, 2127

. . .He said: Was it the darkness (of your shadow) that I saw in front of me? I said: Yes. **He struck me on the chest which caused me pain**, . . .

Source: **hadithcollection.com/sahihmuslim/Sahih%20Muslim%20Book%2004.%20Prayer/sahih-muslim-book-004-hadith-number-2127.html**

மனைவியை அடிக்க குர்ஆன் அனுமதிக்கும் போது, அதனை முஹம்மது பின்பற்றும் போது, ஏன் முஸ்லிம்களுக்கு உள்ளதை உள்ளதுபடியே தமிழாக்கம் செய்ய தர்மசங்கடமாக உள்ளது?

முஹம்மது முஹம்மதுவை அடித்தாரா? அல்லது தள்ளினாரா? என்பதைப் பற்றி மேலும் அறிய கீழ்கண்ட ஆய்வுக்கட்டுரையை படிக்கவும்: **Muhammad and Wife Beating: Catching Muslims In Another Lie Pt. 3**

கேள்வி 288: சஹாபாக்கள் தம் மனைவிகளை அடித்துள்ளார்களா? முஹம்மது இதற்கு அனுமதி அளித்தாரா?

பதில் 288: ஆம், சஹாபாக்கள் தங்கள் மனைவிகளை அடித்துள்ளார்கள். இதற்கு முஹம்மதுவும் அனுமதி கொடுத்துள்ளார்.

இப்னு மாஜா ஹதீஸ்: (நம் தமிழாக்கம்)

அல்லாஹ்வின் தூதர் கூறியதாக "இயாஸ் இப்னு அப்துல்லா இப்னு அபு துபாப் " அறிவித்தார்:

அல்லாஹ்வின் வேலைக்காரிகளை(பெண்களை) அடிக்காதீர்கள், ஆனால் உமர் அல்லாஹ்வின் தூதரிடம் வந்து கூறினார்: பெண்கள் தங்கள் கணவர்களிடம் தைரியமாகிவிட்டார்கள், **அவர் (நபி) அவர்களை அடிக்க அனுமதி அளித்தார்**. பின்னர் பல பெண்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களின் குடும்பத்தை சுற்றி வந்து தங்கள் கணவர்களுக்கு எதிராக புகார் கூறினர். எனவே அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கூறினார்கள்: பல பெண்கள் முஹம்மதுவின் குடும்பத்திடம் வந்து தங்கள் கணவர்களுக்கு எதிராக புகார் அளித்துள்ளனர். **புகார் அளித்தவர்கள் உங்களில் சிறந்தவர்கள் அல்ல**.

ஆங்கிலத்தில்:

(709) Chapter: Regarding Hitting Women

Iyas ibn Abdullah ibn Abu Dhubab reported the Messenger of Allah (ﷺ) as saying:

Do not beat Allah's handmaidens, but when Umar came to the Messenger of Allah (ﷺ) and said: Women have become emboldened towards their husbands, he (the Prophet) gave permission to beat them. Then many women came round the family of the Messenger of Allah (ﷺ) complaining against their husbands. So the Messenger of Allah (ﷺ) said: Many women have gone round Muhammad's family complaining against their husbands. They are not the best among you.

Grade : Sahih (Al-Albani)

Reference : Sunan Abi Dawud 2146

In-book reference : Book 12, Hadith 101

English translation : Book 11, Hadith 2141

Source: **sunnah.com/abudawud/12/101**

முஸ்லிம் கணவர்கள் தங்களை அடிக்கிறார்கள் என்று புகார் செய்த பெண்கள் "முஸ்லிம் பெண்களில் சிறந்தவர்கள் இல்லை" என்று முஹம்மது கூறியுள்ளார். இது என்ன கொடுமை?

பெண்களை அடிக்க அனுமதி கேட்கும் போது, அப்படிப்பட்ட ஆண்களுக்கு அறிவுரை கூறி தடுக்காமல், அனுமதி கொடுத்துவிட்டு, கடைசியாக பெண்களை முஸ்லிம் ஆண்கள் அடிக்க ஆரம்பித்தார்கள். புகார் செய்த பெண்களை "கெட்டவர்கள்" என்று முஹம்மது குற்றம் சாட்டுகின்றார். இந்த அநியாயத்தை வேறு எங்கேயாவது பார்க்கமுடியுமா?

மகளுக்கு திருமணமான பிறகும் மகளை அடித்த அபூ பக்கர்:

புகாரி நூல்: 6845 - ஆயிஷா(ரலி) அறிவித்தார்.

(என் கழுத்தாணியை நான் தொலைத்துவிட்டதால் அந்தப் பயணத்தைத் தொடர முடியாமல் நீர் நிலைகள் இல்லாத ஓரிடத்தில் நாங்கள் தங்கநேரிட்டபோது என் தந்தை) அபூ பக்ர்(ரலி) அவர்கள் வந்து என்னை வேகமாக ஓர் அடி அடித்தார்கள். மேலும், 'ஒரு கழுத்தணிக்காக மக்களை (செல்ல விடாமல்) தடுத்துவிட்டாயே!' என்று கூறினார்கள். இறைத்தூதர்(ஸல்) அவர்கள் என் மடிமீது தலைவைத்துக் கொண்டிருந்தால் நான் அசையாதிருந்தேன். **அபூ பக்ர்(ரலி) அவர்கள் (என்னை அடித்த அடியில்) எனக்கு ஏற்பட்ட வலியினால் எனக்கு மரணம் வந்துவிட்டதைப் போன்று இருந்தது...** (தொடர்ந்து) முந்தைய ஹதீஸைப் போன்றே அறிவிக்கப்பட்டுள்ளது.

பெண்களை அடிப்பதை ஒரு பெரிய குற்றமாக சஹாபாக்கள் கருதவில்லை, ஏனென்றால் முஹம்மது அனுமதியளித்தார், குர்ஆனும் அனுமதி அளிக்கிறது.

முஸ்லிம் ஆண்களிடம் பெண்கள் படும் பாடு சொல்லி மாளாது என்கிறார், ஆயிஷா அவர்கள்:

ஒரு முஸ்லிம் தம் மனைவியை அடித்த அடியினால், அப்பெண்ணின் தோல் பச்சைநிறமாக மாறியுள்ளது. இதனை அறிந்து முஹம்மதுவின் மனைவி ஆயிஷா வேதனைப்படுகிறார்.

புகாரி 5825. இக்ரிமா(ரஹ்) அவர்கள் அறிவித்தார்.

ரிஃபாஆ அல்குறழீ(ரலி) அவர்கள் தம் மனைவியை மணவிலக்குச் செய்துவிட, அந்தப் பெண்ணை அப்துர் ரஹ்மான் இப்னு ஸபீர் அல்குறழீ(ரலி) அவர்கள் மணந்தார்கள். (பிறகு நடந்தவற்றை) ஆயிஷா(ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

(ஒரு முறை) அந்தப் பெண்மணி பச்சை நிற முகத்திரை அணிந்துகொண்டு என்னிடம் (வந்து தம் கணவர் அப்துர் ரஹ்மான் தம்மை துன்புறுத்துவதாக) முறையிட்டார். தம் கணவர் தம்மை அடித்ததால் தம் மேனியில் (கன்றியிருந்த) பச்சை நிற அடையாளத்தை எனக்குக் காட்டினார். (இக்ரிமா கூறுகிறார்:) பெண்கள் ஒருவருக்கொருவர் உதவுவது வழக்கம் தானே?) அந்த வழக்கப்படி (நபி(ஸல்) அவர்கள் வந்தபோது, 'இறைத்தூதர் அவர்களே!) நான் (ஆயிஷா) **இறைநம்பிக்கையுடைய பெண்கள் சந்திக்கும் துன்பத்தைப் போன்று எங்கும் பார்த்ததில்லை. இவருடைய மேனி (இவருடைய கணவர் அப்துர் ரஹ்மான் அடித்ததால் கன்றிப்போய்) இவரின் (பச்சை நிற**

முகத்திரைத்) துணியைவிடக் கடுமையான பச்சை நிறமுடையதாக உள்ளது' என்று சொன்னேன்.

கேள்வி 289: ஒரு முஸ்லிம் ஆணிடம் அவன் ஏன் தன் மனைவியை அடித்தான் என்று கேட்கக்கூடாது என்று முஹம்மது கூறியுள்ளாரா?

பதில் 289: முஹம்மது கூறியதாக இப்னு மாஜா ஹதீஸில் ஒரு நிகழ்ச்சி வருகிறது.

உமர் ஒருமுறை தம் மனைவியை அடித்துள்ளார். அதனை மற்றொருவர் பார்த்து உமரை சமாதானப்படுத்தியுள்ளார். அந்த நேரத்தில், "ஒரு ஆண் தன் மனைவியை அடிப்பதை, ஏன் என்று கேள்வி கேட்கக்கூடாது?" என்று முஹம்மது கூறியுள்ளார் என்று உமர் சொன்னார்.

இப்னு மாஜா ஹ்தீஸ்:

It was narrated that Ash'ath bin Qais said:

"I was a guest (at the home) of 'Umar one night, and in the middle of the night he went and hit his wife, and I separated them. When he went to bed he said to me: 'O Ash'ath, learn from me something that I heard from the Messenger of Allah" **A man should not be asked why he beats his wife**, and do not go to sleep until you have prayed the Witr."' And I forgot the third thing."

Grade: Hasan (Darussalam)

English reference : Vol. 3, Book 9, Hadith 1986

Arabic reference : Book 9, Hadith 2062

இது ஹஸன் ஹதீஸ் ஆகும், அதாவது இது பலவீனமான ஹதீஸ் அல்ல, எனவே இதனை பின்பற்றலாம் என்பதாகும்.

கேள்வி 290: மனைவியை முகத்தில் அறையக்கூடாது என்று ஆண்களுக்கு இஸ்லாம் கட்டளையிடுகிறது, மிகப்பெரிய வரப்பிரசாதம் அல்லவா? அல்லாஹ்வின் அருள் அல்லவா?

பதில் 290: முஹம்மதுவிடம் "ஒரு மனைவிக்கு தன் கணவரிடம் என்னென்ன உரிமைகள் உள்ளன?" என்று கேட்டார்கள்.

இதற்கு முஹம்மது நான்கு காரியங்களைச் சொன்னார், அதில் ஒன்று "தன் கணவன் தன் முகத்தில் அறையாமல் இருக்கும் உரிமை அந்த மனைவிக்கு உண்டு" என்றார்.

இதன் அர்த்தமென்ன? ஒரு முஸ்லிம் கணவன் தன் மனைவியை எங்கு வேண்டுமானாலும் அடிக்கலாம், ஆனால் முகத்தில் மட்டும் அறையக்கூடாது. இது முஸ்லிம் பெண்களுக்கு இஸ்லாம் கொடுக்கும் மிகப்பெரிய உரிமையைப் பாருங்கள்.

அபூ தாவுத்:

(708) Chapter: The Rights Of A Woman Upon Her Husband

Narrated Mu'awiyah al-Qushayri:

Mu'awiyah asked: Messenger of Allah, what is the right of the wife of one of us over him? He replied: That you should give her food when you eat, clothe her when you clothe yourself, **do not strike her on the face**, do not revile her or separate yourself from her except in the house. Abu Dawud said: The meaning of "do not revile her" is, as you say: "May Allah revile you".

Grade : Hasan Sahih (Al-Albani)

Reference : Sunan Abi Dawud 2142

In-book reference : Book 12, Hadith 97

English translation : Book 11, Hadith 2137

இப்னு மாஜா ஹதீஸ்:

It was narrated from Hakim bin Muawiyah, from his father, that:

a man asked the Prophet(ﷺ): “What are the right of the woman over her husband?” He said: “That he should feed her as he feeds himself and clothe her as he clothes himself; **he should not strike her on the face nor disfigure her**, and he should not abandon her except in the house (as a form of discipline).” (Hassan)

English reference : Vol. 3, Book 9, Hadith 1850

Arabic reference : Book 9, Hadith 1923

அடுத்த கேள்வியையும் படித்துவிடுங்கள்.

கேள்வி 291: அடிமைகளை மற்றும் காளையை அடிப்பது போன்று பெண்களை அடிக்கக்கூடாது? ஏன் அடிக்கக்கூடாது என்பதற்கு முஹம்மது சொல்லும் காரணம் என்ன?

பதில் 291: முஹம்மதுவின் சஹாபாக்களும், ஆரம்ப கால முஸ்லிம்களும், அடிமைகளை கொடுமையாக அடித்துள்ளார்கள், காளைகளையும் அடங்கவில்லையென்றால், அதிகமாக அடித்துள்ளார்கள். இது முஹம்மதுவிற்கு தெரிந்திருக்கிறது, மேலும் இவர் பார்த்தும் இருந்திருப்பார். முஸ்லிம்கள் அடிமைகளையும், மிருகங்களையும் அடிப்பது போன்று பெண்களையும் அடித்துள்ளார்கள்.

அடிமைகளை அடிக்கிறீர்கள் பிரச்சனையில்லை, காளைகளை அடிக்கிறீர்கள் பிரச்சனை இல்லை, மனைவிகளை இப்படி அடிக்கவேண்டாம் என்று முஹம்மது கூறியுள்ளார். ஏன் இப்படிப்பட்ட அருமையான ஆலோசனையை முஹம்மது கொடுத்தார் என்று பார்த்தால், அவர் சிறப்பான காரணத்தைச் சொல்லியுள்ளார்.

"முஸ்லிம்களே, நீங்கள் அடிமைகளை, காளைகளை அடிப்பது போன்று மனைவிகளை அடித்தால், அதே நாள் இரவில் எப்படி அவர்களோடு நீங்கள் உடலுறவு கொள்ளமுடியும்?". முஹம்மது இங்கு முஸ்லிம் பெண்களைப் பற்றி கவலைப்படுவது போன்று தெரியவில்லை, முஸ்லிம் ஆண்கள் அன்று இரவு உடலுறவு கொள்ளவேண்டுமென்றால், என்ன செய்வது? உடலில் காயங்களோடு உங்கள் மனைவி உங்களோடு உடலுறவு கொள்ளமுடியுமா? என்னே இறைத்தூதர், ஆண்களின் உடலுறவுக்காக மனைவியை மிருகங்களை அடிப்பது போன்று அடிக்கவேண்டாம் என்று அறிவுரை கூறுகின்றார்.

பார்க்க ஸஹீஹ் புகாரி எண்கள்:4942, 5204 & 6042

4942. அப்துல்லாஹ் இப்னு ஸம்ஆ(ரலி) கூறினார்

(ஒரு சமயம்) நபி(ஸல்) அவர்கள் உரையாற்றியதை செவியுற்றேன். . . . மேலும், இறைத்தூதர்(ஸல்) அவர்கள் (பெண்க(ளின் உரிமைக)ள் குறித்து பின்வருமாறு குறிப்பிட்டார்கள். **உங்களில் ஒருவர் தம் மனைவியை, அடிமையை அடிப்பது போல் அடிக்க முற்படுகிறார். (ஆனால்,) அவரே அந்நாளின் இறுதியில் (இரவில்) அவளுடன் (தாம்பத்திய உறவுக்காக) படுக்க நேரலாம். (இது முறையா?**). . . ..

5204. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: **நீங்கள் உங்கள் மனைவியரை அடிமையை அடிப்பது போன்று அடிக்க வேண்டாம். (ஏனெனில்,) பிறகு அதே நாளின் இறுதியில் (இரவில்) அவளுடனேயே (நாணமில்லாமல்) உறவுகொள்வீர்கள்**. என அப்துல்லாஹ் இப்னு ஸம்ஆ(ரலி) அறிவித்தார்.

6042. அப்துல்லாஹ் இப்னு ஸம்ஆ(ரலி) அறிவித்தார்: உடலில் இருந்து வெளியேறும் ஒன்(றான வாயுக் காற்)றைக் கேட்டு எவரும் சிரிப்பதை நபி(ஸல்) அவர்கள் தடை

செய்தார்கள். மேலும், (பெண்கள் தொடர்பாக) '**நீங்கள் உங்கள் மனைவியை ஏன் காளையை அடிப்பது போல் அடிக்கிறீர்கள்? பிறகு நீங்களே அவளை (இரவில்) அணைத்துக் கொள்ள வேண்டிவருமே!**' என்றும் கூறினார்கள். ஹிஷாம் இப்னு உர்வா(ரஹ்) அவர்களின் அறிவிப்பில் 'அடிமையை அடிப்பது போல் (ஏன் அடிக்கிறீர்கள்?)' என்று காணப்படுகிறது.

நாணமில்லையா? இது இது முறையா? என்று ஹதீஸ்களில் நாம் பார்க்கும் வார்த்தைகள், அதனை தமிழாக்கம் செய்த முஸ்லிம்கள் எழுதியவை. முஹம்மதுவின் அறிவுரைகள் மிகவும் கீழ்தரமாக இருப்பதால், அதனை நியாயப்படுத்த இப்படிப்பட்ட வார்த்தைகளை முஸ்லிம்கள் சுயமாக எழுதுகிறார்கள்.

பெண்களுக்கு தீமையை விளைவிக்கும் அறிவுரைகளை கொடுப்பதற்கு பதிலாக, "முஸ்லிம் ஆண்களே, உங்கள் மனைவிகளை அடிப்பதை முழுவதுமாக தடுத்துவிடுங்கள், மனைவியை அடிப்பவன் நல்ல முஸ்லிமல்ல" என்றுச் சொல்லியிருந்தால், முஸ்லிம் பெண்களுக்கு நிம்மதி கிடைத்திருக்கும்.

சுருக்கமாகச் சொல்வதென்றால்:

- மனைவியை திருத்த குர்ஆன் முஸ்லிம் ஆண்களுக்கு உரிமை தருகிறது.
- முஹம்மது தம் மனைவியை அடித்துள்ளார்.
- சஹாபாக்கள் தங்கள் மனைவிகளை அடித்துள்ளார்கள்.
- அடிமைகளை முஸ்லிம்கள் மிகவும் கொடுமையாக அடித்துள்ளார்கள், அதாவது மிருகங்களை அடிப்பது போன்று அடித்துள்ளார்கள்.
- சஹாபாக்கள், முஸ்லிம்கள் தங்கள் மனைவிகளை அடிமைகளை/காளைகளை அடிப்பதுப் போன்று அடித்துள்ளார்கள்.

முஸ்லிம் ஆண்களின் உடலுறவுக்கு தடையாக இருக்கும் என்பதற்காக காளைகளை/அடிமைகளை அடிப்பதுபோன்று அடிக்கவேண்டாம் என்று முஹம்மது அறிவுரை கூறியுள்ளார். இப்படிப்பட்ட அறிவுரை யாரை காப்பாற்றும் முஸ்லிம் பெண்களையா? அல்லது ஆண்களின் உடல் பசியையா? கொடுமையிது!

இப்படிப்பட்ட முஹம்மதுவைத் தான் முஸ்லிம் ஆண்களும், பெண்களும் உயிருக்கு மேலாக நேசிக்கிறார்கள், பின்பற்றுகிறார்கள்.

கேள்வி 292: கணவன் உடலுறவுக்கு அழைத்தால், மனைவி வரவில்லையென்றால் காலைவரை மலக்குகள் அவளை சபித்துக்கொண்டு இருப்பார்களா?

பதில் 292: இஸ்லாம் ஆண்களின் மார்க்கம் என்றுச் சொன்னால் மிகையாகாது. ஆண்களுக்காக, ஆண்களால் உருவாக்கப்பட்ட மதம் இஸ்லாம் என்பது எவ்வளவு

உண்மையாக இருக்கிறது. ஒரு பெண்ணிடம் அவளின் கணவன் உடலுறவு கொள்ள அழைக்கும்போது அவள் சம்மதிக்கவில்லையானால், வானத்திலிருந்து தேவதூதன் வந்து அவளை சபித்துக்கொண்டே இருப்பானாம். காடுகளில் வாழும் காட்டுமிராண்டி சமுதாயத்தில் கூட இப்படிப்பட்ட போதனைகள் இருக்காது என்று நம்பலாம். தேவத்தூதர்களுக்கு வேறு வேலையே இல்லையா? உலகில் உள்ள முஸ்லிம் வீடுகளில் இரவில் என்ன நடக்கும் என்று பார்த்துக்கொண்டே இருப்பது தான் அவர்களின் வேலையா? பொதுவாகவே ஆண்கள் தங்கள் மனைவிகள் மீது ஆதிக்கம் செலுத்துபவர்கள், இந்த இலட்சணத்தில், இப்படி மதத்தை சம்மந்தப்படுத்தி தீய போதனைகள் செய்தால், ஆண்களுக்கு சொல்லவா வேண்டும்? இதனால் தான் இஸ்லாமிய சமுதாயம் இன்னும் உருப்படாமல் பிந்தங்கியே இருக்கிறது. ஆண்களில் சரி பாதியாக இருக்கும் பெண்களை இழிவுப்படுத்தினால், நம்மை நாமே அழித்துக் கொள்வதற்கு சமம் ஆகும். மேலும், இப்படி பெண்களுக்கு எதிராக போதனை செய்த முஹம்மது ஒரு கள்ள நபி என்று கிறிஸ்தவர்கள் நம்புவது சரியே!

ஸஹீஹ் முஸ்லிம் எண்கள்: 2829 & 2830

2829. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒரு பெண் (தாம்பத்தியத்தைப் பகிர்ந்து கொள்ள மறுத்து) தன் கணவனின் படுக்கையை வெறுத்து (தனியாக) இரவைக் கழித்தால், **பொழுது விடியும்வரை அவளை வானவர்கள் சபித்துக் கொண்டிருக்கின்றனர்.** இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. **அதில், "அவள்(கணவனின் படுக்கைக்குத்) திரும்பும்வரை (சபிக்கின்றனர்)"** என இடம் பெற்றுள்ளது. Book : 16

2830. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

என் உயிர் எவன் கையிலுள்ளதோ அவன்மீது சத்தியமாக! **ஒருவர் தம் மனைவியை அவளது படுக்கைக்கு அழைத்து, அவள் அவருக்கு (உடன்பட) மறுத்தால் வானிலுள்ளவன் அவள் மீது கோபம் கொண்டவனாகவே இருக்கிறான்; அவள்மீது கணவன் திருப்தி கொள்ளும்வரை**.

ஒரு முஸ்லிம் ஆண் முதல் மனைவிக்கு தன் 100% அன்பை கொடுக்காமல், இரண்டாவது திருமணம் செய்துக்கொண்டால், அவன் அந்த இரண்டாவது மனைவியை விவாகரத்து செய்து, தன் முதல் மனைவியை நேசிக்கும் வரை வானவர்கள் அந்த முஸ்லிம் ஆணை சபித்துக்கொண்டு இருப்பார்கள் என்று முஹம்மதுவோ, குர்ஆனோ சொல்லியிருந்தால் இன்று இஸ்லாமை தூக்கி பிடித்திருக்குமே உலகம்!

கேள்வி 293: மனைவியை அடிப்பதாக யோபு (பழைய ஏற்பாட்டு பக்தன்) அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்தாரா?

பதில் 293: குர்ஆனும் முஹம்மதுவும் பெண்களை அடிப்பதைப் பற்றி பல கேள்வி பதில்களை மேலே கண்டோம்.

யோபு என்ற பக்தன் தன் மனைவியை அடிப்பதாக அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்தாராம், எனவே அதனை நிறைவேற்றும்படி அல்லாஹ் யோபுவிற்கு கட்டளையிட்டான். பார்க்க குர்ஆன் 38:44.

குர்ஆன் 38:44. **“ஒரு பிடி புல் (கற்றையை) உம்கையில் எடுத்து, அதைக் கொண்டு (உம் மனைவியை) அடிப்பீராக;** நீர் (உம்) சத்தியத்தை முறிக்கவும் வேண்டாம்” (என்று கூறினோம்). நிச்சயமாக நாம் அவரைப் பொறுமையுடையவராகக் கண்டோம்; அவர் சிறந்த நல்லடியார் - நிச்சயமாக அவர் (எதிலும் நம்மை) நோக்கியவராகவே இருந்தார்.

இதே யோபு தான் பழைய ஏற்பாட்டிலும் வருகின்றார், ஆனால், அவர் இப்படி மனைவியை அடிப்பதாக எதையும் சொல்லவில்லை, மற்றும் மனைவி தவறு செய்யும் போது, கணவன் அவளை அடிக்கவேண்டும் என்றுச் சொல்லி பைபிளில் கட்டளை எதுவும் இல்லை.

பெண்கள் பற்றி முஹம்மது கொண்டிருந்த வெறுப்புணர்வை, முந்தைய கால நபிமார்கள் பெயர்களில் இட்டுக்கட்டியுள்ளார் என்பதைத் தான் இது காட்டுகிறது.

யோபுவின் மனைவிக்கு வலிக்கக்கூடாது என்றுச் சொல்லி, அல்லாஹ் ஒரு கைப்பிடி அளவு புல் எடுத்து அடிக்கச்சொல்கிறான், இது தான் அல்லாஹ்வின் அன்பு என்று முஸ்லிம்கள் கூறுவார்கள். உண்மையில் தன்னுடைய பக்தன் இப்படிப்பட்ட சத்தியத்தை செய்யும் போதே, அது தவறு என்று அல்லாஹ் எச்சரிக்க வேண்டும். தீய மற்றும் தவறான பொருத்தனைகளை செய்யவேண்டாம் என்று அல்லாஹ் யோபுவை கண்டித்து இருக்கவேண்டும். இதனை அல்லாஹ் செய்யவில்லை, எனவே முஸ்லிம்கள் பெண்களை அடிப்பதைப் பற்றி குற்ற உணர்வு இல்லாமல் இருக்கிறார்கள்.

சத்தியங்களை முறித்துக்கொள்ள முஹம்மதுவிற்கு அனுமதி, யோபுவிற்கு ஏன் இல்லை?

சில முஸ்லிம்கள் "ஒரு முறை சத்தியம் செய்தால், அதனை நிறைவேற்றியே ஆகவேண்டும், எந்த பரிகாரமும் செய்யமுடியாது" என்றுச் சொல்வார்கள். ஆனால், இவர்களுக்கு குர்ஆனில் 66:1-2ம் வசனங்களில் உள்ள விவரம் தெரியாது.

பார்க்க குர்ஆன் 66:1-2

66:1. நபியே! உம் மனைவியரின் திருப்தியை நாடி, அல்லாஹ் உமக்கு அனுமதித்துள்ளதை ஏன் விலக்கிக் கொண்டீர்? மேலும் அல்லாஹ் மிகவும் மன்னிப்பவன், மிக்க கிருபையுடையவன்.

66:2. **அல்லாஹ் உங்களுடைய சத்தியங்களை (சில போது தக்க பரிகாரங்களுடன்) முறித்து விடுவதை உங்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறான்;** மேலும் அல்லாஹ் உங்கள் எஜமானன். மேலும், அவன் நன்கறிந்தவன்; ஞானம் மிக்கவன்.

முஹம்மதுவிற்கு பரிகாரம் இருக்கும் போது, யோபுவிற்கு இல்லையா என்ன?

யோபுவிடம் அல்லாஹ் "இந்த ஒரு பரிகாரம் செய்துவிடு, மனைவியை அடிக்காதே, ஏற்கனவே பிள்ளைகளை இழந்து நீயும் உன் மனைவியும் வேதனையில் இருந்தீர்கள்", எனவே இந்த பரிகாரம் செய் என்று சொல்லியிருக்கலாம் அல்லவா?

இதிலும் பாருங்கள், முஹம்மதுவிற்கு எது லாபமோ, அதற்காக பரிகாரம் செய்யச்சொல்லி அல்லாஹ் கட்டளையிடுகின்றான். அது என்ன லாபம் முஹம்மதுவிற்கு? என்று கேள்வி எழுமானால், குர்ஆன் 66:1-2ம் வசனங்களின் பின்னணியை படித்துப் பார்க்கவும், அது என்ன லாபம் என்று புரியும்.

கேள்வி 294: முஹம்மதுவிற்கு ஒரு யூதப்பெண் விஷம் வைத்த மாமிசத்தை கொடுத்தாளாமே இது உண்மையா?

பதில் 294: உலகில் 750 கோடிக்கும் அதிகமான மக்கள் இன்று இருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் ஒரு வரிசையில் நிற்கவைத்து, கீழ்கண்ட கேள்வியை கேட்டால், அவர்கள் ஒரே பதிலைத் தான் சொல்வார்கள்.

“நீங்கள் ஒரு பெண்ணின் தகப்பனையும் மற்ற குடும்ப நபர்களையும் மற்றும் அவளின் கணவரையும் கொன்றுவிட்டீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அதன் பிறகு தன் குடும்பத்தை இழந்த அந்தப்பெண் உங்களுக்கு ஒரு விருந்து வைக்கிறேன், வந்து சாப்பிடுங்கள் என்று சொன்னால், அந்த விருந்தை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?”.

இந்த கேள்விக்கு, 750 கோடிக்கும் அதிகமாக உள்ள உலக ஜனத்தொகை, "எனக்கு நீ கொடுக்கின்ற உணவோ விருந்தோ வேண்டாம்" என்ற ஒரே பதிலைச் சொல்வார்கள்.

ஆனால், ஒரே ஒருவர் மட்டும், " ஒரு கட்டு கட்டலாம் என்று எண்ணி, அந்த விருந்தை சாப்பிடச் செல்வார்".

அவர் யார் தெரியுமா? அவர் தான் இஸ்லாமிய நபி முஹம்மது.

யாராவது மற்றவரின் குடும்பத்தை கொலை செய்துவிட்ட பிறகு, அந்த குடும்பத்தில் மீதமுள்ள ஒரு நபர், விருந்துக்கு அழைத்தால், அறிவுள்ளவர்கள் போவார்களா? உலகிலேயே இப்படிப்பட்ட முட்டாள்தனமான முடிவை எடுத்த பெருமை ஒருவருக்கே உண்டு.

விஷம் தோய்க்கப்பட்ட உணவை சிறிது உண்ட முஹம்மது:

பார்க்க புகாரி எண்: 2617

2617. அனஸ்(ரலி) அறிவித்தார். **யூதப் பெண் ஒருத்தி நபி(ஸல்) அவர்களிடம் விஷம் தோய்க்கப்பட்ட ஓர் ஆட்டை அன்பளிப்பாகக் கொண்டு வந்தாள்**. நபி(ஸல்) அவர்கள் அதிலிருந்து (சிறிது) உண்டார்கள். 'அவளைக் கொன்று விடுவோமா?' என்று நபி(ஸல்) அவர்களிடம்) கேட்கப்பட்டது. அவர்கள், 'வேண்டாம்' என்று கூறிவிட்டார்கள். நபி(ஸல்) அவர்களின் தொண்டைச் சதையில் அந்த விஷத்தின் பாதிப்பை நான் தொடர்ந்து பார்த்து வந்தேன்.

மேலும் இதைப் பற்றி அறிய படிக்கவும்: மாற்கு 16ன் சவால் - **https://www.answering-islam.org/tamil/authors/sam-shamoun/16.html**

கேள்வி 295: இயேசுவின் சீடர்களில் ஏன் ஒரு பெண் சீடரும் இல்லை?

பதில் 295: இந்த கேள்வியே தவறானது, இயேசுவிற்கு பெண் சீடர்களும் இருந்தார்கள் என்பதைத் தான் பைபிள் சொல்கிறது. அந்த காலத்தில் இருந்த யூத ரபீக்களுக்கு பெண் சீடர்கள் இருக்கமாட்டார்கள், ஆண்கள் மட்டுமே அவர்களுடைய சீடர்களாக இருப்பார்கள். ஆனால், இயேசு இந்த சுவரை இடித்துப்போட்டார், இயேசுவிற்கு அனேக பெண் சீடர்களும் இருந்தார்கள் என்பது தான் உண்மை.

1) இயேசு கரங்களை நீட்டி "ஆண் மற்றும் பெண் சீட்ர்களை" குறிப்பிடுகிறார்

ஒரு முறை இயேசு சீடர்களுக்கு (ஆண் மற்றும் பெண்) உபதேசித்துக் கொண்டு இருந்தார். அப்போது அவரது தாயாரும், சகோதரரும் அவரோடு பேசவேண்டும் என்று விரும்புகிறார்கள் என்று அவரிடம் சொல்லப்பட்டபோது, தம் கரங்களை தம் சீடர்களிடம் நீட்டி, "இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே!" என்று சொன்னார்கள். இந்த இடத்தில் "தாயும்" என்ற பெண்பாலையும் அவர் குறிப்பிட்டுச் சொல்லி தம்முடைய சீடர்களில் பெண்களும் இருக்கிறார்கள் என்பதை குறிப்பிட்டார். இது மட்டுமல்லாமல், அடுத்த வாக்கியத்தில், "அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான்" என்று இரு பெண்பாலரை குறிப்பிடுகின்றார்.

மத்தேயு 12:46-50

46. இப்படி அவர் ஜனங்களோடே பேசுகையில், அவருடைய தாயாரும் சகோதரரும் அவரிடத்தில் பேசவேண்டுமென்று வெளியே நின்றார்கள். 47. அப்பொழுது, ஒருவன் அவரை நோக்கி: உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் உம்மோடே பேசவேண்டுமென்று வெளியே நிற்கிறார்கள் என்றான். 48. தம்மிடத்தில் இப்படிச் சொன்னவனுக்கு அவர் பிரதியுத்தரமாக: என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி, 49. தம்முடைய கையைத் தமது சீஷர்களுக்கு நேரே நீட்டி: இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே! 50. பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்.

2) ஒரு ரபீயின் பாதத்தில் உட்கார்ந்து கற்றுக்கொள்ளும் பெண் சீடர்கள்:

ஒரு யூத ரபீ (ஆசிரியரின்) பாதத்தில் உட்கார்ந்து ஒரு ஆண் மாணவன் கற்றுக்கொள்வது போன்று, பெண்களுக்கு இயேசு உரிமை கொடுத்தார். இது யூத முறையிக்கு எதிரானதாகும்.

லூக்கா 10:39

39. அவளுக்கு **மரியாள்** என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள்; அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

இதுமட்டுமல்லாமல், இப்படிப்பட்ட போதனையை கேட்டுக்கொண்டு இருந்த மரியாளை ஆதாரித்தும் அவர் பேசினார் (பார்க்க லூக்கா 10: 40 - 42).

3) இயேசு கிராமம் கிராமமாக சென்று ஊழியம் செய்யும் போது, பெண் சீடர்கள் இருந்தார்கள்:

இயேசு ஊழியத்தின் காரணமாக, ஊர் ஊராக செல்லும் போது, 12 சீடர்களோடு கூட அனேக பெண் சீடர்களும் அவரோடுச் சென்று அவருக்கு ஊழியமும் செய்தார்கள்.

பார்க்க லூக்கா 8:1-3 (சில ஸ்திரீகளும், மகதலேனாள் மரியாளும், யோவன்னாளும், சூசன்னாளும்):

1. பின்பு, அவர் பட்டணங்கள்தோறும் கிராமங்கள் தோறும் பிரயாணம்பண்ணி, தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்துவந்தார். பன்னிருவரும் அவருடனேகூட இருந்தார்கள். 2. அவர் பொல்லாத ஆவிகளையும் வியாதிகளையும் நீக்கிக் குணமாக்கின சில **ஸ்திரீகளும்**, ஏழு பிசாசுகள் நீங்கின **மகதலேனாள்** என்னப்பட்ட மரியாளும், 3. ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய **யோவன்னாளும்**, **சூசன்னாளும்**, தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துகொண்டுவந்த மற்ற அநேகம் **ஸ்திரீகளும்** அவருடனே இருந்தார்கள்.

அந்த காலத்தில் யூத கலாச்சாரத்தில், பெண்கள் வீட்டைவிட்டு வெளியே சென்று யூத ரபீக்களிடம் கற்றுக்கொள்வது அனுமதிக்கப்படாமல் இருந்தது, ஆனால், இயேசு அந்த சூழ்நிலையை மாற்றி அமைத்தார்.

இதுவரை கண்ட விவரங்களிலிருந்து அறிவது என்னவென்றால், இயேசுவிற்கு அனேக பெண் சீடர்கள் இருந்தார்கள், அவரோடு அவர்கள் சென்று ஊழியம் செய்தார்கள், அவரிடம் மார்க்க விஷயங்களையும் கற்றுக்கொண்டார்கள். இயேசுவிற்கு பெண் சீடர்கள் இல்லை என்பது தவறான கூற்றாகும்.

கேள்வி 296: கேள்வியை மாற்றி கேட்கிறேன், இயேசுவிற்கு இருந்த உள்வட்ட 12 சீடர்களில் ஏன் ஒரு பெண் சீடர் இல்லை?

பதில் 296: இப்போது தான் சரியான கேள்வியை கேட்டு இருக்கிறீர்கள்.

இதற்கு முன்னால் கேட்ட கேள்விக்கான பதிலில், இயேசுவிற்கு ஆண்கள் மற்றும் பெண்களில் சீடர்கள் இருந்தார்கள் என்பதைக் கண்டோம். இயேசு ஆண் பெண் பேதம் பார்க்கிறவர் அல்ல என்பதைக் கண்டோம்.

ஆனால், தம்மோடு எப்போதும் இருந்து கற்றுக்கொள்ள 12 உள்வட்ட சீடர்களை தெரிவு செய்தார். இவர்கள் அனைவரும் ஆண்கள், இவர்களில் ஒரு பெண்ணும் இல்லை (மத்தேயு 10:2-4, மாற்கு 3:13-19, லூக்கா 6:12-16).

இயேசுவோடு கூட இருந்த அந்த 3.5 ஆண்டுகள், இவர்கள் தனிமையில் இயேசுவோடு இருந்தார்கள். இயேசு சொன்னது போன்று, இயேசுவிற்கு தலைசாய்க்க ஒரு நிரந்தரமான வீடு இல்லை.

13 பேர் அடங்கிய ஒரு ஆண் கூட்டத்தில், ஒரு பெண்ணை நாம் சேர்த்தால், அந்த பெண்ணுக்கென்று கீழ்கண்ட வசதிகளை அல்லது சௌகரியங்களை செய்துத் தரவேண்டும். மேலும், சில நடைமுறை சிக்கல்கள் இதில் உண்டு அவைகளைப் பாருங்கள்.

1) இயேசுவும் சீடர்களும் இரவு பகல் என்று பார்க்காமல், ஊருக்கு ஊர் சென்றார்கள். காட்டுபகுதியில் மனித நடமாட்டமில்லாத இடங்களில் தேவைப்பட்டால் இவர்கள் ஓய்வு எடுத்துக்கொண்டு இருப்பார்கள்.

2) ஒரு பெண் சீடர் கூட இருந்தால், அவளுக்கென்று தூங்க, ஓய்வு எடுக்க ஒரு வீடோ அல்லது வேறு ஒரு வசதியோ செய்து தரவேண்டியிருந்திருக்கும். இவர்கள் நாடோடிகள் போன்று வாழ்ந்தபடியினால், ஒரு பெண் சீடர் கூட இருப்பது, ஒரு சங்கடமாக இருந்திருக்கும்.

3) மாதவிடாய் போன்று பெண்களுக்கென்று இருக்கின்ற தனிப்பட்ட அசௌகரியங்களினால், சில பயணங்கள் தடைபட்டு இருந்திருக்கும்.

இயேசுவின் சீடர்கள் வெறும் ஆண்களாக இருந்தபடியினால், தேவைப்பட்ட நேரங்களில் இயேசு பிராயாணங்களை மேற்கொண்டார். ஒரு சீடர் பெண்ணாக இருந்திருந்தால், இந்த திடீர் பயணங்களில் சில தாமதங்கள் உண்டாகியிருக்கும்.

4) இயேசு தம் உள்வட்ட சீடர்களாக வெறும் ஆண் சீடர்களை தெரிவு செய்தபடியினால், அவரது எதிரிகள் அவர் மீது பெண்கள் சம்மந்தப்பட்ட வேறுவகையான குற்றச்சாட்டுக்களை வைக்கவில்லை. ஒரு வேளை பெண்கள் உள்வட்ட சீடர்களாக இருந்திருந்தால், அனேகர் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை முன் வைத்திருப்பார்கள்.

இப்படி அனேக காரணங்களை நாம் சொல்லமுடியும்.

இது மட்டுமல்லாமல், இதற்கு ஒருஆவிக்குரிய அர்த்தமும் உள்ளது. இயேசுவின் 12 ஆண் சீடர்கள் என்பது இஸ்ரேலின் 12 வம்சங்களுக்கு நிழலாட்டமாக இயேசு தெரிவு செய்தார். யாக்கோபின் 12 மகன்கள் தான் யூத 12 வம்சங்களாக கருதப்பட்டது. மேலும், ஆவிக்குரிய இஸ்ரவேலாகிய தேவனுடைய சபையை மேய்க்க 12 சீடர்களை அப்போஸ்தலர்களாக இயேசு நியமித்தார். இதைப் பற்றி மேலதிக விவரங்களை தேவைப்படும் பதில்களில் காண்போம்.

கேள்வி 297: ரோமன் கத்தோலிக்கர்களில் '(பெண்) துறவிகள்' இருக்கிறார்களே! கிறிஸ்தவம் இதனை அனுமதித்துள்ளதா?

பதில் 297: இல்லை, துறவரம் கிறிஸ்தவத்தில் இல்லை.

திருமணம் என்பது கனமுள்ளது என்று பைபிள் சொல்கிறது (எபிரேயர் 13:4) மற்றும் ஆதாமை ஏவாளை படைத்து, அவர்கள் கணவன் மனைவியாக இருக்க அவரே முதல் திருமணத்தையும் செய்து வைத்தார்.

ரோமன் கத்தோலிக்கர்கள் போப் என்றுச் சொல்லக்கூடியவர் திருமணம் புரியக்கூடாது என்றுச் சொல்கிறார்கள், ஆனால் முதல் போப் என்றுச் சொல்லக்கூடிய இயேசுவின் சீடர் பேதுரு திருமணம் ஆன ஒரு மனிதரே ஆவார்.

மேலும் இயேசுவின் சீடர் பேதுரு தம் மனைவியோடு கூட தான் ஊழியம் செய்தார் மற்ற சீடர்களும் இதனையே செய்தார்கள் (1 கொரிந்தியர் 9:5). இதில் வேடிக்கை என்னவென்றுச் சொன்னால், திருமணமான நபராகிய பேதுருவை சபைக்கு தலைவராக இயேசு நியமித்தார். இதற்கு எதிராக கத்தோலிக்க போதனைகள், அவருக்கு அடுத்தபடியாக வருகின்ற தலைவர்கள்(போப்) மற்றும் பாதியார்கள் துறவரம் இருக்கவேண்டும் என்றுச் சொல்வதில் என்ன நியாயம் இருக்கிறது.

கிறிஸ்தவம் ஆண் அல்லது பெண் துறவரம் பற்றி கட்டளை கொடுப்பதில்லை. ஒருவேளை ஊழியத்துக்கு வந்த பிறகு தம் துணை

மரித்துவிட்டால், மறுபடியும் திருமணம் செய்வதும் செய்யாமல் அப்படியே இருந்துவிடுவதும், அவரவர் விருப்பம், ஆனால் கட்டாயமில்லை.

கேள்வி 298: பைபிளில் வாக்குபண்ணப்பட்ட ஆசீர்வாதங்கள் பெண்களுக்கும் பொருந்துமா?

பதில் 298: பைபிளில் தேவன் வாக்கு கொடுத்த ஆசீர்வாதங்கள் இரு பாலாருக்கும் கொடுக்கப்பட்டதாகும். சில வாக்குறுதிகள் ஆண்களுக்காக தனிப்பட்ட முறையில் இருக்கும், இதே போன்று பெண்களுக்கும் தனிப்பட்ட வாக்குறுதிகள் உள்ளன.

ஆனால், பொதுவாக சொல்லப்பட்ட ஆசீர்வாதங்கள், வாக்குறுதிகள் இருவருக்கும் பொருந்தக்கூடியதாகும்.

இதுமட்டுமல்ல, பைபிளில் ஒரு குறிப்பிட்ட நபர் பற்றி சில தீர்க்கதரிசனங்கள் கொடுக்கப்பட்டு இருக்கும்,அவைகள் அந்த நபருக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது, அது நமக்கல்ல.

லூக்கா 2:35ல் மரியாளுக்கு மட்டுமே ஒரு தீர்க்கதரிசனம் சொல்லப்பட்டது "உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும் என்றான்". இயேசுவை சிலுவையில் அறையும் போது மரியாளின் துக்கத்தைப் பற்றி இது சொல்லப்பட்டது. இது நமக்கு அல்ல.

இஸ்ரவேலருக்கு சொல்லப்பட்ட அனேக ஆசீர்வாதங்கள், வாக்குத்தத்தங்கள் அவர்களுக்குச் சொல்லப்பட்டவைகள். ஆனால் பரிசுத்த ஆவியானவர் நமக்காக அவைகளை இன்று பயன்படுத்துகிறார்.

உதாரணம்:

ஏசாயா 54:10

10. மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்.

இந்த வாக்குறுதி இஸ்ரவேலருக்குத் தான் கொடுக்கப்பட்டது, ஆனால் இதனை பரிசுத்த ஆவியானவர் நமக்காகவும் எழுதி வைத்திருக்கிறார் என்பதை நாம் மறக்கக்கூடாது.

தேவனிடத்தில் பட்சபாதமில்லை (ரோமர் 2:11). அவருக்குள் ஆணும் பெண்ணும் சமமே.

கேள்வி 299: ஒரு முஸ்லிம் பெண்ணும், அவளது குடும்பமும் இயேசுவை பின்பற்றினால், கிறிஸ்தவம் அவர்களுக்கு எவைகளைத் தரும்?

பதில் 299: இந்த கேள்விக்கான பதிலை பெண்களின் கண்ணோட்டத்தின் பார்க்கலாம். ஒரு முஸ்லிம் பெண் குடும்பத்தோடு இயேசுவை பின்பற்றினால்:

1) தன் கணவன் தன்னை அடித்தால், அவனை கேள்வி கேட்கலாம், சட்டத்தின் உதவியும் கேட்கலாம். இஸ்லாமில் இதற்கு வாய்ப்பு மிக மிக குறைவு.

2) தன் கணவன் இரண்டாவது திருமணம் செய்துக்கொள்ள அவனுக்கு அனுமதி சட்டத்தின் படி மறுக்கப்படும். இது இஸ்லாமிய பெண்களுக்கு கிடைக்காது, மனைவியின் அனுமதியின்றி, நான்கு பெண்களை ஒரு முஸ்லிம் ஆண் திருமணம் செய்யலாம்.

3) புர்கா என்ற உடையை அணியாமல் இருக்க உரிமை கிடைக்கும்.

4) படிப்பு, வேலை விஷயங்களில் முஸ்லிம் பெண்களுக்கு கிடைக்காத உரிமையும், அதிகாரமும் கிடைக்கும்.

5) அற்பமான காரியங்களுக்கு முஸ்லிம்கள் கொடுக்கும் தலாக்கிலிருந்து (விவாகரத்திலிருந்து) விடுபடலாம். இந்திய சட்டத்தின் உதவியை பெறலாம்.

6) அரபியில் குர்ஆன் வசனங்களை மனப்பாடம் செய்து, தினமும் ஐந்து வேளை அவைகளை மனப்பாடமாக சொல்லி தொழுகை நடத்தவேண்டிய அவசியமில்லை. இதற்கு பதிலாக, நமக்கு தெரிந்த மொழியில் தேவனை முழு இருதயத்தோடும், பலத்தோடும் தொழுதுக்கொள்ள வாய்ப்பு கிடைக்கும்.

7) நம்மை படைத்த தேவனை அப்பா என்றுச் சொல்லி அழைத்து உரையாடவும் (ஜெபிக்கவும்), அவரது வார்த்தைகளை தமிழில் படிக்கவும் புரிந்துக்கொள்ளவும் வாய்ப்பு கிடைக்கும். அரபியில் படித்தால் தான் நன்மை அதிகம் என்று முஸ்லிம்கள் சொல்வது போன்று, கிறிஸ்தவத்தில் இல்லை.

8) இஸ்லாமிய மூடபழக்கவழக்கங்கள், கட்டுக்கதைகளை நம்பவேண்டிய அவசியமில்லை.

9) ஜின்களைப் பற்றி பயப்படவேண்டிய அவசியமில்லை, தாயத்துக்கள் கட்டுவது, கண்திருஷ்டி பற்றி கவலைப்படுவது போன்ற தவறான கோட்பாடுகள் கிறிஸ்தவத்தில் இல்லை.

10) பரலோகத்தில் தனக்கு அனுமதி கிடைக்குமா? என்ற சந்தேகத்தோடு வாழாமல், இப்பூமியில் வாழும்போதே, இரட்சிப்பின் நிச்சயத்தோடு வாழலாம்.

11) பைபிளில் உள்ள வாக்குத்தத்தங்களை படித்து, தியானித்து உரிமை பாராட்டி மன நிம்மதியோடு வாழலாம். பரிசுத்த ஆவியானவரின் உதவியுடன் பிரச்சனைகளை, சவால்களை தைரியமாக எதிர்க்கொள்ளலாம்.

இயேசு உங்களுக்காக என்ன செய்வார் என்பதைப் பற்றி இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம், தேவைப்படும் போது மேலதிக விவரங்களைக் காண்போம்.

கேள்வி 300: இயேசு தனிப்பட்ட முறையில் பெண்களுக்காக என்ன செய்தார்?

பதில் 300: இயேசுவின் காலக்கட்டத்தில் இருந்த கலாச்சாரம் ஆண்கள் குடும்ப தலைவர்களாக இருந்த கலாச்சாரமாக இருந்தது. மேலும் யூத கலாச்சாரத்தில், பெண்களுக்கு எதிராக யூத ரபீக்கள் பல கட்டுப்பாடுகளை விதித்து இருந்தனர்.

யுத ஆண்கள் பெண்களை பொதுவில் வாழ்த்து கூறமாட்டார்கள், பெண்கள் ரபீக்களிடம் மாணவர்களாகச் சேர்ந்து தோராவை கற்கமுடியாது. முதல் நூற்றாண்டின் ஒரு யூத ரபி "தோராவை ஒரு பெண்ணுக்கு பாதுகாக்கும்படி கொடுப்பதைக் காட்டிலும், அதனை எரித்துவிடுவது நன்றாக இருக்கும்" என்றார். யூத ரபீக்கள் இப்படி பல சொந்த கட்டளைகளை உருவாக்கி வைத்திருந்தார்கள்.

இப்படிப்பட்ட சூழலில் தான் இயேசு வந்தார். இறையிலைப் பற்றி சிந்திக்காமல், உலக பிரகாரமாக இயேசு பெண்களுக்காக என்ன செய்தார் என்பதை சுருக்கமாக காண்போம்.

1) ஆபிரகாமின் குமாரத்தி: யூத தலைவர்களின் திமிருக்கு மரண அடி கொடுத்தார்:

ஒரு நாள் தேவாலயத்தில் ஒரு கூனியான பெண் இருந்தாள். இயேசு அவளை அழைத்து ஓய்வு நாளில் சுகமாக்கினார். ஓய்வு நாளில் இப்படி சுகமாக்கியது தவறு என்று யூத தலைவர்கள் குற்றம் சாட்டும் போது, இயேசு கீழ்கண்ட பதிலை கொடுத்தார்.

லூக்கா 13:14-16

14. இயேசு ஓய்வுநாளிலே சொஸ்தமாக்கினபடியால், ஜெபஆலயத்தலைவன் கோபமடைந்து, ஜனங்களை நோக்கி: வேலைசெய்கிறதற்கு ஆறுநாள் உண்டே, அந்த நாட்களிலே நீங்கள் வந்து சொஸ்தமாக்கிக்கொள்ளுங்கள், ஓய்வுநாளிலே அப்படிச் செய்யலாகாது என்றான். 15. கர்த்தர் அவனுக்குப் பிரதியுத்தரமாக:

மாயக்காரனே, உங்களில் எவனும் ஓய்வுநாளில் தன் எருதையாவது தன் கழுதையையாவது தொழுவத்திலிருந்து அவிழ்த்துக் கொண்டுபோய், அதற்குத் தண்ணீர் காட்டுகிறதில்லையா? 16. இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த **ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை** ஓய்வுநாளில் இந்தக்கட்டிலிருந்து அவிழ்த்துவிடவேண்டியதில்லையா என்றார்.

இதில் விசேஷம் என்னவென்றுச் சொன்னால், "**ஆபிரகாமின் குமாரத்தி**" என்று இயேசு கூறியதாகும். இவ்வார்த்தைகள் பைபிளில் இந்த ஒரு இடத்தில் மட்டுமே வருகிறது. பொதுவாக யூதர்கள் நாங்கள் "ஆபிரகாமின் குமாரர்கள்" என்றுச் சொல்லிக்கொள்ள பெருமைப்படுவார்கள். ஆனால் அந்த பெருமையை எடுத்து ஒரு பெண்ணுக்கு இயேசு கொடுத்தார், மட்டுமல்லாமல் ஓய்வு நாளில் அப்பெண்ணுக்கு அற்புத சுகத்தைக் கொடுத்தார். இதனால் யூததலைவர்களின் கோபத்துக்கு இயேசு ஆளானார்

2) பொது இடங்களில் இயேசு பேசினார்:

பொது இடங்களில் பெண்களோடு யூத தலைவர்கள் வாழ்த்து கூறமாட்டார்கள், பேசமாட்டார்கள். ஆனால், இயேசு இந்த நிலையை மாற்றினார், பெண்களுக்கு எதிராக நடந்துக்கொண்டு இருக்கும் கலாச்சார குறைபாடுகளை நீக்கினார்.

ஒரு விதவையின் மகன் மரித்துவிட்டான், அவனை புதைக்கச் சென்றுக்கொண்டு இருந்தார்கள். அந்த பெண்ணுக்கு வேறு துணையாரும் இல்லை, மகன் இல்லை என்பதை இயேசு அறிந்து, அவராகச் சென்று, மரித்த அந்த மகனை உயிரோடு எழுப்பி, தன் தாயிடம் ஒப்புவித்தார். இந்த அற்புதம் செய்யுங்கள் என்று அந்த பெண் இயேசுவிடம் கேட்கவில்லை என்பதை கவனிக்கவும்.

லூக்கா 7:12-15

12. அவர் ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது, மரித்துப்போன ஒருவனை அடக்கம்பண்ணும்படி கொண்டுவந்தார்கள்; அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான். அவளோ கைம்பெண்ணாயிருந்தாள்; ஊராரில் வெகு ஜனங்கள் அவளுடனேகூட வந்தார்கள். 13. கர்த்தர் அவளைப் பார்த்து, அவள்மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லி,14. கிட்டவந்து, பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள்; அப்பொழுது அவர்: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். 15. மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். **அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார்**.

யூதர்கள் வெறுக்கும் சமாரியர்களின் ஒரு பெண்ணோடு இயேசு சுயமாகச் சென்று பேசினார்.

சீடர்களும் இதனைப் பார்த்து, என்ன செய்வதென்று புரியாமல் இருந்தனர். ஒரு பெண்ணோடு அதுவும் சமாரிய பெண்ணோடு ஏன் பேசுகின்றீர்கள்? என்று

அவர்களுக்கு கேட்கத்தோன்றியது, இருந்தபோதிலும் அவர்கள் அமைதியாக இருந்துவிட்டார்கள்.

யோவான் 4:27. அத்தருணத்தில் அவருடைய சீஷர்கள் வந்து, **அவர் ஸ்திரீயுடனே பேசுகிறதைப்பற்றி ஆச்சரியப்பட்டார்கள். ஆகிலும் என்ன தேடுகிறீரென்றாவது, ஏன் அவளுடனே பேசுகிறீரென்றாவது, ஒருவனும் கேட்கவில்லை**.

3) சுயமரியாதையும் இரக்கமும்:

அந்த காலப்பெண்கள் மாதவிடாய் நேரங்களில் 'சுத்தமில்லாதவர்கள்' என்று கருதப்பட்டார்கள். அவர்கள் தொடுகின்றவைகளும் சுத்தமானவை அல்ல என்று சடங்குகள் யூத மார்க்கத்தில் இருந்தது.

லூக்கா 8:43-48ல் ஒரு அருமையான நிகழ்ச்சி பற்றி சொல்கிறது. 12 ஆண்டுகள் இரத்தபோக்கு உள்ள ஒரு பெண் இயேசுவைத் தொட்டு சுகமானாள். மேலும், இயேசு அவளை திட்டவில்லை, பதிலாக நீ சுகமானாய், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்.

லூக்கா 8:48. அவர் அவளைப் பார்த்து: மகளே, **திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ** என்றார்.

ஒரு யூத ரபியை இரத்தப்போக்கு உள்ள பெண் தொட்டாள், அவள் பல அவதூறுகளுக்கும், தண்டனைக்கு ஆளாகி இருப்பாள்.

இன்னொரு இடத்தில் விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணை இயேசு காப்பாற்றிய நிகழ்ச்சியிலும் பெண்களை இயேசு கனப்படுத்தினார். விபச்சாரத்தில் கையும் களவுமாக பிடிபட்ட பெண் என்று அழைத்து வந்தவர்கள், அந்த ஆணை மட்டும் ஏன் விட்டுவிட்டார்கள்? இதிலிருந்து அந்த யூதர்களின் உள் நோக்கம் புரிகின்றது.

இன்னும் பெண்களின் வேண்டுகோளுக்கு இணங்க இயேசு அற்புதங்கள் செய்ததைச் சொல்லலாம்.

4) இயேசுவிற்கு இருந்த பெண் சீடர்கள்:

யூத ரபீக்கள் பெண்களுக்கு வேதங்களை கற்றுத் தரமாட்டார்கள், ஆனால் இயேசு ஆண்கள் மற்றும் பெண்களுக்கு வேதத்தை கற்றுக்கொடுத்தார். இயேசுவிற்கு பெண் சீடர்கள் என்ற தலைப்பில் கொடுத்த பதிலையும் படித்துக்கொள்ளவும்.

5) மேசியா, உயிர்த்தெழுதல்:

ஒரு சமாரிய பெண்ணிடம் "நான் தான் மேசியா என்று நேரடியாக சொன்னார் இயேசு". லாசருவின் சகோதரியிடம் "நானே உயிர்த்தெழுதலும்

ஜீவனுமாயிருக்கிறேன்" என்றார். மேலும் தாம் உயிர்த்தெழுந்த பிறகு முதலாவதாக 'ஒரு பெண்ணுக்கே தம்மை வெளிப்படுத்தினார்'.

இவைகள் மேலோட்டமாக எழுதினேன். இன்னும் பெண்களுக்கு கிறிஸ்தவம் கொடுத்தவைகள் பற்றி எழுதினால் அதிக பக்கங்கள் தேவைப்படும்.

முஹம்மது பெண்களை மிகவும் கேவலமாக பார்த்தார், நரகத்தில் அதிகமாக இருப்பவர்கள், தங்கள் கணவர்களுக்கு நன்றிகெட்டவர்கள், அறிவு குறைந்தவர்கள், என்று பலவாறு முஹம்மது பெண்களை சாடினார். இயேசுவோ, ஒரு பெண்ணுக்கு அற்புதம் செய்து, அவளை முன்னிட்டு "ஆபிரகாமின் குமாரத்தி" என்று தலைக்கனம் கொண்ட யூதர்களிடமே சாட்சி சொன்னார்.

இயேசுவின் நற்செய்தி நூலை நீங்கள் ஒருமுறையாவது படித்து இருக்கிறீர்களா? இயேசு என்ன பேசினார், யாருக்காக பேசினார்? இயேசு என்ன செய்தார்? போன்றவைகளை அறிந்துக்கொள்ள நீங்களே நற்செய்தி நூல்களை படித்து தெரிந்துக்கொள்ளுங்கள்.

இயேசுவின் வாழ்க்கை வரலாறு (நற்செய்தி நூல்கள்): **மத்தேயு**, **மாற்கு**, **லூக்கா** & **யோவான்**

மூலம்: https://www.answering-islam.org/tamil/authors/umar/ramalan/2020ramalan.html & http://isakoran.blogspot.com/